# உயிர் விளையும் நிலங்கள்

## ராஜம் கிருஷ்ணன்



தாகம்

# உயிர் விளையும் நிலங்கள்

**– குடும்பக்கட்டுப்பாட்டு நடைமுறைகள்**

**பெண் நோக்கு விமர்சனம் –**



## ராஜம் கிருஷ்ணன்




**தாகம்**

34, சாரங்கபாணித் தெரு, தி.நகர்

திருமலைப்பிள்ளை சாலை குறுக்கே

சென்னை – 600 017

தொலைபேசி : 28340495

தொலைநகல் : 28344528

E-mail : tamilputhakalayam@yahoo.com

Website : http://expage.com/tamilputhakalayam

உயிர் விளையும் நிலங்கள் (கட்டுரை)
முதற் பதிப்பு : நவம்பர் 15, 2005
விலை : ரூ. 66

**UYIR VILAYUM NILANGAL**

a critical study on family planning measures
focusing on women

by **RAJAM KRISHNAN**

© Rajam Krishnan

First Edition : 2005
Pages : 176

**DHAGAM**
34, Sarangapani Street
Off : Thirumalai Road, T. Nagar
Chennai - 600 017
Telephone : 044 - 28340495
Tele Fax : 044 - 28344528
E-mail : tamilputhakalayam@yahoo.com
Website : http://expage.com/tamilputhakalayam

ISBN No : 81 89629 00 X

Price : Rs. 66

**Copyright Warning** : No part of this book may be reproduced or transmitted in any form or by any means electronic or mechanical including photocopying or recording or by any information storage and retrieved system without prior permission in writing from Mrs. Rajam Krishnan C/o. Dhagam.

*Printed at :* **NOVENA OFFSET PRINTING CO.,** Chennai - 5 ✆ 28446166, 28446891

# இந்தப் புத்தகம் ...

கிட்டத்தட்ட ஒரு வருடமாய் வாரம் ஒரு முறை சுமார் அரைமணி நேரம் திருமதி ராஜம் கிருஷ்ணன் அவர்கள் என்னிடம் தொலைபேசியில் பேசுவார். அந்த உரையாடலில் 25 நிமிடங்கள் தான் எழுதிவரும் கட்டுரைநூலைப் பற்றி - மக்கள் தொகைப் பெருக்கக் கட்டுப்பாடு நடவடிக்கைகளில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து வெகு கொந்தளிப்பான மனதுடன் பேசுவார்.

உலக அளவில் இப்பிரச்சனை எப்படியெல்லாம் பிரதிபலிக்கிறது - நமது நாட்டில் குறிப்பாகத் தென்னகத்தில் - எப்படிப் பெண்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று ஆதங்கத்துடன் பேசுவார்.

கொள்கை - திட்டம் - செயல்பாடு - செயல்பாட்டின் சாதக பாதகங்கள் என்று தெளிவாக - ஆனால் உறுதியான 'பெண்கள் பாதிப்பு' என்கிற அடிநாதமான அக்கறையுடன் - சமூக அக்கறையுடன் படைப்பாளியாகவும் இவ்விஷயம் பற்றி உழைத்து உருவாக்கியுள்ளார் இந்தப் புத்தகத்தை.

குடும்பக் கட்டுப்பாடு சாதனங்கள், அறுவைச் சிகிச்சை, நவீன முறைகள் என்றும் அதே சமயம் குடும்பக் கட்டுப்பாட்டுச் சாதனம் பொருத்தப்பட்டதன் விளைவுகளையும் உயிர்ச் சேதங்களையும் பற்றியும் அடிக்கடி செய்தித்தாள்கள் விவரிக்கின்றன.

அண்மையில் இயற்கைப் பேரழிவுச் சீற்றமான சுனாமி பாதிப்பினாலும் கும்பகோணம் தீ விபத்தில் குழந்தைகளை - ஒரே குழந்தையையும் பறி கொடுத்த சோகங்களையும் மீண்டும் கருவுற வாய்ப்பில்லா நிலையை எண்ணிப் பலர் கலங்குவதையும் நாம் உணர்ந்தோம்.

ஒரு நாட்டின் வளம் என்பது இயற்கை வளம் மட்டுமல்ல, மனித வளமுமே என்பதை உணரவும் உணர்த்தவும் தேவை அதிகரித்து வரும் சூழல் இது.

'ஒரு குடும்பத்திற்கு ஒரு குழந்தை' என்கிற பிரச்சாரமும் செயல்படுத்தத் தூண்டி வெற்றி காண்கிற சூழலிது.

பிரச்சனைகளை மட்டும் அலசாமல் தீர்வையும் இறுதியில் மெல்லிய குரலில் - தீர்க்கமாக ஒலிக்கும் நூலிது.

சமூகப் பொருளாதார அக்கறை என்பதில் நாம் தனிநபர் சுதந்திரத்தை எந்த அளவிற்கு மதிக்க வேண்டும் என்பதைத் தெளிவாகக் கூறும் அதே சமயம் சுயக்கட்டுப்பாடே சிறந்தது என்பதையும் உறுதியாகக் கூறுகிறது இப்புத்தகம்.

நாட்டின் மீதும், மக்கள் மீதும் அக்கறை கொண்ட ஒரு படைப்பாளியின் இக்கருத்துகளை அதே படிநிலையில் வாசகர்களும் பகிர்ந்து கொள்ள உதவும் நூலிது.

கனமான - சிக்கலான இந்த விஷயத்தையும் கூடச் சுவை குன்றாமல் சொல்ல முடிந்த படைப்பாற்றல் பெற்ற திருமதி. ராஜம் கிருஷ்ணன் அவர்களுக்கு எமது நன்றி.

நூல் உருவாக்கத்தில் தொடர்ந்து அவருக்கு உதவிய இனிய நெஞ்சங்கள் அனைத்திற்கும் எமது நன்றி.

உங்கட்கும்.

- தாகம்

# உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | உளமார்ந்த நன்றிக்குரியவர்கள் | 7 |
| 2. | மகப்பேறு, மகளிர் நோயியல் மருத்துவர், ஓய்வு பெற்ற பேராசிரியர் டாக்டர் ஆர்.வசந்தா அவர்களின் அணிந்துரை | 10 |
| 3. | என்னுரை | 12 |
| 4. | உணவினால் உயிர்கள் (உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே) | 17 |
| 5. | பகிர்வுத் தத்துவம் | 21 |
| 6. | தாயாகும் பெண் | 25 |
| 7. | வேள்வித் தீ | 30 |
| 8. | துறவும் தாய்மையும் | 36 |
| 9. | மக்கள் பெருக்கப் பொருளாதாரம் | 42 |
| 10. | சமுதாய சமத்துவம் சார்ந்த பெண் உரிமை | 47 |
| 11. | அரசியல் நெறிகளும் மக்கள் தொகையும் | 53 |
| 12. | சமுதாய வளர்ச்சியில் அந்நியமாகும் பெண் | 60 |
| 13. | உரிமை மறுக்கும் ஆக்கிரமிப்புகள் | 70 |
| 14. | காபி - டீ (காப்பர் டி) | 76 |
| 15. | மரபுகளில் சிக்கிய மருத்துவக் கட்டுப்பாடுகள் | 83 |
| 16. | நெருக்கடிகால (அரசியல்) அலங்கோலங்கள் | 90 |
| 17. | வதைபடும் வறுமையில் 'மங்கலப்' பெண்மை! | 96 |
| 18. | இருத்தலுக்கான போராட்டம் | 107 |

19. 'அரசியல்' பிடிகளில் குடும்ப நலங்கள் 115

20. மனிதம் விழுங்கும் அறிவு சார் இலக்குகள் 122

21. சோதனைக் களங்கள் 128

22. தொலைக்காட்சி அசுரர்கள் 135

23. 'பிளாஸ்டிக்' ஆகிவிட்ட பொற்குடங்கள் 142

24. காந்தியின் கனவு ராஜ்ஜியம் 148

25. நெருக்கடியில் உதிக்கும் யோசனைகள் 153

## பிற்சேர்க்கை

1. கருத்தடை முறைகள் சில 160

2. மங்கல மகப்பேறு 163

3. ஹிந்து, 17-4-2005 ஞாயிறு இதழில் கல்பனா சர்மாவின் கட்டுரை 169

4. உலக சுகாதார அறிக்கை - 2005 (சஞ்சிதா சர்மா) புதுடெல்லி, ஏப்ரல் 7 173

5. பயன்படுத்தப்பட்ட நூல்கள், கட்டுரைகள், அறிக்கைகள் 175

# 1. உளமார்ந்த நன்றிக்குரியவர்கள்

இந்த நூலை எழுத வேண்டும் என்று நான் லட்சியம் கொண்டதற்கு முதற் காரணம், இந்தக் கருத்தடை முறைகளாலும், கட்டாய வலியுறுத்தல்களாலும் தங்கள் உரிமையற்ற உடல்களில் வேதனைகளையும் வலிகளையும் சுமந்து, குரல் எழுப்பத் திராணி இல்லாமலே பெற்ற மக்களிடமும், கட்டிய கணவனிடமும், அன்பு செலுத்தும் லட்சோப லட்சம் அன்னையர்; சமூக பயங்களைச் சுமந்து கொண்டு கட்டாய அறுவைச் சிகிச்சைகளுக்கு உட்பட்டு 'கற்பு'க் கெடாதவர்கள் என்று வாழ்ந்தவர்கள்.

இத்தகைய ஒரு நூலை எழுதி, துன்பம் சுமந்த, சுமக்கும் பெண்களின் சார்பில் நான் குரல் கொடுக்க எண்ணியுள்ளேன் என்று என் இளம் நண்பர்களான டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத், எம்பிபிஎஸ், அவருடைய மனைவி டாக்டர் ஏ.ஆர்.சாந்தி எம்பிபிஎஸ் அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்த உடனே, அவர்கள் என் நோக்கை ஆதரித்து எனக்குப் பேருதவி செய்திருக்கிறார்கள். கருத்தடை மருத்துவ அறிவியல் தொடர்பான அனைத்துச் செய்திகளும், தகவல்களும் அடங்கிய ஓர் அருமையான நூலை, உடனே எனக்கு அனுப்பித் தந்தார்கள். 200 ரூபாய் விலையுள்ள Practice of Fertility Control என்ற அந்த நூலைக் கண்டதும், என் அறியாமை இருட்டை அகற்றவல்ல ஒளித்தாரகையைக் கண்டாற்போல் துணிவு பெற்றேன். மனித நேய முற்போக்குக் கொள்கையுள்ள அந்த மருத்துவத் தம்பதியர், நூலுக்கு விலையையும் பெற மறுத்துவிட்டனர். பின்னர் நான் அவர்களுடன் எப்போது தொலைபேசியில் தொடர்பு கொண்டாலும் உடனே விளக்கங்கள் வரும். இந்தத் தம்பதிக்கு என் உளமார்ந்த நன்றியை முதற்கண் உரித்தாக்குகிறேன்.

மருத்துவம் தொடர்பான தகவல்கள் மட்டும் அறிந்தால் போதுமா? இது மிகவும் சிக்கலும் பிரச்னைகளும் நிறைந்தது. இந்தக் குடியாட்சி உரிமைகளோடு தனிநபர் உரிமைகள், அரசியல் நிலைகள், சமுதாய மாற்றங்கள், உழைப்பாற்றல், பொருளாதார

மேம்பாட்டுக்கான திட்டங்கள், கொள்கை இலக்குகள், சர்வதேச நிலைகள் என்ற பல முரண்பாடுகளில் புகுந்து புறப்பட வேண்டும். ஒரு கால் நூற்றாண்டுக்கும் மேலாகத் தம் மாணவப் பருவத்தில் இருந்தே, சமூதாயபூர்வமான ஆய்வுகளை இலக்காக்கி நான் புதினங்களை எழுதும்போதெல்லாம் நண்பராக மட்டுமின்றி, என் சுமைகளை ஏற்று உதவ வந்திருக்கும் திரு. தி.சிகாமணி அவர்கள் பல தகவல்களையும் தந்து உதவியுள்ளார். அவருடைய பங்கு இந்த ஆக்கத்தில் இன்றியமையாததாக அமைந்துள்ளது. கையெழுத்துப்பிரதியைப் பெற்று முதலில் படித்து கருத்துரை வழங்கியும் உதவியுள்ளார். அதேபோல் பேராசிரியை சகோதரி சரஸ்வதி அவர்களும், கால் நூற்றாண்டுக்கு மேல் என்னுடன் நெருங்கி இணைந்தவர்கள். ஓர் இலக்கியவாதி, சமூகப் பார்வையோடு அந்த நோக்கில் மனித நேயத்துக்கான - மனித உரிமைக்கான எழுச்சியையும் விழிப்புணர்வையும் ஒடுக்கப்பட்ட மக்களிடம் தோற்றுவிக்கும் சாதனமாகத்தான் எழுத்தைக் கொள்ள வேண்டும். இந்த வகையில் கல்லூரிப் பேராசிரியை யாக(சமூகவியல்)ப் பணிபுரிந்த போதும், பிறகு, மகளிர் - ஒடுக்கப்பட்டவருக்காக, சமூக அநியாயங்களுக்காகக் குரல் கொடுக்கும் வாய்ப்புகளை அவர் வாயிலாகப் பெற்றேன். பல கோணங்களில் சமூதாய மரபுகள், கொடுமைகள் ஆகியவற்றை ஆய்வு செய்யும் ஆர்வம் தோன்றியது. இப்படி ஒரு நூல் எழுதுகிறேன் என்று தெரிவித்ததும், விரைந்து என் இல்லம் வந்து, மகிழ்ச்சியுடன் என் எழுத்துப் பிரதியைப் படித்து, கருத்துரை நல்கியிருக்கிறார். இவர்கள் அனைவரும் கொடுத்த ஆதரவை மறக்கமுடியாது. நன்றி என்ற சொல் வெறும் வார்த்தையாக இக்காலத்தில் அலங்காரமாகப் போய்விட்டது.

இந்த ஆக்கம் ஒரு பயனை அளிக்க வேண்டும். அந்த ஆக்கத்தில் இவர்கள் பங்கு சிறப்பானது. நான் இந்த நண்பர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்து,

மகப்பேறு, மகளிர் நோயியல் துறையில் பல பட்டங்களும் மேலான பலதுறை அனுபவங்களும் பெற்ற டாக்டர் ஆர்.வசந்தா (B.A., M.B.B.S., M.D., D.G.O) நீண்ட காலம் அரசு பொது மருத்துவமனைகளில் மகப்பேறு, மகளிர் நோயியல் துறையில் பணியாற்றியவர். மகளிர் உரிமைகளுக்கும், சமூதாயம் சார்ந்த மகளிர் முன்னேற்றங்களிலும் ஈடுபாடு கொண்டவர். கஸ்தூரிபா

பெண்கள் மருத்துவமனையிலும் எழும்பூர் மகளிர் பொது மருத்துவமனையிலும் பின்னர் போரூர் ராமச்சந்திரா மருத்துவ மனையிலும் சிறப்பாகப் பணியாற்றியவர். மகளிர் மருத்துவத் துறையில் பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் செயலாற் றியவர். பணி ஓய்வு பெற்ற பின்னரும், தாம் அனுபவம் பெற்ற துறையில் ஈடுபாடு கொண்டிருப்பவர். என் நூலுக்கான தகவல்கள் வேண்டி அவரை அணுகியபோது மகிழச்சியுடன் நேரம் ஒதுக்கித் தந்து, தம் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். என் ஐயங்களை விளக்கித் தெளிவுபடுத்தினார். பின்னர் நான் கோரியதற்கிணங்க அதிகப் பழக்கம் இல்லை என்று தயங்கினாலும், தமிழிலேயே ஓர் அரிய அணிந்துரையும் வழங்கியுள்ளார். இந்தச் சிறப்பு மருத்துவருக்கு சஞ்சீவினி ஆயுர்வேத யோகா சிகிச்சை மைய நிறுவனர், டாக்டர் பி.எல்.டி. கிரிஜா, டி.எம். முகுந்தன், மங்கல மகப்பேறு குறித்த செய்திவிவரங்கள் நூலில் சேர்க்க அனுமதி வழங்கியுள்ளர்கள். அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகிறது.

நூல்...நூல்.. எழுதியாயிற்று. சிக்கல்கள் அதிகம். வெளியிடுவோரைத் தேடும் சங்கடம் எனக்கு இல்லை. சுமார் அரை நூற்றாண்டுக்காலமாக என் நூல்களை வெளியிடும் நிறுவனமே இந்த நூலையும் வெளியிடுகிறது.

தமிழ் நூல்களைப் பதிப்பிப்பவர்களில் தரமும், நேர்மையும், துணிவும், நாணயமும் கூடிய கொள்கைப் பதிப்பாளர், எழுத்தாளர் தேச விடுதலைப் போராளி கண.முத்தையா அவர்கள் தோற்றுவித்த தமிழ்ப் புத்தகாலயம், அன்றிலிருந்து இன்று வரை, அவருடைய வழித் தோன்றல்களான திருமதி மீனா - அகிலன் கண்ணன் ஆகியோரால் அதே மரபுடன் இயங்கி வருகிறது. அவர்களே இந்த நூலுக்கும் பொறுப்பேற்று வெளியிடுகிறார்கள். செல்வி - உமா கண்ணன் - அட்டைப்படம், புத்தக வடிவமைப்பு ஆகியவற்றின் பொறுப்பை நேர்த்தியாக வழங்கியுள்ளார். சமுதாயத்தில் இந்நாள் பாதிக்கப்பட்டவரின் குரலாக ஏற்று, வாசகப் பெருமக்கள் இந்த நூலைப் பயனுடையதாகச் செய்ய வேண்டுகிறேன்.

நன்றி! வணக்கம்.

**ராஜம் கிருஷ்ணன்**

# 2. மகப்பேறு, மகளிர் நோயியல் மருத்துவர் ஓய்வுபெற்ற பேராசிரியர் டாக்டர் ஆர்.வசந்தா அவர்களின் அணிந்துரை

இந்த நூலில் ஆதிகாலத்திய பெண்ணின் நிலையிலிருந்து தற்காலப் பெண்ணின் அவலமான நிலைவரை, ஆசிரியர் உணர்வுபூர்வமான கட்டுரைகளாக எழுதியுள்ளார். தன் சொந்தக் கருத்துகளுடன் பலவகைப்பட்ட அறிஞர் நூல்களில் இருந்து பெற்ற ஆய்வுப்பூர்வமான கருத்துக்களையும் வேறு பல புள்ளி விவரங்களையும் தொகுத்து எளிய நடையில் அளித்துள்ளார். இது சாதாரணமான முயற்சி அல்ல.

பெண்ணின் உடல் வளர்ச்சியும் மன வளர்ச்சியும் மருத்துவ ரீதியில் அணுகப்படுகிறது. தன் உடலைப் பேணுவது அவளுக்கு அவசியமாகிறது. ஏனெனில் கருத்தரித்து மகப்பேறு பெறுபவள் அவள். உடல் நலிவடையாமல் இருப்பதுடன், கருத்தடை செய்து கொள்ள வேண்டியவளாகவும் இருக்கிறாள் இன்று.

இந்த நூலில் மகளிர் நலம் பேணும் முறையில் இவை எல்லாவற்றையும், பல்வேறு கருத்தடை முறைகளின் சாதக பாதகங்கள் பற்றியும் கோர்வையாக எழுதியிருப்பது பாராட்டுக் குரியதாகும். பெண்களுக்கு இந்த விவரங்களனைத்தும் மிகவும் பயன்படக்கூடியவையாகும்.

இந்தக் கட்டுரைகளின் இடையே சிறுசிறு உண்மைச் சித்திரங் களை, நிகழ்வுகளை மனதில் பதியும் வண்ணம் எழுதியுள்ளார். அரசியல் ரீதியான சில நடவடிக்கைகள், சில அதிகாரிகளின் மகளிருக்கு எதிரான நலம் விளைவிக்காத மருத்துவங்கள், இங்கே சுட்டிக் காட்டப்படுகின்றன. நாடு சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து ஆக்கப்பூர்வமான திட்டங்கள் என்பவை மகளிர் நலத்துக்கும் உரிமைகளுக்கும் எதிராக இருந்திருப்பதை நன்கு எடுத்துக்காட்டி யிருப்பதுடன் சாடியும் இருக்கிறார்.

மெகா சீரியல் அபத்தங்களை மிகத் தெளிவாகப் பதிய வைக்கிறார்.

எய்ட்ஸ் நோய் பற்றிய தகவல்கள் அனைத்தும் அனைத்து மக்களும் அறிய வேண்டியவை; மேலும், ஆணுறையினால், நோயைத் தவிர்க்க முடியும் என்ற விளம்பரங்கள் மக்களைத் தவறான முடிவுக்கு வரச் செய்கின்றன. ஆணுறைகளில் கண்ணுக்குப் புலப்படாத துளைகள் இருக்கக்கூடும். இதனால் எய்ட்ஸ் நோய்க்கு ஆணுறை முழுதும் பாதுகாப்பென்று கூறிவிட முடியாது. கருத்தடைக்கும் அது நூறு சதவிகிதம் உகந்த சாதனமல்ல என்பதை அறிய வாய்ப்பில்லை. இவ்விளம்பரங்களை விட, கட்டுப்பாடான ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ்நெறியே உகந்தது என்பதை, இவரைப் போன்ற எழுத்தாளர்களால் மட்டுமே வலியுறுத்த முடியும். கட்டுப்பாடான வாழ்நெறியைப் பயிற்று விக்க, சிறுவர், சிறுமியருக்குப் பெற்றோரும் ஆசிரியப் பெரு மக்களும் வாழ்ந்துகாட்டும் வகையிலே தான் வளம் பெற முடியும்.

இக்காலத்தில், கணினி, தொலைக்காட்சி ஆகிய தகவல் சாதனங்கள், நம் இளைய தலைமுறையினரின் அறிவுசார் துறையிலும் பொழுது போக்குக் களியாட்டம் என்றும் பெரும் பங்கு வகிக்கின்றன. சினிமா போன்ற தகவல் ஊடகங்கள் முழுதுமாக வாணிப ரீதியில் இயங்குகின்றன. கதாசிரியர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் எல்லோருமே புதிய வளமான சமூதாயத்துக்கான சந்ததியினரை உருவாக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் இயங்க வேண்டும்.

இந்த நூலில் இயற்கையை மாசுபடுத்தும் பல கூறுகளை ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார். நாம் அனைவருமே இந்த மாசுகளைக் களைந்து பாரத அன்னை எழிலுடன் விளங்க முயற்சி செய்வோம்.

அழகு தமிழில் சிறப்பாக மகளிருக்காகவும் மற்றவருக்காகவும் ஆழ்ந்த கருத்துக்களை அளித்திருக்கும் இந்த எழுத்தாளர் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து இலக்கியங்கள் படைக்க வாழ்த்துகிறேன். எல்லாம் வல்ல இறைவன் அருள வேண்டும்.

நன்றி!

ெ. வசந்தா

# 3. என்னுரை

இந்த நூலை நான் எழுத முயற்சி மேற்கொண்டதற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். நான் ஒரு பெண்.

இதற்கு மேலாக, இதை எழுதுவதற்குரிய மருத்துவ அறிவோ, வேறு வகையில் குறிப்பிடும்படியான தகுதிச்சான்றோ என்னிடம் இல்லை.

படைப்புக் காலத்திலிருந்து இயங்கி வந்திருக்கும் பெண்மை யின் கூறுகளை இன்ப துன்பப் போராட்டங்களைச் சுமந்து இன்றுவரை முன்னோக்கிக்கொண்டு ஆண்டு ஆதிக்கம் தோற்று விக்கும் அறைகூவல்களை எதிர்கொள்ளும் கோடானு கோடிப் பெண்களில் ஒருத்தி. வாணிபத்துக்காக உடலை 'அழகு' என்று ஒப்பனை செய்து கொள்வதற்கான சாதனங்களுக்கான வாணிபங் களில் தங்கள் இளமையைத் தொலைக்கும் பெண்ணானாலும் பிழைப்புக்காக, நீராதாரமும் வாழ்வாதாரங்களும் வறண்ட மண்ணிலிருந்து பெயர்ந்து அவற்றுக்கான எந்த உத்தரவாதமும் இல்லாத இடங்களில் உழைக்க வந்து ஒருசில ரூபாய்களுக்காக அன்றாடம் செத்துப் பிழைக்கும் ஆயிரமாயிரம் பெண்களா னாலும், வலிகள் வெவ்வேறு வகையானவை அல்ல. பெண் போகத்துக்குரியவள். அவள் உடம்பு அவளுக்குச் சொந்தமல்ல. திரைக்கு முன்னும், பின்னும் திரையிலும் அவள் யாருக்கோ கட்டுப்பட்டு இயங்குகிறாள். இந்த வகையில் அதிநவீன கணிப் பொறியில் தேர்ச்சி பெற்று பல ஆயிரங்கள் வருமானம் பெறுகிற வளும், பாதுகாப்பற்ற நெருக்கடியில் கைக்குழந்தையுடன் இரவைக் கழிக்கிறாளே, அவளும் ஒன்றுதான். இவர்களின் வேத னைகள், வலிகளை என்னால் உணர முடிகிறது. இருபதாம் நூற்றாண்டில் பிறந்து இருபத்தொன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்து வரும் எனக்கு, பெண்களின் பிரச்னைகள், இன்னமும் மகா பாரதத்தின் குந்தி காலத்திலிருந்தே தொடர்ந்து வருவதை நன்கு உணரமுடிகிறது. நான் சிறுமியாக இருந்த காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் எட்டு, பத்து பேறுகள் நிகழ்வது சாதாரணமாக இருந்தது.

அவர்கள் குடும்பம் மானமாக வாழவேண்டும் என்ற கட்டுக் கோப்பு விதிகளில் அவள் மட்டுமே அழுத்தப்படுவாள். பசி, பட்டினி, இருப்பு, இல்லாமை எதுவும் வெளியே தெரியலாகாது. ஆனால் இந்த வெளியே தெரியலாகாது என்ற சட்ட விதி அவனை, அவன் போக வாழ்வைக் கட்டுப்படுத்தியதாகத் தெரியவில்லை. அக்காலத்தில் ஈரல்குலைக் கட்டியினால் பாதிக்கப்பட்டு மரித்த குழந்தைகள் அதிகம். உழவர் குலப் பெண்கள் பகலெல்லாம் யாரோ ஆண்டைகளின் வயல்களில் வேலை செய்யும்போது அவர்கள் குழந்தைகள் மண்ணிலும், சகதியிலும் விளையாடிக் கொண்டிருக்கும். மரங்களில் தூளிகளில் உறங்கும். பசித்தழும் குழந்தைகளுக்குப் பால் கொடுக்க வேண்டும் என்று கல்மனம் கொண்ட கணக்கப்பிள்ளையும் குரல் கொடுப்பான். அக் குழந்தைகள் ஈரல் குலைக்கட்டிகளால் மரிக்கவில்லை.

உயர் மட்டங்களில் உடலுழைப்பில்லாத ஆண்களின் போகப் பொருளாகப் பிள்ளை பெறும் இயந்திரங்களாக முதற் குழந்தை பெற்று இரண்டு மாதங்களுக்கு முன், அடுத்த குழந்தைக்கு அவள் வயிற்றில் இடம் வந்துவிடும். இதெல்லாம் இல்லற ஒழுக்கம். உடல் உழைப்பில்லாத வர்க்கங்களில் பெண் முழு அடிமை எனலாம். கைம் பெண்கள், கணவருடன் வாழாத அபலைகள் இவர்களில் எவரேனும் இருட்டுக்குள் சுமை சுமக்க நேரிடலாம். அரசல் பொரசலாக வரும் பொசிவுகள், அந்த அபாக்கியவதிகளை மரணக் கோடிக்கு இட்டுச் செல்லும். வெளிப்படையாக ஆறு, குளம் என்று முடிவு தேடாதவர்கள், சுமை கழியும் என்ற அச்சத்தில் நச்சு மருந்துகளை ஏற்றிக் கொண்டு சுமை கழியாமலே போய்ச் சேருவார்கள்.

ஆனால் ஆண்டுக்காண்டு கரு சுமந்தும் சாகக் கொடுத்தும் துன்பம் அனுபவித்தவர்கள், இந்தச் சுமைகளைக் கழிக்க வெளிக்குத் தெரியாமல் குழந்தை வேண்டாம் என்ற முடிவில் நெஞ்சில் முட்களை ஏற்றிக்கொண்டு வலி அனுபவித்ததும் வரலாறுதான். ஒன்பது பெண்களையும், நான்கு ஆண்களையும் ஈன்றெடுத்த தாயொருத்தி, ''ஓ! கடைசியாக இந்த இரண்டும் வேண்டாம் என்று, எள்ளு, கொள்ளு என்று மருந்தெல்லாம் தின்னு தொலைத்தேன். அதன் பயன்தானோ என்னமோ, இரண்டும் பெண்களாக, அக்கினியைப் குளிப்பாட்டி அமாவா சைக்குக் கொடுத்தாற்போல் பிறந்தன. பாவம், பாவம், பாவி,

அதுங்க கல்யாணத்துக்கு அத்தனை துன்பப்பட்டேன்'' என்று வாழ்நாளெல்லாம் வேதனைப்பட்டாள். பிள்ளை வேண்டாம் என்று நினைப்பதும்கூடப் பாவமாயிற்றே! பழைய மரபுகளில் பிரசவித்தவள் இரத்தப் பெருக்கால் தளர்ந்தாலும் தண்ணீர் கொடுத்தால் சீழ் பிடிக்கும் என்று நினைத்து, அவளைச் சாகவிட்ட கொடுமைகள் உண்டு. அக்கினி நட்சத்திரங்களில் மகப்பேறு பெற்று, கடை மருந்துகளையும் ஏற்றிக்கொண்டு தண்ணீர், தண்ணீர் என்று தவித்தாலும் தண்ணீர் கிடைக்காது, மூத்திரத்துக்காகக் கொடுக்கப்பட்ட சட்டியைப் பார்த்து நாவை ஈரமாக்கிக் கொண்ட கொடுமைகள் இருந்தன. மரபுகளும் அறியாமைகளும் மகளிர் ஆளுமையிலும் ஆற்றலிலும் செருகிய ஊசிகள் எண்ணற்றவை.

மாதவிலக்கு நாட்கள் மிகக் கொடுமையானவை. பட்டினி போடுவார்கள். அந்நாட்களில் தீண்டாமை. இந்நாட்களில் மகளிரே தலைமைப் பொறுப்பில் இருந்தாலும் இரட்டைச் சுமை சுமக்கும் அலுவலகப் பெண்களுக்கு விடிவு இல்லை. விடுப்பில் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு வந்தவள், பள்ளி திறந்த அன்றே பள்ளிக்கு வந்தாகவேண்டும்; அத்துடன் மூன்றாம் மாடிக்கும் தரைத்தளத்துக்கும் பகலுணவுக்கு முன் மூன்று முறை ஏறி இறங்கும் வகுப்புகளைக் கொடுப்பவளும் பெண் தலைமை ஆசிரியைதான்.

பெருங் குடும்பங்களின் தலைமுறைப் பெண்கள் இன்று இல்லை. சிறு குடும்ப மாத்திரைகள், தடுப்பான்கள் என்று ஏற்றிக் கொண்டு, ஒவ்வொரு மாத மனஅழுத்தத்துடன் பக்கவிளைவு களையும் ஏற்கும் பெண்கள், பலரின் வேதனைகள், அவர்களைக் கொடுமைக்காரிகளாகவும், கருணையற்றவர்களாகவும் மாற்றி யுள்ளன. இந்த நிலையில் அவளுக்கு இயல்பில்லாத எதிரான தீச் செயல்களுக்கு உட்படுத்தப்படுகிறாள். மது வாணிபமோ, பெண் வாணிபமோ, பழிசுமப்பவள் அவளே! காலம் காலமாக அவளுடைய கருப்பைச் செயல்பாடுகளைக் குதறும் வகையில் அவளே தன்னைக் கழுவிலேற்றிக்கொண்டு தலைமுறை தலை முறையாக வேதனை பொறுத்திருக்கிறாள். அவள் உடல்கள், இந்நாள் வரை எத்துணை ஆய்வுகளுக்குச் சோதனைகளாகவும், பலிக்களமாவும் தீர்ந்திருக்கின்றன! வெளியே சொல்ல முடியாத தூண்டில் முள் வேதனைகள். இன்றும் பத்திரிகைச் செய்திகள்,

பெண் கொலைகள், தற்கொலைகள் என்று வெளியிட்ட வண்ணம் இருக்கின்றன. பெற்றுத்தரலாகாது; ஆனால் உன் உடல் தேவை. இந்த இலக்கில் அவள் பெண்மையில் செருக்கப்பட்ட ஊசிகளை முட்களை எடுத்துப் பார்க்கும் முயற்சியே இது. இந்நாள் இரத்தமும் சீழுமாக வதைக்கும் கூர்முனைகளைக் களைந்து சல்லடையாகிப் போகும் வடிவங்களை உணர்த்த முயலும் முயற்சியே இது. இவளுக்கு ஆறுதல் அளிக்கவேண்டும். இவள் வெறும் கருவி அல்ல; உடல் இயந்திரமல்ல. ஆணுக்குத் துணை தோழி; தாய்; தாரம்; சகோதரி. மக்கள் பெருக்கப் பொறுப்பில் அவளை மட்டும் காரணியாக்க வேண்டாம்? கற்பு நெறி என்பது கணவனுக்கு மட்டும் உடல் என்பதல்ல. கற்பு நெறியின் இலக்கணம் போகம் தவிர்த்த இல்லறம். 'உனக்காகத்தான் தாய், சகோதர மக்கள், பாசமாகப் பிறந்து வளர்ந்த இடங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இங்கு உன்னை மகிழ்விப்பதற்காகவும், சந்ததி கொடுத்து உன் உறவுகளை உன் குலத்தை வாழவைக்கவும் வந்தாள். நீ ஒருவனே அவளுக்கு இந்த இடத்தில் உயிராதாரமான உறவு. எனவே எந்த நிலையிலும் அவளை வருத்தலாகாது. அவளுக்கில்லாத மகிழ்ச்சியை நீ துய்க்கலாகாது' என்றெல்லாம் புராதன விதிகள் சொல்கின்றன. மனிதர்கள் எல்லோரும் எப்போதும் குறையற்றவர்கள் அல்ல. உன் மனைவியிடமும் சில குறைகள் இருக்கலாம். அதைப் பொருட்படுத்தாமல் புரிந்து கொண்டு அன்பு செலுத்த வேண்டும். அவளுக்கு எந்நாளிலும் துன்பமோ துரோகமோ இழைப்பவனாக ஒரு கணவன் இருக்கலாகாது. அப்படி நடப்பவன் கணவனே அல்ல.

ஒரு பெண்ணின் நன்னடத்தைக்கு விதிக்கப்பட்ட நெறிகளுக்கு மேலாகவே அப்பெண்ணைக் கைப்பிடித்தவனுக்கு ஒழுக்க நெறிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. புலனடக்கம் ஆணுக்கு மிக இன்றியமையாத ஒழுக்கம். அவள் மாதவிலக்காக இருக்கும் நிலையிலும் கரு முதிர்ந்த பேறுகால நிலையிலும் கூட புலனடக்கம் கடைப்பிடிக்காத கணவன்மார்கள் இருப்பதை அறிய அதிர்ச்சி ஏற்படுகிறது.

நான் மருத்துவர் ரங்காசாரி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவதற்காக முனைந்தபோது அதிர்ச்சியூட்டும் தகவல்கள் பலவும் அறிய நேர்ந்தது. அன்னையர்க்கு ஓர் அன்னை போல் அந்த அரிய மகப்பேறு மருத்துவர் மருத்துவ அறிவியலில் நச்சுக் கொல்லி

மருந்துகளும், உயிர்க்காக்கும் பேறு மருந்துகளும் இல்லாத காலத்தில் தாய் சேய் உயிர்களை மனிதாபிமான நேயத்தோடு காப்பாற்றினார். அவருக்குக் கடவுள் நம்பிக்கை இருந்திருக்க வில்லை. சில கணவன்மார்கள் வயது முதிர்ந்த நிலையில் தங்கள் தவறுகளையும் அந்த மருத்துவரின் மேன்மை பற்றியும் எடுத்து ரைத்தபோது நெஞ்சம் நெகிழ்ந்தது.

பெண் கோரிக்கையற்றுக் கிடக்கும் பலாப்பழமன்று. அவள் மனிதப்பிறவி. தாய்மைப் பேறு ஒன்றோடு நிற்பது கட்டாயக் கற்பு நெறி என்றால், அந்த நெறியைக் காக்க கணவனும் அவளை மட்டும் பொறுப்பாக்காமல் ஒத்துழைக்க வேண்டும். அவள் கருவறையை அடுத்தடுத்துக் கல்லறையாக்கும் அறிவியல் சாதனைகளிலோ அல்லது கருவறையைச் சவ்வுக்காடாக அடைக்கும் சாதனைகளிலோ உலகம் உய்யப் போவதில்லை. வாழவைத்த கடல், மக்களை வாரி விழுங்கச் சுருண்டு வந்ததும், காலம் காலமாகப் பசுமையும், நெடிதுயர்ந்த மரங்களுமாக வாழ வைத்த குன்றுகள், மலைகள் பனியாய்ப் பொழிந்து தன் மக்களை அழித்ததும் சாதாரண நிகழ்வுகள் அல்ல.

எல்லா இடங்களிலும் பெண்களும் குழந்தைகளுமே பலியா கிறார்கள். பெண் தன்னையே அழித்துக்கொள்ளும் கருமைக்குக் காரணமான புகைகளைச் சிறுசிறு ஒழுக்க நெறிகளைக் கொண்டு தூய்மைப்படுத்துவோம். பெண்ணுக்கு உரிமை என்பது, அறியாமை நீங்கிக் கல்வி பெறுமுன், நான், என் உடல், என் மனம், என் நோக்கு என்ற இலக்குகள் அவள் பெற வேண்டும். அவள் கொடுமைக்காரியாக்கப்படுகிறாள். ஆனால், எந்த நிலையிலும் அவள் கொடுமைக்காரியல்லள்; அவள் தாய். அதை மறந்து அவளை அவளுக்கே விரோதமாக்கச் செய்யும் ஆதிக்கச் சாவிகளைப் பிடுங்கி ஆழ்கடலில் போடுவோம். அல்லது குழிதோண்டிப் புதைப்போம்! பாரத அன்னை மட்டுமல்ல, உலக அன்னையே உவந்து வாழவைப்பாள்!

— ராஜம் கிருஷ்ணன்

# 4. உணவினால் உயிர்கள்

மக்களின் நல்வாழ்வை அவ்வப்போது நேரும் பஞ்சங்கள், பாதித்த வரலாறுகள் நம் புராணங்களிலும் காப்பியங்களிலும் காணக் கிடைக்கின்றன. பஞ்சம் என்பதன் மறுபக்கம் வறுமையும் பசிப் பிணியும்தான். ‘அன்னத்தினால் உயிர்கள் தோன்றுகின்றன. மழையினால் உணவு (அன்னம்) கிடைக்கிறது. மழை சிறந்த வேள்வியின் பயனாய் உண்டாகிறது’ என்று கீதை கூறுகிறது. ‘வேள்வி என்பதே தன்னலமற்று மனிதர், இயற்கையைப் பேணிக்காப்பதுதான்’ என்று இராமகிருஷ்ணரின் உரை விளக்குகிறது. புல்லும் மரமும் கரியுமாறு எங்கும் அழல் வெம்மை மிகுந்து உயிர்கள் மடிந்த பசிப்பிணிக்கு மாற்றாக, காப்பிய நாயகி மணிமேகலை, அமுதசுரபியை ஏந்தி உலகின் பசிப்பிணி ஆற்றுகிறாள். இங்கும் மணிமேகலைக் காப்பியத்தின் ஆசிரியர், சாத்தனார் மக்களின் உடல், உணவாகிய ஒரு தொகுதியாகும் என்ற மணி மந்திரத்தைத்தான் தம் நாயகிக்கு ஓதியிருக்கிறார். உணவு இல்லையேல் எதுவும் இல்லை. தன்னலமற்று, பிறர் துயர் தீர்ப்பதும், உயிர்களை நேசிப்பதும் ஆறறிவு படைத்த மாந்தரின் முதற்கடமையாகிறது.

மனித இனம் தோன்றி விலங்குகளைப் போல் கொன்று தின்று காட்டுமிராண்டியாக வாழ்ந்த காலத்திலிருந்து, நாகரிகப் பரிணாமம் எய்திய காலமெல்லாம், பெண்ணே அதற்கான கூறுகளை முன்னெடுத்துச் சென்றிருக்கிறாள். கருவினைத் தாங்கி, தன்னுடல் உதிரத்தையும் உயிர்த்துடிப்பையும் வழங்கி சமுதாய உற்பத்திக் கான முதல்வியாக அவளே திகழ்ந்திருக்கிறாள். தன்னிலிருந்து வெளியான உயிரின் தொப்புள்கொடியைத் துண்டித்து, மார்பில் தேக்கிய அமுதை ஊட்டி அதை வளர்க்கிறாள். தன் மகவுக்காக அவள் எதையும் செய்கிறாள்; அபாயங்களைக் கடக்கிறாள்; பொறுக்கிறாள். ஒருபுறம் கன்றின் தோலை உரித்து இறைச்சியை உணவாக்கினாலும், மறுபக்கம் அவள் கனிந்த அன்பின் திரளாக

ஒளிருகிறாள். இன்றும் விண்கலம் இயக்குவதில் இருந்து விற்பனைப் பெண்ணாகப் பணிபுரிந்தாலும் அவளுடைய தன்னலமற்ற அமுதுபாலிக்கும் இயல்பு உயிர்த்திருக்கிறது. தாய்மைக்குரிய பண்பே, தலையாய அமுது வழங்கும் பணியில் நிலை பெற்றிருக்கிறது. சமுதாய உற்பத்தி, உணவு உற்பத்தி இரண்டுக்கும் அவளே பொறுப்பேற்றிருந்த நாட்களில் ஆண் ஆதிக்கம் பெற்றுவிடவில்லை. அவளின் இயக்கமே, ஆற்றலின் வெளிப்பாடே அவளுக்கு வியப்புக்குரியதாக இருந்தது. அவள் கருவுறுவதற்குத் தாமே காரணம் என்று ஆண் கண்ட அறிவே, அவன் ஆதிக்கத்துக்குள் அவளைக் கொண்டு வருவதற்கு முதற்படி எனலாம்.

இயற்கையின் ஆற்றலை வியப்போடும் அச்சத்தோடும் ஆதிமனிதர் அணுகியிருந்தனர். தாய் தலைவி, தாய் தெய்வம் என்ற கருத்தியல் தகர நாயகன் ஒருவனே; ஏனைய உயிர்களனைத்தும் அவன் ஆளுகையில் பெண்களே! என்ற நாயக நாயகி தத்துவம் உணர்த்தப் பல்வேறு வகைகளில் அந்தக் கருத்தியலைப் பதியவைக்கும் பாடல்களும் வழிபாடுகளும் இந்திய மக்களின் சிந்தனைத் தடங்களை நெறிப்படுத்தி இருக்கின்றன. இன்னும் காளி, துர்க்கை, மாரி போன்ற நாயகரில்லாத தெய்வங்களிடம் மக்கள் பயபக்தியுடன் ஏதும் இன்னல் விளைவிக்கலாகாது என்று வழிபடுகின்றனர். எல்லைக் காவல் தெய்வங்களனைத்தும் பெண்களுக்குச் செய்த அநீதிகளை உள்ளத்தில் தேக்கி, அதற்கான பரிகாரம் போல் வணங்கப்படும் தெய்வங்களேயாம். கொள்ளை நோய்கள், வெள்ளம், தீவிபத்துகள் என்று கட்டுப்படுத்த இயலாமல் சமுதாயத்தில் தீமை வரும்போதெல்லாம் இத்தகைய தாய்த் தெய்வங்களையே வழிபட்டு, குருதிப் பலிகொடுப்பதும் கூட நிகழ்கிறது. அறிவியலில் மகத்தான முன்னேற்றம் கண்டு விண்வெளியையும் வசப்படுத்த இயலும் என்று மனித குலம் மார்தட்டிக் கொள்ளும் இந்நாளிலும் இதற்கெல்லாம் அப்பாற் பட்டு பேரழிவுகளைத் தடுக்க இயலாதென்ற ஓர் அச்சமும் மனித குலச் சிந்தைத் தடங்களிலும் இழையோடுகிறது. எந்த நாகரிகமும் வெளியுலகத் தொடர்பும் இல்லாத ஆதிவாசிகள் அடர்ந்த காடுகளில் எப்படி இயற்கைப் பேரழிவை முன்கூட்டியே உணர்ந்து பாதுகாப்பு செய்துகொண்டனர் என்பது அறிவியல் வல்லாரைப் பின்னோக்கிப் பார்க்கச் செய்கிறது.

பெண், இயற்கையின் பிரதிநிதியாவாள். அவள் குழுத் தலைவியாக இருந்த காலத்தில், அறிவியல் என்ற கண், வாழ்க்கையின் வசதிகளைப் பெறத் தொடங்கி இருக்கவில்லை. அந்த அறிவியல் பார்வையில் சமுதாய உணவு, உடை, மருத்துவம், எல்லாவற்றுக்குமான தொடக்கத்தைப் பெண்ணே பெற்றாள். ஏனெனில் முதுகில் மகவைச் சுமந்துகொண்டு உணவைத் தேடியவளும் தோலாடை தைத்தவளும் விதைகள் போட்டுப் பயிர் விளைவிக்க முனைந்தவளும் அவளே. இதைத் தன் மனித சமுதாயம் என்ற நூலில் ராஹுல் ஸாங்க்ருத்யாயன் நன்கு விவரித்திருக்கிறார். இந்த வசதிகள் தேவைகளாக முதிரும்போது, சேமிக்கும் முறைகளும், தன்னலங்களும் சொந்தம், சொத்து என்ற உடமை உணர்வுகளும் அவற்றின் காரணமாகப் போர்களும் பகைத்தீயும், அழிவுகளும் விரியத் தொடங்கின. தேவைக்கு மேல் உபரி என்ற செல்வம் ஒருபுறம் சேர, இன்னொரு புறம் தேவைக்கேற்ற பொருள் இல்லா வறுமை, உழைப்பாற்றலையும் உடமையாகக் கொள்ளும் கூறு, சமுதாயத்தில் பொருள் சார்ந்த பிளவைத் தோற்றுவித்தது.

ருக் வேதத்தில் அடிமைக் கூறுகள் துலங்குகின்றன. குலமரபுச் சமூகங்களுக்கிடையேயான போர்களில் வெற்றி பெற்றவர்களுக்குத் தோற்ற சமூகத்தினர் அடிமைகளானார்கள். அடிமைப் பெண்கள் தங்கள் எசமானர்களுடன் தொடர்பு கொண்டு ஆண் மக்களை அதிகமாகப் பெற்றால், அவர்கள் எசமானர்களின் மனைவியரின் நிலைக்கு உயரலாம். ஏனெனில் அடிக்கடிப் போர் நிகழும்போது இவர்களுக்கு ஆண் மக்கள் அதிகமாகத் தேவைப் பட்டார்கள். வேதப் பாடல்களில் ஆண் மக்களை வேண்டுவதுதான் பிரார்த்தனையாக இருக்கிறது.

மகாபாரதம், ஒரு வகையில் மனித குலத்தின் வரலாறு எனலாம். பெண்களின் பல்வேறு கீழ்முகப் பரிணாமம் இதில் நன்கு விளங்குகிறது. கீதைப் பேருரையில் அருச்சுனன், தன் சுற்றத்தாரையும் வணங்குவதற்குரிய சான்றோரையும் குருமாரையும் எப்படிக் கொல்வேன் என்று வருந்தி, பலவீனமடைந்து வில்லையும், அம்பையும் கீழே போட்டு விட்டு ஓய்ந்து போனான். 'இவன் போர் புரியேன்' என்று சொன்னதாக மட்டுமே பொதுவாகப் பரவலாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அது ஒரு பொதுக் காரணம்தான். இந்த மாவீரர்களைக் கொன்று குவித்தால்,

இவர்களைச் சேர்ந்த பெண்டிர், மனைவியர் - நாயகர்கள் இழந்த நிலையில் மாற்றாரைச் சேர்ந்து விடுவர். 'அந்நிய குலம், அப்படி நேர்ந்தால், வருணக்கலப்பும் குல நாசமும் விளையும். இவர்களுக்கு நீர்க்கடன் ஆற்ற யாருமே இருக்கமாட்டார்கள். பெண்களின் துஷ்டத்தனம் விளைவிக்கக்கூடிய போரிதனில் ஈடுபடமாட்டேன்' என்றுதான் அருச்சுனன் முக்கிய காரணம் காட்டுகிறான்.

இதே மகாபாரதத்தில் பராசரர், சத்யவதி என்ற மீனவப் பெண்ணைக் கங்கைப் பரப்பில் படகில் செல்லும்போது உந்தல் ஏற்பட்டுவிட, ஒன்றிணைகிறார். இதன் விளைவாக, சத்தியவதி ஓர் ஆண் மகவைப் பெறுகிறாள். பராசரர், புலனடக்கமும் மேலாம் அறிவும், ஞானமும் ஒருங்கிணைந்த முனிவர். சத்தியவதியும் விழைகிறாள். வேதங்களைத் தொகுத்தும், பாரதம் எழுதியும் இந்திய மரபை உயர்த்திப் பிடிக்கும் வியாசரே அந்த மகன் என்று சொல்லப்படுகிறது.

இந்தக் கூடலில் ஆணாதிக்கமும் இல்லை; பெண் கவர்ச்சியும் இல்லை. இருபாலரின் சமமான உணர்வுகளின் உன்னத வெளிப்பாடு என்று கொள்ளலாம்.

ஆனால், தொடரும் தலைமுறைகளில் தாயாண்மைச் சமுதாயத்தைத் தொடர சந்தனு மன்னரின் முதல் மனைவி, கங்கையின் மகனை பீஷ்மன் பிரும்மசரிய விரதமேற்கச் செய்தாள். அவர் பரம்பரை தொடர, அவளுடைய மகன்களுக்குத் தன் வலிமையினால் வேற்று அரசர்களை அச்சுறுத்தியே அரச குமாரி களைக் கவர்ந்து வந்தான். அம்பை, அம்பாலிகா, அம்பிகா ஆகிய மூவரில் அம்பை சாலிய அரசகுமாரனைக் காதலித் திருந்தவள். கவர்ந்து வந்தபின் உண்மையறிந்து வீட்டுமன் அவளை விடு கிறான். ஆனால் இவனுடைய தோள்வலிக்கு அஞ்சிய சால்வன் இவளை ஏற்க மறுத்தான். மீண்டு வந்து கவர்ந்து வந்தவனை மணம்புரியக் கெஞ்சினாள். தன் விரதத்துக்குப் பங்கம் நேரக்கூடா தென்று அவளை மறுத்த வீட்டுமனை அவள் கொல்வதாகச் சபதம் எடுத்தது வேறு வரலாறு. முதன் முதலில் பெண் ணியக் குரல் எழுப்பிய வரலாற்று நாயகி அம்பை.

சத்தியவதியின் மைந்தர் இருவராலும் சந்தனுவின் சந்ததிகளாக தந்தையாதிக்க அரச குமாரர்களைப் பெற இயலவில்லை. அம்பிகா, அம்பாலிகா இருவரும் தங்கள் விழைவுக்கும் விருப்பத்துக்கும்

மாறாக வியாசனிடம் சந்ததி பெற அனுப்பி வைக்கப்பட்டனர். கண்பார்வையற்ற திருதராஷ்டிரனும், சோகையாகப் பாண்டுவும் தந்தையின் வாரிசுகளாகத் தோன்றினர். இந்த ஆதிக்க பரம்பரையின் சங்கிலியில் முடிச்சுக் கோவையாக விளங்குகிறாள் குந்தி. இவளுடைய சோக வரலாறு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இன்னமும் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. தான் வயிற்றில் வைத்துப் பாதுகாத்த மகவை, இரத்தமும் சதையுமாகக் குப்பைத் தொட்டியிலும், நீர்க்காலியிலும் வீசியெறியும் கொடியவளாகத் தாய் மாறுகிறாள்.

# 5. பகிர்வுத் தத்துவம்

வீதிகள் இல்லாத நகரச் சந்திகளில் இன்றும் அமாவாசை என்றால், சிறப்புப் பூசை என்றால், திருஷ்டிப் பரிகாரம் என்று ஒரு வழக்கம் பின்பற்றப்பட்டு வருகிறது. கோள்களின் நடமாட்டம், கிரகணம் என்று நேரும்போது, பூவுலக மாந்தர் தம் பிறப்பு நேரத்தையும் பாதிக்கும் தீய பலன்கள் என்றால், அதற்கும் தாம் செய்யும் பரிகாரம் சாத்திரங்களில் விதிக்கப்பட்டிருப்பதாக அனைத்து மக்களாலும் பின்பற்றப்படுகிறது. வாழ்வியல் அச்சங்களால் இந்நாளைய மாந்தர், இந்த அறிவியல் தெளிவுகளின் உச்ச நிலையிலும், குருட்டு நம்பிக்கைகளை முற்றிலும் தீவிரமாகப் பற்றி வருகின்றனர். அத்தகைய ஒரு நடவடிக்கை, பூசணிக் காய் உடைத்தல். பாவம் பூசணி! அதனுள் குங்குமத்தைக் கொட்டி ரத்தம் சிதறினாற்போல் வழிநெடுக உடைக்கப்படுவதற்காகவே பூமித்தாய் அதைப் படைத்ததோ என்று தோன்றுகிறது. இந்தப் பூசணிக்காய் - நரபலியை நினைவுறுத்தும் வழிபாடு. தெய்வ வழிபாடாக, நரபலி அறிவியல் நோக்கும், அன்பு, பாசப் பரிணாமங்களும் மலர்ந்திராத சமுதாயக் காலத்தில் இருந்தது. பிள்ளையில்லாத ஓர் அரசன், தனக்கு முதற் பிள்ளை பிறந்ததும் அவனை வழிபடும் தெய்வத்துக்குப் பலி கொடுத்து விடுவதாக வேண்டிக் கொண்டானாம். ஆனால், அந்தப் பிள்ளையிடம் அதைச் சொல்லவில்லை. அவனுக்குப் பருவம் வந்த பின்னரே, தெய்வத்துக்கு நேர்ந்து விடப்பட்டவன் என்று புரிந்தது. அரச குமாரன் அல்லவா? வளமையின் அறிகுறி பசுக்கள். அதிகமான பிள்ளைகளும்

வறுமையுமாகக் காட்டில் அலைந்த ஒரு குடும்பத்துப் பையன் இரண்டாவது மகனை சுனச்சேபனை நூறு பசுக்களைக் கொடுத்து வாங்கி விடுகிறான். தனக்குப் பதிலாக, சுனச்சேபனை பலிபீடத்தில் தலையைப் பிணிக்கையில் அவன் அழுகிறான். அப்போது அங்கு வரும் விசுவாமித்திர முனிவர், அதிதியாம் ஆதித் தாயைப் போற்றும் பாடல்களை அவனுக்கு இசைக்கச் சொல்லிக் கொடுக்கிறார். சுனச்சேபன் விடுபட்டான். ஒருகால் தெய்வத்தை ஏமாற்ற, பூசணிக்காயை நரபலிக்கு மாற்றாக, இரத்தக் குழம்பு (போலிதான்) வெடிக்க உடைத்தார்களோ அன்று?

இந்த இரத்த வெறி தலைவாங்குக் கலாசாரம் இன்றும் அடையாளங்களாகத் தொடருகின்றன.

நாய், பூனை போன்ற விலங்குகள் (வீட்டில் பேணி வளர்க்கப் படாதவை) இப்போதும் முதல் குட்டி கருப்பையை விட்டு முழுதும் வெளிவருமுன், முகத்தை வளைத்து யோனிவாயில் தோன்றும் முகத்தைக் கவ்விப் பற்றிக் குரூரமாகத் தின்று விடுகின் றன. அவற்றுக்கும் மறைவிடங்கள் தேவை. இரத்தத்தின் சுவடு கூட இல்லாதபடி நக்கிச் சுத்தப்படுத்திக் கொள்ளும்; பின்னரே ஓர் அரைமணி சென்றபின், அடுத்த குட்டிகள், இரண்டு அல்லது மூன்று வெளியே வரும். அவை முன் குட்டியை விட, அநேகமாக அளவில் சிறியவையாக இருக்கின்றன. ஒரு தாயின் பிரசவ வேதனையில் பசிதாங்கும் உணவும் முக்கியமாக இருக்கலாம். முதற் பையனைக் கொடுப்பேன் என்ற பிரார்த்தனை, எந்த ஒரு பேருண்மையின் அடையாளமோ? தாய்.. அவளுடைய படைப்புக்கும், காத்தலுக்கும் அடிப்படையே அழிப்புக் குரூரம்... அவளே எல்லாவற்றுக்கும் சொந்தக்காரி. இந்த அனைத்துச் சொந்தக்காரி, அடிமைப் பெண்டாகும்போது, அவளுக்கே அவள் மீது உரிமை மறுக்கப்படுகிறது. இந்த உரிமை மறுப்பு ஒரேயடியில் நிகழ்ந்துவிடவில்லை.

திரௌபதை, சூதில் பணயப் பொருளானாள். ‘மாதவிலக்கு, ஒற்றையாடையில் இருக்கிறேன்’ என்று சொல்லும்போது கயவர்கள் அவளை அவைக்கு இழுத்து வந்து மானம் குலைக்க முற்பட்டார்கள். அவளால் மகாபாரதப் போர் மூண்டது.

தொடர்ந்து காலம் இயங்குகிறது.

பெண்களின் சமுதாய வரலாறு, போராட்ட வரலாறாகவே தொடருகிறது. பெண்கள் அடிமைகளாகத் தம்மை ஏற்றுக் கொண்டதற்கு ஒரு காரணம் சொல்லப்படுகிறது.

ஆணின் வன்முறைகளைக் குறைக்கவே இவள் அடிமைத் தனத்தை ஏற்றுக்கொள்கிறாள். இவள் தாய்; பொறுக்கிறாள்; அன்பு செலுத்துகிறாள். இவளால் ஒரு முக்கியமான இன்றியமையாத சமுதாயக் கடமை நிறைவேறுகிறது. இவளால் மட்டுமே சமுதாய உற்பத்திக்கான ஓர் உயிரைக் கருவில் வளர்த்து மண்ணின் மாண்பை விளக்க முடியும்.

அறிவு, ஆற்றல், வலிமை, நுண்மை, செயல்திறன், அனைத்துக்கும் ஆதியானவள் இவளே!

வேதங்களில் எல்லாமும் பகிர்ந்துகொள்ளும் தத்துவம் சொல்லப்படுகிறது. இந்தப் பகிர்வுத் தத்துவமே அமரத்துவம் வாய்ந்தது. ஒவ்வொருவரும் பிறர் நலங்களைக் கருதி வாழும் போது சமத்துவம் எய்த முடியும். 'ஒரு சக்கரத்தின் மையப் புள்ளியில் இணையும் ஆரக்கால்கள் போல் ஒன்றாக இயங்குவீர்!' என்பது அதர்வண வேதத்தின் சம்வன சூக்தம்.

ஆனால் எப்போதும் எய்த இயலாத சமத்துவங்களே, பசி - பட்டினி, வண்மை செல்வம் என்று சமுதாய மாந்தர்களைக் கூறு போட்டிருக்கின்றன. குசேலர் ஏழைப் பிராமணர். தம் மனைவியின் மூலமாக அவருக்கு இருபத்து ஏழு குழந்தைகள் பிறந்ததாகச் சொல்லப்படுகிறது. குறைந்த பட்சம் பதிமூன்றுக்கு மேல் பிரசவங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். இரட்டை, இரட்டை, மூன்று என்று மக்கள் பிறந்திருக்கலாம். இருபத்து ஏழு என்பது என்ன கணக்கு என்று கேட்கலாம். நட்சத்திரங்கள் இருபத்து ஏழும் குழந்தைகளாகப் பிறந்தன என்று சொன்னாலும் கதை சுட்டும் கருத்து நட்சத்திரங்களைப் பற்றியது அல்ல. அதிக மக்கள் செல்வம், வறுமை, பசிப்பிணியால் கடுமையாகப் பாதித்ததுதான் கருத்து. இதற்கு மாற்று, வளமை தேடுவதுதான். பிராமணருக்கு உடலுழைப்புத் தொழில் தெரியாது. பிச்சை எடுப்பது - உஞ்ச விருத்தி - கடவுளின் கல்யாண குணங்களைச் சொல்லி நடந்து வருகையில், அவர் வயிற்றுக்குக் கிடைக்கும்படி உள்ளவர் பிச்சை இடுவார்கள். அவ்வைப் பாட்டியே கூழுக்குப் பாடினாள். 'ஐயம் இட்டு உண்' என்றாள். 'ஏற்பது இகழ்ச்சி' என்றும் முன்னுக்குப் பின் முரணாகச் சொல்லி வைத்தாள். குசேலரை, மன்னனாக

இருக்கும் இளம் பருவ நண்பன் கண்ணனிடம் மனைவி பொருள் வாங்கி வர யோசனை சொல்கிறாள். குருகுலத்தில் கல்வி பயின்ற நாளில், அந்தண வகுப்பில் பிறந்த குசேலரும், ஆயர் குலத்தில் வளர்ந்த கண்ணனும் நெருங்கிய நண்பர்கள். மன்னனை வெறுமனே சென்று காணலாகாது. கையுறையாக, காகைப் புல்லில் விளைந்த கதிர் மணிகளைச் சேகரித்து அதைக் கொண்டு அவல் தயாரித்துக் கணவரிடம் பிள்ளைகளுக்குத் தெரியாமல் கொடுக்கிறாள். கண்ணன் இந்த ஏழை அந்தணரை மாளிகை வாயிலில் வந்து அன்புடன் அணைத்ததுமின்றி அண்ணியார் கொடுத்த புல்லரிசி அவலைக் கேட்டு வாங்கி ஒரு பிடி, இரண்டு பிடி என்று உண்ணுகிறான். மூன்றாவது பிடியை அவன் உண்ணுமுன் மனைவியாகிய ருக்மணி கையைப் பற்றித் தடுத்து விடுகிறாள். அந்தணர் பொருள் கேட்க வந்தார். இந்த அன்பில், செல்வச் செழிப்பில் மூழ்கியவராக இரப்பதற்கு மறந்து போகிறார். வறிய நிலையிலேயே திரும்புகிறார். ஆனால், குடில் இல்லை; மாளிகை. தன் குழந்தைகளை, மனைவியை அடையாளம் தெரியவில்லை. பட்டுப்பட்டாடைகள், வயிரங்கள், ஏவலர் என்று குசேலர் குடும்பம் மாறிவிட்டதாம்! ஒரு பிடி அவலில் பசி தீர்ந்தது; இரண்டாம் பிடி அவலில் உபரியான பசுக்கள், மாட மாளிகை, பட்டு, பொன்னணி, ஏவலர் என்று செல்வம் கூடியது. மூன்றாவது பிடியையும் அவர் உண்டிருந்தால், நாமே அவருக்கு அடிமை களாகப் போவோம்' என்ற சூக்கும உணர்வோடு ருக்குமணி தடுத்தாளாம்.

இந்தக் கதையில் இந்தியாவின் சுதந்திரத்துக்குப் பின்னான வரலாறே அடங்குவதாகக் கொள்ளலாம். எல்லோருக்கும் வாழ்வாதாரமான உணவு, உடை, உறையுள் என்பதே அன்றைய தலைவர்களின் கனவாக இருந்தது. அணைத் திட்டங்கள் வருமுன், நம் விவசாயப் பொருளாதாரம் ஏழைகளின் உழைப்பில், கிடைத்த நீரில், விளைவிப்பதில் நிலை கொண்டிருந்தது. இந்நாள் பெண் சிசுக் கொலை நடக்கும் பிரதேசங்களில் கிணற்றுப் பாசனங்களில் ஆணும் பெண்ணும் இணைந்து உழைத்தார்கள். செல்வப் பங்கீடு களில் இன்றைய ஏற்றத் தாழ்வுகள் இல்லை. அதிக மக்கள் அதிக உழைப்புக் கைகள், ஆணானாலும், பெண்ணானாலும், ஏற்றத் தாழ்வில்லா உழைப்பு. உழைப்பு, உணவு, பின்னரே போகம். திருவிழா, களியாட்டங்கள், கற்புக் கோட்பாடுகளின் கயிற்றுச்

சுருக்குகள் இல்லை. ஆனால், அணைத்திட்டங்கள், காடழிப்பு கள், மின்னாற்றல் என்று வந்தபின், விவசாயத்தின் அடித்தளம், பணம் என்றாகிவிட்டது. எல்லோருக்குமான உழைப்பு, உணவு என்பது மாறி, பணத்தின் அடிப்படையில் தேவையற்ற ஆடம்பரங்கள் வந்தன. முப்பதடி ஆழக்கிணறு, நூறடி தோண்டும் சக்தி படைத்தவனால் வறண்டது. விவசாயம் தடம் புரண்டது. சோறு போட்டவன் மூன்றாம் நிலை அடிமையானான். இடம் பெயர்ந்தான். பெண்குழந்தைகளும், ஆண்குழந்தைகளும் ஆதாரமிழந்து, பணயத்துக்கான பொருட்களாயினர்.

குசேலர் ஏழையாக இருக்கலாம். ஆனால், ஒரு பிடி அவலோடு வறுமை தீர்ந்திருக்கும். அடுத்த பிடியின் ஆடம்பரங்கள் மற்ற வரைச் சுரண்டும் தத்துவம் மூன்றாம் நிலையில் வருங்காலத் தலை முறை இடம் பெயர்ந்து, முறுக்குப் பிழியவும், தடை செய்யப் பட்ட இருண்ட மூலைகளில் கருகவும் போகலாமா? குழந்தைத் தொழிலாளர், விபச்சாரம், எல்லாமே மூன்றாம்பிடி அவலையும் 'கண்ணன்' வாயில் போட்டுக் கொள்ள அனுமதித்த பலன். ஏழையென்றும் அடிமையென்றும் இந்தியாவில் இல்லையே, முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொதுவுடமை, என்று பாடியவர் பாரதி பொருளுக்கு வறுமையுற்று நலிந்த காலத்தில், எட்டையபுரம் மன்னனுக்குச் சீட்டுக்கவி எழுதி அனுப்பினார்.

அதில், ''நின் சந்நிதியில் நான் பாட, நீ கேட்டு, ஜயப்பறைகள், சாற்று வித்து, சாலுவைகள், பொற்பைகள், ஜதி பல்லக்கு லயப்பரிவாரங்கள் முதற் பரிசளித்து பல்லூழி வாழ்க!'' என்று அந்தணராக வாழ்த்தும் முரண்பாடு நெஞ்சில் இடிக்கிறது. பசி தொலைய வேண்டும். அதுவரை சமத்துவம் சரி, பின்னர், சமத்துவ சிந்தை தொலைந்து போகுமோ?

## 6. தாயாகும் பெண்

வேதப்பாடல்களில் கற்புக்கோட்பாடோ, ஆண் பெண் கூடலில் பிற்காலங்களில் விதிக்கப்பட்ட கோட்பாடுகளோ இல்லை. ஒரு வகையில் பிற்காலங்களில் முறையற்ற கூடல் என்று

கருதப்பட்ட சமூக வழக்கங்கள் இயல்பாகக் கருதப்பட்டிருக் கின்றன.

அயோனிஜா என்று குறிப்பிடப்படும் சீதை, திரௌபதி ஆகிய நாயகிகள், புராண காப்பிய நாயகியர். அயோனிஜா என்றால் ஒரு பெண்ணின் பிறப்புறுப்பின் வழிவராதவர். (ஆயின் சிசேரியனா என்று கேட்கலாகாது) இவர்களைப் பூமியே பெற்றதாகக் கருதப்படுகிறார்கள். அல்லது வேள்வித் தீயில் உதித்தவர்களாகக் கருதப்பட்டனர். ஆனால், எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டு ஆண்டாள் எப்படி அவதரித்தாள்? அயோனிஜா என்றால், முறைப்படி உரிமையாகக் கொண்ட கணவன் மனைவியர் கூடலில் பிறந்தவர்கள் இல்லை என்பதேயாம். எந்த ஆணும், எந்தப் பெண்ணையும் விழைந்து கூடலாம் என்று பெண்ணுக்கு இருந்த அவள் உடல் மீதுள்ள உரிமை, ஆண் அவளைத் தன் ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்தபின் பறிக்கப்பட்டது.

'கற்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ, திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ' என்று கண்ணன் மீது மையல் கொண்ட நிலையில் பாசுரங்களை இயற்றிப் பாடிய ஆண்டாள் எப்படி ஒரு தாய்வயிற்றில் உதித்திராமல் துளசிச் செடியின் கீழ் திருவவதாரம் செய்தாள்?

இதெல்லாம் பெண்களுக்குத் தம் உடலின் மீதுள்ள உரிமை பறிக்கப்பட்டதை அழகிய பொய்களால் அலங்கரித்து, தெய்வீக மாக்கப்பட்ட செய்திகள். ஓர் ஆண் முறையற்ற ஒரு பெண்ணைக் கூடுவது நியாயமாகவே நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது. ருஷியானாலும் இல்லறத்தானானாலும் தனக்கேற்பட்ட உந்துதலை, நெருக்கடியை ஒரு பெண்ணிடம்தான் இறக்கிக் கொள்கிறான். சிறந்த ஞானச் சான்றோரிடம் தனக்கு ஒரு மகவு வேண்டிப் பெண்கள் விழைந்ததான செய்திகள் இடம் பெற்றிருந்தாலும் ஆண் எந்தப் பெண்ணையும் தன் ஆதிக்கத்துக்கு உட்படுத்தும் ஏகபோக உரிமைதான் வரலாறுகளில் முதன்மை பெற்றிருக்கிறது.

ஆனால், ஆண், முறையற்ற உடலில் பெண்ணைத் தாயாக்கும்போது தானே தந்தை என்ற உண்மையை ஏற்பதில்லை. மகாபாரதத்துக் குந்தி, ப்ருத என்ற அரசனின் மகள். அந்த அரசனின் நண்பன் குந்தி போஜனுக்கு அவள் மகள் என்று அந்தப்

பெயராலும் அறியப்படுகிறாள். அவளுக்குப் பனிரண்டாண்டு களாகவில்லை. துர்வாச முனி அவள் தந்தையைத் தேடிக் கோபமாக வருகிறார். சினத்துடன் வந்த முனிவரை வரவேற்று மகள் குந்தியை அவருக்குப் பணிவிடை செய்யத் தந்தை அனுப்பிவைக்கிறார். அப்போது அவள் பூப்பெய்தியிராத கன்னி. அவளுடைய பணி விடைகளில் மனம் மகிழ்ந்து விடைபெறுமுன் அவளுக்கு ஆறு மந்திரங்களைச் சொல்லிக் கொடுத்ததாகவும், அந்தந்த மந்திரங்களுக் குரிய தேவர்கள் வந்து அவளுக்குப் புத்திரர்களைக் கொடுப்பார்கள் என்று அருளியதாகவும் சொல்லப்படுகிறது. பூப்பெய்தியிராத கன்னி, விளையாட்டாக ஒரு மந்திரத்தைக் கூறிப்பார்த்தாளாம். உடனே கண் கூசும் ஒளியுடன் கதிரவன் அவள் முன் தோன்றி, ஒரு மகனைப் பெற அருளினானாம். கவச குண்டலங்களுடன் கருணன் பிறந்தானாம்.

பாரத நாட்டின் திருமண முறைகள் என்ற ஆய்வு நூலில் அதன் ஆசிரியர் காசிநாத் ராஜ் வாடே, வேத புராண சூத்திரங்களின் உட் பொருளை விளக்கியுள்ளார். இன்றும் பண்பாட்டுக் குறைவென்று கருதப்படும் மக்கள் பேச்சில், ஆபாசம் என்பது முறையற்ற ஆண், பெண் புணர்ச்சி பற்றியதாகவே இருக்கிறது. பாலியல் சார்ந்த உறுப்புகளைக் குறிப்பிடும்போது கூட, இலைமறை காய் என்ற ஒளிவு மறைவு காக்கப்படுகிறதுதான் பண்பாடென்று கருதப் படுகிறது. தடை செய்யப்பட்ட உறவு முறையில், புணர்ச்சியில் ஈடு பட்டதாகப் பெண்ணையே குறிப்பாக்கி வசைமொழிகள் ஏவப் படுகின்றன. ஆனால், எக்காலத்திலும் ஆண் குற்றம் புரிந்தவனாகக் கருதப்படுவதில்லை.

எனவே, துர்வாசர், குந்தியின் எதிர்காலத்தை நினைவிலிருத்தி அவளுக்குப் பயன்படக்கூடிய மந்திரங்களை உபதேசித்தார். சூரியனிடம் அவள் கருக் கொண்டபோது, அவன், அவளிடம் 'பெண்ணே உனக்கு மங்களமான கர்ப்பத்தை நான் அளித்திருக்கிறேன்' என்றான்.

அவள் நடுநடுங்கிப் போனாள்.

'அஞ்சாதே, பெண்ணே. நீ தாய்மையடைந்தாலும் கன்னிதான்!' என்று கூறி வாழ்த்திச் சென்றதாகக் கதை விவரிக்கப்பெறுகிறது.

சூரியனின் இடத்தில் முனியை நிறுத்திப் பார்க்கலாம். அடுத்து

உனக்குத் திருமணமானாலும் அவனால் உனக்கு மகப்பேறு வாய்க்கவில்லை என்றாலும் நீ கற்பு குலைந்ததாகப் பதற வேண்டாம் என்றுரைத்ததாகக் கொள்ளலாம்.

பூப்பெய்தாத நிலையில் கன்னி எப்படித் தாயானாள்? பூப்புக் குருதி வெளிப்படாத நிலையிலும், சினைப்பை முதிர்ந்து முதல் முட்டை வெளியாகியுள்ள நிலையில் விந்தணு வந்ததும் கருவுறுதல் நிகழக்கூடும்.

குந்தி கானகத்தில், அவள் செவிலி அல்லது அடிமைப் பெண்ணுடன் பத்து மாதங்கள் கழித்துப் பிள்ளை பெறுகிறாள். கன்னி, கையில் குழந்தையுடன் எப்படி மாளிகை திரும்புவாள்? முன் தலைமுறைச் சத்தியவதி பராசரருடன் கூடி மகனைப் பெற்றபோது அந்த மகவைக் கங்கையில் விடவில்லை. அப்போது பெண்ணுக்கு அவள் உடல் மீதும் கருப்பைச் செயல்பாட்டிலும் உரிமை இருந்தது.

ஆனால், திருமணம் என்பது, ஆணாதிக்கக் குலவழியை மெய்ப்படுத்தும் சடங்காக பெண்ணின் முக்கியமான உரிமையை அவளிடம் இருந்து பறித்துவிட்டது.

குந்தி, தன் மகனைப் பேழையில் வைத்துக் கங்கையில் மிதக்கவிட்டாள். மேலாம் வருணத்தவனுக்குப் பிறந்த பிள்ளை, தேரோட்டியின் மனைவி ராதையினால் கண்டெடுக்கப்பட்டு தாயின் பெயரைத் தாங்கி, ராதேயன், சூத்திரன் ஆனான். குல தர்மங்கள் பேணப்பட்ட பெண் உரிமையின் முதற்பலி இந்தத் தாய்மைப் பேறு.

மீண்டும் கன்னியாக, அவள் அரசவம்சத்துக்குச் சந்ததி பெற்றுத்தர பாண்டுவுக்கு மனைவியானாள். பாண்டுவும் ஆண்மையற்றவன். அவனுக்கு ஒரு மகரிஷியின் சாபம் இருந்ததாகவும், ஒரு பெண்ணைக் கூடினால் தலை வெடித்துவிடும் என்ற அந்தச் சாபம் குந்தியுடன் கூடுவதைத் தவிர்த்தது என்றும் சொல்லப்படுகிறது. குந்தி மட்டுமில்லாமல் மாதரி என்ற இன்னோர் அரச குலப் பெண்ணும் இவனுக்கு மனைவியானாள்.

குந்தி தனக்குத் தெரிந்த சந்ததி பெறும் தேவ மந்திரத்தை மாதரிக்கும் சொல்லிக் கொடுக்க, அவர்கள் வேறு யார் மூலமாகவோ (ருஷிகளோ?) ஐந்து பிள்ளைகளைப் பெறு

கிறார்கள். அரசுரிமைக்காகப் பிள்ளைகள் அவசியமாயிற்று. இந்தப் பிள்ளைகள் ஐவருக்கும் பாண்டு தந்தையல்ல. ஆனால், இவர்கள் பாண்டுவின் மைந்தர்கள். பாண்டவர்கள் என்றுதான் அறியப்பட்டார்கள். இந்த ஐவராகிய பஞ்ச பாண்டவர்களில், அருச்சுனன் மட்டுமே, பார்த்தன் (ப்ருதவின் புதல்வன்) கௌந்தேயன் (குந்தியின் புதல்வன்) என்று அறியப்படுகிறான். அதாவது குந்தியின் தந்தையார் ப்ருதாவுக்கும், குந்திபோஜனுக்கும் இவன் சந்ததியாவான்! திருதராட்டிரனோ கண்ணற்றவன். வீட்டுமன் அவனுக்குக் காந்தார தேசத்துப் பேரழகி காந்தாரியைக் கொண்டுவருகிறான். வீட்டுமனுக்கு யாரே எதிர் நிற்க முடியும்? சகுனியாகிய சோதரனும் தோள் வலியில்லாமல் எதிர்நிற்க முடியாமல், தந்திரமிகுந்தவனாக, சோதரியுடன் வருகிறான். காந்தாரி குருட்டுக் கணவனுக்கு உண்மையான கற்பரசியாகக் கண்களைக் கட்டிக்கொண்டாள் என்றும், பொறாமைக்காரி என்றும், குந்தி கருவுற்றது கண்டு அந்தப் பொறாமையில் பல செய்யத் தகாத செயல்களைச் செய்தாள் என்றும் நம்பத்தகாத பொய்ம்மைகள் புனைந்துரைக்கப்பட்டிருக்கின்றன.

திருதராட்டிரன் மக்கள், பாண்டவர்கள் என்று குறிப்பிடப்பட்டதுபோல், குறிப்பிடப்படவில்லை. குரு குலத்துக் கான சந்ததிகள் என்று 'கௌரவர்கள்' என்று அறியப்பட்டார்கள். நூறு குடும்பங்களில் வைத்த பிண்டம் என்று சூசகமாகச் சொல்லப் படுவதின் பொருள் இதுவே. நூறு வீடுகளில் இருந்து நூறு பெண்கள், மன்னனின் விந்தணுக்களைப் பெற்றார்கள் என்று சொல்லலாம். முன் தலைமுறையில் வியாசரிடம் அனுப்பப் பெற்ற அம்பாலிகா கண்களை மூடிக்கொண்டு அவனைக் கூடியதால் குழந்தை குருடனாகப் பிறந்தது என்ற காரணத்துடன் பொருத்திப் பார்க்கலாம். காந்தாரி தன் எதிர்ப்பைக் காட்டவே கண்களைக் கட்டிக்கொண்டாள் என்று சொல்லலாமல்லவா? என்னென்ன கட்டுக்கதைகள்?

குந்தி ஐந்து பிள்ளைகளுக்குத் தாயாகக் கருப்பமுற்று விட்டாளே, தனக்கு இன்னமும் பேறு வாய்க்கவில்லையே என்று உலக்கையால் அடிவயிற்றில் இடித்துக்கொண்டாளாம் காந்தாரி. பிண்டங்கள் சிறிதும் வளர்ச்சியடையாத நிலையில் பிண்டங்களை நூறு கும்பங்களில் வைத்ததில் அவர்கள் நூறு புதல்வர்களாக கௌரவர்களாகத் தோன்றினார்களாம். நம் தமிழ் மெகா சீரியலில்

வருவதுபோல் நூறு பெண்கள் வாடகைத் தாய்மார்களானார்களா? செயற்கைக் கருத்தரித்தல் பற்றி இதில் பேசப்படுகிறதா?

மாறாக காந்தாரி ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள் என்றும் அவள் பெயர் துச்சலை என்றும் சொல்லப்படுகிறது. மகாபாரத வரலாற்றில் இந்தச் சகோதரி பற்றி ஒரு குறிப்பும் பிறகு இல்லை. மாயமாகிப் போன பெண்ணோ?

# 7. வேள்வித் தீ

நம் இராமாயண காவியத்திலும் வேறுபல புராணங்களிலும் அரசருக்கு ஆயிரக்கணக்கான அந்தப்புரப் பெண்கள் (அடிமைகள்) இருந்தபோதிலும், ஒன்றுக்கு மேற்பட்ட, இரண்டு மூன்று பட்டமகிஷிகள் என்ற உயர்ந்த இடத்தில் சந்ததியைத் தோற்றுவிக்கும் உரிமை பெற்ற மகாராணிகள் இருந்த போதிலும், பிள்ளை இல்லாக்குறை என்ற நிலை எப்படி வந்தது? மகப்பேறின்மை என்பது பல்வேறு கதை , புராணங்களில் மிகப் பெரிய குறையாகக் காட்டப்பட்டிருக்கிறது. ருஷிகள் கன்னிப்பெண்களைக் கூடிய போது, அது பாலியல்வன்முறை என்று பார்க்கப்படாமல் கர்ப்பம் கொடுத்தல், முதிர்ந்த பிரும்மசரிய வித்து என்று, மங்களமாகப் பார்க்கப்பட்டது. ஆனால், போகத்துக்காகவே வாழ்ந்த அரச குலத்தினர், தங்கள் வீரியங்களை அந்தப்புர மகளிரிடமும் அல்லது போகத்துக்காகவே ஒதுக்கப்பட்ட பொதுமகளிரிடமும் இழந்த நிலையில் இளமைப் பருவம் முழுவதையும் நாடு பிடிக்கும் போரிலும் களியாட்டங்களிலும் இழந்துவிட்ட நிலையில் வீரிய மிக்க சந்ததியைத் தம் மகாராணிகளிடம் பெறமுடியாததுதான் மக்கட்பேறின்மையாகிறது.

இதற்காக வேள்விகள் இயற்றப்படுகின்றன. அசுவ மேதம், புத்திரர்களை வேண்டிப்பெறும் வேள்வி. யாகபுருடன் பாயசத்துடன் தோன்றினான். அதை மூன்று மனைவியரும் அருந்தி, கருப்பமடைந்தனர் என்று சொல்லப்படுகிறது. இந்த 'வேள்வி' என்று தீ வளர்க்கும் சடங்குகளுக்கும் திருமணம் முதல், மரணக்கொள்ளிவரை செய்யப்படும் அனைத்துச் சடங்கு

களுக்கும் என்ன தொடர்பு? இன்றும் சினிமாப்பட பூசை செய்யும் போதும்கூட ஐயர் வந்து தீ வளர்ப்பது, 'பார்ப்பனிய' எதிர்ப்புக் கொள்கையினரும் கூடத் தவிர்க்காமல் இருப்பது ஏன்? பரம்பரை வழக்கங்கள், மூடநம்பிக்கைகள் என்று ஒருபுறம் சொல்லப் படுகிறது. என்றாலும் அறிவியல் வளர்ச்சிகள் மனித சமுதாயத்தை நம்பிக்கையில்லா எதிர்காலத்தை நோக்கியிருப்பதன் அச்சத்துக் குரிய வெளிப்பாடாகவே மீண்டும் மூடநம்பிக்கைகள் புதுப்பிக்கப்படுகின்றன.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன், மனிதர் விலங்குகளைப் போல் வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தபோது, 'தீ' புதிய பரிணாமத்தை இசைத்தது. காட்டுத் தீயில் பொசுங்கிய நிணம் உடலுக்கு நன்மை செய்தது. ருசி மிகுந்தது. வெம்மையில் பாதுகாப்பை உணர்ந்தனர். குகைகளில் வாழும்போது அந்தத் தீயைப் பராமரித்து எதிரிகளைத் தேடி அழிக்க, வீழ்த்தப் பயன்படுத்தினர். ஆனால், அந்தத் தீ அணைந்துபோனால் மீண்டும் அதை உருவாக்கும் வித்தை முதலில் தெரியவில்லை. மரத்தோடு மரம் உராய வன்னி கடைந்து தீ மூட்டத் தெரிந்த மக்கள், அது தெரியாத மக்களைவிட மேலாகக் கருதி, தீ மூட்டும் வித்தையைத் தங்களுக்குள் இரகசியமாகவே வைத்திருந்தனர். வெடிமருந்து இரகசியம், அணுகுண்டு இரகசியம் போன்றவைதாம் இவை. இந்த உயர்வே ஆதிக்கத்துக்குரிய சக்தியாயிற்று. மண், பெண், பொன், இந்திரிய சுகங்கள் எல்லாவற்றுக்கும் ஆதாரமான 'தீ' அக்னி பகவானின் உருவிலேயே அவர்கள் இயற்கையை வழிபட்டனர். மகப்பேற்றுக்கான வீரியம், அதுவும் அக்னியே. மன்னன் ஒரு குதிரையை அனுப்பி, அதன்பின் படை வீரர்களை அனுப்புவான். அந்தக் குதிரை கால்பட்ட இடங்களனைத்தும் மன்னனுக்குச் சொந்தமாகும். குதிரையை எந்த மண்ணுக்குரியவன் பிடித்துக் கட்டினாலும் பின்னே வரும் படை அவனை நொறுக்கி அதிகாரம் அழிக்கும். அத்தகு வல்லமையுடையவனே அக்குதிரை யை அனுப்பி வைப்பான். திரும்பி வந்த குதிரை வேள்விச் சாலையில் பலியிடப்படும். அங்கே மன்னனின் பட்ட மகிஷிகள் சந்ததி வேண்டுவோர் இருப்பர். வேள்வித் தீ வளர்க்கும் மந்திரம் இசைக்கும் புரோகிதர் 'ரித் விக்' எனப்படுவோர் சடங்குகளைச் செய்வார்கள்.

அடிமைப் பெண்கள் கருவுற்று மக்களைப் பெற்றிருப்பார்கள்.

உலகெங்கும் அடிமைகளை யாரும் வளர்த்ததில்லை. அவர்கள் சந்தைகளில் விற்பனைக்கு, ஏல விற்பனைக்குப் போவார்கள். அவர்களில் எவரும், மண்ணுக்கு உரியவர்களாக இருக்கமுடியாது. சந்ததி வேண்டிய மகாராணி, மரித்த குதிரையின் அருகே படுத்துக் கொள்வாள். பிரும்மசரியம் முதிர்ந்த ஆற்றலுடன் முதன்மைப் புரோகிதர் வருவார். இந்த வேள்விகளின் உட்பொருள், புனிதமான, அரசிகள் குருக்கள் கூடல்தான். புனித என்பதன் பொருள் அவள் உள்ளும் புறமுமாக விழைந்து முழுமையாகக் கலவியை ஏற்று ஈடுபட வேண்டும்.

பெண்ணே குழுத்தலைவியாக இருந்தபோது, விழைவை அவள்தான் ஆணிடம் தெரிவிப்பாள். அவள் மூன்று விரல்களைக் காட்டி தாய்மைப் பேற்றுக்கான அடையாளம் காட்டுவாள். ஆண் அவளுடன் கூடுவான்.

இதெல்லாம் ஆண் அவளுக்கே அவள் உடலின் மீதான உரிமையை ஆதிக்கத்தால் தகர்த்தபின் வழக்கொழிந்தன. ஆனால், ஆண் தன் ஆளுகைக்குள் அடக்கிய நிலையில் அதை ஆக்கிரமிப் பாகவே அவள் ஏற்கிறாள். அவள் விழைவு அழிகிறது. உள் மனதின் வெறுப்பு, சந்ததிச் செழிப்புக்கேற்ப மலருவதில்லை. மன்னன் பூமண்டலத்தின் சக்கரவர்த்தி என்று குதிரையை அனுப்பி தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்தலாம். ஆனால், அவன் சந்ததியை ஏற்க அவர்கள் உணர்வுகள் கூம்பிப் போயின.

ஹரிவம்சம், யஜுர்வேதம், ஆகிய நூல்களில் இந்த விவரங்களே மந்திரப் பாடல்க்ளில் இடம் பெற்றிருப்பதை, காசிநாத் ராஜ்வாடே, தம் வரலாற்று நூலில் விளக்குகிறார்.

ரித்விக், கர்த்தா அல்லது இயக்குனர், தயாரிப்பாளர், வழங்குபவர் எல்லாமாகத் திகழ்ந்தனர். மூன்று கட்ட நாடகம் போல இந்தப் பாடல்கள் உரையாடல்களாக விரியும்.

மரித்த குதிரையின் அருகில் படுத்திருக்கும் அரசி, 'இந்தக் குதிரையே என் விழைவுக்குப் போதும்' என்று அவள் சொல்வதாகவும் மரித்த குதிரையுடன் அவள் கூடும் புணர்வு நாடகம், 'போதும்' என்ற வெறுப்பின் உணர்விழையை மெல்ல மெல்ல நீக்கி, முழு விழைவையும் தூண்டும் வண்ணம் பாடல்கள் அமைந்திருக்கும். இந்தப் பாடல்கள் செயல்ரீதியாக அவள்

விழைவை வெளிப்படுத்தத் தூண்டும். திரை விழும். குதிரையின் இடத்தில் ரித்விக் இருப்பார். அரசியின் முழு விழைவுடன் கூடல் நிறைவேறும். இதுவே சந்ததி பெற விழையும் வேள்வி.

வேள்விகள் அனைத்துமே மன்னனின் ஆதிக்கங்களை அழுத்தமாகப் பதிப்பதின் அடையாளங்களாகவே கருதத் தோன்றுகிறது. இந்த உண்மைகள், யுகயுகங்களாக ஆணின் ஆதிக்கங்களைக் கருத்தரியாமை என்ற மனரீதியான எதிர்ப்பைப் பெண் காட்டியிருக்கிறாள் என்று கொள்ளலாம். இன்றும் வாழ்வதற்கு இன்றியமையாத தேவைகள் இல்லாத இடங்களில் ஆதிக்கங்கள், பெண் எதிர்ப்பைக் காட்டவே வழியின்றி, கோழை, அடிமைச் சமுதாயம் உருவாகிறது. இத்துணை அறிவியல் முன்னேற்றங்கள் வந்த பின்னரும், பெண் திருமணமாகி இரண் டாண்டுகள் கருவுறவில்லை என்றால், அவளையே உடல் சார்ந்து குறை கூறும் வழக்கம் தொடர்கிறது. சில குடும்பங்களில் ஆண் அவளுடன் கூடுவான். ஆனால் அவளுக்குத்தான் உடலின் மீதுள்ள உரிமை போன பின் ஆணின் ஆளுகைக்கு அடங்கிய வளாக ஆக்கிரமிப்பை ஏற்கும்போதும், விழைவு இயல்பு அழிகிறது. மன ரீதியான எதிர்ப்பு ஏற்படுகிறது. அவள் கருப்பை சந்ததிச் செழிப்புக்கு ஏற்ப மலருவதில்லை.

ருக் வேதப் பாடலில் பத்தாம் மண்டலத்தில் கருச் சிதைவு ஏற்படாமல் காக்கக்கூடிய மந்திரம் வருகிறது. அதில் கணவனோ, சகோதரனோ, காதலனோ, யாரால் அவள் தாய்மைக்குரிய கருத்தரித்திருந்தாலும், அந்தக் கரு கலையும்படியான தவறு நேரக்கூடாது (அது யாராக இருந்தாலும்!) என்று பொருள்படும்படி இருக்கிறது. இது ஆண் ஆதிக்கம், பெண்ணுடலை உரிமையாகக் கொள்ளாத காலமாக இருக்கலாம் என்று ஊகிக்க முடிகிறது. வேதம் பெண் படிக்கலாகாது என்று ஆணாதிக்கச் சமுதாயம் தடை செய்திருக்கிறது. ஆணாதிக்கத்தின் விளைவாகவே பெண் மனத்தளவில் பாதிக்கப்படுவதாலேயே கருத்தரியாமை என்ற எதிர்ப்பைக் காட்டி இருக்கிறாள் என்று கொள்ளலாம். இந் நாட்களில் அறிவியல் சார்ந்த ஆய்வுகள் பெண்ணின் உடற் கூறியலைப் பரிசோதித்து, கருத்தரியாமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துகின்றன. ஆனால், இயற்கை பெண்ணைத் தாய்மைப் பேற்று சிறப்பியல்புகளுடன் படைத்திருக்கிறது. அவள்

பிற்காலங்களில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் 'அபலை' யல்ல. பேதையல்ல. பலவீனமானவளல்ல. உணர்ச்சிமய மானவள். அந்த உணர்ச்சியின் மறுபக்கம் எதையும் தாங்கி வெல்லும் ஆற்றலாகும். அது உயிர்களனைத்திலும் காட்டும் கருணை; அன்பு. இவள் பிறந்தபோதே, இத்தகைய இயல்பு களிலிருந்து பிரிக்கப்பட்டு அவள் உடலே அவளுக்குரியதல்ல என்ற அச்சில் அழுத்தப்பட்டு உருவாக்கப்படுகிறாள். இந் நாட்களில் ஒவ்வொரு தொலைக்காட்சித் தொடரிலும் ஒரு பெண் மருத்துவர், இரண்டாண்டுகள் திருமணமாயும் கருவுறவில்லை என்று சோதனைக்கு வந்த நாயகியிடம் ''உன் கருப்பை வளர்ச்சியுறவில்லை; உனக்குக் குழந்தை பெற வாய்ப்பே கிடையாது'' என்று தயக்கமின்றி உடைத்து அவள் மனதையும் சுக்குநூறாக்குவாள். உடனே மாமியாராகப்பட்டவள் இவளுக்கு மணவிலக்குத் தந்துவிட்டு, மகனுக்கு இரண்டாம் திருமணம் செய்து வைக்க முன்வருவாள். சமகால வாழ்விலும் சந்ததி இல்லாத குடும்பங்களில் ஆண் பரிசோதனை செய்துகொள்ள உட்படுவ தில்லை. பெண்கள் கல்வி கற்று, பல வகைகளிலும் தங்கள் ஆற்றலை நிரூபித்திருக்கும் நிலையில் தன்னைவிட எல்லா வகையிலும் தாழ்ந்த நிலையில், வயது குறைவாக உள்ள பெண்ணையே ஆண் விரும்புகிறான். சமூக நியாயமே அவன் பக்கத்தில்தான் இருக்கிறது. எந்த வகையிலும் மனைவி தற்சார்பை வெளியிடலாகாது. கூடலில் அவனுடைய ஆதிக்கத்தை உள்ளூர எதிர்க்கும் பெண், அவனுக்கு அடங்காதவளாகிறாள். தற்சார்பு டைய பெண்கள் திருமணமான சில நாட்களிலேயே மணவிலக்குப் பெற முனைகிறார்கள். இத்தகையை பெண்கள் திருமணம் கூடாத முதிர்கன்னிகளாகவே இருப்பதும், மரபுகளை மீற வேண்டிய கட்டாயங்களும் கொலைகளும் தற்கொலைகளும் நேருவதும் சமகாலச் சமூகத்தில் பரவலாக நிகழ்கின்றன.

இதை எழுதும்போதும், 'திருமணமான மூன்றே மாதங்களான மனைவியை ஒரு கணவன் அடித்தே கொலை செய்திருக்கிறான்' என்ற செய்தி வருகிறது. 28ம், 24-மான இஸ்லாமிய தம்பதி; பத்திரிகைச் செய்தியில் வரதட்சணைப் பேயைக் காரணமாகக் காட்டி இருக்கிறது. இஸ்லாமிய சமுதாயத்தில் பெண்களுக்கு அதிகமான பாதுகாப்பும் சுயமரியாதையும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அங்கு மணமகனே மணமகளுக்குப் பொருள்

கொடுக்க வேண்டும். வரதட்சணைப் பேய் அவனைப் பீடித்ததா, அவளைப் பீடித்ததா? கலவியும் கருத்தரித்தலும் தூலமான அறிவியல் மட்டும் சார்ந்த நிகழ்வுகளல்ல. ஆறறிவு படைத்திராத உயிரினங்கள் கூடி இனப்பெருக்கம் செய்து வாழ்கின்றன. மனிதன் அந்த விலங்குகளின் இயற்கை இனப்பெருக்கத்தின் குறுக்கே புகுந்து அவற்றின் வாழ்விடங்களை, செடி, கொடிகளை, நீர் நிலைகளை ஆதிக்கம் செலுத்திவந்தான். பயனாக, இந்நாள், விளைநிலங்களில் பூச்சிக் கொல்லி மருந்துகளுக்காகவும், வீடுகளில் தெளிக்கப்படும் பூச்சிக் கொல்லி மருந்துகளுக்காகவும் மட்டுமே பல்லாயிரம் கோடி ரூபாய் செலவிடப்படுவதாக ஒரு கணக்கு அறிக்கை வெளியாகிறது. இந்நாட்களில் பத்துப் பன்னிரண்டு தென்னை மரம் கீற்றுமிளநீரும் என்று பாரதி கனவு கண்ட இளநீரில் கூட பூச்சிக் கொல்லி மருந்தின் நெடி கலந்திருக்கிறது.

சுனாமிப் பேரலைத் தாக்குதலில் வெளிநாகரிகம் கட்டுப் பாடாகத் தவிர்த்து கானகத்தோடு இயற்கை வாழ்வு வாழ்ந்த அந்த மான் பழங்குடியினர், அபாயத்தை முன்கூட்டியே அறிந்து தங் களைப் பாதுகாத்துக் கொண்ட தகவல்கள் வந்திருக்கின்றன.

பழங்குடியினர் பல மரபுகளைக் கொண்டிருக்கலாம். ஆனால், அவர்கள் இயற்கையை அழிப்பவர்களல்லர்.

இயல்பான உணர்வுகளை மதிக்கும் சமத்துவத்துக்கும் ஒரு நெறிமுறை அமைத்துக் கொண்டிருந்திருக்கின்றனர்.

மத்தியப்பிரதேசப் பழங்குடியினரிடையே குமரப் பருவ ஆண் பெண்கள் இரவானதும் களித்து நடனமாடும் ஒரு பழக்கம் குழுத் தலைவன் கண்காணிப்பில் நிகழ்ந்துவந்திருக்கிறது. இதற்கு 'கௌதுல்' என்று பெயர். பழங்குடிச் சமுதாய ஆய்வாள ஆங்கிலேயர் கூடப் பார்க்க இயலாத அந்த நடனம் தவறான கற்பனைகளுக்கோ, கவர்ச்சிகளுக்கோ வாய்ப்பாகலாம். அதே இளைஞர் சிறிது காலம் சென்று மணம் புரிந்துகொள்வார் என்றும் நெறியுடன் வாழ்கிறார்கள் என்றும் பால்வினை நோய்களே இல்லை என்றும் கூறப்பட்டது. (இப்போது எப்படியோ? இதே மத்தியப்பிரதேசத்தில் நாகரிக மக்களுடன் பழகி சீர்திருந்திய மக்களைப் பெருமளவு பால்வினை நோய்கள் தாக்கியதாகச் செய்திகள் வந்தன.)

# 8. துறவும் தாய்மையும்

சமுதாய உற்பத்தியானாலும் உணவு உற்பத்தியானாலும் பெண்ணின் பங்கேற்பு மிக முக்கியமானது.

ஆக்கிரமிப்பும், உரிமை மறுத்தலும் தூலமாகக் காட்டப் படவில்லை. என்றாலும், வேதம் பெண் மறுக்கும் துறவு நெறியைக் காட்டவில்லை. பவுத்தம், சமணம் ஆகிய மதங்களோ, பெண் வெறுப்புத் துறவை உயர்த்தின. பெண் போகமே பாவம் என்ற கருத்தில் கிறித்தவம் ஆண், பெண் கூடலையே புனிதத்துக்கு ஒவ்வாததாகக் கற்பித்துத் தூய கன்னிமையில் உதித்த மைந்தராக இயேசுவை (அயோனிஜர்) உலகுக்கு அறிவிக்கிறது.

மனைவியும் மகனும் மனிதனின் ஆன்மிக உயர்வுக்குத் தடைகள்; உலகின் அனைத்துத் துன்பங்களுக்கும் ஆசையே காரணம். ஆசைகள் அறுபட வேண்டுமாயின் பெண் பந்தம் தவிர்க்க வேண்டும்...

சமணமும், பவுத்தமும் நாட்டில் வேதமங்களுக்கு, வேள்விப் பலிகளுக்கு எதிராகச் செல்வாக்குப் பெற்றபோது தான் சங்கரர் தோன்றுகிறார்.

'மனைவி யார்? மக்கள் யாவர்? சம்சாரம் என்பது மாயை' என்று அறிவுறுத்திய சங்கரர் இளமையில் துறவு நெறியேற்றார். இந்த சங்கரர் மரபு இந்தியப் பெண்களைச் சிதையேற்றவும் கைம்மைக் கொடுமைகளை இழைத்து அவர்களை உயிரோடு வதைக்கவும் வழியமைத்தது. பெண்களைத் துறவுச் சங்கத்தில் புத்தர் சேர்க்க மறுத்தார். அவருடைய தாயும், மற்ற நிராதரவான பெண்களும் (எல்லைப் போரில் காப்பாளரை இழந்தவர்கள்) புத்த சங்கத்தில் சேரத் தவம் கிடந்தனர். அவர் சீடர் ஆனந்தர் பல நாட்கள் வேண்டிப் பரிந்துரைத்ததன் பேரில்தான் அவர்கள் துறவுச் சங்கத்தில் சேர அனுமதி பெற்றனர். என்றாலும், ஆடவரான துறவிகளுக்கும் இவர்களுக்கும் சமமான நிலை கொடுக்கப்படவில்லை.

சமணத்திலும், பெண் துறவியருக்கு இடம் இருந்தது. இதைப் பின்பற்றியே சங்கர மரபு, சதிக்கொடுமையில் இருந்து

காப்பாற்றுவதுபோல் அழகிய கேசங்களைத் துறந்து, உணவு ஒடுக்கி, கல்படுக்கையில் படுக்கும் விதவைத் துறவில் வாழ அனுமதித்தது. கிறித்துவ துறவறமும் கன்னித் துறவிகளுக்கு இடம் அளித்தது. ஆனால், மதம் பரப்ப ஆதிக்க பீடம் அமைக்கும் துறவு நெறிகள் இயல்பானவையாக இருக்க இயலாது என்பதைக் காலந்தோறும் ‘போலி’த் துறவுகள் பெண்கள் உயிரைக் குடித்தும், அனாதைக் குழந்தைகளை உருவாக்கியும் நிரூபித்திருக்கின்றன. கருக்கலைப்பு என்ற பாவங்கள் பெண்களின் மீதே ஏற்றப் பட்டிருக்கின்றன. துறவு நெறி என்பது, பெண் வெறுப்பாகும் போது அது இயல்புக்கு மாறான போலித்தனமே.

நம் காலத்தில் பகவான் என்று போற்றப்படும் இராமகிருஷ்ணர், துறவி அல்லர். தம் இருபத்திரண்டாவது வயதில் எட்டு வயதுச் சாரதையை மணந்தார். பக்தி மார்க்கத்திலும், ஞானமார்க்கத்திலும் அவர் காளி அன்னையின் தொண்டராகத் தாய்வழிப்பாட்டுத் தத்துவ விளக்கமாகவே விளங்கினார். சாரதாமணி தேவியார், தம் கணவர், பைத்தியக்காரர் போல் தட்சிணேசுவரத்தில் உலக இயல்புக்கு ஒவ்வாத நடப்பில் திரிகிறார் என்று கேள்விப்பட்டுச் சொந்த கிராமத்தில் இருந்து புண்ணியத்தலங்களுக்குச் செல்லும் பக்தர்களான பயணிகளுடன் கணவருக்குச் சேவை செய்ய வருகிறார். ஆண், பெண் என்ற இருமை ஒன்றின்றி மற்றது முழுமையடையாது. இருள் - ஒளி - சுகம் - துக்கம் என்ற கூறுகள் இன்றைய அதிநவீன தொழில்நுட்பம் வரை இயங்கும் இருமைக் கூறுகள். ஆணில்லாமல் பெண்ணில்லை. முழுமை தாய்த் தத்துவம். சாரதாமணி அவரிடம் வந்து சேர்ந்தபோது, இளமையின் முழுப் பொலிவுடன் திகழ்ந்தாள். இராமகிருஷ்ணர், அவளை வரவேற்கிறார். ஒரு கணவருக்கு மனைவி செய்யக்கூடிய பணி விடைகள் செய்கிறாள். அமுது வடித்தல் உள்பட அவருடைய பூஜைக்குரிய வழிபாடுகளுக்குரிய அனைத்துப் பணிகளையும் செய்கிறாள். அவள் உள்நோக்கம் யாதாயிருக்கும்? மனைவியின் வடிவில் தாயையே அவர் காணலாம். ஆனால் அவள்?

“உனக்குப் போகம் வேண்டுமா, அம்மா? நான் உன் கணவன்; நீ நான் அப்படி இருக்க வேண்டுமாயின் உன் விருப்பம் தெரிவிக்கவேண்டும்” என்று வினவியபோது, அவள் கணவரின் வழிபாட்டுக்குரிய இலக்கைப் புரிந்து கொள்கிறாள். அவளையே தேவியாகக் கருதி அவர் பூசை செய்ய சாரதை அதே உணர்வில்

அப்போது சமாதி நிலையை அடைந்தாராம். இது புதிய இல்லறம். சாரதையின் தாய், ''இப்படி ஒரு பைத்தியத்துக்கு என் பெண்ணைத் தாரை வார்த்தேனே? அவளை அம்மா என்றழைக்க ஒரு பிள்ளைக்கு வழியில்லாமல் போயிற்றே!'' என்று வருந்தினாராம். ''உன் மகளை அம்மா என்றழைக்க உலகு முழுவதும் மக்கள் வருவார்கள்!'' என்றாராம் இராமகிருஷ்ணர். உலகுபோற்றும் விவேகானந்தர்; ஒரு மகனே போதாதா? இராமகிருஷ்ணருக்குப் பிறகு அன்னை பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார். அவருடைய கருத்துக்கேற்ப அன்னை குங்குமம், வளையல், காப்பு ஆகிய மங்கல அணிகளைத் துறக்காமல் இறுதிவரை உலகு போற்றும் அன்னையாகவே வாழ்ந்தார்.

'அன்னை' என்று கொண்டாடிவிட்டு பெண்ணுடலின் ஒவ்வோர் உறுப்பையும் அழகு, மாட்சிமை என்று விவரிக்கும் போலிகள் இந்த இல்லறத்தில் இல்லை. இது எத்தனையோ யுகங்களில் ஒன்றாகப் பூக்கும் அபூர்வம் நமக்குத் தெரிந்து, காந்தியடிகள், கஸ்தூரிபா, நான்கு பிள்ளைகளுக்குத் தாயான பின் உடல் நலிவால் துன்புற்ற காலத்தில் மக்கள், நாட்டு விடுதலை என்ற அறப்பணிகளை மேற்கொள்ள குடும்பம் பெருக்குவதும், அன்னையின் உடல்நலத்திற்குக் கெடுதல் விளைவிப்பதுமான போகத்திலிருந்து - பிரும்மசரியம் மேற்கொள்ள உறுதி கொண்டார். அதிலும் கஸ்தூரிபாவின் இசைவு தேவைப்பட்டது. அவரும் பெண் போகம் அனுபவித்தவர். பெண்ணைத் தாயாகப் போற்றும் மரபு இந்திய நாட்டின் பேச்சு வழக்கில்கூட உயர்ந்திருக்கிறது. பெண் குழந்தையைக்கூட அம்மா என்று குறிப்பிடும் மரபில் அந்தப் பண்பு துலங்குகிறது. அந்தப் போற்றுதலுக்குரிய தாய், வெறும் போகப் பொருளாகப் பார்க்கப்படும்போது? பெண் போகம் என்பதற்கு ஒரு விளைவு உண்டு. விளைவைப் பற்றிய உணர்வு சிறிதும் இல்லாமல், சுமப்பவள் அவள்தானே என்று ஆண் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறான். சுமப்பது அவள் கடன் என்று கருதுபவன், உணவுத் தேடலின் பொறுப்பை மறுக்கவும் முடியாது. ஏனெனில் பெண்ணுக்கு எல்லா உரிமைகளையும் மறுப்பவன், பொருள்தேடும் பொறுப்பைத் தான் வைத்துக் கொண்டவனாகிறான். இந்தச் சுமையையும் மறுக்கும் வண்ணம், 'அம்போ' என்று குழந்தைகளையும் தாயையும் விட்டுவிட்டு, கணவன் 'துறவு' நெறியை ஏற்பதற்கு வாய்ப்பாக

சந்நியாச தர்மம் என்பது வழி வகுக்கிறது. ஆண் ஆதிக்கம் பொறுப்பற்ற குடியரசாக இந்நாள் இந்தியத் திருநாட்டில் மலர்ந்திருக்கிறது. மகளிர் உரிமை என்பது கானல் நீரே; இந்த ஆதிக்கம், பக்தி இலக்கியங்களில்கூட, ஒருபக்க நியாயத்தையே நிலைநிறுத்துகிறது. சநாதனத் தீண்டாமையை எதிர்த்த பக்தி இயக்கங்கள், சண்டாளனானாலும் திருடனானாலும் விலை மகளிரானாலும் இறைவன் காட்சி தந்து முக்தியளிப்பார் என்பதே நீதி என்று விளக்குகின்றன. உள்ளார்ந்த பக்தி என்பதே, ஆணாதிக்கம் சார்ந்ததுதான். மண்பாண்டம் வனையும் நீலகண்டர், பரத்தையிடம் சென்று வந்ததால் மனைவி கோபித்தாள். தன் எதிர்ப்பை அறிவித்தாள். ''நீர் எம்மைத் தீண்டினால் திருநீல கண்டம்!'' என்று அவர் வணங்கும் ஈசன் பெயர் சொல்லி ஆணை யிட்டாள். ஈசனாகிய ஆண் பெயரைச் சொல்லிவிட்டாள். இவள் உலகநாயகியான தேவியின் மீது ஆணை போட்டிருக்கலாகாதா? ஏனெனில் இவர்கள் பக்தியில் ஈஸ்வரியே ஈசனின் ஆணைக்குக் கட்டுப்பட்டவளாயிற்றே? அந்த முருகனை அவள் கருப்பைச் செயல்பாட்டிலா பெற்றாள்? ஈசனின் கண்களில் இருந்த பொறிகள் அல்லவோ, பொய்கையில் வீழ்ந்து, மதலைகளாயின. பக்தருக்கு இரங்காத ஈசனா? வந்தார் திருவோடு ஏந்திய காசாயத்துறவியாக. திருவோட்டை, பக்தனிடம் கொடுத்தார். ''அப்பனே, நான் தீர்த்த யாத்திரை செல்கிறேன். திருவோட்டைப் பத்திரமாக வைத்திருந்து கேட்கும்போது தாரும்' என்று சொல்லிப்போனார். போனவர் நெடுங்காலம் முகவரி இல்லாதவரானார். பக்தரும் மறந்து போனார். திடீரென்று ஒரு நாள் வந்தார். 'அப்பனே, நான் கொடுத்த திரு வோட்டைத் தா' என்றார். பக்தர் தேடினார். வைத்த இடத்தில் அது இல்லை. குடில் முழுவதும் தேடியும், கொல்லையிலும் வாயிலிலும் எங்கும் அது இல்லை. புதிய ஓடு ஒன்று வனைந்து கொடுப்பதாகக் கூறினார். ஆனால், துறவி வேடத்தில் வந்த பரமன் அதுவே வேண்டும் என்று ஒரே உறுதியில் நின்றார். 'நீ கவனமற்று, அதைத் தொலைத்து விட்டாய்!' என்று கடுமையாகக் குற்றம் சாட்டிய போலிச் சிவனடியார், 'நீர் குளத்தில் முழுகிச் சத்தியம் செய்வாயா, தவறாகத் தொலைக்கவில்லை என்று?' என்று சினம் பொங்கக் கேட்டார். பக்தர், குளத்தில் இறங்கினார், முழுகிச் சத்தியம் செய்யச் சித்தமாக. 'உஹூம், உம் மனைவியின் கைப்பற்றி இறங்கி மூழ்கிச் சத்தியம் செய்ய வேண்டும்!' என்று அடியார் ஆணையிட்டார். அவரோ திகைத்தார். பிறகு ஆபத்துக்குக் குற்றம் இல்லை என்பது

போல், ஒரு மூங்கில் கம்பைக் கொண்டு வந்து மனைவி ஒருபுறம் அதைப் பற்ற இவர் ஒருபுறம் பற்ற மூழ்கியபோது இருவரும் கம்பை விடுத்து ஒருவரை ஒருவர் பற்றி மூழ்க வேண்டும் என்று விதித்துக் காட்சி தந்ததாக வரலாறு.

இந்த வரலாறு பக்தியைத் தூக்கிக் காட்டுகிறதோ இல்லையோ, மனைவியின் எதிர்ப்பைப் பக்தனுக்காக இறைவன் தவிடுபொடி யாக்குகிறார். அதற்காக இறைவியுடன் காட்சி கொடுத்திருக்கலாம்! இதேபோல் இல்லை எனாத இயற்பகை நாயனார், சிவனடியார் கோரியபடி, தம் மனைவியைப் போகத்துக்காக வழங்கினார் என்பது இன்னொரு பக்தர் வரலாறு. இங்கே கற்பின் திண்மை பக்திக்கு எடுத்துக்காட்டாகிறது. அவளாகவே தன் உடலைக் கொடுப்பது, கீழினும், கீழான செயல். கண்டனத்துக்குரியது மட்டுமில்லை. சுண்ணாம்புக் காளவாயில் போட்டு நீறாக்குவதற் குரியது. யம உலகில் நெருப்புத் தூணைக் காட்டி அணையச் சொல்வான் யமன்!

எனவே கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருசன் என்பது மட்டுமல்ல. அவன் உன்னைப் பிறர் மனையில் ஊழியம் புரிய விற்றாலும், தலைகுனிந்து ஏற்றுக் கொள்; உன்னை வெட்டுவதற்கு முன்நிறுத்தி வாளை ஓங்கினாலும் மறுப்புக்காட்ட லாகாது; இவள் கற்பு, எல்லா உலகங்களிலும் எல்லாக் காலங்களிலும் புகழ் சேர்க்கும் இவளுக்கு.

இந்தப் பண்பு காலம் காலமாக இவள் உருவாகும்போதே உள்ளுணர்வில் ஓர் அணுவாகப் பதித்து வைக்கப் பெறுகிறது.

புலனடக்கம் என்பது, காவியை உடுத்திக்கொண்டு, தண்டு கமண்டலம் ஏந்தி மதகுரு என்று பீடமேறுவதால் எய்த முடியாதது. நூல்கள்ளைப் படிப்பதாலும் கொள்கைகளைப் பரப்புவதற்காகத் துறவி உடை தரித்துப் பிரச்சாரம் செய்வதாலும் பல மக்கள் அவரைக் குருவென்று போற்றுவதாலும் எய்த முடியாததொரு இலட்சியம்; மேன்மை, புலனடக்கம், மேலாம் அறிவு, ஞானம், படைப்பாற்றல் பெற இன்றியமையாத நெறியாகப் பண்டைச் சான்றோர் கண்டனர்.

இது இயல்பாக வருவதல்ல; சாதனையால் மட்டுமே எய்தக்கூடிய நெறி.

புலனடக்கம் பெண்களை வெறுப்பதாலோ,போக உறுப்பு களைப் பழிப்பதாலோ, அவளைப் போகப்பொருளாக்கி, வாணிபத்தை அனுமதித்து, ஈடுபட்டு வீழ்த்திய பின்னோ, எய்தப்படும் பண்பு அல்ல. புலனடக்கம், ஆண் ஒவ்வொரு பருவத்திலும் வளர்த்துவரும் நற்பண்புகளின் சாரமாக மலரக் கூடியது. இயற்கை ஆணையும் பெண்ணையும் வெவ்வேறு தன்மைகளுடன் படைத்திருக்கிறது. ஆண் தூலமான வலிமை யையும் எழுச்சியையும் வெளிப்படுத்துகிறான். பெண்ணின் இயல்பு மென்மையானது. கட்டுக்கடங்காத கானகத் தீயாய்க் கிளர்ச்சி கொள்ளக்கூடிய இயல்பை ஆற்று வெள்ளமாகப் புரண்டுவரும் பருவ ஓட்டத்தை, பெண் அரவணைத்துச் செல்பவள். தாயாய், தாரமாய், மகளாய், அவள் அவனை ஆற்றுப் படுத்தக்கூடியவள். மழலைகளுக்குத் தாய்மொழி கற்பிக்கும் ஆசிரியையாக, நோயுற்றபோது மருத்துவராக, செவிலியராக பெண்கள் அகிம்சையும் அன்பும் விளங்கப் பணியாற்றுகிறார்கள். அவர்களுடைய மூத்த அறிவும், அனுபவ விவேகமும், புதிய இடர்ப்பாடுகளில் சிக்கல் தீர்க்கப் பயன்படக்கூடும்.

ஆனால், ஆணின் ஆதிக்க மனப்பாங்கு அவளுடைய உடற்கூறியல், போகம், சந்ததி என்ற கூறுகளை மட்டுமே வைத்து அடையாளப்படுத்துகிறது.

'என்னருகில் நீ; ஒரு மதுக் கோப்பை, இது போதும்' என்று கவிதை இசைக்கும் ஓர் ஆண் உலகப் புகழ் பெறுகிறான்.

ஆனால், ஒரு பெண் இதுபோல் ஒரு கவிதை எழுதினால் 'கொண்டுவா அவளை! முச்சந்தியில் பெட்ரோல் ஊற்றி எரிப்போம்' என்று ஆதிக்கம் செலுத்துபவன் கொக்கரிக்கிறான். போலித் துறவுகள், பவுர்ணமி பூசையென்று பெண்களின் எலும்புகளை ஆசிரமங்களில் குழிதோண்டிப் புதைக்கின்றன. அனைத்து மோசடிகளுக்கும் காசாயம் கைகொடுக்கும் பாரத நாடு இது. மகாபாரத அருச்சுனனே காசாயம் பூண்டுதான் சுபத்தி ரையைக் கவர்ந்து மனைவியாக்கிக் கொண்டான்! அருச்சுனன், கண்ணனாகிய தேவனின் நண்பன். இராவணனோ, கற்பரசியைக் கவரக் காசாயம் பூண்டான்; அழிந்தான்!

இந்தத் துறவு நியாயங்களில் பெண்களின் சுயமரியாதை மட்டுமல்ல, அவள் இருத்தலே பலியாகிறது!

# 9. மக்கள் பெருக்கப் பொருளாதாரம்

மக்கள் பெருக்கமும் பொருளாதாரமும் ஒன்றுக்கொன்று தொடர்பாக உள்ளது என்ற வகையில் மால்தஸ் என்ற அறிஞர் மக்கள் தொகைக் கொள்கை (Principle of Population)என்ற நூலை 1798 இல் இங்கிலாந்தில் வெளியிட்டார். ஐரோப்பிய தத்துவ அறிஞர்களின் நோக்கைக் கவர்ந்த இந்த நூலில், இவர் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும்; இல்லையேல், உணவுப் பற்றாக்குறை நேரிடும். விளைவாக, பசி, பட்டினி, நோய் ஆகியவை மக்களின் அழிவுக்கு வழிவகுக்கும் என்று விளக்கியிருந்தார்.

பஞ்சம், வறுமை இரண்டுமே மனித முயற்சியினால் தடுக்கக் கூடியவை அல்ல; மனிதன் சோம்பியிருந்தால், அத்தகைய விளைவுகளை ஏற்க வேண்டும் என்பதை இயற்கையே விதித்திருக்கிறது என்றும் இயற்கை உற்பத்தி செய்யும் உயிரினங் கள் அதிகமாகும்போது, அதுவே அழிவுக்கான கூறுகளைத் தோற்றுவித்துச் சமன்பாடு செய்துகொள்ளும் என்று நம்பி இருந்தனர். உயிர்களின் தோற்றம், வளர்ச்சி, அழிவு என்ற இலக்குகளின் சமன்பாட்டை இயற்கையே நிகழ்த்திக்கொள்ளும் என்ற விதியில், மனித குல வளர்ச்சியும் அறிவியல் கண்டு பிடிப்புகளும் மனித உழைப்புச் சமன்பாட்டு நெறிகளை அழித்துவிட்டன. மேலும் நீராவி ஆற்றல், மின்னாற்றல் ஆகியவற் றால் ஆலைகளும், தொழிற்சாலைகளும் ஐரோப்பாவில் மிகப் பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்தன. காலனியாதிக்கத்துக்குப் புதிய நாடுகளை இரையாக்க ஆதிக்கப் போட்டிகளும் தோன்றின. பிரிட்டன் பெருமளவில் வெற்றி பெற்றது. இந்தக் கால கட்டத்தில், ஒடுக்கப்பட்ட பெண்கள், தொழிலாளர் கிளர்ச்சிகளும் தோன்றின. பிற்காலங்களில் புதிய விடுதலைக் கொள்கைகளைத் தோற்றுவிக்கக் கூடியவர்களாக இருந்த மார்க்ஸ், காந்தியடிகள் ஆகியோரும் அந்த நாட்டில்தான் புதிய நெறிகளுக்கான வித்துகளைத் தேடுபவர்களாக இருந்தார்கள். பிரபல இலக்கிய மேதை பெர்னாட்ஷாவின் ஃபேபியன் குழு (Fabian Society)வினர் உயிரியல் சித்தாந்தத்தில்

மறுமலர்ச்சிப் புரட்சிக் கருத்தைத் தோற்றுவித்த அறிஞர் ஹாவலாக் எல்லிஸ் போன்றவர்கள் பழைய மரபுகளை உடைக்கும் திறந்த சிந்தனையாளர் கூடிப் பேசும் வாய்ப்புகள் இருந்தன. மால்தசின் மக்கள் பெருக்கத் தடைக் கருத்துக்கள் சூடுபிடித்திருந்தன. பெண் விடுதலைக் கிளர்ச்சியின் ஒரு முக்கிய கூறாகவும் அக்கொள்கை அமைந்தது. இங்கிலாந்தின் தேசிய பொருளாதாரத்தில் அக்கறை கொண்டு அவர், பொருளாதாரம் நலிவடைந்ததற்கு மூன்று கூறுகளைச் சுட்டிக் காட்டியிருந்தார். அதிகமாகக் குழந்தைகள் பெறுவது; அவற்றை நன்கு வளர்த்துச் சிறந்த குடிமக்களாக்கு வதற்குத் தேவையான வாழ்வாதாரங்களைத் தேட இயலாமை. எனவே அடித்தள மக்களின் குடும்பங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். அவர்களால் தாங்கமுடியாத - வளர்க்க இயலாத குடும்பத்தைப் பெருக்கக்கூடாது; தடுக்க வேண்டும். காலம் காலமாகப் பெண்ணே குடும்பத்துக்கு உணவு வழங்கும் பொறுப்பை ஏற்றிருக்கிறாள். ஆண் குடித்துவிட்டு வருவதும், ஊதியத்தை அவளிடம் கொடுக்காமலேயே அவளைப் பிள்ளை பெறும் கருவியாக்குவதும் நிகழ்ந்தன. உலகெங்கும் வறுமையும் நோஞ்சான் குழந்தைகளும் நலிந்து சோர்ந்த பெண்களுமே, மால்தஸின் மக்கள் பெருக்கக் கட்டுப்பாட்டு விதிகளை நடைமுறைப்படுத்த எழுச்சி கொள்ளக் காரணங்களாயமைந்தன. கத்தோலிக்க மதமோ, வேறு எந்த மதமோ கருத்தடைக்கு ஆதரவு காட்டக்கூடியவை அல்ல. கருத்தடைக்கு ஆதரவான மால்தஸின் கொள்கை சமத்துவத்தின் அடிப்படையில் அமையவில்லை. என்றாலும், பெண், பிள்ளை பெறும் கருவியாக வறுமையி லிருந்தும், அதிக மக்களைப் பெறும் பொறுப்பிலிருந்தும் விடுபட கருத்தடை முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற பொறியை ஊதிவிடும் முயற்சியில் ஈடுபட்டவர், பின்னாட்களில் இந்திய விடுதலையை இலக்காக்கி ஹோம் ரூல் இயக்கத்தைத் தோற்றுவித்தவரும் பிரும்மஞான சங்கத்தின் முன்னோடிகளாக இருந்தவர்களில் ஒருவருமான ஆனி பெசன்ட் அம்மை ஆவார். சமயத்துக்கு எதிரான கருத்தைப் பிரசாரம் செய்ய இவர் துண்டுப் பிரசுரங்களை அச்சடித்து வழங்கி மக்கள் கூடுமிடங்களில் கருத்தைப் பரப்பினார். சமய போதகரான பெசன்டிடமிருந்து மணவிலக்குப் பெற்றார். இவருடன் முக்கிய ஆதரவாளராக இருந்தவர் சார்லஸ் பிரெட்லா என்பவர். இவரும் பிரும்ம ஞான சங்கத்தைத் தோற்றுவித்தவர்களில் முக்கியமானவராவார். கருத் தடைப் பிரசார அறிக்கைகள், நூல்களைப் பிரசுரித்தவர் கைது

செய்யப்பட்டார். வழக்கு நடந்தது. ஆனால், கருத்தடை குறித்து ஆதரவான கருத்துக்களை அச்சிட்டுப் பிரசுரித்தது தவறில்லை என்று தீர்ப்பு வந்ததும் அச்சிட்டவர் விடுதலையானார். ஆதரவாளர் மேலும் ஊக்கமடைந்தனர். அந்தக் கால வழக்கில் அரசல் பொர சலாக இலைமறை காய்மறையாக இருந்த கருத்தடை சாதனங்களை மருத்துவ ரீதியாகச் செயல்படுத்த, அந்நாட்களில் லண்டன் மாநகரில் பிரபல மருத்துவராகத் தொழில் புரிந்த டாக்டர் ஆல்பட் என்பவர் தொழில் செய்வதைத் தடை செய்ய மருத்துவர் பதிவேட்டில் இருந்தே பெயர் நீக்கம் செய்யப்பட்டார்.

1878 இல், மால்தூசியன் அணி என்ற அமைப்பே தோன்றியது. ஆனி பெசன்ட் அதன் செயலாளர். இவ்வாறு தொடக்கக் காலத்தில் கருத்தடை என்ற சொல்லே இயற்கைக்கும், தெய்வ நம்பிக்கைக் கும், எதிரானதாக எதிர்க்கப்பட்டது. என்றாலும் எதிர்ப்புகளுக் கிடையே கருத்தடை என்பது, மக்கள் பெருக்கத்தைக் கட்டுப் படுத்த மட்டுமின்றி பெண் விடுதலையின் முக்கியக் கூறாகவும் வலுப்பெற்றது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்கப் பெண் விடுதலை வரலாற்றில் கருத்தடை உரிமைக்காகப் போராடியவர் மார்கரெட் ஸாங்கர் என்ற பெண்மணி. இவர் நூற்றுக்கணக் காகவும், ஆயிரக்கணக்காகவும் வெவ்வேறு மொழிகளில் சிறு குடும்ப அவசியத்தை வலியுறுத்த அறிக்கை பதிப்பித்து அமெரிக்கா மட்டுமின்றி ஐரோப்பாவிலும் வழங்கினார். 'பெண் புரட்சியாளர்' என்ற பத்திரிகையைத் தோற்றுவித்து மகளிர் இயக்கத் தையே உருவாக்கினார். 1916ம் ஆண்டு ப்ருக்லின்ஸ் (நியூ யார்க்கில்) முதல் கருத்தடைக்கான மருத்துவ இல்லத்தை நிறுவினார். 1923 இல் இதற்கான ஆராய்ச்சிக்கான அணியும் தொடங்கப்பட்டது. இந்த அணியின் தலைவியாக மார்கரெட் ஸாங்கரே இருந்தார். 1927 ஆம் ஆண்டு ஜினிவா நகரில் உலக மக்கள்தொகை மாநாட்டைக் கூட்டினார். 1930 இல் ஜூரிச்சில் இதற் கான மருத்துவ ஆய்வாளர் மாநாடும் நடந்தது. இந்த மாநாடுகளில் பல்வேறு கருத்தடை முறைகள் பற்றிய கட்டுரைகள் வெளிவந்தன.

டாக்டர் மேரி ஸ்டோப்ஸ் அம்மை, இங்கிலாந்தின் கருத்தடை இயக்கத்தைப் பரவச் செய்த முன்னோடிகளில் முக்கியமானவர். இவரும் இவருடைய கணவரும், லண்டன் மாநகரில் கருத்தடை செய்து கொள்வதற்கான மருத்துவ இல்லம் ஒன்றை 1925 இல்

நிறுவினார்கள். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மேலை நாடுகளில் அதிகமான கருத்தடைக்கான மருத்துவ இல்லங்கள் தோன்றின. பாலியல் சார்ந்த சீர்திருத்தங்களைக் கொள்கைகளாகக் கடைப்பிடிக்க ஒரு குழுவே தோன்றியது. அதன் உறுப்பினர்கள் ஐரோப்பிய நாடுகளில் பெருமளவு நிதிகள் திரட்டி இதற்கான மருத்துவ இல்லங்களை நிறுவினார்கள்.

1962 ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் திட்டமிட்ட பெற்றோரின் உலக சம்மேளனம் அமைந்தது. இதன் தலைவர் டாக்டர் ஆலன் பிரசித்தி பெற்ற மகப்பேறு மருத்துவராவார்.

இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலங்களில் 'கருத்தடை'ப் பிரசார இயக்கம், மகளிர் உரிமைகள், எல்லாமே எல்லா நாடுகளிலும் சூடுபிடித்தன. மக்கள் தொகைப் பெருக்கம், உணவு போன்ற இன்றியமையாத வாழ்வாதாரங்கள் குறித்த விழிப்புணர்வு குறித்த நடவடிக்கைகள் தொடர்பாகவே அணுகப்பட்டது. ஆனால், மக்கள்தொகைப் பெருக்கம் பெண்ணால் மட்டுமே ஏற்படுவது போலும், கட்டுப்படுத்துவதும் கட்டுப்படுத்தாததும் அவள் பொறுப்பில் அமைந்திருப்பது போலும் இந்தப் பிரச்னை அணுகப்பட்டது. நூற்றாண்டுகளில் பெண்ணுக்கு உயிர் மீதும் கருப்பைச் செயல்பாட்டின் மீதும் உள்ள உரிமைகளைப் பறித்து அவளை அந்நியப்படுத்திய மனநிலையில்தான் அவள் முன்னின்று.இந்த இயக்கத்தைக் கையிலெடுத்துச் சென்றாள்.

தொடக்ககாலக் கருத்தடை சாதனங்கள் அனைத்தும் பெண்ணுடலையே சோதனைக் களங்களாக்கி இருக்கின்றன.

இந்த வரலாறு, நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொடரப்பட்டதாகத் தெரிகிறது. பூவரசம் பட்டையை அரைத்துத் தயாராக்கிய விழுதை மேற்பூச்சாகப் பயன்படுத்தலாம் என்ற கருத்தடைச் சாதனம், புராதன எகிப்திய பாப்பிரஸ் எழுத்துக்களால் தெரியவருகிறது. கிரேக்க தத்துவ ஞானியரான அரிஸ்டாட்டில், பிளாட்டோ போன்றவர்கள் இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த, கருக்கலைப்பையும் சிசுக் கொலையையும் பரிந்துரைத்திருக்கின்றனர். ஈயம், வாசனையுள்ள மர எண்ணெய் போன்ற கலவைகள் பெண்ணுக்கு அந்நாட்களில் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகின்றன. 1300 ஆண்டுகளுக்கு முன் சீனத்தில் இதற்கான

வரலாறு தொடங்குவதாகக் காணப்படுகிறது. புராதன இந்தியாவில் காமசூத்திரம் கண்ட வாத்ஸ்யாயனர் (நான்காம் நூற்றாண்டு) தம் நூலில் செந்தாமரை, பனங்கருப்பஞ்சாறு போன்ற தாவரக் கரைசலை வாய்வழி உண்ணுவதைப் பரிந்துரைப்பதாகத் தெரிகிறது.

மகளிர் உரிமைகளுக்கான போராட்டத்தில் ஆணின் விந்தணுக்களின் கொள்கலனாக இருக்கும் கருப்பைச் செயல் பாடுகளைப் பிரசவம், உழைப்பு, உடல் நலிவு, மரணம் ஆகிய வற்றைத் தங்கள் கட்டுக்குள் கொண்டு வருவதான நோக்கமே இருந்தது. ஆனால், ஆணாதிக்கம் அந்த நோக்கத்தையே எதிர்த்தது. பெண் அந்த வகையில் விடுதலை பெற்றாளா? விடுதலைக்கான வழிகளில் அவள் அழிக்கப்படுவதுதான் நிகழ்கிறது. இடைக்கால இஸ்லாம், ஒரு பெண் அவள் விரும்பினாலன்றிக் குழந்தை பெறு வதை வலியுறுத்தலாகாது என்ற கருத்தை ஆதரித்தது.

அராபிய சமுதாயத்தில் அக்காலத்துப் புகழ் பெற்ற பாரசீக மருத்துவர் (அபுபக்கர் அல்ரஜி) மருத்துவத் தொழிலில் கருத்தடை என்பது யாவரும் ஒப்புக் கொள்ளக்கூடிய நேர்மையான அம்சம் என்று கருதினார். இயற்கையான தடுப்பு முறை இது. பெண்கள் ஆண் விந்து வெளியாகும் கணத்தில் தன்னைப் பின்வாங்கிக் கொள்வதாகும். இதற்கு இருவரும் ஒத்த மனதுடையவராக இருக்க வேண்டும். இன்னொரு முறை - நன்கு கழுவிச் சுத்தம் செய்து கொள்வதாகும்.

முதல் ஆணுறையைப் பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் மன்னர் (இரண்டாம் சார்லஸ் மன்னர்) அவையில் மருத்துவராக இருந்த டாக்டர் காண்டம் என்பவரே, ஆட்டின் மெல்லிய சவ்வுத் தோலிலிருந்து தயாரித்தார் என்று தெரிகிறது. இன்றும், அதே பெயர் ஆணுறைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. சோவியத் யூனியனிலும், ருமேனியா, ஹங்கேரி, போலந்து, பல்கேரியா ஆகிய நாடுகளிலும் கருக்கலைப்புகளே முதன்மை பெற்றிருக்கின்றன. சோவியத் யூனியனின் சில குடியரசுகளில் பிறப்புகளுக்குச் சரியான அளவில் கருக்கொலைகளும் நிகழ்ந்திருப்பதாகக் கூறப்படுகிறது. (பெண்கள் தங்கள் உரிமைகளை இவ்வாறு வெளிக்காட்டிக் கொண்டார்களோ?) மருத்துவ இல்லங்களில் பெண்கள் கருவுறாமலிருக்க வேறு

வழிகளைக் கையாளும்படி பரிந்துரை செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது. ஹங்கரியில் கருக்கலைப்பை ஏற்காமல், தாய்மைப் பேற்றுக்கான விடுப்பும், சலுகை வசதிகளையும் அரசு அறிவித்திருக்கிறது. அத்துடன், ஆணுறை, இயற்கையாகக் கலவியின்போது பெண் பின்வாங்கித் தடுத்துக் கொள்ளல் போன்ற வழிமுறைகளையும் கையாண்டு பேறு தவிர்த்திருக்கின்றனர். சோவியத் யூனியனிலும் மற்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் கருக்கலைப்பு சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டிருந்தது. ஜப்பானில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம், மக்களின் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஜப்பானிய அரசு நெறிகளை வகுத்து, பயிற்சிக்கும் பிரசாரத்துக்குமான நிதியையும் ஒதுக்கித் தந்திருக்கிறது. ஆனால், அது மக்களின் திட்டமாகவே ஓசையின்றிச் செயல்படுத்தப்பட்டு இருபது ஆண்டுகளில் இரண்டு தலைமுறைகளில் வளர்ச்சியுற்ற ஐரோப்பிய நாடுகள் நூறாண்டுகளில் சாதிக்க முடியாத வெற்றியை அடைந்திருக்கிறது. இங்கு ஆணுறையும் கருக்கலைப்பும் மட்டுமே சாதனங்களாக இருந்திருக்கின்றன.

# 10. சமுதாய சமத்துவம் சார்ந்த பெண்ணுரிமை

சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகளே, அடிமைத்தனத்தையும் வறுமையையும் வாழவைத்துக் கொண்டிருக்கின்றன. 'பெண்ணடிமை' ஆதிக்கப் பிடிகளைத் தளர்த்தாமல், சமுதாய சமத்துவம் என்பது வெறும் பொய்யே. பொதுவுடமைக் கொள்கைகளின் அடிப்படையில் அமைந்த கிழக்கு ஐரோப்பா, சோவியத் ஒன்றியம், செஞ்சீனம் ஆகிய நாடுகளில் பெண்கள் சுதந்திரமாக இயங்கினார்களா என்பது பிரச்னைக்குரிய வினா. சீனத்தில் அந்நாள் மகளிருக்குப் பிறந்த உடனேயே கால்கள் பிணிக்கப்பெற்றன. அதுவே அவள் உரிமைகளைக் கட்டுப்படுத்துவதற்கான முதல் நடவடிக்கை. இது உடல் பரமான இம்சை. சீனத்தில் கலாசாரப் புரட்சி வரும்போதே இந்த இம்சைகள் நீக்கப்பட்டன. ஆனால், பெண் குழந்தைகள் வேண்டாம் என்று இன்றும் பெண்கள் நினைக்

கிறார்கள். ஒரு குழந்தை போதும் என்று மக்கள் தொகைக் கட்டுப்பாடு நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது. பொருளாதாரம் சார்ந்து செஞ்சீனம் பல புரட்சிகர மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால், பிறந்தது பெண் குழந்தை என்றால், வாளி நீரில் அமுக்கிக் கொல்லும் புதிய மரபுகள் தோன்றியிருப்பதாகச் செய்திகள் பொசிகின்றன. குடும்பக் கட்டுப்பாட்டில் பெண்ணே பலியாகிறாள். சோவியத் ஒன்றியத்தில், குழந்தைகளே நாட்டின் எதிர்காலம் என்ற வாசகங்கள் எங்கு நோக்கிலும் காணப்பட்டன. இரண்டாம் உலகப்போரில் மிக அதிகமான மக்களைப் பலி கொடுத்த நாடு. மகளிர் உரிமைகள் அரசியல் சாசனத்திலேயே பதிவு பெற்றிருந்ததாகச் சொல்லப்பட்டது. மகளிர் உரிமைகள் என்பவை எந்தெந்த அம்சங்களைக் குறித்தன? தனி நபர் உரிமைகள், மனித உரிமைகளின் கீழ் வரக்கூடியவை. சமய வழிபாட்டுத்தலங்கள், கலாசாரம் சார்ந்த கண்காட்சித் தலங்களாகவே கருதப்பட்டன. ஒவ்வொரு பெண்ணும், தன் இயல்புக்கேற்ப உணர்ச்சிமயமானவள். தூலமாகப் பெண்ணுக்குக் கல்வி, வேலை செய்யும் உரிமை, மக்களை வளர்க்கும் உரிமை, காதலிக்கும் உரிமை, தான் விரும்பிய ஆணை மணந்து மகவைப் பெற்றுக் கொள்ளும் உரிமை என்று பெண்ணின் உரிமைகள் பலவும் ஒரு பொதுக் கொள்கையுடைய அரசில் சிக்கலாகிப் போவதை மறுக்க முடியாது. சமயம் சார்ந்தோ சாராமலோ கடவுள் வழிபாடு பொதுவுடமைக் கொள்கைக்கு முரணானது. அந்த நடைமுறை ஆட்சியில் வெளிப்படையான விவரங்கள் இருக்கவில்லை. ஆசியக் குடியரசைச் சார்ந்த நாடுகளில் பெரும்பான்மை மக்கள் இஸ்லாமியர். அங்கே ஒவ்வொரு தாயும் ஐந்தாறு குழந்தைகள் பெற்றிருந்தார்கள். அதிகமான குழந்தைகள் பெற்றவர்களை 'வீரத்தாய்' என்று விருது அளித்தும் கவுரவித்தார்கள் என்ற செய்திகள் வெளியிடப்பட்டன. சோவியத் ருசிய நாடுகளில் இரண்டு மூன்றுக்கு மேல் பெற்றுக் கொள்வதைத் தாயர் விரும்பவில்லை. காரணங்கள் வெளிப்படையாகத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் சோவியத் ஒன்றியம், பொதுவுடமை நெறிகளை விட்டுச் சீட்டுக்கட்டுகளாகக் குலைந்தபின், பல செய்திகள் வெளிவந்தன. பெண்கள், வீடு, கோயில் என்ற எல்லைகளுக்குள்ளிருந்தும் வெளிவந்து, புதிய காற்றை, புதிய வெளிச்சத்தை, புதிய சுதந்திரங்களைப் பெறவேண்டும் என்று போராட்டங்கள் நிகழ்த்தினோமே, அதே எல்லைகளுக்குள் மீண்டும் சிறைப்

படலாமா? என்று ஒரு பெண்மணி புலம்பி இருந்தார். அதற்குத் தந்த விடைகள், அதிர்ச்சிகரமாக இருந்தன. "நாங்கள் என்ன வேலை செய்தோம்? ஆலைகளிலும், தொழிற் சாலைகளிலும், முரட்டுச் சீருடை அணிந்து உழைப்பை அளித்தோம். ஆண்கள் எங்களைக் கண்காணிக்கும் மேலாண்மைப் பதவியில் இருந்தார்கள். வீடுகளிலும், வந்து நாங்கள் பணி புரிந்தோம். அவர்கள் தொலைக் காட்சி பார்த்தார்கள். எங்களை வண்ணங்களுடன் அழகு செய்து கொள்ளவும், எங்கள் குழந்தைகளுடன் நேரம் போக்கவும், ஆபத்துக் காலத்தில் உணர்ச்சிமயமான கடவுள் வழிபாடுகளில் ஈடுபடவும் எங்களால் முடிந்திருக்கவில்லை. இப்போது தான் நாங்கள் உரிமைகளைப் பெற்றிருக்கிறோம். சமத்துவம், பொதுவு டமை எல்லாம் மலை உச்சியில் தென்படும் ஒளி. அந்தப் பாதையில் நடக்கலாம். ஆனால், அந்த ஒளியைப் பற்றுவது இயலாத செயல்" என்றார்கள். இப்போது சோவியத் குடியரசாக இருந்த ருசிய நாட்டில் (பேபிகள்) குழந்தைகள் பூத்துக் குலுங்கும் கொள்ளை (baby boom) என்ற செய்திகள் வருகின்றன. அதாவது சமத்துவ நெறியின் உயிர் நாடி, மகளிர் உரிமைகள் பெறுவதில் இருக்கிறது. அவள் உரிமை பெற்றால், மக்கள் தொகை அதிக மாகும். ஆயின், உழைப்புத் திறனும், உணவுக்கான உற்பத்தியும் அதற்கேற்றாற் போல் பெருக வேண்டுமே? மக்கள் பெருக்கம், பஞ்சத்துக்கும் வறுமைக்கும் எதிரானவை அல்ல. ஆனாலும், வறுமைக்கும் பசிப்பிணிக்கும் அதுவே காரணமாக இருக்கிறது.

உலகில் அதிகமான மக்கள் பெருக்கமுள்ள நாடு சீனம். சீன மக்கள் குடியரசில் இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாற்றங்கள் பல. 1949 இல் அது சீன மக்கள் குடியரசாயிற்று. அப்போது அது மக்கள் பெருக்கக் கட்டுப்பாடு பற்றி அவசியம் தெரிவிக்கவில்லை. 53-54 இல் எடுக்கப்பட்ட முதல் மக்கள் பெருக்கக் கணிப்பில் 582 மில்லியன் (58.2 கோடி) இருந்ததாகவும், கட்டுப்பாட்டுக்கான தேவை நெருக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று தெரிய வருகிறது. 54லிலிருந்து 58க்குள் முன்னோக்கிய பாய்ச்சலாகக் கட்டுப்பாட்டு இயக்கம் செயல்படுத்தப்படலாயிற்று. (மால்தஸ் அறிவுறுத்திய கட்டுப்பாட்டில் செயற்கையான கருக் கொலை யோ, அல்லது செயற்கையான தடையோ இடம் பெறவில்லை. தாமதமான திருமணம், புலனடக்கம் ஆகிய கூறுகளையே அவர் வலியுறுத்தினார்)

இந்த இரண்டு நூற்றாண்டுகளில் சமுதாயம், அறிவியல் கண்டுபிடிப்புகளினாலும், மக்களின் வாழ்க்கைமுறைகளினாலும், அடியோடு மாறியிருக்கிறது. எனவே அந்த இரண்டு வழிமுறை களும் செல்லாக்காசுகளே. திருமணம் என்பது பாலியல் உந்துதல் களையோ, மனம்சார்ந்த பலவீனங்களையோ கட்டுப்படுத்தக் கூடிய அறநெறியில்லை, திருமணம் என்பது ஓட்டுநர் உரிமை போன்ற ஒழுங்குக்கான சான்றுதான். இந்தச் சான்றுகள் தெய்வீகம், சமூகம், சட்டம் எல்லா மரபுகளையும் தகர்க்கும் ஓட்டைகளைக் கொண்டவையாக மாறிப் போயிருக்கின்றன.

ஆனால், செஞ்சீனத்தில் தனி மனித உரிமை என்பதும், விருப்பு வெறுப்பு ஒழுக்கம் என்பதும் எண்ணிப் பார்க்க முடியாதவை. இருபதாம் நூற்றாண்டின் அரசியல், சமூக பொருளாதார வரலாற்றில் பல முனைகளிலும் சீனம் அதிரடி மாற்றங்களால் முன்னோக்கிப் பாய்ந்து அறைகூவல்களை வெற்றி கொள்ள முடிந்தமைக்கு அதுவே காரணம் எனலாம்.

1966-68இல் நிகழ்ந்த கலாசாரப் புரட்சி சற்றே மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு நெருக்கடிகளில் குறுக்கிட்டாலும், 1971ல் தாமத மான திருமணம், இடைவெளி அதிகமுள்ள ஒன்றிரண்டு மகப் பேறுகள் என்று திட்டம் செயல்படுத்தப்படத் தீவிரமாயின. 2000த்துக்குள் மக்கள் பெருக்கம் முழுதுமாகத் தவிர்க்கப்பட வேண்டும் என்று இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன. மக்கள் இருப்பிடங்கள், வாழ்வியல்புகள் சார்ந்து வெவ்வேறு அணுகு முறைகளில் 'ஒரு குழந்தை'த் திட்டம் செயல்படுத்தப்பட அரசு வசதிகள் செய்தன. 1979லில் இருந்து ஒரு குழந்தை இலக்கைச் செம்மையாக வழிமுறைப்படுத்தியவர்களுக்குப் பரிசுகளும் அல்லாதவர்களுக்கு அபராதம் என்றும் மக்களைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரத் தீவிரம் காட்டப்பட்டது. 80களில் திருமணச் சட்டம், பெண்ணுக்கு 20 வயதாகவும், ஆணுக்கு 22 வயதாகவும் இருந்தன. இதுவும் பெண்ணுக்கு 25 வயதென்றும், ஆணுக்கு 28 வயதென்றும் உயர்த்தப்பட்டது.

மக்கள் பெருக்கத்தைக் குறைக்கவேண்டும். பொருளாதாரம் சார்ந்த அதலபாதாளப்பிரிவுகள் அதிகமாகக் கூடாது. இலக்கு என்பது பல முனைகளிலும் மக்களின் உத்தரவாதமான வாழ்வோடு அணுகப்படும் சாத்தியங்களோடு அணுகப்பட

வேண்டும். இதற்காகக் கிராமந்தோறும் மருத்துவப் பயிற்சி பெற்ற ஆடம்பரமற்ற மருத்துவர். ( நம்நாட்டில் மருத்துவர் என்றாலே தலையில் ஒளிக்கிரீடம் வந்துவிடும்; ஏழைகளுக்கு அவர் எட்டாக் கொம்பு. இந்நாட்களில் பல லட்சங்கள் கொட்டிக் கொடுத்து இடம்பிடிக்கும் சாதி வாரியான இடங்களில் அமர்ந்தே இந்த சேவைத் தொழிலுக்கான கல்வியைப் பெறுபவர்கள், வாணிபம் செய்வதே நடக்கிறது). சீனத்தில் ஆடம்பரமற்ற என்றால், சேவைக் காகவே நடந்து செல்பவர், (Bare foot doctors) கிராம சுகாதாரம் மட்டுமின்றி, அவரவருக்கு ஏற்ற, மக்கள் கட்டுப்பாட்டு இலக்குக் கான சாதனங்களைத் தேர்வு செய்து செயல்படும் மருத்துவர்களாகப் பரிணமித்தனர். சீனத்தில் குடும்ப மரபு அழுத்தமானது. கிராமங்களில் குடும்ப மரபு பேணப்பட, குழந்தைகள் தேவை என்ற மனப்பங்கு உள்ளவர்கள். இதை நன்குணர்ந்த அரசு சில சந்தர்ப்பங்கள் குடும்பங்களைப் பொறுத்து, இரண்டு குழந்தை களை அனுமதித்திருக்கின்றன. அந்நாள், பெர்ட்ரன்ட் ரஸ்ஸல் என்ற அறிஞர், சீன மக்களின் வாழ்முறையை மக்கள் பின்பற்றினால் உலகு மகிழ்ச்சியாக இருக்கும் என்றார்.

1949 இல் அக்டோபர் இரண்டில் (நம் காந்திஜெயந்தி!) மாசேதுங் பொதுவுடமை ஆட்சியைக் கொண்டு வந்தார். நூறு பூக்கள் மலரும் என்ற நம்பிக்கையை உறுதியாக்கிய புரட்சி அது. அப்போது நிலத்தை உழுவதற்குப் போதிய எருதுகள் கூட இல்லை. சீன மக்களே தங்களை எருதுகளாக நினைத்துக் கலப்பை யோடு இணைந்து உழுதார்கள். இந்நாளில் 36 லட்சத்து 91 ஆயிரத்து ஐநூறு சதுரமைல் பரப்பில் 130 கோடி மக்கள் வாழ்கிறார்கள். 5000 கிலோ மீட்டர் நீளமுள்ள மஞ்சள் ஆறு (ஹொயாங் ஹோ) 'சீனாவின் துயரம்' என்று விவரிக்கப்பட்ட ஆறு. 50 ஆண்டுகள் திட்டம் வகுத்து அந்நதியில் நூற்றுக் கணக்கான கால்வாய்களை வெட்டினார்கள். வேளாண்மை வளமும், கூட்டுக் குடும்பமும் சீனப் பண்பாட்டின் அடிநாதம். இந்த அடிநாதத்தில் உழைப்பை ஏற்காமல், உரிமைத் தத்துவம் மட்டும் பேசும் அபசுரங்கள் நீக்கப்பட்டன. பெண்களின் கால் களைக் கட்டிப்போட்ட அநாகரிகமும் விபசாரமும் ஒழிக்கப் பட்டன.

தண்ணீர், எரிவாயு குழாய் மூலம் வருகிறது; மின்னாற்றல்

தடையில்லை. நடைமுறை வாழ்க்கையில் கார் கலாசாரமும், சாலைப்புழுதி எழுப்பும் நசுங்கும் மனிதமும் இல்லை. கூட்டுக் குடும்பங்களால் எரிசக்தி விரயம் சிக்கனமாகிறது. முதியோர்களைப் பிள்ளைகள் காப்பாற்ற வேண்டும் என்பதே சட்டம். எனவே முதியோர் இல்லங்கள் திறக்கப்பட, வாணிபம் செய்ய வாய்ப்புகள் இல்லை. அரசியல் சட்டங்கள் சீனமொழியில் மட்டுமே இயற்றப் பட்டிருப்பதால் நீதிமன்றங்கள் உள்பட எல்லா அலுவல்களும் சீன மொழியிலேயே நடக்கின்றன. பல்கலைக் கழகங்களும் தாய் மொழியிலே இயங்குகின்றன. ஒன்பதாம் வகுப்புவரை கட்டாயக் கல்வி கொடுக்க வேண்டும்.

கலாசாரப் புரட்சியில் விபசாரம் ஒழிக்கப்பட்டு, அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கப்பட்டபின், பத்திரிகைகள், பெண்களை வைத்து வாணிபம் செய்ய முடியாது. (இதெல்லாமும் செய்திகளே!)

2000ம் ஆண்டுகளுக்குப் பிறகு 6 லட்சத்து 90 ஆயிரம் பொருளாதாரக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் பயனாகச் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற நிலை நாட்டப்படுகிறது. ஆளுங்கட்சி என்று ஊழல் புரிந்து ஒளிந்து இரட்டை வேடம் போட முடியாது.

இந்தப் பின்னணியில் உலகமயமாக்கல் என்ற தவிர்க்க முடியாத தத்துவத்தால் (பல நாடுகள் தங்கள் சுயத்தன்மைகளைக் காத்துக் கொள்ளாமல் தவிக்கும்போது) சீனம் அதே தத்தவத்தைக் கூர்வாளாகத் தீட்டி ஐரோப்பியச் சந்தையை வீழ்த்திக் காட்டி இருக்கிறது. இதேபோல்தான் உறுதியான முழுமையுடன் மக்கள் பெருக்கக் கட்டுப்பாட்டுப் பிரச்சனையையும் அணுகிச் சாதனை செய்கிறது சீனம். உலகிலேயே இதற்கான ஆய்வுத் திட்டத்திற்குக் கருத்தடைச் சாதனங்களின் எளிமை, பயன்படுத்துபவர்களுக்குப் பின்விளைவுகள் இல்லாத பயன்பாடு, அறுவைச் சிகிச்சை முறை களில் பாதிப்பு இல்லாமல் ஏற்போருக்கு உகந்த நவீன அறிவியல் உத்திகள் என்று, வளரும் நாடுகள், வளர்ச்சி பெற்ற நாடுகள் தீவிரம் காட்டாத அளவில் பொருள் ஒதுக்கித் திட்டம் தீட்டியிருக்கிறது சீனம். ஆண்களுக்காக, எளிய முறையில் கண்டுபிடிக்கப்பட்ட அறுவைச் சிகிச்சையின் நவீன உத்தியே, ஐக்கிய அமெரிக்க நாட்டிலும், பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால், சீனமக்களும்

அரசும் எவ்வாறு ஒருங்கிணைந்து செயல்படுகின்றனர் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இதற்கு மேல் நம் நாட்டின் செயல்பாடு களைப் பற்றியும் அணுகுமுறைகளையும் ஒப்பிடுவதற்கில்லை!

சீனத்தில் இருந்து வெளியாகும் செய்திகளுக்கும் நம் நாட்டு நடப்பியலுக்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. ஏனெனில் இந்திய மக்கள் குடியரசின் நடவடிக்கைகள், நிகழ்வுகள் எல்லாமே ஒளிவு மறைவற்றவை. உலக சுகாதார அறிக்கை வெளியிடும் சில அறிக்கைகள் சீன முன்னேற்றத்தை முதன்மையாகக் காட்ட வில்லை என்பது விழுங்குவதற்குக் கடுமையாக இருக்கிறது. அங்கே பெண் குழந்தைகளை வளர, வாழவிடுவதில்லை என்ற அதிர்ச்சித் தகவல்கள் மூடி மறைக்கப்படுகின்றன.

## 11. அரசியல் நெறிகளும் மக்கள் தொகையும்

அரசியல் நெறிகளில் மக்கள் தொகை என்ற கூறு பற்றி அதிகமாகப் புராதன நூல்களில் விவரங்கள் தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. இந்தியாவில் அர்த்த சாத்திரத்தை எழுதிய சாணக்கியர் (கௌடில்யா) விரிவாக எதுவும் குறிப்பிட்டிருப் பதாகத் தெரியவில்லை. அரசு, அமைச்சு, படை, கருவூலம், விவசாயம் முதலிய பதினெட்டு தலைப்புகளில் அந்த நூல் காணப் படுகிறது. அவை அனைத்தும் முந்தைய புராண இதிகாச மனுதர்ம நூல்களை ஒட்டியே ஆக்கப்பட்ட தாகத் தெரிகிறது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியில்தான் மக்கள் தொகை பற்றிய விவரங்கள் வருகின்றன.

| | | |
|---|---|---|
| *1881* இல் | மக்கள் தொகை | *253896330* |
| *1891* இல் | மக்கள் தொகை | *287314671* |
| *1901* இல் | மக்கள் தொகை | *294361056* |
| *1911* இல் | மக்கள் தொகை | *315156396* |
| *1921* இல் | மக்கள் தொகை | *318942480* |

| | | |
|---|---|---|
| *1931* இல் | மக்கள் தொகை | *352837778* |
| *1941* இல் | மக்கள் தொகை | *388997955* |
| *1951* இல் | இந்திய யூனியன் மக்கள் தொகை | *361820000* |
| | பாகிஸ்தான் மக்கள் தொகை | *75687000* |
| மொத்தம் | | *43,7507000* |

*1875* ஆம் ஆண்டில் வந்தே மாதரம் கீதத்தை எழுதிய பங்கிம்சந்திரர், அன்றைய வங்க மக்கள் தொகையை ஏழு கோடி என்று கணித்தார். அதையே பின்நாட்களில் 1906 வாக்கில் பாரதி மொழி பெயர்த்தபோது, அன்றைய இந்திய மக்கள் தொகையை முப்பது கோடி என்று கணித்தார். 1947 இல் நாடு சுதந்திரம் பெற்றதும் கணிக்கப்பட்ட தொகை முப்பத்தாறு கோடியே பதினெட்டு லட்சத்து 20 ஆயிரம் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. பிரிவினைச் சேதங்களும், சமயக்கலவரங்களும், இடம் பெயர் தலிலும் கணிப்பு அவ்வளவு சரியாக இருக்க வாய்ப்பில்லை. மேலும் அந்நாள் அசுவமேதக் குதிரையை அனுப்பி, 'சாம்ராஜ்யம்' விரிவாக்கப்பட்டதென்றால், இன்றும் வெவ்வேறு வடிவங்களில் உழைப்புரிமைகளைப் பெற ஆதிக்கங்கள் வலிமை பெற்று வருகின்றன. தீக்கங்கில் தொடங்கி, இந்நாள் முழுநாசம் விளைவிக்கக்கூடிய ஏவுகணைகள், அணு ஆற்றலைக் கொண்டு அமைதிக்கான் வளமை பெறுவதாகக் கூறி ஆங்காங்கு நிறுவப் படும் அணு உலைகள் எல்லாமே மக்களை, குறிப்பாகப் பெண் களை வலிமையற்றவர்களாகச் சிதைத்துக் கொண்டு வருகின்றன.

மக்கள்தொகைக் கணக்கெடுப்பு விவரங்களின் அடிப்படை யில் வளமைக்கான திட்டங்கள் போடப்படுவது நல்ல முயற்சி தான். ஆனால், இந்திய மக்கள் காலனி ஆதிக்கத்தின் கீழ் வந்த பிறகு சொந்த மண்ணில் தங்கள் மரபுகள் தொழிலில் ஈடுபட்டுப் பிழைக்க வழியின்றி அதே ஆதிக்கக்காரர் எங்கெங்கும் அடிமை கொண்ட மண்ணில் காடு திருத்தி, தேயிலை பயிரிடவும் கரும்பு பயிரிடவும் அடிமைகளாக்கி அழைத்துச் சென்றபோது, எத்தனை மக்கள் ஆணும் பெண்ணும் கொள்ளை நோய்களாலும் பயணக் கொடுமை யாலும் இறந்தார்கள் என்பதற்குக் கணக்கு இல்லை. அந்நிய

மண்ணில் அவர்கள் தங்கள் உழைப்பை மட்டும் கொடுக்க வில்லை. தங்கள் பாரம்பரிய உணர்வுகளையும், பெண்கள் நலன் களையும் பறி கொடுத்தார்கள். ஒரு காந்தியடிகள் தோன்றி, அறப் போராட்டம் துவக்கவும், நாடு விடுதலை பெறவும் அந்த இடம் பெயர்ந்த உழைப்புக் கொள்ளையே அடித்தளம் அமைத்தது. அண்மைக் காலங்களில் நாம் இலங்கைத் தேயிலைத் தோட்டங்களில் உழைப்பைக் கொடுக்கப் பெயர்ந்து சென்ற இந்திய உழைப்பாளரின் நிலை பார்த்தோம். அவர்கள் இரண்டு மூன்று தலைமுறைகள் வெள்ளைக்கார மேலாண்மையின் கீழ் உழைத்தபோது, உரிமைகள் என்ற உணர்வே இல்லாதவர்களாக நிறைய நிறைய மக்களை உழைப்படிமைத் தொகையை அதிகமாக்கும் வகையில் பெருக்கினார்கள். இந்தப் பிள்ளை பெண்கள் விவரம் தெரிந்ததும் புல்லறுக்கவும், தேயிலை கிள்ளவும் உழைப்பைக் கொடுத்து அரைக்கூலி பெறும் பையன் பெரியவனானால் குடிக்கக் கற்றுக் கொள்வான். பெண் அடி பொறுப்பாள்; பிள்ளை சுமப்பாள். உள்நாட்டுக் கலவரங்கள் இனப்போர் வந்தபோது இவர்கள் தொடர்பில்லாமலே ஒப்பந்தங்கள் இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே போடப்பட்டன. கொத்தலா வலை ஒப்பந்தம், சிரிமாவோ சாஸ்திரி ஒப்பந்தம், ராஜிவ் காந்தி காலத்து ஒப்பந்தம் என்று போடப்பட்டு உழைத்த நாட்டிலும் உரிமையற்று, சொந்த நாட்டிலும் உரிமையற்று அகதிகளாகத் திரும்பி வரும் அவலம் நிகழ்ந்தது.

மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்கும், வளமைக்கான பொருளாதாரத் திட்டங்களுக்கும் தொடர்பே இல்லை என்று சொல்லத் தோன்றுகிறது. இந்தியா ஒரு விவசாய நாடு. இன்னும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் வானொலி நிகழ்ச்சிகளிலும் 'காந்தியடிகள் கிராமங்களில்தான் இந்தியா வாழ்கிறது எனச் சொல்லியிருக்கிறார்' என்று நினைவுபடுத்தப்படுகிறது. ஆனால், உண்மையாக இன்று இந்தியா கிராமங்களில் வாழ்கிறதா? 1951 இல் மக்கள் தொகை ஏறக்குறைய 43-44 கோடிகளாக இருந்த காலத்தில் உழவுத் தொழில் செய்வோர் பெரும்பான்மையினரும் கிராமங்களில் வாழ்ந்தனர்.

உழவுத் தொழில் செய்வோரைப் பொதுவாக நான்கு பிரிவுகளுக்குள் வகைப்படுத்தலாம்.

| | |
|---|---|
| சொந்தத்தில் பயிரிடுவோரும் அவரைச் சார்ந்தவர்களும் - | 16,73,46501 |
| சொந்தமல்லாத நிலங்களை வைத்துப் பயிரிடுவோரும், அவரைச் சார்ந்தோரும் - | 3,16,39719 |
| பயிரிடும் உழைப்பாளிகளும் அவரைச் சார்ந்தோரும் - | 4,48,11928 |
| நிலம் பயிரிடாமல் நிலவருமானம் வாங்குவோரும் அவரைச் சார்ந்தோரும் - | 5,35,24301 |
| மொத்தம் | 24,91,22449 |

பிற உற்பத்தித் தொழில்கள், வாணிபம், போக்குவரத்து, சேவைத் தொழில் என்று ஈடுபட்டவர் மொத்தம் 10,75,71,940.

இந்திய மக்களில் 69.8% உழவுத் தொழிலில் ஈடுபட்டவர். மற்றவர்கள் 30 சதவீதம் மட்டுமே வேறு வகைகளில் வருமானம் ஈட்டி வாழ்ந்தனர்.

1951 இல் ஆயிரம் ஆண்களுக்கு 947 பெண்களே வாழ்ந்ததாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இயல்பில் பெண்ணே அதிகம் வலிமை உள்ளவள். பூச்சி இனங்களில் இருந்து உயர் மனிதன் வரை சமுதாய உற்பத்தி, மீட்டுருவாக்கம் ஆகிய இன்றியமையாத் தன்மைகள் பெண்களைச் சார்ந்தே இருக்கின்றன. பூச்சி இனங் களில் கூடல் நிகழ்ந்ததும், ஆண் அழியும். தேள் போன்ற இனங் களில் பெண் தின்றுவிடும். பெண் முட்டையிட்டு மறு உற்பத்தி விளைவுக்கு அதிக நாட்கள் வாழும் இயல்புடையது. பெண்ணுக்குப் பூப்படைதலுக்குப் பிறகு எத்துணை குருதிப் பெருக்கு ஏற்படுகிறது? அவள் தாங்கி உயிர்வாழும் இயல்புடைய வலிமை பெற்றிருக்கிறாள். இருந்தும், ஆயிரத்துக்கு 947 பெண்களே வாழ்ந்ததாகக் கணிக்கப்பெற்றிருக்கிறது. ஏனெனில், பெண் சிசுக்கள் அழிக்கப்படும் வழக்கம் இருந்ததென்பதை ஆங்கிலேய அரசே 1805-ம் ஆண்டிலேயே ஆவணப் படுத்தியுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்திலும் ஆணே சந்ததி வாரிசு என்று காலம் காலமாக முதன்மைப்படுத்தப்பட்டு வந்திருக்கிறான். தென்

தமிழ்நாடு, தாயாண் சமூதாய மரபினரின் மிச்ச சொச்ச வழக்கங்கள் பின்பற்றப்பட்ட பகுதியாகும். பெண் குழந்தைகள் பிறந்த இடத்துக்குச் சொந்தமில்லை என்ற உயர் சாதியினர் உழைப்புச் சமூகத்தினர் அல்ல. பெரும்பாலும் அந்நாள் நில உரிமையாளர் என்ற பெயரில் மேலாண்மை செலுத்தியவர்.

ஆனால், இந்த ஐம்பது ஆண்டுகளில் அந்தக் கட்டமைப்புகள் புதிய ஜனநாயக அரசியலின் விளைவாகவும், பெரியார் போன்றோரின் சுயமரியாதை, சமூக சீர்திருத்தப் பிரசாரங்களின் விளைவாகவும் சமூக பொருளாதார வளர்ச்சிக்காகப் போடப்பட்ட ஒன்பது ஐந்தாண்டுத் திட்டங்களின் பயனாகவும், புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனித உழைப்பின் நாணயங்களையே புதிய இலக்குகளில் திருப்பியதன் காரணமாகவும் முற்றிலும் தகர்ந்து, அந்தச் சிதிலங்களின் மேல் உருப்புரியாத சமூகப் பயன்களையும், அவலங்களையும் அமைத்திருக்கின்றன.

அந்நாள் 51ம் ஆண்டு அறிக்கையின்படி இந்தியா முழுவதும் கல்விக்கு 47 கோடி ரூபாய் செலவிடப்பட்டதாகவும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படித்த மாணவர் 1,29,60532 பேர் என்றும் மாணவியர் 41,32,100 பேர் என்றும் தெரியவருகிறது. 43 சொச்சம் கோடிகளில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து 1.5 கோடிப் பேர்கள் மட்டுமே படித்தனர் என்றும், பெண்கள் ஐம்பது லட்சம் பேர் கூடப் பள்ளிகளில் பயிலவில்லை என்றும் தெரியவருகிறது. படிப்பறிவே 18.3 சதவிகிதம்தான். ஆனால், இந்நாட்களில் 2001 கணக்கெடுப்பின்படி 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொகையில் 65.38 சதவிகிதமாக இது உயர்ந்து வருகிறது. பெண் கல்வி மிக ஊக்கமாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. அதிக எண்ணிக் கையில் பள்ளிகளில் பெண்களைச் சேர்க்கவும் அவர்கள் இடை யில் நின்று விடாது தொடர்ந்து பள்ளிப்படிப்பை முடிக்கவும், தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கிராமப் பள்ளிகளில், பெண் ஆசிரியர்களே நியமனம் செய்யப் பட்டுள்ளனர். கிராமங்களில் பள்ளிக்குப் பெண்கள் அறவே செல்லாமல் இருந்த நிலை இன்று இல்லை. முதியோர், முறைசாராக் கல்வி முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1991 - 2001 காலகட்டத்தில் உயர்கல்வி கற்கும் பெண்கள் மிகவும் அதிகரித்து 14.87 சதவிகித வளர்ச்சியை எட்டி இருக்கின்றன. முன்பெல்லாம் பெண்கள் என்றால் ஆசிரியர், செவிலியர், மருத்துவர் என்ற

தொழில்களுக்கு மட்டுமே படித்த பெண்கள் இந்நாட்களில் ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்று, அதிநவீன தொழில் நுட்பக்கல்வியிலும் பொறியியல் சார்ந்த அனைத்துப் பிரிவு களிலும் சாதனைகளே புரியுமளவிற்குச் சிறந்திருக்கின்றனர். ஒவ்வோர் ஆண்டிலும் பள்ளி இறுதித் தேர்வுகளில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் சிறந்த முறையில் வெற்றி பெறுகிறார்கள். ஆண் ஆதிக்க மனப்பான்மையினால் அழுத்தப் பெற்றாலும் பத்து மடங்கு உழைத்துத் தம் தகுதிகளை மெய்ப்பித்திருக்கிறார்கள். ஒரு கிரண்பேடி போல், பலரும் ஆட்சிப் பொறுப்பில் கிராமங்களில் இருந்து வந்து சிறப்பாகப் பணிபுரியும் மகளிர் பலரும் சாதனைப் பெண்மணிகளாக விளங்குகிறார்கள். கல்பனா சாவ்லா, இந்தியப் பெண்களின் சாதனைக்கு எடுத்துக்காட்டு. பெண் குழந்தைகளைக் கொல்லும் வழக்கம் இன்னமும் பல்வேறு வடமாநிலங்களிலும் தென் மாநிலத்தின் சில பகுதிகளிலும் ஒழியவில்லை. ஏன் என்று பெரியதொரு அழுத்தமான வினாவைக் கேட்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

உலகுக்கு ஒரு கல்பனா சாவ்லாவைத் தந்த ஹரியானா பஞ்சாபில் இந்நாள் 1000 ஆண்களுக்கு எண்ணூறு பெண்கள் என இறங்கி வந்ததேன்? கேரளத்தில் மட்டுமே 1036க்கு 1058 என்று மேனிலை எய்தியிருக்கிறது. கல்வியிலும், முன்னேற்றத்திலும் கேரளத்துக்கு அடுத்த இடத்தை வகிக்கும் தமிழ்நாட்டில் 1000க்கு 986 என்று காணப்படுகிறது. பாண்டிச்சேரி தமிழ்நாட்டை ஒட்டியதுதான். 1000க்கு 1001 என்று முன்னேற்றத்தில் இருக்கிறது. தலைநகரில் தேசியத் தலைநகரில் 1000க்கு 821 என்ற இறங்கு முகம். நம் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் ஆணாதிக்கக் கோட்டையில் பறக்கும் கொடியாக அறிவிக்கிறது ஏன்? ஏன்? ஏன்?

மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதென்றால் பெண் களைப் பல வகைகளிலும் ஒடுக்கி அழிப்பதுதானா? ஆட்சி உரிமை பெற்று அரசின் செயல்பாடுகளிலும் திட்டங்களிலும் சரி பாதியாகப் பங்கேற்கும் தகுதி பெண்களுக்கு உண்டு. நாட்டின் வளர்ச்சித் திட்டங்களிலும், பொருளாதார மேம்பாட்டுக்கான திட்டங்களை வகுப்பதிலும் பெண்ணின் பங்கேற்பு இருக்கிறதா? இல்லை. முப்பத்து மூன்று சதவிகித ஒதுக்கீடு கோரி இரு தலைமுறைக் காலங்களாகக் கேட்டு, போராடும் பெண்களை, சாதி,

மதம், மேல் கீழ் என்ற தந்திரங்களில் நுழைந்து, ஆணாதிக்க அரசியல் கட்சிகள் பெண்ணுக்குப் பெண்ணே எதிரி என்ற கோட்பாட்டில் சுகமாகக் குளிர் காய்கின்றன. பெண் கருக்களை அழித்தும், குழந்தைகளைக் கண் விழிக்கும் முன் கொன்றும் சதிக் கொடுமையில் எரித்தும், கைம்மைக் கொடுமையில் பட்டினி போட்டுக் கொலை செய்தும், பாலியல் வன்முறைகளில் அவள் உயிராற்றலைப் பறித்தும், உழைப்பாற்றலைச் சுரண்டியும் காலந் தோறும் அவள் ஒடுக்கப்பட்டு வந்திருக்கிறாள். மக்கள் தொகையில் சரிபாதியோ மேலாகவோ பெண்கள் இருக்க வேண்டும். இன்றும் 102 கோடியைத் தாண்டியுள்ள மக்கள் தொகையில் பெண்கள் 49.6 கோடியும் ஆண்கள் 53.2 கோடியும் என்று கணக்கு அறிவிக்கிறது. அரசியல் கட்சிகள் அதுவும் சமத்துவக் கொள்கையின் அடிப்படையில் இயங்கும் கட்சிகளே, பெண்களுக்குத் தங்கள் கட்சியில் பத்து சதவிகிதத்தினருக்குக்கூட பிரதிநிதித்துவ உரிமை கொடுப்பதில்லை என்பது வெட்கக்கேடான உண்மை. கட்சித் தலைமை என்பது பெரும்பாலும் 'தனி' ஆணின் அதிகாரத்தை மையப்படுத்தியே அமைகிறது. கட்சிகள் உடையும் போது 'தனிமனித'ச் செல்வாக்கைப் பொறுத்தே உறுப்பினர்களும், 'மந்தை' சேருகிறார்கள். பெண்களைச் சமமாகப் பாவிக்கிறோம். பெண்ணுரிமை எழுச்சி என்றெல்லாம் பாரதி பாடல்களைச் சொல்லிக்கொண்டு பெண்களைத் தங்களுக்கு வாக்குரிமை சேர்க்கும் படையாகப் பயன்படுத்தி வருகிறார்கள். தப்பித் தவறி ஒரு பெண் அரசியல் தலைமையைப் பற்றிக் கொண்டால், அறம் தவிர்த்த வியூகங்களை வளைத்து, அவளைப் பதவி இறக்கவே ஆண் ஆதிக்க அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன. இந்தக் குடியரசு நாட்டில் பெண் எத்தனையோ வகைகளில் அறிவார்ந்த துறைகளில் சாதனைகள் செய்திருக்கிறாள். ஆனால், அரசியல் என்று வரும்போது, அவள் தன்னுரிமையை இழந்துவிடுகிறாள். எனவே இந்த அரசியல் பெண்களை ஒடுக்கும் மக்கள்தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைக் குறித்து ஏனென்று ஒரு பெண் மருத்துவர் கூடக் கேட்கவில்லை. அதுவும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்வாதாரங்கள் இல்லாமல் குடிகாரப்புருடனின் ஆளுகை யில் அவனைவிடக் கொடுமையான அரசின் கட்டாயங்களுக்கு அவள் உடல் உட்பட வேண்டிய நிலையில் வாழும் 'உரிமை'தான் குடியாட்சி உரிமையா?

# 12. சமுதாய வளர்ச்சியில் அந்நியமாகும் பெண்

தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் பரம்பரையாக உழவு - பயிர்த் தொழிலில் ஈடுபட்டிருந்த மக்கள் பெருவாரியாக அதை விட்டு நகரங்களுக்கு இடம் பெயர்ந்திருக்கின்றனர். கிராமப் பொருளாதாரம் மேம்படும் வகையில் ஐந்தாண்டு வளர்ச்சித் திட்டங்கள் அமையவில்லை என்பதை முன்பே கண்டோம். அன்றைய முதல் பாரதப் பிரதமர் அணைத்திட்டத்தைத் திறப்பு விழாச் செய்கையில் முதலில் மண்ணை வெட்டிப்போட்ட கூலிப் பெண்மணியைக் கவுரவிக்கும் வகையில், அவளுக்கு மாலை அணிவித்து அவளையே நீர் மின் திட்டத்துக்கான பித்தானை அமுக்கச் செய்தார். "இந்த மகத்தான வளர்ச்சித் திட்டத்தால் பயனடையப் போகிறீர்கள்; நானும் நீயும் சமமாகப் போகிறோம்'' என்ற கனவைச் சூக்குமமாக அறிவித்த செயல் அது. ஆனால், இத்தனை ஆண்டு களில் ஒவ்வொரு வளர்ச்சித்திட்டமும் குடிசை களில் வாழ்வோரை நகர நெரிசல்களில் நிற்க நிழலும் சாயச்சுவரு மில்லாமல் வேலை தேடி வருவதையே வளர்த்துக்கொண்டிருக் கிறது. அன்று கோமான்களாக இருந்தவர்கள் 'குடியரசாட்சி' முறையிலும் பரம்பரை மாறாமல் கோமான்கள், பெருங் கோமான்கள் என்று கோடிகளில் புரள்பவராக உயர்ந்திருக் கின்றனர்.

அறுபதுகளின் பிற்பகுதியில் மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தியே ஆகவேண்டும் என்ற முடிவுடன் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை அரசு கைக்கெண்டு அரசு மருத்துவ மனைகளில் விவரம் அறிவிக்காமலேயே அறியாமை நிறைந்த கிராமப் பெண்களை லூப் சாதனம் புகுத்த சோதனை உயிர் களாக்கின. துவக்கப்பட்டதுமே, முயற்சி கைவிடப்பட வேண்டி வந்தது. ஆனால் பிரசாரங்களில் பின்னடைவு ஏற்படவில்லை. நாட்டில் எந்த மாநிலத்துக்குப் போனாலும், ஆசைக்கு ஒன்று; ஆஸ்திக்கு ஒன்று; நாம் இருவர்; நமக்கு இருவர். தாமதத்

திருமணம்; பொறுப்புள்ள தாய்மை போன்ற வாசகங்கள் குடும்பக் கட்டுப்பாட்டைப் பெண்ணை மட்டுமே குறிப்பாக்கியிருந்தன. பெண்ணுக்குச் சொத்துரிமை கிடையாது; அதனால் ஆஸ்திக்கு ஆண் வேண்டும், ஆசைக்கு ஒரு பெண் இருக்கலாம் என்ற மரபை வலியுறுத்தின.

'லூப் வைத்துக்கொள்ளுங்கள். இது இல்லறச் சுகத்துக்குக் குந்தகமில்லை !' - இது ஒரு பிரசார வாசகம்.

திரைகளில் சிறு குடும்பத்துக்கான பிரசாரங்கள் பெண்களையே குறிப்பாக்கி வீசப்பட்டன. ஆடம்பரச் செலவுகள் செய்ய மாட்டார்கள். சுறுசுறுப்பாக வீட்டில் வேலை செய்வாள். ஒரு பிள்ளை, ஒரு பெண்ணைப் பள்ளிக்கு அனுப்புவாள். மாதா மாதம் அஞ்சலக சேமிப்பு வங்கியில் பொருள் சேர்ப்பாள். கணவன் அலுவலகம் செல்லும்போது சிரித்த முகத்துடன் அவன் கையில் கொண்டு செல்லும் பையையோ, பெட்டியையோ கொண்டு கொடுத்து சிரித்த முகத்துடன் வழியனுப்புவாள்.

வங்கிகள், பணம் சேமிக்க விளம்பரங்கள் செய்யும். உங்கள் மகளின் திருமணத்துக்குப் பணம் வேண்டாமா? சேமியுங்கள். நகை நட்டுடன் 'வரதட்சணை' கொடுத்து, ஓர் இளைஞர் கையில் அவளைப் பிடித்துக் கொடுக்கும் இன்றியமையாத சேமிப்பு. படத்தில் விவரம். உங்கள் மகன் படிக்க வேண்டாமா? அவன் பொறியியல் மருத்துவம், பயின்று பட்டதாரியாக வரும் கோலம். பெண்தான் குடும்பத்துக்கு அச்சாணி. ஆனால், அவளுக்கு எந்த உரிமையும் இல்லை என்ற மரபு- கருத்து இன்றுவரை உடைக்கப் படவில்லை. ஆனால் வீட்டுக்காக, நாட்டுக்காக அவள் எந்த முடிவையும் எடுக்க முடியாது. அதை அவள் கணவன் எடுத்தாலும் போனால் போகிறது என்று விடலாம். ஆனால் யாரோ மூன்றாம் நாட்டு மக்கள் ஏற்றுக் கொண்டிராமல் அந்நாடுகளில் தடைசெய்யப்பட்ட கருத்தடைச் சாதனங்களை நம் நாடு எப்படி அனுமதித்தது?

இதைக் கேட்கத் தெரியாது அவளுக்கு; அவனும் கை நழுவிவிடுவான். 1969 வரையிலும் இந்நாட்டில் மையத்தில் காங்கிரஸ் (பேராயக்) கட்சியே ஆட்சிபுரியும் நிலை இருந்தது. தமிழ்நாட்டில் அன்றிலிருந்து இன்றுவரையிலும் பிரதேசம் சார்ந்த திராவிடக் கழகங்களின் ஆட்சியே நடக்கின்றன. 1989 இல்

மீண்டும் மைய அரசில் காங்கிரஸ் அல்லாத கட்சியே ஆட்சிக்கு வந்தது. மேற்கு வங்கத்தில் மார்க்சிய பொதுவுடமைக் கட்சியும் திரி புராவிலும் அதே பொதுவுடமைக் கட்சியும் ராஜஸ்தானில் பாரதிய ஜனதா ஆட்சியும், மிகப்பெரிய உத்தரப்பிரதேசத்தில் சமாஜ்வாதி பகுஜன் சமாஜ் கட்சியும் என்று 1994 இல் இந்நாட்டின் குடியாட்சி யில் பல கட்சி முறைகள் கொண்ட பிணைப்பு உருவாயிற்று.

உலகிலேயே இந்தியாவைப் போன்ற பல மொழிகளில் பல இனங்கள் பல சமயங்கள் சாதிகள் என்ற பிரிவுகளைக் கொண்ட நாட்டில் பல அரசியல் கட்சிகள் (கொள்கைகள் நழுவிப் போக) ஆட்சியில் பங்கு பெறுவது என்பது மிக மிகச் சிக்கலானதாகும். நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு மிக அவசியமான தேவையாகக் கருதப்படும் மக்கள் பெருக்கக் கட்டுப்பாட்டுக்கான குடும்ப நலத்திட்டம் பெண்ணைக் குறிவைத்தே, அவள் உடலை மையமாக்கியே வகுக்கப்பட்டதில் எந்த அரசியல் கட்சிக்கும் ஒரு கருத்து வேறுபாடும் இல்லை. சொல்லப்போனால் தொடக்கத்தில் மகளிர் கருத்தடை சாதனம் ஏற்பதில் சமயம் சார்ந்தே கட்சிகள் முட்டுக்கட்டை போடவில்லை என்றே சொல்லலாம். தொடக்கக் காலத்தில் லூப் சாதனத்தை கோவா பிரதேசத்தில் (அப்போது அது யூனியன் பிரதேசமாக தலைநகர் ஆதிக்கத்தில் இருந்தது) எந்தச் சமய அமைப்பும் ஒரு எதிர்க்குரல் எழுப்பவில்லை. அதேபோல் படிப்பறிவும் சமூக உணர்வும், பொருளாதார சுயச்சார்பும் உடைய மகளிர் சமயம் சார்ந்து கருத்தடை முறைகளை எதிர்க்கவில்லை என்பதே உண்மை. அதனால்தான் கேரளம் போன்ற மாநிலங் களில் மக்கள் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டு மகளிர் நலமும் பேணப்பட்டிருக்கிறது. சாதி, சமயம் சார்ந்த கட்சிகள் தம் அரசியல் ஆதாயங்களுக்காகவே கட்டுப்பாட்டுக்கு எதிரான கருத்துக்களை மக்களிடையே விதைக்கிறார்கள். மத அடிப்படை வாதம் பெண் களின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பதாகவே கோலோச்சி வந்திருக்கிறது. 'மதச்சார்பற்ற' என்ற குடையின் கீழ் மணவிலக்குப் பெற்ற பெண்ணுக்கு ஜீவனாம்சம் உரிமை மதச்சட்டத்துக்கப்பால் நீதிமன்றம் தீர்ப்பளித்தபோதும், அங்கே மத அடிப்படைவாதம் ஆட்சியையே பதம் பார்க்க முனைந்தது. 'ஜீவனாம்சம்' வேண்டாம் என்று அவளே விலகிக்கொள்ள, சீரணம் செய்ய முடியாத நிகழ்வுகள் மக்களாட்சி உரிமைகளில் பல உறுத்தல் களைக் கொண்டு வந்திருக்கின்றன. இதில் முக்கியமானது பலதார

மணத் தடைச் சட்டம் ஒன்று. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான கல்வி ஒதுக்கீடு, வேலைவாய்ப்புகளின் முன்னுரிமைகள் என்று வரும்போது, அந்தச் சாதியினர் பெருகி, ஆட்சிபிடிக்க வரும்போது, சாதி அமைப்புகள் கட்டுப்பாட்டை ஆதரிக்காது. முன்பே குறிப்பிட்டபடி உழவுத் தொழிலை மேன்மையாகக் கொண்ட, முதன்மையாகக் கொண்ட இந்நாட்டில் வாழ்வாதாரங்களும் சிறந்து, வறுமை வாட்டினாலும் இரண்டு ஆண்பிள்ளைகள் வேண்டும் என்ற மரபு அடித்தளங்களில் வேரூன்றி இருக்கிறது. தமிழ்நாட்டில் மதுரை, சேலம், தர்மபுரி போன்ற மாவட்டங்களில் ஏறக்குறைய கால்நூற்றாண்டாக, பெண்சிசுக் கொலை என்ற குரூரம் நிகழ்கிறது. இதைப்பற்றி ஆய்வு செய்யப்போன பெண்மணி ''ஏம்மா, பெண் குழந்தைகளைக் கொல்ல வேண்டும்?'' என்று ஒரு கிராமப் பெண்ணைக் கேட்டார். விடை சட்டென்று வந்தது. ''அரசுதான் புள்ள பெத்துக்காதேன்னு சொல்லுதே!''

''அரசு பொம்புளப்புள்ளையைக் கொன்னிடுன்னு சொல்லலியே?'' என்று ஆய்வாளர் கேட்டார்.

''பொம்புளப்புள்ள வச்சிட்டு என்ன செய்ய? வெள்ளாமயில்ல. வேல இல்ல. அந்த நாளில் இப்படி எல்லாம் இல்ல. மாமன் அத்தை உறவுக்குள்ள கட்டுவம். உப்புப் பொட்டி வச்சிட்டு மால போடுவாங்க. ராவும் பகலும் கேணில தண்ணி இரைச்சி வெவசாயம் செய்யிவம். கேள்வரகு, சோளம், வெள்ளரி, கத்தரி அல்லாம் போடுவம். பொம்புளப்புள்ளி கடாகுட்டி வளர்க்கும். பெருக்கும். அங்கங்க மேய்க்கும். காசு சேத்துக் காதுல பவனா போட்டுக்கும். கட்டி வய்ப்பம். எங்கூட்டுக்காரருக்கு நானே எங்கப்ப ரெண்டாந்தாரம் கட்டிப் பெறந்த பொம்பளப் புள்ளய மருமவ கூட வந்து பேரம் பேத்தி எடுத்த பிள்ள கட்டிவச்ச. ஏன்னா அவ ரெண்டு பெத்துப் போட்டா கொஞ்சம் நிலகூட வெள்ளாம பண்ணலான்னு.

இப்ப...? 'டாம்' போட்டாங்க. ஒரு கிணறில் தண்ணியில்ல. அவெவ புள்ளய படிக்கப் போடுறா. பருத்தி போட்டு கரும்பு போட்டு, பணம் பணம்னு சம்பாதிக்கிறா. ஊடுநாடு வேலில்லாம சனங்க போவுதுங்க. இங்க கூலி கூடக் கெடக்கில. பொம்புளப் புள்ளியக் கட்ட அம்பது பவுன், நூறு பவுன்றாங்க. எங்கிட்டுப் போவ? எவனேனும் தொட்டுக் கலைப்பா? எதற்கு கள்ளிப்பால், நெல்மணி'' என்று கதை முடிகிறது.

ஒரு வகையில் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரசாரத்துக்கு எதிரான வீம்புகளாக இந்தச் சிசுக் கொலை, கருக்கொலை நிகழ்வன போல் கருதத் தோன்றுகிறது.

இன்னொரு முக்கியக் காரணம், பெண்களை விவசாயத்தில் இருந்து ஒதுக்கிய கூறுகள். முன்பு குறிப்பிட்டபடி, பசுமைப்புரட்சி என்ற பெயரில் புதிய விவசாய உத்திகள், செயற்கை உரங்கள், இயந்திரமயமாக்கல் எல்லாம் உணவு உற்பத்தி முறையை மாற்றி, பணப் பயிருக்கே உற்பத்தி முதன்மை வந்தது.

பெண்களின் உற்பத்திப்பங்கு பாதிக்கப்பட்டது. ஒருங்கிணைந்த குடும்பமாக உழைத்து, விளைவைச் சமமாகப் பங்கிட்டு வாழ்ந்த இயற்கை வாழ்முறை அடியோடு தகர்ந்தது. ஆண்கள் அதிகாரம் ஓங்கும் நிலை உருவாயிற்று. இயற்கை வாழ்வுக்கு அவசியமில்லாத கவர்ச்சிப் பொருட்களை உற்பத்தி செய்து, கிராமங்களில் சந்தைப்படுத்தி தேவைகளால் அந்த மக்களின் கழுத்தை நெறித்த பணத்தேவை பெண் சிசுக் கொலை என்று சமுதாயத்தின் அழுகல் முகத்தைக் காட்டியது. சமத்துவம் பேசும் கொள்கை கொண்ட அரசியல் கட்சியைச் சார்ந்த இளைஞர்கள், பெண்கள் கூட இந்த இயலாமை கண்டு கொதித்தெழவில்லை. தமிழக அரசின் பெண் முதல்வர் தொட்டில் குழந்தைத் திட்டம் கொண்டு வந்தார். பெண் குழந்தைகள் கருணை இல்லங்களில் விடப்பட்டன. ஆனாலும் பெண் குழந்தைகள் கொல்லப்படுவது அறவே தடுக்க இயலாததாகப் பல்வேறு அழிப்பு முறைகளை அறிவியல் முன்னேற்றங்கள் நடைமுறைப்படுத்தியிருக்கின்றன.

முறையற்ற கருக்களை அழித்து, ரகசியமாகப் 'பாவ'த் தொழில்கள் செய்து பொருள் ஈட்டிய மருத்துவர்கள் அரசு அங்கீகாரம் பெற்ற கருக்கலைப்பு நிலையம் என்று பலகை மாட்டிக் கொண்டே கருவில் உள்ளது பெண் குழந்தை என்றால் அழிக்கிறார்கள். இந்த வசதிக்கும், பொருள் இல்லாத பெண்கள் பெண் குழந்தைகள் பிறந்த உடன் அழிக்கிறார்கள். இப்போது அரசு இதற்குத் தண்டனை என்று சட்டத்தைக் கடுமையாக்கி இருப்பது, எரிகிற கொள்ளியில் இருந்து காயும் எண்ணெயில் விழுந்துவிட்ட வரலாறாக, கொலை, தற்கொலை, கடன், வாழ முடியாமல் ஊர், உறவு அந்நியப்படுத்தும் கொடுமை என்று வரலாறு தொடர்கிறது.

இத்துணை துன்பங்களிலும் கருத்தடை முறைகள் எதுவும் தலைகாட்டவில்லை.

ஏன்? இங்கு அரசு மக்கள் பெருக்கத்தைக் குறைக்க வேண்டும் என்று திட்டத்துக்கான நிதி ஒதுக்கி, விளம்பர வாசகங்கள் தரகர்கள், ஆள்பிடித்து வரும் அவலங்கள் எல்லாவற்றையும் அரங்கேற்றி னாலும் அடிப்படைக் காரணங்கள் நியாய அநியாயங்கள் எவற்றையும் கண்டுகொள்ளவில்லை.

உண்மையில் பாதுகாப்பான உடலுறவு என்ற குறிக்கோளில் கருத்தடை சாதனங்களைச் சாதி, சமய வித்தியாசமின்றி அறிவார்ந்த மிகச் சிறிய சதவிகிதத்தினரே பயன்படுத்துகின்றனர். தொடக்கக் காலத்தில், முன்பே குறிப்பிட்டபடி, பாவம் என்று கருதப்படாத கருத்தடை முறைகளை இஸ்லாமிய 'ஹதீஸ்' நீதி நூலிலும், கதோலிக்கர்களிடமும் புராதன சமயங்களிலும் கூட நடைமுறைப் படுத்தலாம் என்று கண்டிருக்கின்றனர். அவற்றைப் பார்க்கலாம்.

எல்லா நெறியாளர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஆணின் புலனடக்கம். இதற்கும் ஒன்றிரண்டு மக்களைப் பெறுவது தடையில்லை. ஆனால் சாதாரண மனிதர்களும் இராமகிருஷ்ணர் சாரதா மணிதேவியார் போல் இருக்க முடியாது. இரண்டே இரண்டு குழந்தைகளைப் பெற்றபின் காந்தியடிகளைப் போல் பிரும்ம சரியம் கடைப்பிடிப்பதும் இயலாததாகும். ஏனெனில் அதற்கேற்ற ஒழுங்குமுறைகள் கூடிய இயற்கை வாழ்வு, சூழல் ஆகியவை இன்றியமையாதவை. இராமகிருஷ்ணர் பக்தி நெறியில் காளியை அன்னையாகக் கருதினார். எல்லாப் பெண்களுமே காளியின் வடிவங்களாகவே அவருக்கு வழிபடுபவர்களாகவே இருந்தார்கள். பிரும்மசரியம் என்ற ஒழுக்கம் மனமுதிர்ச்சியின் விளைவாக, புலன்களை ஒடுக்கும் பயிற்சியில் கூடுவதாகும். அதற்கு மறுபக்கம், அன்பு, கருணை, உடலுழைப்பு, ஆசாபாசங்கள் அறுத்தல் ஆகிய பண்புகள் எனலாம். ஓர் உயிரைத் தோற்று விக்கும் விந்தணுக்கள் உரிய பருவத்தில் கரைபுரண்டுவரும் காட்டாறு போல் பெருகக்கூடும். இந்தப் பருவ ஒழுக்கம் கல்வி கற்றலாகும். ஆனால், இந்நாட்களில் அத்தகைய குரு-சீட கல்விமுறை என்பது அறவே இல்லை. ஒழுக்கப் பயிற்சிகளுக்கான சூழலும் இல்லை.

பழைய நாட்களில் பெண்களைக் கல்வி பயில அனுப்பாததன்

காரணமே ஒழுக்கக் குறைவு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம்தான். வீட்டுவேலை செய்தல், கோலம் போடுதல், சித்திரப் பூ வேலை செய்தல் என்று நான்கு சுவர்களுக்குள் மட்டுமே அவள் சுதந்திரம் இருந்தது. பூப்பெய்திய பின்னரே திருமணம் செய்து கொடுக்கும் மரபுச்சாதியில் அந்நாட்களில் அத்தகைய பெண் ஒரு வீட்டில் இருந்தால் ஒரு திரை தொங்கும். திருமணத்துக்குப் பெண் கேட்டு வருபவர்களில் பெண்களே பெண்ணை வந்து பார்ப்பார்கள். திருமணம் கூடும் என்ற அளவில் இரு தரப்பாரும் ஒத்துக் கொண்டாலும் மணமகன் பெண்ணை மணமேடையில்தான் பார்க்க முடியும். 'பர்தா' முறையும் ஆணின் கட்டவிழ்தலில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் அடிப்படையில் அமைந்ததுதான்.

எனவே திருமணமான பின் ஒழுக்கம் என்பது ஆண் தான் ஒத்துழைக்க முன்மொழிபவனாக இருக்கவேண்டும். மனைவியும் இசைந்து, கலவியின் உச்சகட்டப் பின்வாங்குதலைச் செயல் படுத்துவது பற்றி முன்பே குறிப்பிடப்பட்டது. இயற்கைக்கு முரணாக இல்லாத குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள், ஐம்பது களின் பிற்பகுதிகளில் வானொலியின் வாயிலாகவே பரிந்து ரைக்கப்பட்டன. வானொலி எல்லா மக்களையும் சென்று எட்டும் சாதனம். மகளிருக்கான நிகழ்ச்சிகளில் இதுபற்றி விவரிக்கப் பட்டது. மாதவிலக்கு ஏற்பட்டதன் பின்னும் சினைமுட்டை முதிர்ந்து வரும் நாட்களைக் கண்டறிந்து அந்த நாட்களில் உறவு கொள்ளாமல் தவிர்ப்பது, பாதுகாப்பான உடலுறவாகும். ஒரு பெண் பூப்படைந்து கருவுறக்கூடிய இருபது, இருபத்தைந்து ஆண்டு காலத்தில் முந்நூறிலிருந்து நானூறு சினைமுட்டைகள் வெளியாகக் கூடும். முட்டைகள் முதிர்ந்து வெளியானபின் கருவுறும் காலம் ஒருநாள் - 24 மணி நேரம் மட்டுமே என்றாலும், விந்தணுக்கள் கூடலுக்குப்பின் ஒன்றரை இரண்டு மணி நேரத்தில் கருக்குழாயில் வந்து சேரும். இவை ஐந்து நாட்கள் உயிர்ப்புடன் இருக்கலாம். (இருந்தாலும், கருவுறும் சாத்தியம், செயற்கை முறைக் கருத்தரிப்பில் நான்கு நாட்களுக்குப் பின் உயிர்த்திருப்பதில்லை என்று கண்டிருக்கின்றனர்)

அதாவது, மாதவிலக்குகளுக்கு இடைப்பட்ட 25-28 நாட்களுக்குள் கருத்தரிக்கக்கூடிய காலம், விலக்கு முடிந்து பத்தாம் நாளில் இருந்து பதினெட்டாம் நாள் வரை என்று ஆய்வாளர்

கூறுகின்றனர். இதுதான் 'ரிதம்' முறை என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. இந்த நாட்களைத் தவிர்க்க வேண்டும். ஆனால் இயல்பாகவே ஒழுங்கில்லாத மாதவிலக்குடையவர், பயணம், மன அழுத்தம் போன்ற நிலைகளிலும் மாதவிலக்கு நிற்கக்கூடிய காலங்களிலும் வளர் இளம் பருவத்திலும் கடைப்பிடிக்க இயலாத முறை இது. இந்த முறையில் ஒரு சிறு கண்காணிப்பில் கவனம் சிதைந்தாலும் கருவுறுவது சாத்தியமே.

உடல் வெம்மையுறுவதை வைத்து அறியும் முறையில், சினைமுட்டைகளின் முதிர்வையும் கருவுறும் வாய்ப்பையும் அறியலாம்.

'புரொஜஸ்ட்ரான்' என்ற நிணநீர் சுரக்கும்போது சிறிதளவு உடல் வெப்பமடைகிறது. இந்தச் சுரப்புநீர் உச்சநிலை அடைவதை உடல் வெப்பம், அன்றாடம் பதிவு செய்யும்போது தெரியவரும். அன்றாடம் படுக்கையிலிருந்து எழுந்திருக்குமுன், முகம் கழுவி எதுவும் உட்கொள்ளுமுன் சாதாரணமான வெப்பமானியையோ அல்லது இதற்கென்றே அமைந்த சிறப்பு வெப்பமானியையோ நாவுக்கடியில் மூன்றிலிருந்து ஐந்து நிமிடங்கள் வைத்துக் கண்டறியலாம். யோனி வாயிலிலோ, குதவாயிலிலோ வைத்தறிவது சிறந்ததென்றாலும், பெண்கள் பெரும்பாலும் அதை விரும்புவதில்லை.

சினைமுட்டை முதிர்ந்து வருமுன் பாதுகாப்பான உடலுறவு நிச்சயமானதல்ல. முதிர்ந்த உடல் சூடு இறங்கி மூன்று நாட்களுக்குப் பிறகே பாதுகாப்பான உடலுறவு சாத்தியம்.

நம் இந்திய மரபில் சில நாட்களில் தவிர்க்க வேண்டும் என்ற ஒழுக்கப் பண்பாடு இருந்தது. கருத்தரிக்கும் நேரம், குறிப்பிட்ட திதிகளில் குறிப்பிட்ட நேரங்கள் என்றெல்லாம் ஆன்றோர் விதித்திருந்தனர். மேலும் கூட்டுக் குடும்பங்களில் மூன்று தலைமுறையினர் விதவைகள், முதியோர், இளம்பிள்ளைகள் கூடி வசித்தனர். உழைப்பு, உடல் போகங்களை நாடும் விருவிருப்புக்கு இடம்கொடாது. தனிமையில்லாத கடமைக்குக் குடும்ப உணர்வுகள் குறுக்கிடும். கணவன் மனைவி தனிமையில் சந்தித்துக் கொள்வதே பெரும்பாடாக இருக்கும்.

நீலகிரி வாழ் பழங்குடியினர் வீடுகள் ஒரே அமைப்புடை

யனவாக இருக்கும். பழங்காலத்தில் பொன்னைக் கொடுத்துப் பெண்ணைக் கூட்டிவரும் திருமணம் பெயருக்குத்தான் நடக்கும். வீட்டில் திருமணமாகாத மூன்று பிள்ளைகள் இருக்கலாம். அவள் கருவுற்ற பின்னரே 'அசல்' திருமணம் நிகழும். 'இவள் வயிற்றில் இருக்கும் குழந்தைக்குத் 'தந்தை' யார் என்பதைப் பெண் முன்பே தெரிவித்திருந்தாலும் பெரியோர் கூடிய அவையில் அவளிடம் அந்த வினா எழுப்பப்படும். அவள் உண்மையான தந்தையை அவையில் தெரிவிப்பாள். பின்னரே அவள் அவனுக்கு உரிமை யாகும் திருமணம் நடக்கும். தனிமையில் உடலுறவு கொள்ளும் சூழல் வீட்டில் இருக்காது. என்றாலும், பாதுகாப்பான கானகச் சூழல், அருவிக் கரைகள் தனிமையும் சந்ததிக்கான போக இன்ப மும் நல்கும். இந்தப் பெண் குறிப்பிட்ட காலத்துக்குள் கருவுற வில்லை என்றால், அவள் தாய் வீட்டுக்கு அழைத்துச் செல்லப் படுவாள். கொடுக்கப்பட்ட பொன் திரும்பப் பெறப்படும். இதே பெண்ணை வேறு குடும்பத்திலிருந்து விழைந்து வருபவர் உண்டு. கருவுறலாம்; தடையில்லை. அப்படி இரண்டு மூன்று திருமணங் களிலும் கருவுறவில்லை என்றாலும் அவள் இகழப்பட்டதில்லை. உழைத்தும் குடும்ப மக்களைப் பேணியும் கிராமத்தில் கவுரவமாக வாழ முடியும். அந்நாட்களில் விதவை, விலக்கப்பட்டவள் என்ற இழிவுகள் அச்சமூகங்களில் இருந்திருக்கவில்லை. ஆனால், வாழ்க்கைமுறை இந்நாள் அடியோடு மாறி பெண்களை உரிமை அற்றவர்களாக வரதட்சணை என்ற பண, பொருள் மதிப்பு இருந்தாலே திருமணம் கூடும் என்ற கீழ்நிலைக்குத் தள்ளி இருக்கிறது.

மூன்றாவது பாதுகாப்பான உடலுறவுக்காலத்தைக் கருப் பாதையில் வழவழப்பான சளி போன்ற திரவம் தோன்றுவதி லிருந்து தெரிந்து கொள்ளலாம். ஈஸ்ட்ரோஜென் - புரொஜஸ்ட்ரான் காரணமாக, சினைமுட்டைகள் முதிர்ந்து உயிர்த்திருப்பதை அறிவிக்கும் அறிகுறி அந்தச் சளி போன்ற வெளிப்பாடு.

இந்த நாட்களைத் தவிர்த்து, உலர் நாட்களில் உடலுறவு கொள்ளலாம். இந்த முறைகளில் இருபாலாரும் ஒத்துழைக்க வேண்டும்.

மேலும் ஆணாதிக்க மரபும், அறியாமையும் வறுமையின் கூர்

முனைகளும் கூடிய வாழ்க்கையில், ஆண் பெண்ணைக் கூடுவ தென்பதே அவன் இல்லாமைகளின் இறுக்கங்களை, கோபங் களை அவளிடம் இறக்கிக் கொள்வதே 'கூடல்' என்ற திணிப்பு. விளைவு கருவுறல்.

எனவே பாவமற்ற, இயற்கை அனுமதியுடன் கூடிய இத்தகைய 'கருத்தடை' என்பது இந்திய சமுதாயத்தில் சிறிதும் பயன்படக்கூடியதல்ல. என்றாலும் கதோலிக்க, இஸ்லாமிய சமயங்களில் ஒத்துக்கொள்ளப்பட்ட ஆணோ, பெண்ணோ, விந்தணுவை உரிய நேரத்தில் செலுத்தாமல் பின்வாங்கும் கருத்தடை முறை ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் பதினெட் டாம் நூற்றாண்டிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு மக்கள்தொகைக் குறைப்புக்கு ஆதாரமாக இருந்திருக்கிறது. கருத்தடை முறைகளில் செயற்கையில்லாமல் பின்பற்றப்பட்ட மிகப் புராதனமான வழக்கம். இந்த வழக்கம் ஆப்பிரிக்கப் பழங்குடிகள் இடையே பரவலாக இருந்திருக்கிறது.

எப்படிப் பார்த்தாலும், எங்கே சுற்றி வந்தாலும் 'பெண்' அந்நியப்படுத்தப்பட்டு அவள் உடலே அவளுக்கு உரிமை இல்லாத நிலையில்தான் வந்து முடிகிறது. அவளை மேம்பா டடையச் செய்ய வேண்டும். கருத்தடை என்பது பெண் சம்பந்தப் பட்ட சுமையாக விதித்து, அரசும், அரசின் அடிமைகளாகவும் பணம் பறிப்பதற்காகத் தம் இனத்தையே அழிக்கப் புறப்பட்டி ருக்கும் பெண் மருத்துவர்களும் செயல்படுவது, நிச்சயமாகத் தவிர்க்கப்பட வேண்டும். பெண்கள் இயற்கையைக் காப்பாற்ற, பசுமையைக் காப்பாற்ற, வன விலங்குகள் கொல்லப்படுவதைத் தவிர்க்க ஏன் ஒரு பெண்ணைக் குலைத்துக் கொலை செய்த குற்றவாளியின் மனித உரிமைக்காகக் கூடப் போராடத் தயாராக இருக்கின்றனர். கருத்தடைச் சாதனங்கள் ஒரு பெண்ணின் உடலில், அவள் சந்ததியின் உடல் நலத்தில் பாதிப்புக்களை விளைவிக்கின்றன என்பதை மருத்துவ ஆய்வுகள் வெளிப் படுத்தியும் அதைப் பற்றிய உண்மைகளைப் பொதுமக்கள் அறிய எடுத்துரைப்பதில்லை. மகளிர் அமைப்புகள் எப்போதோ கூடும் மாநாடுகளில் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றி இந்தப் பிரச்னையை முடித்துவிடுகிறார்கள்.

# 13. உரிமை மறுக்கும் ஆக்கிரமிப்புகள்

தமிழ்நாடு பிறப்புத் தடுப்பு முன்னேற்றத்தில் இந்நாள் நாட்டிலேயே இரண்டாவது இடத்தைப் பிடித்திருக்கிறது. முதலிடம் கேரளத்துக்கு. 'பொறுப்புள்ள தாய்மை' என்ற பிரசார வாசகம், தமிழகப் பெண்களாலேயே பொருளுள்ளதாகப் பரிணமித் திருக்கிறது. நீயா, நானா என்று ஒன்றுக்கொன்று சவால் விட்டுக் கொண்டு ஆட்சிப்பிடிக்கும் திராவிடக் கழகங்களின் போட்டியின் பயனாக மைய அரசு ஏதேனும் ஒரு பிராந்தியக் கட்சியின் தோள்களில் ஊன்றிக் கொண்டால்தான் உருக்குலைந்து உதிரி களாகப் போவதிலிருந்து மீள முடியும். எனவே மகளிர் நலம், கல்வி, சுகாதார வளர்ச்சி, ஒருங்கிணைந்த முன்னேற்றத்துக்கு ஆதார மான மக்கள் பெருக்கக் கட்டுப்பாடு வளர்ச்சித் திட்டத்தின் உயிர் நாடியாகத் திகழ்கிறது.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முந்தைய நிகழ்ச்சி. மூன்று குழந்தைகள் உள்ள குடும்பத்தின் கடைசிப் பையனுக்கு ஐந்தோ, ஆறோ வயதிருக்கும். அவனை அப்போதைய நாகரிகப்படி, ஆங்கில வழி தொடக்கப்பள்ளியில் சேர்த்தார்கள். பள்ளிக்குப் போக மாட்டேன் என்று அடம்பிடிப்பான். வீட்டில் பேசிப் புழங்குவது தாய்மொழியான தமிழ். சிறுவனின் சங்கடம் புரிந்த பெற்றோர் தமிழ் வழிப் பள்ளிக்கு மாற்றினார்கள். பையன் துடிப்புள்ளவன். சிறுவர்களுக்கேயுரிய அறிவுசார் கிரகிப்பு ஆற்றல் மிகுந்திருந்தது. ஒருநாள் தந்தை புதிதாக வந்திருந்த உறவினருடன் ஊர் விவரங்கள் பேசிக் கொண்டிருந்தார். பையன் ஒருபுறம் விளையாட்டு மோட்டார் வண்டியை ஓடவிட்டுக் கொண்டிருந் தான். புதிதாக வந்த உறவுச் சித்தி வாங்கிக் கொடுத்ததுதான். பேச்சுவாக்கில் யாருக்கோ, பையன் ஒண்ணு, பெண் ஒண்ணு என்று சொல்லிக் கொண்டிருந்தது இவன் செவிகளில் விழுந்திருக்க வேண்டும். ஏனெனில், "அவங்க ஆப்ரேஷன் பண்ணிட்டாங்க. இனிமே புள்ள பெறக்காது!" என்றானே பார்க்க வேண்டும்! புதிதாக வந்த உறவினருக்கும், தந்தைக்கும் தூக்கி வாரிப்போட்டது! இந்த ஆபரேஷன் விவகாரம், அவன் மனதில் எப்படிப் பதிந்தது?

அந்தக் காலத்திலேயே இந்தி வழி கற்பிக்கும் 'கேந்திரிய வித்யாலயங்களின் இரண்டாம் வகுப்பு, சமூகக் கல்விப் பாடமே. சுகிபரிவார், கமி பரிவார்' என்ற (சிறு குடும்பமே, சுகமான குடும்பம்) குடும்ப நலத் திட்டத்தின் மந்திரச் சொல்லாக இருந்தது. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் மனித நேய மரபுசார் 'மந்திரங்கள்' உயிர் பெறாமலே பிஞ்சு மனங்களில் அடிபட்டுப் போயின. ஆனால், பையன் படிக்கும் தமிழ்வழிப் பள்ளியில் அப்போது அத்தகைய பாடமோ, பட விளக்கமோ இல்லை. சுவர்களில் காணப்படும் வாசகங்களைப் படித்துப் புரிந்து கொள்ளும் முயற்சியும் கூடவில்லை. ஆனாலும், ஆபரேஷன் பண்ணிக் கொண்டால், பிள்ளை பிறக்காது என்பது அவன் மனதில் பதிந்திருந்தது. தெருவில் நடக்கும்போது வண்ணக் கூழாங்கல் கவனத்தைக் கவருவதுபோல், பொறுக்கி சராய்ப் பையில் போட்டுக் கொள்வது போல் இந்தப் புதிய செய்தியை மூளையில் போட்டுக் கொண்டிருக்கிறான். விளக்கை அணைக் காதே! குச்சி கொளுத்தாதே! படுக்கையில் மூத்திரம் வரும், சாமி கண்ணைக் குத்தும் என்று அறிவுறுத்தல்களை அவன் ஏற்ற விதத் துக்கும் இதற்கும் வித்தியாசம் உண்டு. ஓர் ஆண் குழந்தை திறந்த உணர்வுகளுடன் எதையும் வாங்கிக் கொள்ள, ஊக்குவிக்கப்படுவ தாக சூழலே அமைகிறது. ஆனாலும், பெண் குழந்தை இவ்வாறு திறந்த உணர்வுகளுடன் கேட்டதை வெளிப்படுத்துவதில்லை.

பூப்புக்குருதியை முதலில் காணும் பெண் மனதளவில் பெரும் அச்சம் கொள்கிறாள். அந்த நேரத்தில் தாய்மாரும், மூத்த பெண் களும் அவள் மருட்சியைப் போக்கும் வகையில் ஆதரவாகச் செயல்பட வேண்டும். 'இந்த உலக வாழ்வில் உன் பிறப்பு மிக மிக முக்கியமானதென்று அறிவிக்கும் மலர்ச்சி இது; இதற்காகக் கூச்சம், அச்சம் இரண்டும் உன்னைப் பாதிக்கக் கூடாது' என்று அதை இயல்பாக ஏற்க எல்லாத் தாய்மாரும் மன இயல் சார்ந்த நம்பிக்கையை, அவளுக்கு உணர்த்துவதில்லை. இந்த மன இயல் சார்ந்த ஓர் ஆய்வில், மேலை நாட்டுப் பெண்களைவிட ஆசிய நாடுகளில் பூப்பு என்பது மனதளவில், மகிழ்ச்சிக்கு மாறாக மருட்சியைக் கொடுப்பதுதான் உண்மை என்று புலப்படுகிறது. அமெரிக்கக் கிறிஸ்தவ மதப் பிரசாரகராக சீனத்தில் வந்து வாழ்ந்தவரின் மகள், நோபல் பரிசு பெற்ற மிகச் சிறந்த (பெண்) நாவலாசிரியையான பர்ள் எஸ்.பெக். சீனத்தைத் தாய்நாடாகக்

கொண்டு வாழ்ந்தவர். அவருடைய அனைத்து எழுத்துக்களிலும் சீனத்து வாழ்வும் பெண்கள் நிலைகளும் அந்த சமூகமும் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கும். நம் இந்தியப் பெண்களின் மனோபாவங்களையே அந்த இலக்கியங்களில் உணரலாம். கருப்பைச் செயல்பாடுகளின் தாய்த்தன்மையை அவர் தமக்கே உரிய உருக்கத்துடன் எழுதியுள்ளார். அமெரிக்கப் பெற்றோருக்குப் பிறந்த அவருக்கு இதே ஆசிய இயல்புகள் ஒரு புதிய உந்துணர்வை இலக்கியம் புனையக் கொடுத்திருக்கக் கூடும். தாய், நல்ல நிலம், பெண்கள் அணி (Paviliion of women) ஆகிய படைப்புகள் பெண்ணின் இயல்பு களையும் சமூகத்தையும் அற்புதமாகச் சித்தரித்திருக்கின்றன.

பெண்ணின் வளர்ச்சி நிலைகளை மருத்துவ அறிவியல் உயிரியல் சார்ந்து, நிண நீர்ச்சுரப்பிகளின் (ஹார்மோன்) முதிர்ச்சியின் செயல்பாடுகளால் நிகழ்வதாகக் கண்டறிந்திருக் கிறார்கள்.

இந்த வளர்ச்சிப் பருவங்கள் குறித்த செயல்கள் வேதப் பாடல்களில் இடம் பெற்றிருக்கின்றன. இந்தப் பாடல்கள் வாயிலாக, ஒரு பெண் வயது வந்து பருவமெய்திய பின்னரே திருமணத்துக்கு ஏற்றவளாகிறாள் என்று அறிந்து கொள்ளலாம். ஒரு பெண் குழந்தையை, சிறுமிப் பருவத்திலிருந்து மூன்று தேவர்கள் உரிமை கொண்டாடுகிறார்கள். முதல்வன், ஸோமன்; இரண்டா மவன், கந்தர்வன்; மூன்றாமவன் , அக்னி.

ஸோமன் உடல் வளர்ச்சியை அளிக்கிறான். கந்தர்வன் பெண் தன்மைக்குரிய வளர்ச்சிகளை, சினைப்பை, கருப்பை, மார்புகளின் வளர்ச்சியை நல்குகிறான். மூன்றாமவன் அக்னி, பூப்பு மலரச் செய்வதுடன், கருவுறுவதற்கான கவர்ச்சியின் பல கூறுகளுக்கும் பொறுப்பேற்கிறான். இவளை ஒரு மனிதன் திருமணம் புரிந்து அணுகும்போது, திருமண நிகழ்ச்சியிலேயே "இவளுக்கு, இனி மனிதனான நான் உரியவனாகிறேன். தேவர்களே! நீங்கள் இனி இவளை விட்டு வேறு ஓர் இளம் பெண்ணை, சிறுமியை நாடிச் செல்லுங்கள். இவளுக்கு உரியவனான என்னை, இவளிடம் நல்ல சந்ததி பெற வாழ்த்திச் செல்லுங்கள்" என்று விடை கொடுக்கும் மந்திரம் வருகிறது.

அந்தத் தேவர்கள் தாம், இவள் உடலில், உள்ளத்தில்

மாறுதல்களைச் செய்யும் நிண நீர்ச்சுரப்பிகள், ஈஸ்ட்ரோஜென், புரொஜஸ்ட்ரான் என்ற நிண நீர் சுரந்து, ஆற்றலைக் கூட்டுகின்றன. அழகு பொலிகிறது. பெண்ணுடலின் மார்பகங்கள், பொலிவு பெறுகின்றன. முகம் மலர்ந்து தெளிவடைகிறது. கண்களில் புதிய ஒளி இசைகிறது. சினைப்பை வளர்ந்து, சினை முட்டைகள் அரும்பச் செய்கின்றன. ப்ரொஜஸ்ட்ரான் என்ற சுரப்பியில் வெளியாகும் தாதுவே, மனிதகுல வளர்ச்சிக்கு ஆதாரமாக அடுத்தடுத்து சூல்பைகளைப் பிரித்து, கருமுட்டைகள் வெளி யேறிக் கருவுறத் தயாராக வைக்கிறது. கருமுட்டை, முதிர்ந்து வெளி யேறி விந்தணுவுடன் சேர்ந்து சினைப்பட்டதும் கருப்பையில் வந்து கவ்விப் பொருத்த ஏதுவாகக் கருப்பைச் சவ்வுகளை ஆயத்த நிலையில் வைக்கிறது.

நம் நாட்டில் பழைய காலங்களில், ஒரு சிறு பெண்ணின் துடிப்பும் சுறுசுறுப்பும் இயக்கமும் இழைய கல், மண் சரிவுகளில் கலலெவென்று சிரித்துக் கொண்டு துள்ளிவரும் நீரோட்டம் போல் தென்படுவாள். ஆடிப்பாடுவதும், கோலமிடுவதும், உரத்துச் சிரிப்பதும் அவள் இயல்புகளாக இருக்கும். கவடற்றுச் சிரித்து ஏழாங்காய் ஆடுவதும், வீட்டு வேலைகளை ஓர் ஈடுபாட்டுடன் செய்ய முனைவதும், பாட்டி, தாய், சித்தி, மாமி, அத்தை ஆகியோர் நிழலில் மரபுகள் பிடிபட, கதை புராணங்கள், சாமி கும்பிடுதல், குடும்ப விழாக்கள் எல்லாவற்றிலும் ஈடுபாடுடையவளாக வளர்ச்சி பெறுவாள். பள்ளிப்படிப்பு, பாட்டு, நடனம், அறிவுசார் பயிற்சி என்ற கட்டுப்பாடுகள் இல்லாமல் இயற்கையோடு இணைந்து வளர்ந்த சிறுமிகளை இந்நாட்களில் காண முடியவில்லை. ஆறுகள் இருந்த ஊரானால், அச்சமின்றி நீந்தி நீராடிக் களிப்பாள். தம்பி, தங்கைகள் இவள் கண்காணிப்பில் பயமின்றி இருக்கும். தாயும், தந்தையும் உழவர் குடிகளில் வேலைக்குச் செல்வார்கள். கஞ்சியோ, கூழோ பகிர்ந்து கொள்ளும் பொறுப்பும் வந்துவிடும். அந்தச் சிறுமிகள், பூப்பு வந்ததும் சமதளத்தில் வந்துவிட்ட அருவிபோல் ஒரு பொருள் புரிந்த அமைதியில் ஆழ்ந்துவிட்ட முகம் வந்துவிடும். அதை அடங்கிய மலர்ச்சி எனலாம். என்றாலும், பழைய கவடற்ற மகிழ்ச்சி மாயும். என்ன? என்ன? என்ற வினாக்கள் அவளுள் பிறந்து மாயும். இது இயற்கை உணர்த்தும் மாயம்தான். இந்த மாயத்தை அந்தக் காலத்திலிருந்து மரபுகளும், சாத்திர சம்பிரதாயங்களும் அன்றிலிருந்து இன்றுவரை உடலளவில்

உடல் சார்ந்த விழைவையே புரியவைக்கின்றன. அவளுக்கே புரியாத நிலையில் வாழ்க்கையின் புதிர்கள் உடலளவில் மட்டுமே புரிகின்றன. சாதி, மத, குல மரபுகள் எல்லாம் பெண்ணைப் பொறியில் விழுந்த உயிரினமாக மட்டுமே மையப்படுத்துகின்றன. மஞ்சள் நீராட்டல், சடங்குகள், திருமணம், அதுகுறித்த பேரங்கள், கருப்பம், பேறு காலம், கட்டியவனின் ஆணையிலும், அவளைச் சார்ந்த உறவுகளிலும், அடங்கி பிள்ளைகள், குடும்பக் கடமைகள், இன்பம் துன்பம் என்று வாழ்க்கை உருண்டோடுகிறது. பூ உதிர, பிஞ்சுதிர, மழை காற்று என்று அடிபட, பெண் பிறப்புக்கே உரிய ஆசாபாசங்கள் அனைத்தும் அந்நியமாதலில் ஒடுங்க, இந்தியப் பெண், ஆணாதிக்கம் அவளை எவ்வளவு வருத்தினாலும், மீட்டுரு வாக்கம் என்ற பழைய பண்புகளைப் புதுப்பித்துக் கொண்டிருக் கிறாள். இன்னமும் அவள் மனிதப்பிறவிக்குரிய அடிப்படை உரிமையைப் பெற்றுவிடவில்லை.

இந் நாட்களில், பள்ளிப்படிப்பு ஆணுடன் போட்டி, எதிர்ப்புகள், எதிர்ப்புகளால் ஏற்படும் உந்து வேகங்கள், வீம்புகள், பொருளாதார சுதந்திரங்கள், எல்லாம் பெண்களின் வாழ்க்கை களை சமூக உணர்வுகளை ஆதிக்கத் தடைக் கற்களில் மோதிச் சிதற வேண்டிய கட்டாயங்களுக்கு உட்படுத்தியிருக்கின்றது.

இன்றைய பொருளாதார சமுதாயச் சூழல் இயற்கை யோடிணையும், பல வாழ்க்கைக் கூறுகளையும் பிரித்து, அறிவியல் சாதனைகளாக்கும் ஓர் அந்நியத் தன்மையில் மனிதர் களைச் சிக்க வைத்திருக்கிறது. பொருளாதார மேம்பாடு என்பது மனித மனங்களில் தேவைகளை மிகுதிப்படுத்தும் பண வசதி என்ப தாகவே அறிவுறுத்துகிறது. பெண்மை என்ற இயல்புக்குள் பூட்டி வைக்கப்பட்டிருந்த உண்மைகள், நுகர் பொருள், விளம்பர உலகில் வாரி இறைக்கப்பட்டிருக்கின்றன. ஐந்து வயசுப் பையன், தனக்குக் கிடைக்கும் காசைச் சேமித்து வைத்துத் தாயின் பிறந்த நாளுக்குப் பரிசு வழங்குவதைத் தாய் பெருமையுடன் கூறிக் கொள்கிறாள். பரிசுப் பொருள் இதுதான். மாதவிலக்கு நாட்களில் வேலைக்குச் செல்லும் தாய்க்குத் தேவைப்படும் பஞ்சுக்கவசம்! குழந்தைகள் உலகை அறியப் புகும் பருவத்திலேயே எல்லா ரகசியங்களையும் உணர்த்திவிட வேண்டும் என்ற கல்வி முறையின் ஒரு கூறுதான் இது.

சிறுவர்களும், சிறுமியரும் சேர்ந்து படிக்கும் பள்ளிகளில் ஏதேதோ பேசிக் கொள்கிறார்கள். இன்னமும் சாதி, மத மரபுகளைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருக்கும் குடும்பங்களில் தன் சிறிய மகனும் மகளும் எந்த மாதிரியான அறிவு பெற்றிருக்கிறார்கள் என்று கண்டு கொள்வதில்லை. அதுவும் வேலைக்குச் செல்லும் தாய், பொறுப்பில்லாத தந்தை, ஒரே மகள் என்ற குடும்பத்தில் மகள் பதினொன்றாகுமுன் பூப்பெய்தி விடுகிறாள் என்றால், தாய், இதை எதிர்பார்த்திராததால் ‘சனியன், இதுக்கு இப்ப என்ன அவசரம்?’ என்று சிடுசிடுப்பைக் காட்டுவது நிகழ்கிறது.

உடலுழைப்பிலும், அறியாமையிலும், உழலும் குடும்பங்களில் பெண் புதிய தலைமுறைப் பெண்ணாகக் கல்வி பயிலப் போனாலும், வேறு மாதிரியான சிக்கல்கள் நேரும். இந்த நிகழ்ச்சியை தம்பட்டம் கொட்டுவது போல் விளம்பரப்படுத்தி, மஞ்சள் நீர், துணிமணி, விருந்து, மொய்ப்பணம் என்றெல்லாம் அந்தப் பெண் உடலுறவுக்கு, திருமணத்துக்குத் தகுதியாகிவிட்டதை அறிவிக்கிறார்கள். படிப்பின் மீதிருந்த கவனம் திசைதிருப்பப் படுகிறது. அவளை அப்போதே கடன் வாங்கியேனும் ஒரு மாப்பிள்ளைக்குக் கட்டி வைத்தாலே ‘குடும்ப மானம்’ காக்கப் படும் என்ற நெருக்குதலில் பெற்றோர் செயல்படுகிறார்கள்.

அலுவலகப் பதவியில் மேலிடத்தைப் பிடிக்க வேண்டும் என்ற உந்துதலில் வீட்டுப் பொறுப்பைச் சுமப்பது வேலை செய்யும் பெண்ணுக்கு இன்றியமையாத கடமையாகத் தோன்றுவதில்லை.

கருத்தடை என்ற நோக்கில் அவன் ஒத்துழைக்க மறுக்கிறான். ஒவ்வொரு மாதமும் விலக்கு நாட்கள் தள்ளிப்போகும்போது, இவள் அதிகமான மன அழுத்தத்துக்கு உள்ளாகிறாள். மாத விலக்கை ஒழுங்குபடுத்தும் சிகிச்சை பெற மருத்துவ இல்லம் போய்வருகிறாள். மாதவிலக்கை ஒழுங்கு செய்யும் சிகிச்சை, ஒரு வகையில் கருக்கலைப்பு போன்றதுதான் என்று மருத்துவர் ஒருவர் கருத்துரைத்தார். பெண்களின் இத்தகைய சிக்கல்களைப் பற்றிய புரிந்துணர்வுகள் பெண் மருத்துவர்களிடையே ஒத்தவையாக இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய வாழ்க்கைச் சிக்கலில் புகுந்து புறப்படும் தாய், பதினோரு வயது நிரம்புமுன் பூப்பெய்திய பெண் படிப்பில் கெட்டிக்காரியாகத் திகழ்வதை மட்டும் கண்டு மனநிறைவு

கொள்கிறாள். அவள் ஒரு தொழில் முறைக் கல்வி முடித்ததும் சாதி மரபில், வசதியுள்ள பையனைப் பார்த்து (சாதகம், சோதிடம் உட்பட) கட்டி வைக்க எண்ணியிருக்கிறாள். ஆனால், அந்தப் பெண் சாதி, குல மரபில்லாத, பொருளாதார வசதியில்லாத ஒருவனைக் (காதலித்து) கைப்பிடித்து வீட்டை விட்டு வெளி யேறும் வரையிலும் கூட இந்தப் பெற்றோர் அவளை, அவளது தேவைகளைப் புரிந்து கொள்வதில்லை.

ஒரு பள்ளி ஆசிரியை இந்த நிலையில், பன்னிரண்டு வயது மாணவி அறிமுகமில்லாத ஓர் ஆணுடன் பேசிக்கொண்டு நிற்பதைப் பார்த்து விட்டதும், அந்த மாணவியைக் கூப்பிட்டு, பலர் முன்னிலையில் பிரம்பால் அடிக்கிறாள். ''எதற்கடி சீருடை? இதைக் கழற்றிவிட்டு நீ போ! என் பள்ளிக்குக் கெட்ட பெயர் வாங்கித் தராதே!'' என்று சீறுகிறாள். அலுவலகங்களில் யார் யார் எந்தெந்த ஆண் அதிகாரிகளைத் தன் வசம் வைத்திருக்கிறாள் என்பன போன்ற சக ஊழியர் மீது கருப்புச்சாயம் பூசும் வம்புகளில் தன் இயலாமைகளை மறைத்துக்கொள்கிறாள். முறையில்லாத கருக்கலைப்புகள், முறையற்ற உறவுகளுக்குத் தீர்வுகளாகின்றன. ஆண் குழந்தைகள் ஆறேழு வயதில் 'ஐ லவ் யூ' சொல்வது போல், பெண் குழந்தைகள் முந்துவதில்லை. அவர்களுக்கும் 'காதல்' என்பது தொலைக்காட்சி, சினிமா வாயிலாகத் தெரிந்துதானிருக்கிறது.

அவர்கள் தாமரை இலைத் துளிகள் அல்ல. கண்ணீர்த் துளிகளாகவே வாழ்க்கை அறிமுகமாகிறது. நமது குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரசார வாசகம் 'தாமதமான திருமணம், பொறுப்புள்ள தாய்மை' என்று கொட்டை எழுத்துகளில் காணப்படுகிறது. தாமதமான திருமணம் என்பது கீழ்மட்டங்களில் அறவே கடைப்பிடிக்க முடியாத கோட்பாடு; பொறுப்பற்ற தாய்மையே கிடையாது, பொறுப்பற்ற தந்தைதான் மெய்!

## 14. காபி- டீ (காப்பர் டி)

புறநகர்ப் பகுதியில் நெருக்கடி மிகுந்த வணிக வீதியில் அமைந்த ஒரு தனியார் மருத்துவமனை. தலைமை மருத்துவர்

(ஆண்) நிறுவனர், ஒரு வயதான மூதாட்டிக்கு இரத்த அழுத்தம் பார்க்கிறார். அப்போது, வெள்ளைச் சேலை அணிந்த இரு பணிப் பெண்கள் வாயிலில் தயங்கியவாறு நிற்கின்றனர். மூதாட்டியின் உடல்நிலையைப் பரிசோதிக்கும் வண்ணம் அவளிடம் வினாத் தொடுக்கிறார். பசி, உறக்கம் பற்றிய வினாக்கள். அப்போதுதான் தற்செயலாக நிமிர்ந்தவர், பணிப்பெண்கள் தயங்கி நிற்பதைக் கவனித்து, என்ன? என்று கேட்கிறார். அவர்கள் விடை இறுக்கிறார்கள். 'காபி, டீ' என்பது போல் மெல்லிய குரலொலி. பிற்பகல் 3.30 மணி நேரம். மருத்துவமனையின் ஒரு பகுதியில் சிறிய கேண்டீன் உண்டு. காபி, டீ மட்டும் கிடைக்கும். ''கேண்டின்ல காபி - டீ இல்லையா? வெளியில் போய் வாங்கி வரச் சொல்லுங்களேன்?''

அவர்கள் இன்னமும் நாணமடைந்து தலைகுனிந்து, கைகளால் வாயை மூடிக்கொண்டு சிரிப்பதுபோல் தெரிகிறது.

மருத்துவருக்குக் கோபம் வருகிறது. ''என்னம்மா? பணம் வேண்டுமா? போங்க, வெளிலேர்ந்து வாங்கிட்டு வரச் சொல்லுங்க?'' என்று ஒரு நூறு ரூபாய் நோட்டைப் போடுகிறார், மேசை மீது.

ஒருத்தி துணிவுடன் முன் வந்து ''இல்ல டாக்டர் 'காப்பர் டி''' என்று விள்ளுகிறாள்.

மருத்துவர் தலையில் அடித்துக் கொள்கிறார். சாவியை எடுத்து அருகில் உள்ள அலமாரி இழுப்பறையைத் திறந்து அந்தச் சாதனங்கள் அடங்கிய உறையை அவளிடம் கொடுக்கிறார். இது 2001 இல் நிகழ்ந்த சம்பவம். 'காப்பர் டி' என்பது பெண்ணின் கருப்பைக்குள் செலுத்தும் ஒரு கருத்தடை சாதனம். கருப்பைக்குள் இதுபோல் ஒரு சாதனம் செலுத்தப்பட்டால், விந்தணுவும், சினை முட்டையும் சேர்ந்தாலும், கருப்பை ஏற்கெனவே ஒன்றை ஏற்றிருப்பதால், ஏற்றுக் கொள்ளாது என்ற அடிப்படையில் கருப்பைக்குள் செலுத்தப்படும். இத்தகைய சாதனங்கள் பயன் படுத்தப்படலாம் என்று கண்டனர்.

மிகப் பழைய காலத்தில், அராபியர்களும் துருக்கியர்களும் ஒட்டகங்களில் வெவ்வேறு ஊர்களில் நீண்ட நெடும் பயணம் செய்ய வேண்டியிருந்தது. இடைக்காலங்களில் வெவ்வேறு

ஊர்களில் தங்குகையில், ஒட்டகங்கள் கருவுற்றுவிடும். இதனால் பயணம் தடைப்படும். இதற்காக பெண் ஒட்டகத்தின் கருப் பையில் கூழாங்கற்களைச் செலுத்தி விடுவார்கள். பதினொன்றாம் நூற்றாண்டில், இஸ்லாமியூ அறிவியலாளரான அவிசென்னா, இதே முறையை மனிதப் பெண்களிடமும் கையாண்டால் கருவுறு வதைத் தடுக்கலாம் என்று கண்டார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கருத்தரியாமை என்ற குறையைத் தவிர்க்க இதுபோன்ற சாதனத்தைப் பயன்படுத்தி, கருப்பை வாயைச் சரியாகப் பொருத்திவைக்க கருவுறுவதற்கு வாய்ப்பான சிகிச்சை செய்யப்பட்டு வந்தது. ஆனால், இது போன்ற சாதனங்கள் கருத்தடைக்கும் பயன்படலாம் என்று கண்டார்கள். ஒரு காம்பும் மூடியும் போன்ற சாதனம் உருவாயிற்று. யோனிக்குழாய் கருவாயைச் சென்றடையும் இடத்தில், கருப்பையின் அடிப்பாகத்தில் காம்புடன் கருப் பாதையை அடைக்கும் மூடிபோல் பொருந்தும் சாதனங்கள் பல்வேறு திருத்தங்களுடன் வடிவமைக்கப்பட்டு, பெண்களின் கருவாயில் பரிசோதனை செய்யப்பட்டன. இது, மரம், கண்ணாடி, வெள்ளி, தங்கம், தந்தம் போன்ற சாதனங்கள் கொண்டு வடிவமைக்கப்பட்டன. (1902) இருபதாம்நூற்றாண்டின் துவக்கத் தில் ஒரு ஜெர்மானிய மருத்துவர், எழுநூறு பெண்களைத் தேர்ந் தெடுத்து அவரவர்க்குத் தேவையான வடிவங்களில் செலுத்தி, கருத்தடை சாதனப் பரிசோதனை மேற்கொண்டார். இவற்றில் சில கருக்கலைப்புக்கும் பயன்பட்டன. ஆனாலும், இவை, கடுமையான நச்சுத் தொற்றுப் பாதிப்பை விளைவித்து, மருத்துவருக்குக் கெட்ட பெயர் கொண்டு வந்தன. (இதில் எத்தனை பெண்கள் பலியாயினரோ?)

பின்னர், 1909 இல் இன்னொரு ஜெர்மானிய மருத்துவர், பட்டுப்புழு நரம்பினால் ஆன வளைய சாதனத்தைப் பயன் படுத்தினார். இதுவே இன்னும் சில மாறுதல்களுடன், பட்டுப்புழு நரம்பு, மெல்லிய வெள்ளி இழைகளால் இணைக்கப்பட்டு, நல்ல பயனுடைய சாதனமாகக் கண்டார்கள். 1934ஆம் ஆண்டில் 'ஒட்டா' என்ற ஜப்பானிய மருத்துவர் தங்கத்தாலோ, பொன் முலாம் பூசிய வெள்ளியாலோ செய்யப்பட்ட ஒரு வளையம் தயாரித்தார். இந்தச் சிறு வளையத்தின் நடுவே ஒரு சிறு தகடு மூன்று ஆரங்களால் இணைக்கப்பட்டிருக்கும். ஆனால், தொடக்க

கால வரவேற்பும் ஆரவாரமும், தோன்றிய விரைவில் அமுங்கி, 1936 லேயே ஜப்பானிய ஐரோப்பிய அரசுகளாலே தடை செய்யப்பட்டன. ஏன்? கடுமையான நச்சுத் தொற்று விளைவுதான். பெண்ணின் கருப்பையும் பாதிக்கப்பட்டது. ஆனால், சில ஆண்டுகளுக்குப் பின்னர் 1959 இல் இதுபோன்ற வளையங்கள் பிளாஸ்டிக் போன்ற நவீனப் பொருட்கள் கொண்டு தயாரிக்கப்பட்டன. இது தொடர்பான ஆராய்ச்சிகள் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் தொடர்ந்து நடைபெற்றன. உலகளாவிய மாநாடுகளில் பல பல மருத்துவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் இந்தக் கருத்தடைச் சாதனங்களின் பயன்பாடு, எளிமையாகவும், மிக நம்பகத் தன்மையுடையதாகவும் இருக்கவேண்டும் என்ற இலக்கில் அமைந்திருந்தன.

லூப் என்ற சாதனம்தான் இந்தியாவில் முதன் முதலாக அறிமுகமான கருத்தடைச் சாதனம். இது பாலிதிலீன் என்ற நவீனமான பொருளால் வடிவமைக்கப்பட்ட வளையம். இது முதலில் பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்டாலும், ஒரு சிறு குழாய் மூலம் உள்ளே செலுத்தலாம். ஏனெனில் அந்தச் சாதனம் தேவைக் கேற்ப ஒடுக்கிக்கொண்டு சென்று, பின்னர் பொருந்தும் வடிவில் அமையும். அமெரிக்க மருத்துவரான லிப்பே என்பவர் வடிவ மைத்த இந்த லூப் சாதனம், பொதுவாக எத்துணை மாறுதல் களுக்கும் மேம்பாட்டுக்கும் உட்படுத்தப்பட்டாலும் கருப் பைக்குள் புகுத்தும் சாதனம் ‘லூப்’ என்றே குறிப்பிடப்படுகிறது.

முன்பு குறிப்பிடப்பட்ட காப்பர் டி- இந்த சாதனத்தின் ஒரு திருத்தம் பெற்ற வடிவுதான். இதை வைத்துக்கொண்ட பெண்ணால் இதை உணர முடியும். அதன் நுனியில் ஒரு நூல் இணைக்கப்பட்டு தொங்கும். எளிதில் அகற்றிவிடலாம். பொதுவாக, இந்தச் சாதனங்கள் தொடக்கக் காலத்தில் அதிக ரத்தப்போக்குடன் வெளியேற்றப்படுபவையாகவே இருந்தன. ஒவ்வொரு சாதனமும், நூறு நூறு மகளிரின் கருப்பைகளை, யோனிக் குழாய்களைச் சோதனைக்களங்களாக்கிய கொடுமை, ஏனென்று கேட்பவர் இல்லாமலே நிகழ்ந்துவந்திருக்கிறது. கண்களில் தூசி விழுந்தால், கண் சிவக்கிறது; எரிச்சல் உண்டாகிறது. தூசி வெளியேற்றப்பட வேண்டும் என்பதன் அறிகுறி. உள்ளங் காலில் முள் தைத்தால் உறுத்தல், சீழ் வைத்தல் என்பது முள்ளை வெளியேற்ற சமிக்ஞைகள் வந்து மனிதரை இயங்கச் செய்கின்றன.

மகளிரின் உரிமைகளைப் பறிக்க முதல் படியாக அவள் உடலை அவளுக்கே அந்நியமாக்கித் தீர்த்த ஆணாதிக்கம், இருபதாம் நூற்றாண்டு தொடங்குவதற்கு முன்பே, அவளை அடிமையாக்கி, அறிவுசார் ஆற்றலையும் ஒடுக்கி, அவளை, மிதித்துக்கொண்டு அறிவியல் வளர்ச்சி என்று மார் தட்ட முனைந்துவிட்டது.

மால்தஸ், அடித்தள மக்கள் சோற்றுக்கில்லாமல் பெருகுவதால், உணவுப்பற்றாக்குறை சமுதாயத்தை அழிக்கும் என்று கட்டுப் பாட்டை வலியுறுத்தினார். ஆனால், அவர் பெண்ணை மட்டும் பலிகடாவாக்கவில்லை. தாமதமான திருமணம்; புலனடக்கம். இவை அகிம்சை நெறியின் கூறுகள். தேவைகளும் சுகபோக வசதிகளும் மட்டுமே அறிவியல் வளர்ச்சியின் அறிகுறிகளாக ஓங்கிய வேகத்தில் மக்கள் தொகைக் கட்டுப்பாடு என்பது, பலமுள்ளவளை அபலையாக்கி அவளை வெறும் போகப் பொருளாக்கித் தீர்க்க முற்பட்டது. அந்த இலக்கு இந்நாள் இயற்கையையே அழித்து மீட்சியில்லா நெருக்கடிக்குச் சமுதாயத்தை உட்படுத்தி இருக்கிறது.

லூப் என்ற பெயரில் பல்வேறு தேவைக்கேற்ற மாறுதல் களுடன் பொருத்தும் இந்தக் கருத்தடைச் சாதனத்தை உலகில் இந்நாள் பல கோடிப் பெண்கள் கருப்பைகளில் ஏற்றிருக்கின்றனர். விழுந்துவிட்ட பல்லுக்குச் செயற்கைப் பல் வைத்துக் கொள்வது முதல் ஒவ்வாமையைத் தோற்றுவிக்கும். கண்பார்வைக் குறைபாட்டுக்கு ‘கான்டாக்ட் லென்ஸ்’ என்ற சிறு தகடை விழிகளில் பொருத்திக் கொள்கின்றனர். மூக்குக் கண்ணாடி வேண்டாம். எல்லாமே முதலில் வெளித்தள்ள இயற்கை முயலும். பின்னர் அதுவே பழக்கமாகிவிடும். அதுபோல் திருத்தங்கள் பல செய்யப்பட்டு எளிமையாகக் கையாளும் வகையில், கருப்பைக்குள் செலுத்தப்படும் சாதனங்கள் வந்திருக்கின்றன.

இந்தச் சாதனங்கள், உதாரணமாக ‘லிப்பேலூப்’ என்று அறியப்பட்ட சாதனம் 1960களின் பிற்பகுதிகளில் மக்கள் தொகைக் கட்டுப்பாடு என்பது அரசின் வளர்ச்சித் திட்டங்களில் முதலிடம் பெற்றபோது, இந்திய மகளிருக்கு இது செலுத்தப் பட்டது. கிராமங்களில் ஒரு கடுகளவும் விழிப்புணர்வு இல்லாத மக்களிடையே மகளிரை அரசு மருத்துவமனைக்கு வரச் செய்து

ஒவ்வொரு மாதத்துக்கும், ஓர் இலக்கு வைத்து இத்தனை பேருக்கு இந்தக் கருப்பை நுழைப்புத் தடுப்புச் சாதனம் புகுத்தும் விவேகமற்ற செயல் மேற்கொள்ளப்பட்டது. (இடம், கோவா. அப்போது அது மாநிலமாக இருக்கவில்லை; மைய அரசுக்குட் பட்ட பகுதி. போர்த்துக்கீசியப் பிடியில் இருந்து விடுபட்டு மகாராஷ்டிரத்துக்கும், கர்நாடகத்துக்கும் இடையேயான மோதலிலும், பரிசயமில்லாத கட்சி அரசியல்களிலும், பட்டுக் கொள்ளாத மேல் மக்களிடமும் தவித்த கிராம மக்கள், கத்தோலிக்க கிறிஸ்தவர்; இந்துக்கள் என்ற பிரிவுகள் தெரியாத எளியர்) இவர்கள் தாம் 'லூப்' சோதனைகளுக்கு ஆளானார்கள். அந் நாட்களில் சுகாதார மையங்கள் மருத்துவமனைகள் மிகக் குறைவு. ஏழைப் பெண்கள் இரத்தப்போக்கில் நலிந்தும், லூப் வெளி யேற்றப்பட்டதுமான பத்திரிகைச் செய்திகள் அதிகமாக வெளி வந்தன. லூப் சாதனம் வெளியேற, அந்தப் பெண் கருவுற்ற செய்தியும் வந்தது. பெண் பிறந்தால் லூபிகா என்றும், ஆண் பிறந்தால் லூபா என்றும் பெயர் வைக்கலாம் என்றும் எள்ளல் வார்த்தைகள் அடிபட்டன. இதற்குப் பிறகு இந்தச் சாதனம் தமிழ் நாட்டில் கூடச் செல்வாக்குப் பெறவில்லை. மிகப் பெரும்பான்மை யான மக்கள், கருத்தடை என்ற சொல்லையே அமங்கலமாகக் கருதியதுதான் முதற் காரணம்.

சுதந்திரத்துக்கு முன் உலகப்போர் நடைபெற்ற காலத்திலும் பின்னும் வேலை வாய்ப்புக்கான கல்வி இல்லாமை, போரின் விளைவால் ஏற்பட்ட அரிசி முதலான வாழ்வாதாரப் பொருட் களுக்கான பஞ்சம், சுதந்திரக் கிளர்ச்சி, பின் தொடர்ந்த அரசியல் நிலவரங்கள் இருந்தாலும், குழந்தைப் பேறுகளைத் தடுக்கலாம் என்ற எண்ணத்துக்கே இடம்கொடாமல் அடுத்தடுத்து குழந்தை களைப் பெற்றார்கள். பேறுகால மரணங்கள், சிசு மரணங்கள் மிகச் சாதாரணம். மேல்நாட்டு நாகரிக மோக விளைவுகளால் ஆயிரங்களில் ஓரிரு குடும்பங்கள், களிம்பு போன்ற கருத்தடை சாதன இர்கசிய அறிக்கைகளை அறிந்திருந்தாலும், பயன்படுத்து வது குடும்பநெறிக்கு ஒவ்வாதது என்ற அற உணர்வில் ஒடுங்கினார்கள். ஏனெனில் கருத்தடை, கருக்கலைப்புகள் எல்லாமே நெறியற்ற பெண்கள் ரகசியமாகக் கையாளும் செயல் களாகவே கருதப்பட்டன. மேலும் புதிய பொருளாதாரத் திட்டங் களின் விளைவாக இடம் பெயர்தலில், கிராம மரபுக் கட்டுக்

கோப்புகள் குலைந்தன. மேலைநாடுகளில் இளம்பருவ ஈர்ப்புகளின் ஒரு பெருக்கமே இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட மரபுக் குலைவுகளின் விளைவு என்று கருதப் பட்டது. பெண்கள் இந்தச் சூழலிலும், தனிக்குடித்தனம் என்ற தாராளமயங்கள் தோன்றின. இங்கோ, கூட்டுக் குடும்பங்கள் உடைந்தன. பள்ளிக் கல்வி முடித்து, ஆசிரியர் பயிற்சிக்கோ, செவிலியர் பயிற்சிக்கோ செல்வது சாதாரணமாகக் கருதப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே அரசு மருத்துவமனைகளில் குடும்ப நலம், குடும்பக் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கான பிரசார வாசகங்கள் எழுதப்பட்டன. அந்நாட்களில் வழக்கமான ஆசிரியர் பயிற்சிக்கு மாறாக, கிராம சேவிகா, முக்ய சேவிகா என்ற பெயரில் புதிய ஐந்தாண்டுத் திட்ட வளர்ச்சிப்பிரிவில் பல இளம் பெண்கள் பயிற்சி பெற்றனர். இவர்கள் ஆங்காங்கு கிராமங்களில் மண்டல வளர்ச்சித் திட்டப் பிரிவில் கிராமங்களில் விழிப்புணர்வைக் கொண்டுவர, மக்களிடையே சிறுகுடும்ப யோசனைகளைப் பரப்ப நியமிக்கப்பட்டனர். அரசு ஆதரவுடன் மகளிர்நலத்துறை சார்ந்த பெண் அதிகாரிகள் ஜீப் வாகனங்களில் பயணித்துப் பார்வையிடு வார்கள். மகளிர் சங்கங்களை இந்த சேவிகைகள் உருவாக்குவதோ, மகளிருக்குச் சிறுகுடும்ப உணர்வோடு கட்டுப்பாட்டு முறைகளை விளக்குவதோ, இயலாத பணிகள் எனலாம்.

இந்த இளம் பெண் பயிற்சி பெற்றும், தனியாக ஒரு கிராமத்தில் சென்று யாரிடம் பேசுவாள்? அதுவும் பரிசயமில்லாத மலை மாவட்டத்திலோ, பழங்குடி பிரதேசத்திலோ எதைப் பேசுவாள்? கிராமப் பெரியவர்கள், பெண்கள் அனுபவம் மிகுந்தவர்கள்; முதியவர்கள். எங்கும் யாரிடமும் சென்று பிரசாரம் செய்ய முடியாது. சுவரொட்டி பிரசாரங்களைப் படிக்கத் தெரியாது. இந்த இளம் பெண்ணே நாணி, எதுவும் பேசமுடியாமல், கிராமங்களுக்கு விஜயம் செய்ததாகப் பொய்க்கணக்குக் காட்டத் தான் முடிந்தது. தையல் இயந்திரங்கள், கம்பளி நூல்கள், பால் பவுடர் எல்லாம் ஆங்காங்கு மேலிடத்தார் பயன்படுத்தப் போயின.

கணக்கில் வராத ஊழலுக்கு முதல் வித்துகள் இந்தத் திட்டங்களில்தான் இடம் பெற்றன. காந்திய அற நெறியில் நின்ற பெண் அமைச்சர்கள் தாம் அந்நாட்களில் 'சுகாதார' அமைச்சர் களாக இருந்தார்கள். 'ஒன்று விதைத்தால் ஒன்பது விளையட்டும்; சந்ததி பெருகட்டும்' என்று மண்ணின் விளைவுக்கும் மக்கள்

பெருகவும் வாழ்த்துவதையே மரபாகக் கொண்ட மக்களை எப்படி மாற்ற முடியும்? ஒருபுறம் காடுகள் அழிந்தன. நதிகள் தூய்மை இழந்தன. காலம் காலமாக அமைதியுடன் வாழ்ந்த விலங்கினங்கள், பறவையினங்கள், ஊர்வன, பூச்சி, புழுக்கள் போன்ற கோடானு கோடி உயிரினங்கள், பாறைகள் பிளக்கப்பட்டுப் பேரோசைகளில் அதிர்ந்து அல்லோலகல்லோலமாயின. மண் விளைவில் வாழ்வு கண்ட மக்கள் வேரோடு பெயர்ந்து பணம், புழுதி, பேராசை போன்ற மாறுபட்ட சூழலில் நிலைகுலைய உழைப்பை நல்கினார்கள்.

சுதந்திரம் பெற்ற பின் நாடு மத அடிப்படையில் துண்டாடப் பட்டபோது, எத்தனை எத்தனை பெண்கள் சொல் லொணாத கொடுமைகளுக்கு ஆளாயினர். இந்த மதச்சார்பின்மை அரசியலிலும் எந்த மதமேனும் பெண் கொடுமைகளை ஒரு மனித உரிமைக் கண்ணோட்டத்துடன் அணுகியதுண்டா? எதிர்த் துக் குரல் கொடுத்த இளம் பெண்ணின் தலைக்கு விலை; தண் டனை பெறுகிறாள். மதச்சார்பின்மை என்று மார்தட்டும் அண்டை நாடு அவளுக்கு அடைக்கலம் கொடுக்க அஞ்சும், அவள் நூலைத் தடை செய்யும் நடவடிக்கைகளில்தான் தன் நடுநிலைமையை வெளிப்படுத்திக் கொள்கிறது. இன்னும் நினைக்கவே சில்லிட்டுப் போகும் வன்முறைகள் பெண் உடலில் அரங்கேற்றப்படுகின்றன. நியாயங்கள் வழக்குமன்றக் கண்துடைப்பு சாட்சிக் கூண்டுகளில் கழுத்து நெறிக்கப்படுகின்றன. மக்களின் வரிப்பணம் இத்தகைய வழக்குகளில் கோடி கோடியாக விழுங்கப்படுகின்றன. இத்தகைய பின்னணிகள் அன்றிலிருந்து இன்றுவரை மாறவில்லை. எனவே அறிவுசார் முன்னேற்றங்களில் தன் திறமைகளைப் பெண் விளக்கினாலும், ஆணாதிக்க நீரோட்டத்தில் கரைந்துபோகிறாள்.

## 15. மரபுகளில் சிக்கிய மருத்துவக் கட்டுப்பாடுகள்

**1970**களில் ஒரு சித்திரம் - புதிதாக உருவாகும் புறநகர்ப் பகுதி. புதிய தனி வீடுகள். சுற்றுச் சுவர்கள், தோட்டம் என்று நீர்ப்பஞ்சம் அதிகமாக உணரப்படாமல் ஓய்வு பெற்ற குடும்பத்

தலைவர்கள் ஆர்வமாக இருந்த காலம். அந்தப் பகுதிக்கு அருகில் இருந்த கிராமத்தில் இருந்து ஒருவன் தோட்டவேலை தேடிவருகிறான். தோட்ட வேலைக் கென்று மாத ஊதியம் கொடுத்து வைத்துக் கொள்ளும் உயர்படிக் குடும்பக்காரர் அங்கு குடியேறியிருக்கவில்லை. எல்லோருமே இடைநிலை வருக்கக்காரர்கள்தாம். 'வேலை இருக்குங்களா?' என்று வருபவன் கூழையாக, அரையில் ஓர் அழுக்கு வேட்டியும், ஒரு பழைய சட்டையும் அணிந்து தலையில் ஓர் அழுக்குத் துண்டை முண்டாசாகக் கட்டி இருக்கிறான். தோளில் களைக் கொட்டை விடச் சிறிது பெரிய அளவிலான மண்வெட்டி, வேலிகளில் படரவிட்டிருந்த முட்செடி தாவரங்களைச் சீரமைக்க வோ, பாதாள சாக்கடை இல்லாத வீடுகளில் புழங்கும் நீர்க்கால்வாய்களை, வாழை மரங்களுக்கோ, வேறு புதிய காய்கறிச் செடிகளுக்கோ திருப்பவோ, புதிய கன்றுகளை நடுவதற்கான குழி வெட்டவோ வேலை கிடைக்கும். நாள் முழுவதுக்குமான வேலை கிடைக்காது. இரண்டு ரூபாயிலிருந்து ஐந்து ரூபாய்க்கு மேல் வருமானம் கிடைக்காது. அநேகமாக வேலை கிடைத்த வீடுகளில் காபி, மீதமான சோறு, தண்ணீர் கிடைக்கும்.

அந்தப் பகுதியில் அவன் இவ்வாறு வேலை தேடி எல்லா நாட்களும் வருவான். அந்தப் பகுதியில் கோயில்கள், பள்ளிக் கூடங்கள் தவிர, புதிய தாய் - சேய் மருத்துவமனையும் இடம் பெற்றிருக்கிறது. ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நல அமைப்பின் ஆதரவுடன் சிறார் இல்லம், காப்பகம் கூட இயங்கி வந்தது. அந்தச் சுவர்களில் குடும்ப நல திட்ட வாசகங்கள், சிவப்பு முக் கோணச் சின்னம். வயிற்றுப் போக்கின் காரணமாகக் குழந்தைகள் இறப்பதைத் தடுக்க, சர்க்கரை - உப்புக் கரைசலைத் தயாரித்துக் கொடுக்கும் முறை, தடுப்பூசிகளின் அவசியம் போன்ற அனைத்து அறிவுரைகளும் படவிளக்கங்களுடன் தீட்டப்பட்டிருந்தன. அப்பகுதிக்குள் யார் நுழைந்தாலும் அவர்களைக் கவரும் கட்டிடப் பகுதி அது.

இந்தத் தோட்டக் கூலிக்காரனும் இதே வழியில் தான் வருவான். அந்த மருத்துவமனைக்குப் புதிதாக வந்த மருத்துவப் பெண்மணி, தன் வாடகைவீட்டில், வேலி கட்ட அவனை அழைத்தாள். அந்த அம்மை எளிமையானவர், சமூக உணர்வு மிகுந்தவர். குடும்ப நலத்திட்டத்தில் இவன் எந்தளவு விழிப்புணர்வு பெற்றிருக்

கிறான் என்று அறிய ஆர்வம் கொண்டார். 'எங்கிருந்தப்பா வரே?'

''இங்கதாங்க.. நன்மங்கலம் பக்கம்.''

''விவசாயம் பண்ணிட்டிருந்தியா?''

''ஆமாம்மா, கூலி உழவு தான். கடம் அதிகமாயி, ஒரு மாட்ட வித்திட்டே. இப்பக்கூட ஒரு அஞ்சு நூறு இருந்தா, உழவுக்குப் போவே..''

''ஆமா, நிதம் இப்படி வந்துதா வேலையா உனுக்கு?''

''அ...ஆமாங்க.. இங்க வருவே. மாடம்பாக்கம் சேலூர் பக்கம் போவே. எதுனாலும் வேல கெடக்கும்.''

'... பாவம்.. ' என்று மருத்துவர் மனதில் எண்ணிக்கொண்டார்.

''உங்கப்பா ம்மா வேலை செய்யறவங்கதானா? உனக்கு அக்கா தங்கச்சி இருக்காங்களா?''

''அவங்கல்லா இங்க இல்ல.. செய்யாறு பக்கம்..''

''அப்ப.. நீ மட்டும்தானிருக்கியா?''

''ஏங்க? எனக்குக் கலியாணமாயிட்டுதுல்ல?''

மருத்துவர் அவன் திருமணமாகாத இளைஞனாக இருப்பான் என்று எண்ணினார்.

உடனே தன் விசாரணைகளைத் துவங்கினார்.

''பிள்ளைங்க இருக்கா?''

''ஓ இருக்குங்க! ரெண்டு பொம்புளப்புள்ள. ரெண்டு ஆம்புளப் புள்ள. இப்பவும் கூட முழுவாம இருக்குங்க.''

மருத்துவர் அதிர்ந்தாற்போல் பார்த்தார்.

அவனுக்கு அவர் குடும்பக் கட்டுப்பாட்டு மருத்துவம் செய்ய வந்திருக்கும் புதிய தாய் சேய் நல மருத்துவமனை மருத்துவர் என்று தெரியாது. தெரிந்திருந்தால், அந்த வீட்டுக்கு வேலை செய்ய வந்திருப்பானோ என்னமோ?

''ஏம்பா? குடும்பத்துக்கு இந்த வருமானம் போதுமா? உம் புள்ளங்க ஸ்கூலுக்குப் போறாங்களா?''

''பத்தாது தா, இன்னா செய்ய? எம் பொஞ்சாதி, எங்கனாலும் கயனி வேலய்க்குப் போவும். மொலியார்வூட்ட பெரி பொண்ணு வேல செய்யிது. மூத்தபய துடிப்பாகிறா. அவனதா இஸ்கோல்ல போடணும்.''

மருத்துவர் அடுத்த அம்பை விடுகிறார்.

''ஏம்பா, வருமானமே நிச்சயமில்ல. மூன்று புள்ளங்களுக்கு மேல வேணாம்னு அரசு சொல்லுது... இத்தோட நிறுத்திக்கிலாம் இல்ல?''

அவன் வேலி கட்டலில் இருந்து நிமிர்ந்து பார்க்கிறான். ''ஏம்மா? சருக்காரு ஆயிரம் சொல்லுது; புள்ள வேணான்னு சொல்ல அவங்க ஆரு? ஆண்டவங் கொடுக்கிறாரு. பெத்துக்கறம்.''

அவன் முகம் கோபத்தால் சிவந்ததை நோக்கிவிட்டு, இவர் அவனை அமைதிப்படுத்தி 'கவுன்சிலிங்'கைத் துவக்குகிறார்.

''அது சரிதா, நீ சொல்றது சரி. ஒத்துக்கிற. புள்ளங்களோ பொண்சாதியோ பட்டினி கிடந்தா நல்லாருக்குமா? விலைவாசி எப்படி உசந்து போச்சு பாரு! குடும்பம் அளவோடு இருந்தா, நல்லா சாப்பாடு போட, துணிமணி எடுக்க, நல்லா படிக்க வைக்க.. வசதி பாரு?''

''வசதி என்னாங்க, பொல்லாத வசதி? ஆண்டவனுக்குத் தெரியாதா? ஆம்புளப்புள்ள எத்தினி இருந்தாலும் நெல்லதா. வயிசு காலத்துல கஞ்சு ஊத்தும்.''

''ஐயோ, அதச் சொல்லலப்பா.. ஆனா பாரு, நம்ம நாட்டுல, ஏற்கெனவே அறுபது எழுபது கோடின்னு போயிட்டிருக்கு. குழந்தைங்க ஆண்டவன் கொடுக்கிறான்னாலும் தேவைக்கு மேல இருந்தா, சிரமம் இல்லியா? ஆமா, நீங்க ஓட்டுப் போடுறீங்களா?''

''இட்டுகிணு போறாங்க. ராத்திரி வந்து சாமி படத்துல சத்தியம் வாங்கிட்டு இன்ன கட்சி - சின்னம்னு போடச் சொன்னாங்க. முழுசா பத்து பத்தா அஞ்சு கொடுத்தங்க. சரின்னு சத்தியம் பண்ணினம். எம்பொஞ்சாதிக்கும் எனக்கும் இன்னொரு கச்சி ஆளு வந்தானுவ. பாஞ்சும், பாஞ்சும் முப்பது குடுத்தாங்க. வாங்கிக்கிட்டம். ஆனா, சத்தியம் பண்ண ஆளுக்குத்தாம் போட்டோம். பிரியாணி சோறு போடுறன்னாங்க. அதெல்லாம்

வாணான்னிட்டம். ஏம் பொய் சொல்லணும்?''

''நம்ம நாட்டுல சுதந்திரம் வந்து நம்மள நாமளே ஆட்சி பண்ணுற ராச்சியம் நடக்குது. வூடு மாதிரி தா நாடும். சாமி சத்தியம்னு நம்புற சாமி காப்பாத்தலியே? நீ மண் வெட்டியத் தூக்கிப் போட்டுட்டு வந்து ரெண்டு ரூபா கூலிக்கும் மூணு ரூபாய் கூலிக்கும் சாமி அலைய வைக்கலாமா? சாமியா வந்து காசு குடுக்கிறாரு?''

''இதெல்லாம் எனக்குப் பேசத் தெரியாதுங்க. சாமி குடுக்கிற புள்ளய வேணாம்னு சொல்லுறது பாவம். எம் பொஞ்சாதி அதுனால சருக்காரு ஆசுபத்திரிக்கே போவாது...''

''அப்ப? பேறுகாலத்துக்கு என்ன பண்ணும்?''

''அவ ஆத்தா வருவா. கேவுரு கடல, அது இதுன்னு கொண்டிட்டு வருவா. எல்லாப் புள்ளயும் அப்பிடித்தா...''

மருத்துவர் வாயடைத்து நிற்க வேண்டியதாயிற்று.

இருந்தாலும், இந்த ஒரு புள்ளியை எப்படியேனும் பிடிக்க வேண்டும் என்று முனைகிறார்.

''ஏம்ப்பா? எப்பவும் அப்பிடி இருக்குமா? முதல் புள்ளக்கி ரெண்டு வயசாகல. இது அஞ்சாம் பிரசவம். எதுக்கும் பாதுகாப்பா ஆசுபத்திரிக்குக் கூட்டிட்டுப் போலாமில்ல. இந்த ஆசுபத்திரில அல்லாம் நல்லாப் பாக்கிறாங்கப்பா? இதுக்குன்னே சருக்கார் பணம் செலவழிச்சிக் கட்டிருக்கு. டாக்டரம்மா, ரெண்டு பேர், நர்ஸ், ஆயா, எல்லாம் இருக்காங்க. உம் புள்ளங்களுக்குத் தடுப்பூசி போட்டீங்களா?''

''சருக்கார் ஆசுபத்திரி மோசமுங்க! எங்க ஊருல, ஒரு பொம்புள சருக்கார் ஆசுபத்திரின்னு போச்சுங்க. முதக்க ஒரு பொம்புளப் புள்ள, பின்னாடி ஒரு ஆம்புளப் புள்ள. மூணாவது பிரவசத் துக்குப் போச்சி. புள்ள பிறந்து, ஒரு மாசத்துல செத்துப்போச்சி. புள்ள கழுத்தே நிக்கல. அவளுவ எப்பிடியோ போட்டிழுத்து, புள்ளய சாகடிச்சிட்டாளுவ. அல்லாம் சொல்றாங்க. ஒரு பொம் புள, ஆம்புள ரெண்டும் இருந்திச்சின்னா, மூணாவத இப்பிடித்தா சாக அடிச்சிடுவாளுவன்னு. வாணாம் சாமி!'' இவனிடம் பேசிப் பயனில்லை என்று கண்ட மருத்துவர், வேலை முடிந்து கூலியைக் கொடுக்கையில், ஆயா, அவளுடைய ஒன்றரை வயது ஆண்

குழந்தையைக் கொண்டு வருகிறாள்.

''அம்மா? நம்ம புள்ளயா?''

''எங்க புள்ளதாம்பா...''

''அப்படீங்களா?'' என்று முகமலர்ச்சியுடன் குழந்தையைக் கை தொட்டு முத்தம் வைத்துக் கொள்கிறான்.

''நம்மையா எங்க வேலையாருக்காங்க?''

''அவங்க வெளிநாட்டில இருக்காங்க..'' என்று கூறிக்கொண்டு மருத்துவர் உள்ளே செல்கிறார்.

''இந்தாப்பா, இந்த விதையெல்லாம் ஓரமாப் போட்டு வை. அப்பப்ப வந்து பாத்திட்டுப் போ...''

''அவன் மகிழ்ச்சியுடன், சூரிய காந்தி விதையாம்மா? நல்லா வரும். நல்ல மண்ணு'' என்று ஆர்வமாக ஊன்றுகிறான்.

வாயில் மூலைக் கிணற்றிலிருந்து நீர் இறைத்துக் கை கால் முகம் கழுவிக் கொள்கிறான்.

''ஆயா, இந்தாளுக்குக் காபி கொஞ்சம் கொண்டாந்து குடு..!''

மகிழ்ச்சி தாங்கவில்லை.

''நல்ல அம்மா'' என்று காபியை வாங்கிக் குடிக்கிறான். கூலி ஐந்து ரூபாய். முண்டாசைக் கட்டிக் கொண்டு வாய்நிறையச் சிரிப்புடன் சென்றவன் பிறகு வரவேயில்லை. யாரேனும் அவனுக்கு அவள்தான் அந்த மருத்துவமனை மருத்துவர் என்று சொல்லியிருப்பார்களாக இருக்கும்.

அதே ஆளின் மனைவி, பிரசவம் ஆகாமல் நஞ்சு வெளியேறி ஆபத்தான நிலையில் ஒரு நாளிரவு கொண்டு வரப்படுகிறாள். மருத்துவரால் தாய், பிள்ளை இரண்டையும் காப்பாற்ற முடியவில்லை. மறுநாளே மருத்துவர், அந்த வீட்டைக் காலி செய்து கொண்டு இரவுக்கிரவாக வெளியேற வேண்டிய சூழல் உருவாயிற்று. அதே கிராம மக்கள், ஆட்சியாளருக்கு எதிரான கட்சியாட்கள், பிரசவத்துக்கு வந்த அவளைக் கொலை செய்து விட்டதாக மிரட்டி வெளியேறச் செய்தார்கள்.

அரசுத் திட்டம், குடும்பக் கட்டுப்பாடு என்ற விஷயத்தில் மக்களின் ஒத்துழைப்பைப் பெறவேயில்லை என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு சான்று. பீகார், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் போன்ற இடங்களில் அன்றைய தமிழ்நாட்டு கிராமத்தானின் மனப்பான்மையுடன் மக்கள் குடும்ப நலத்திட்டங்களை இன்னும் ஏற்காதவர்களாகவே இருக்கின்றார்கள். இன்றும் இந்த மக்களின் மக்கள் பெருக்கம் அந்த மாநிலங்களிலேயே மையம் கொண்டிருக் கிறது. அறியாமையும், அவ்வாறே, அகன்றிருக்கவில்லை. இன்னும் பத்தாவது திட்டம் போடப்பட்டும், பிரதமர் நூறு குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்தால், ஐந்து வகுப்புகளை எட்டு முன் மாம்பிஞ்சுகள் உதிர்வதுபோல 'கல்வி' கற்றல் என்ற வளர்ச்சி பெறாமலே உதிர்ந்து போகிறார்கள் என்று தெரிவிக்கிறார்.

கேரளம், புதுச்சேரி, தமிழ்நாடு போன்ற தென்னகப் பகுதிகள் மட்டுமே சாதனைகளை எட்டும் பாதையில் அறைகூவல்களைச் சந்தித்தாலும் முன்னேறுகின்றன. ஆனாலும், மக்கள் பெருக்கக் கட்டுப்பாட்டுக் கொள்கையில் அரசு ஒருங்கிணைந்த செயல்பாடு களை நிறைவேற்ற இயலவில்லை. இதற்கு முதல் காரணம், மக்கள் மிகப் பெரும்பான்மையானவர்கள், ஆட்சி பிடிக்கப் போட்டி போடும் கட்சிகளுக்கு வாக்கு வங்கிகளாகத் திகழ்வதாலும், அதைத் தவிர அரசின் செயல்பாடுகளுக்கும் ஏழைக் கிராமத்தானுக்கும் எந்த ஒரு புரிந்துணர்வும் இல்லை என்பதாலும்தான். வளர்ச்சித் திட்டங்களும், அவ்வப்போதைய ஆளும்கட்சி மிகச் சிறுபான்மை யான கற்றறிவாளரான, போட்டி அரசியல் கட்சியாளரைச் சரிக்கட்டும் வகையில் ஆதாயம் காண்பதற்கே போடப் படுகின்றன. 55 ஆண்டுகள் உருண்டோடிவிட்ட நிலையில், இந்திய ஜனநாயகம் பத்து வளர்ச்சித் திட்டங்களின் பலன்களில் குறிப்பாக, வறுமைகளே பெண்களின் வடிவில் தோற்ற மளிக்கிறது. ஆட்சியாளர், சினிமா, தொலைக்காட்சி, கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்காரர், பெரும் பெரும் ஒப்பந்தப் புள்ளி களின் தயவில், வன்முறைகள் என்ற கொடூரங்களை உள்ளடக்கிய தாக, இயற்கையின் சீற்றங்களையும், அப்போது மலரும் மனிதத்தன்மைகளையும் அரசியல் கொள்கைகளுக்குச் சாதக மாக்கிக் கொள்ளும் மதி நுட்பங்களை வளர்த்திருக்கின்றன.

காந்திய நெறி பேசப்படுகிறது. குறுக்குவழியில் ஆட்சி பிடிக்க விரைந்து, ஏதோ ஒரு 'சட்டத்தால்' அது நழுவியபோதும், பதவி

வேண்டாம் என்று அரசியல் காய்களை ஆட்டுவிக்கும் 'சக்தியாக' அமைந்தவரை, புத்தர் என்றும் இயேசு என்றும், காந்தி என்றும் ஒப்பிட்டுப் போற்றும் துதிமாலைகளுக்குப் பஞ்சமே இல்லை. எனவே இந்திய நாட்டின் உண்மைப் பிரதிநிதி ஜனநாயகத்திலும் ஐக்கியமாகிறான். எப்படியேனும் பதவியில் அமர்ந்தவர், கடவுளாகிறார். கடவுள் இல்லை என்றும், கடவுளை நம்புபவன் முட்டாள் என்றும் அடித்துச் சொல்ல ஓர் இயக்கத்தையே தோற்றுவித்தவர் இல்லை. அவர் கொள்கையைக் கூடச் சொல்லார். திரைப்பட நாயகர், தட்டியில் இருந்தாலும், பாலபிடேகம் பெறுகிறார்; கோயில் சிலைகளிலும் இடம் பெறுகிறார்.

# 16. நெருக்கடி கால (அரசியல்) அலங்கோலங்கள்

**1975**ம் ஆண்டுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. அது ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பில் 'மகளிர்' ஆண்டாக உலகெங்கும் கொண்டாட (?) அறிவிக்கப்பட்டிருந்தது. நவராத்திரி, ஆடி வெள்ளி, தைவெள்ளி ஆகிய நாட்கள் தென்னிந்திய சநாதன மரபில் (இதுபோல் வடமாநிலங்களிலும் கார்வா சௌத் போன்ற நாட்கள் உண்டு) சுமங்கலிப் பெண்களை அழைத்து மஞ்சள், குங்குமம், மலர்கள், பட்டு ரவிக்கைத் துண்டுகள், சீப்பு, கண்ணாடி என்ற வகையில் வழங்குவார்கள். இது தவிர, 'சுமங்கலி' வழிபாடு என்ற வகையில் அதிகப்படியாக சுமங்கலிகளை அழைத்து, விருந்து வைத்து, முன்கூறப்பட்ட பொருள்களை வழங்கி தூப தீப ஆராதனையுடன் அனுப்பி வைப்பார்கள். இந்த வழிபாடு வெவ்வேறு சாதி மரபுகளில் வெவ்வேறு வகையில் கொண்டாடப் படுகிறது. பெண்களைப் பட்டினி போட்டும், சதிக் கொடுமையில் எரிய வைத்தும், குலைத்தும் கொன்ற பாவங்களுக்கு இந்த வழிபாடு பரிகாரங்களாகத் தோன்றியிருக்கிறது எனலாம். பெண் வதை இல்லாத குடும்ப மரபு மிக அபூர்வம். குடும்பங்களில் திருமணம் போன்ற மங்கல நிகழ்ச்சி நடக்குமுன், இந்த வழிபாட்டை முன்னின்று நடத்துவார்கள்.

ஆனால், கணவன் இறந்துபோன பின் ஒரு பெண் வதைபடுவதை, சமூகம் அவளுக்குரிய தண்டனையாகவே கருதுகிறது. அவர்களுடைய 'ஆன்மா' அமைதியடைய எந்த வழிபாடும் இல்லை. அனைத்துலக மகளிர் ஆண்டு கொண்டாடப் பட்டபோது, நடந்த நிகழ்வுகள், கூட்டங்கள், பாராட்டுகள், பரிசுகள் எல்லாமே மஞ்சள் குங்குமம் வழங்கப்படும் நிகழ்ச்சிகள் போலவே தோன்றின. பிருந்தாவனத்தில் குஞ்சவிஹாரி கோயிலிலும், காசியிலும், அப்போதும் தலைமுண்டிதம் செய்யப்பட்டு, தங்களுக்குக் கிடைக்கும் அற்ப வயிறாதாரத்துக் காக, ஆயிரமாயிரம் கோபியர்களுடன் லீலை செய்த கண்ணனைப் புகழ்ந்து பாட வேண்டியிருந்தது! இந்தப் பெண்கள், வழிபாட்டுக்கு உதவாத அபாக்கியவதிகள்! தேவதாசி முறைகளை ஒழித்து, அதே தொழிலை, உலகமயமாக்கித் திறந்து விட்டிருக்கிறது. இதுவும் முன்னேற்றம்தான்! அனைத்துலக மகளிர் ஆண்டில் இந்திய அரசாட்சியில் மிக முக்கியமான ஒரு திருப்பம் நிகழ்ந்தது. அப்போது நாட்டை ஆண்டு வந்த நேரு மகள் இந்திரா காந்தியின் தேர்தல் செல்லாது என்று அலகாபாத் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. காரணம், இதுதான் : தேர்தலுக்கு அரசு அதிகாரிகள் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. இந்திரா அம்மை அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் குற்றவாளிக் கூண்டில், மூன்று மணி நேர விசார ணையைச் சந்தித்தபின், பிரசித்தி பெற்ற இந்தத் தீர்ப்பை நீதிமன்றம் ஜுன் மாதத்தில் 25ம் தேதி வழங்கியது. இந்திரா பதவி விலக வேண்டும். இந்திரா பதவி விலகியிருப்பார் என்றும் அவருடைய இரண்டாவது மகன் சஞ்சய்காந்தி, தாயின் ஆலோசகராகச் செயல்பட்டு 26ம் தேதி நள்ளிரவே, நாட்டில் நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தும் அதிரடித் தீர்ப்பை வெளியிடச் செய்தார் என்றும் 'அரண்மனை' இரகசியங்கள் பின்னர் வெளியாயின. எது எப்படியோ? ஜுன் 26ம் நாள் 1975 இல் இந்தியாவில் அவசர நிலை பிரகடனமாயிற்று. அவசரம் அல்லது நெருக்கடி என்பது 'போர்' போன்ற கட்டாயங்கள் வரும்போது மக்கள் நலனுக்காக அறிவிக்கப்படும் நிலை. ஆனால், இந்த நெருக்கடி ஒரு ஜனநாயக ஆட்சியில் மக்களின் அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்த அரசு எடுத்துக் கொண்ட அதிகாரங்களை அநீதியான முறையில் அறிவித்ததாகும்.

அநீதிகள், மக்களுக்கு எதிராக அதிகரிக்கும்போது மக்களின்

ஆற்றலை, விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும் முகமாகச் சில தலைவர்கள் அந்நாட்களில் செயல்பட்டனர். அதன் விளைவே சட்ட ரீதியான விசாரணையும் தண்டனையும். மக்களைத் தன் அரசுக்கு எதிராகத் தூண்டி விடக்கூடியவர்கள் என்ற கருத்தில், அந்நாட்களில் ஜயப்பிரகாச நாராயணர் போன்ற சர்வோதயத் தலைவர்கள் இரவுக்கிரவே காவல் கைதிகளாயினர். நாடு முழுவதிலும் இந்தச் சர்வாதிகாரச் செயலை எதிர்க்கக்கூடியவர்கள், ஆளுநர், குடியரசுத் தலைவர் போன்றோர் பொம்மைகள் போலச் செயல்பட்டனர். தனிப்பட்ட இயக்கத் தலைவர்கள், இந்து சமயம் என்ற பிரிவில் தீவிரமாக இயங்கிய தொண்டர் அமைப்பு மிக வலிமை வாய்ந்ததாக இருந்தது. 'மதசார்பற்ற' என்ற கோட்பாடு அவர்கள் அனைவரையும் காவலில் வைத்தது. எதிர்த்த தீவிரவாதிகள் ஈவிரக்கமின்றி, சிறைகளில் கொடுமைப்படுத்தப் பட்டனர். மக்களின் உரிமைக்காகப் பேசும் பொதுவுடமை இயக்கத்தின் ஒருபகுதி, இந்திரா அம்மையின் சாதனைகளைப் பட்டியல் போட்டது. ஆம், யானையைக் குழிகளில் வீழ்த்தப் பள்ளம் தோண்டப்பட்டது தெரியாமல், மேலே பசிய இலை கிளைகளைப் பரப்பி வைப்பார்களே! அப்படி மக்களின் வளர்ச்சிக்காக இருபதம்சத் திட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. 'பேனா பிடிப்பவர்கள்' இன்னது தான் எழுத வேண்டும் என்ற கட்டாயம் தெரியாத சலுகை ஆணைகள் பெற்றார்கள். இந்திரா அம்மையை அவர் துணிவை, ஆற்றலை எழுதலாம். அரசின் சாதனைகளைப் பிரசாரம் செய்யும் அரசு வெளியீடுகளில் அவை வெளிவந்தால் ஊதியமும் உண்டு. தமிழ்நாட்டில் இலக்கியம் எழுதிப் பத்துக் காசு பெற இயலாதவர்களுக்கு இது வரப்பிரசாதம் தானே? மேலும் அரசு திட்டங்களுக்கான விளம்பரத்துறை இவர்களைத் தேடிப்பிடித்துப் பல்வேறு பொதுத்துறை நிறுவனங் களின் தொழிற்சாலைகளைச் சென்று பார்க்க வளர்ச்சி பற்றித்தான் நீங்கள் எழுத வேண்டுமென்று சொல்லாமலே, ஒரு சுற்றுலா உபசாரமும் மேற்கொண்டது. அன்றாடம், சோவியத் நாட்டின் பிரசார ஏடுகளும் கண்கவர் படங்கள் கொண்ட வார, மாத இதழ்களும் இந்திய அரசின் நியாயங்களை எடுத்துரைக்கும் பிரசாரங்களும் வெள்ளமென எழுத்தாளர் சிந்தைகளை முற்றுகை யிட்டன. இங்கு இன்னொன்றும் குறிப்பிட்டாக வேண்டும். பொதுவுடமைக் கோட்பாடுகள், அகிம்சைக் கலாசாரங்களில் நாட்டு விடுதலையை முன்நிறுத்திய காந்தியப் பின்னணியில்

முதன்மை பெறவில்லை என்றே சொல்ல வேண்டும். அதுவும் நேரு, ஜனநாயக முறையில் நாட்டை ஆளவந்த கேரள - பொது வுடமை அரசை வீழ்த்தி ஜனநாயகக் கொலையை நாட்டில் முதன் முதலாக அரங்கேற்றிய பின் அந்தக் கட்சியே, இரு துண்டாகவும், மேலும் மேலும் தீவிரங்களில் தனிநபர் தலைமைப் பெயர்களைக் கொண்டு ரகசியமாகச் செயல்படத் தொடங்கியபின் பல பகுதி களில் அந்தக் கட்சி மக்களின் செல்வாக்கைப் பரந்த களங்களில் பெறமுடியவில்லை. சீனப்படையெடுப்பு, ஒரு முக்கிய நிகழ்ச்சி. நம் வானொலி, அன்றாடம் சீன எதிர்ப்புப் பிரசாரத்தைக் கிராமங்களில் முழங்கியது. வானொலியின் சினிமாப் பாடல் களைக் கேட்பது உற்சாகத்தைக் கொடுத்தது. தேசபக்தி, அல்லது நாட்டுணர்வு திணிக்கப்பட்டு வருவதில்லை என்பதற்கு இதெல்லாம் படிப்பினை.

எந்தெந்தப் பகுதிகள் சீனத்துக்கு உரியவை, எந்தெந்தப் பகுதிகள் இந்திய எல்லைக்குள் இடம் பெற்றிருக்கின்றன என்று அவர்கள் பக்க நியாயங்களை விளக்கும் படங்களும், அறிக்கை களும் எழுத்தாளர் முகவரிகளைத் தேடி வந்தன. ஆனால் அந்த எழுத்தாளர் எவரும் இந்தியாவில், மக்கள் பிரதிநிதிகளாகவோ, ‘அரசின்’ மதிக்கப்படும் குடிமக்களாகவோ மதிக்கப்பட்டதில்லை. தங்கள் பக்க நியாயங்களை அவர்கள் உணர்ந்திருக்கவில்லை. சீனத்திலிருந்து அனுப்பப் பெறும் பிரசாரம் அரசுக்கு விரோத மானது என்ற அச்ச உணர்வில் அதைப் பிரித்துப் பார்த்து உண்மை யைப் புரிந்துகொள்ளும் ஆர்வமும் முடங்கியது. அத்தகைய எழுத்தாளரை, இந்திரா அரசு, நாட்டுப்பற்று என்பது இந்திராவின் சாதனைகளை மெச்சுவதாகும் என்று அரசியல் உணர்வு பெற ஊக்கியது. இந்திராவைப் பற்றி எழுதினால் அந்த நூல், அனைத்து மொழிகளிலும் வெளியிடப்படும்; ஏன்? ‘நாட்டின் சிறந்த தேசிய இலக்கிய விருதும் பெறலாம்’ என்றெல்லாம் வலை வீசப்பட்டது.

அரசியல் கலக்காத, இலக்கிய எழுத்தாளர் என்று மட்டுமே மக்களிடம் செல்வாக்குப் பெறக்கூடிய சூழலே நிலவியது. பின்னர் அரசியல் என்பது அரசியல் கட்சிகள், கட்சித் தலைவர்கள், கட்சிகளின் வளர்ச்சிக்கு இன்றியமையாத சினிமாத்துறை என்று அரசியலும், ஜனநாயகமும் மக்களை விட்டு அகன்று அகன்று அவர்களை வெறும் உயிர்களாக, வாக்களிக்கும் சாதனங்களாகவே மாற்றிவிட்டனர். இந்த மந்தையில் பெண்கள் சூனியங்கள்.

ஆனால், 1975 இல் சஞ்சய் காந்தி, இந்திரா அம்மையின் இரண்டாவது மகன். அனைத்து இயக்கங்களுக்கும் திட்டங்களுக்கும் ('சூத்திரதாரி') ஆட்டுவிப்பவன் ஆனான். தன் கையிலெடுத்துக் கொண்ட அதிரடித் திட்டங்களில் மூன்று இன்றும் அவசியமான திட்டங்கள்தாம். அதே விரைவில் அவை செயல் பட்டிருந்தால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் பல நெருக்கடிகளுக்குத் தீர்வு கிடைத்திருக்கலாம் என்றும் சிலர் கருதினர்!

இந்தியத் தலைநகரில் சுதந்திரத்துக்குப் பின் தென்னாட்டிலிருந்து இடம் பெயர்ந்த மக்களில் தமிழ் பேசுபவர்கள் அதிகம் எனலாம். மதுரை, சேலம், ராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் இருந்து அதிகமான விவசாயிகள், கைத்தறித் தொழிலாளர்கள் இவர்களில் அடங்குவர். சமுதாயத்துக்கு உணவும், உடையும் அளிக்கும் இந்தப் பெருமக்கள் அலுவலகப் பணிகளிலும் வேறு தொழில் துறைப் பணிகளிலும் இடம்பெயர்ந்து இடைநிலை மாதச் சம்பளம் பெறும் வர்க்கமாக அங்கு தங்கியிருந்த தமிழர் வீடுகளில் பணி புரிந்து பொருள் ஈட்டி ஆங்காங்கு குடிசை போட்டுக்கொண்டு தங்கியிருந்தனர். பல மாநிலங்களிலும் இருந்து வேறு வேலையும் தெரியாமல், பெண்களின் வருவாயில் காலம் கழித்த ஆண்கள், குடும்பங்கள் பெருக்கும் பங்களிப்பைத் தவறாமல் செய்தனர். 'கனாட் ப்ளேஸ்' போன்ற மையப்பகுதிகளில் மாமன்னர் புழங்கும் இடங்களாக வண்ண வண்ண விரிப்புகளைக் கொண்ட வணிக வளாகங்களும் உணவு விடுதிகளும், பளபளக்கும் வண்டிகளுமாகக் காட்சியளிக்கும் அந்தச் சூழலில் ஓர் அழுக்குத் தமிழ்ப் பெண் கையில் குழந்தையுடன் ஒரு பத்திரிகையைக் காரில் வீற்றிருப்பவரிடம் நீட்டிக் காசு வாங்குவார். இது ஏதோ ஒரு பத்திரிகை மாலைப் பதிப்பாக இருக்கும்.

சஞ்சய் காந்தியின் கண்களில் இது உறுத்தலாகத் தென்பட்டிருக்க வேண்டும். நகரைச் சுத்தம் செய்து எழில்படுத்தும் திட்டத்தில் குடிசைகள் அப்புறப்படுத்தப்பட்டன. ஆடவர்கள் அனைவரும் கருத்தடைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர். இந்தச் சான்றிதழ் பெற்றபின், அவர்களுக்கென்று இருப்பிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டன.

பசுமையான மரங்கள், குப்பையகற்றித் தூய்மையாக்கும் ஏற்பாடுகள், எழில் விளக்குகள் கட்டப்பட்டன. அலுவலகங்

களில் பணிபுரிவோர் நேரத்துக்கு வரவேண்டும். அரசியல், அது இது பேசலாகாது. எல்லாக் கட்டுப்பாடுகளும் சரிதான். இரண்டு பிள்ளைகள் இருப்பவர், ஆண்கள், காவல்துறையானாலும், எந்தத் துறையானாலும் அறுவைச் சிகிச்சைக்குட்பட்டாக வேண்டும். ஒருவகையில் இடம் பெயர்ந்த ஏழைப் பெண்கள் மகிழ்ந்தார்கள் எனலாம். அவர்களுக்கென்று நீர், மின்விளக்கு வசதியுடன் வாழ் விடங்கள் வந்தன.

நாடு முழுவதும் ஆண் அறுவைச் சிகிச்சை வலியுறுத்தப் பட்டது. தரகர்கள், கிழவர்கள், இந்து முஸ்லிம் பேதமில்லை. பதினான்கு வயசு மனநிலை சரியில்லாத சிறுவன் என்று ஆள் பிடித்துக் காசு சம்பாதிக்க அறுவை சிகிச்சைக் கணக்குக் காட்டினார்கள்.

சஞ்சய் காந்திக்கு அந்த நாட்களில் கட்சியிலும், ஆட்சி அரசியலிலும் எந்தப் பொறுப்பும் இல்லை. அரசியலுக்கும் நிர்வாகத்துக்கும் அவர் புதியவரானாலும், அன்னையின் தயவால் கட்சியில் அளவுகடந்த செல்வாக்கைப் பெற்றார்.

மாநிலங்களில் குடும்பக் கட்டுப்பாட்டுச் செயல்பாட்டில் தயக்கம் காட்டியதைத் தொடர்ந்து மாநிலங்களில் மைய அரசின் அதிகாரத்தைப் பிரயோகிக்க, அரசியல் சாசனத்தின் சட்டவிதியி லேயே திருத்தம் கொண்டு வந்தனர். (Constitution Forty Second Amendment Act. 1976) அரசு ஆணை என்பது காகிதம் அல்ல. செயல்பாடு - என்ற தீவிரம் காட்டப்பட்டது. உத்தரப் பிரதேசத்துக்கு 175000 ஆண் அறுவைச் சிகிச்சை இலக்கு வைக்கப் பட்டது. 75 - 76 ஆண்டுகளில் 83,700 பேருக்கு மட்டுமே சிகிச்சை சாத்தியப்பட்டது. அதிரடியான உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும், குற்றவியல் சட்டத்தின் கீழும் எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் ஒடுக்கப்பட்டதன் விளைவாகவும், மக்கள் எதிர்ப்பு ஒடுக்க இயலாதவை என்று இந்திரா உணர்ந்தார். எனினும் குடும்ப நலத்திட்டம், ஆண்களைக் குறிவைத்து அதிரடியாகச் செயல்படுத்தப்பட்டதன் விளைவே அதிருப்தியைக் கொண்டு வந்தது. மார்ச் 77 இல், அவர் அரசைக் கலைத்துத் தேர்தல் அறிவித்தார். ஜனவரியில் தேர்தல். எந்த மாநிலங்களில் - குறிப்பாக உத்தரப்பிரதேசம் - அறுவைச் சிகிச்சை கட்டாயமாக்கப் பட்டனவோ, அங்கு அவர் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. அவர், மகன், இருவரும் உத்தரப்பிரதேசத்தில் தோற்றனர்.

பிரதமர்களை அதுகாறும் தேர்ந்தெடுத்த கட்சி தோற்றது. அடுத்து மார்ச் 77 இல் ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தது. உடனே இந்திரா காந்தியின் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கைவிட்டது. மாறாக, குடும்ப நலக் கொள்கையை அறிவித்தது. இதன் சாரம், அரசு வலியுறுத்தாது என்பதுதான்.

நெருக்கடி நிலைக் காலத்தில் 76 -77 காலகட்டத்தில் 35.2 - 34.4, 33.0 என்று குறைந்திருந்த மக்கள் தொகை ஏறுமுகம் கண்டது. 1980 இல் காங்கிரஸ் அரசு, சுகாதாரம், குடும்ப நலம் என்று புதிய மக்கள் தொகைக் கொள்கையை வகுத்தது. ஆனாலும், கொள்கைகள் காகிதத்திலும், அரசு இயந்திரத்தை முடுக்கிவிடும் நடவடிக்கையாகவும் மட்டும் இருந்தன.

அதிரடி நடவடிக்கை... அதுவும் ஆண்களைக் குறிவைத்த அறுவை சிகிச்சை, தேர்தல் முடிவைப் பாதிக்கும் என்ற அச்சம் எல்லாக் கட்சி ஆட்சியாளருக்குமே இருந்தது. பலன், பெண்ணே, மீண்டும் மீண்டும் பலிகடாவாக்கப்படுகிறாள்!

ஆணுக்கான அறுவைச் சிகிச்சை முறை, மிக எளிதானது. சிக்கல் இல்லை. கால் மணிக்குள் முடிந்துவிடும். இதனால் மனிதன் ஆண்மை இழக்கமாட்டான். கடும் வேலை செய்யலாம். முன்பு எத்தகைய பலவானாக இருந்தானோ, அப்படியே இருக்கலாம் என்றெல்லாம் வானொலியில் இந்தப் பிரசாரம் அழகிய மெட்டுகளில் தாளம் தவறாமல் சொல்லப்படுகிறது. ஆனாலும், 'நஸபந்தி' (வாசக்டமி) என்ற ஆணின் விந்துக் குழாய் அறுவைச் சிகிச்சைக்குச் செல்வாக்கு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

# 17. வதைபடும் வறுமையில் 'மங்கல'ப் பெண்மை

"அவங்க ஆபரேசன் பண்ணிட்டாங்க. குழந்தைப் பிறக்காது" என்று எதுவும் தெரியாத பையனும் புரிந்து கொள்ளும் ஒரு மக்கள் தொகைக் கட்டுப்பாடு சார்ந்த செய்தி பொதுவாக, பெண்ணையே குறிக்கிறது. ஏனெனில் உலக முழுவதும்

இருநூறுக்கும் மேற்பட்ட கோடி மக்கள் கருத்தடைக்கான (துண்டிப்பு) மருத்துவச்சிகிச்சை செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற கணக்கில் 120 கோடிக்கு மேற்பட்ட பெண்களே சிக்கலான கருக்குழாய் துண்டிப்பு சிகிச்சைக்கு உட்பட்டிருக்கின்றனர். ஆண்களுக்கான விந்தணு குழாய் துண்டிப்புக்கான (வாசக்டமி) சிகிச்சை எளியதும், பாதுகாப்பானதும், சிக்கல்கள் இல்லாதவையுமாகப் பலனளிக்கக் கூடியதென்றாலும், ஆண் முன் வந்து அந்த சிகிச்சைக்கு ஒப்புவதில்லை. ஏன்? பெண் (மனைவி) கருத்தடை சிகிச்சை செய்து கொள்வதற்கே ஒப்புதல் கொடுக்காத ஆண், தன்னை அறுவைச் சிகிச்சைக்கு உட்பட ஒப்புவானா? ஏனெனில் ஒரு குழந்தைக்குத் தகப்பனாகும் தன்மையில் தான் தன் ஆளுமை விளக்கமடைவதாக காலம் காலமாக ஆண் குன்றேறி நின்று பெண்ணை அடக்கிக் கொண்டிருக்கிறான். ‘இவள், என்ன தாய்? நான் இல்லாமல் இவள் தாயாக முடியாது?’ என்று ஓங்கிய ஆதிக்கத்தில் அவள் என்றோ ஒடுங்கி மனம், மெய் இரண்டையும் பூச்சியமாக்கி இருக்கிறாள். எனவே, மருத்துவர், “அம்மா, உன்னால் இனிக் கருத்தரித்துப் பிள்ளை பெற இயலாது. உன் உயிருக்கும் பிள்ளை உயிருக்கும் உத்திரவாதம் இல்லை. உனக்குக் கருத்தடைச் சிகிச்சை செய்வதற்கும் இப்போது இயலாது. உன் புருசனைச் சிகிச்சை செய்து கொள்ளச் சொல்லலாமே?” என்று பரிந்துரைப்பார்.

“அய்யோ? அது வேணாங்க. எனக்கே பண்ணிடுங்க!” என்பாள் அபலைப் பெண்.

இவள் வரலாறு அறிந்த மருத்துவர் விழிப்பார். பதினான்கு வயதில் திருமணம். பதினாறு வயதுக்குள் மூத்த பிள்ளை. பையன்தான். நோஞ்சனானாலும், ‘ஆண்’ குழந்தை. குழந்தை பிறந்தபோது, பதினாறே வயது. புருசனுக்கு இருபத்து நான்கோ, இருபத்தைந்தோ வயசு. குடும்ப வருமானத்துக்கு உத்தரவாதமான வேலை இல்லை. கிராமத்திலிருந்து சென்ற தலைமுறையில் இடம் பெயர்ந்த குடும்பம். இரண்டு பேரும் முறை உறவினர். இருவரின் தந்தையாரும் ‘குடி’காரர்கள். தத்தம் மனைவியர் வீடுகளில் வேலை செய்தும், சிறு தொழில் செய்தும் குடும்பம் பெருக்கியவர்கள். இந்த ‘ஆபரேஷன்’ முறைகளுக்கு உட்பட்டு நான்கு ஐந்து என்ற மக்கட்பேறுடன் நின்றுவிட்டார்கள். எவனேனும் குடிகாரன் புதுமலரைக் கசக்கிவிடக்கூடாதென்று அப்பனும் சுப்பனும்

ஒத்துப் போய் மணமுடித்துவிட்டார்கள். முதல் குழந்தைக்கு ஏழு மாசம் ஆனதும், நம் நாயகி கர்ப்பமாய் விட்டாள். நாயும் குட்டிகளுடன் தங்கமுடியாத நெருக்கத்தில், இந்தக் கருவுறல் நிகழ்ச்சி நடந்தேறுகின்றன. மருத்துவர் பார்த்துவிட்டு, (இதுவும் கார்ப்பரேஷன் தரும மருத்துவம்தான்) "ரொம்ப பலவீனமாயிருக் கேம்மா, புள்ளக்கித் தாய்ப்பால் குடுத்திருந்தா இத்தினி சீக்கிரமா புள்ள வந்திருக்காது. ஏம்மா, முன்ன பெத்தபோது டாக்டர் லூப் போட்டுக்கச் சொல்லலியா?'' என்று கேட்டார்.

''அத்த வாணான்னிட்டாங்க'' என்று பரிதாபமாக விழிப்பாள் பெண்.

''அத்தையோ பொத்தையோ அவங்களா சொமக்கிறாங்க?'' என்று மருத்துவர் கடுகடுத்து ''ஊசி போடணும், வாரா வாரம் வா!'' என்று தரும ஊசி, சத்து மாத்திரை கொடுத்து அனுப்புகிறார். அவரிடம் வரும் 'கேசுகள்' முக்காலும் இதே ரகம்தான். குழந்தை குறை மாதத்தில் பிறந்தது. பிழைக்கவில்லை. இவர்கள் தரும ஆசுபத்திரியை விட்டு தனியார் மருத்துவமனை ராசி என்று போனார்கள். அங்கே ஏதேதோ பரிசீலனை செய்து, படம்பிடித்துப் பார்த்து, காசநோய் என்று தீர்ப்புச் செய்து, முதல் பிள்ளையை அவளிடம் விடாமல், ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தார்கள். தருமங்களுக்கும் பஞ்சமில்லை. உடம்பு தேறி வந்தாள். மீண்டும் கர்ப்பம். பத்தொன்பது வயசுக்குள் மூன்றாவது கர்ப்பம். காசநோய் தாக்கி மீண்ட உடல், இம்முறை இரட்டைக் கருக்கள். ஆண்டவனுக்கு இந்த ஏழைப் பெண்கள் மீது இவ்வளவு கருணையா? வறுமை மிஞ்சும் குடும்ப உறவுகள் சமயங்களில் விட்டுக் கொடுப்பதில்லை. மாய்ந்து மாய்ந்து ஆதரித்தார்கள். அரசு பொது மகப்பேறு மருத்துவமனையில் ஆணொன்று, பெண் ணொன்று பிறந்து உடனே மரித்தன. மருத்துவர் பரிந்துரை செய்து, லூப் போட்டு விட்டார். அவ்வப்போது வந்து காட்ட வேண்டும் என்றார். இவளும் தவறாமல் சென்றாள். அந்த மருத்துவரே அகப்படுவாரா? பார்த்துவிட்டு 'சரியாக இருக்கிறது' என்று சொல்லி அனுப்பினார்கள்.

ஏறக்குறையை ஒரு வருடம் சென்றது. அடிவயிற்றில் வலி தாங்கமுடியவில்லை. காய்ச்சல், உடலே வீங்கினாற் போலாயிற்று. கொஞ்சம் படித்து உயர்ந்த பொருளாதார நிலையில் இருந்த உறவுக்

காரப் பெண், அவருக்குத் தெரிந்த மருத்துவமனை மருத்துவரிடம் கூட்டிச் சென்று சேர்த்தாள்.

அறுவைச் சிகிச்சை செய்து 'லூப்' சாதனத்தை எடுத்தார்கள். அத்தை, அம்மா, சித்தி உறவுகள் மகப்பேறு மனை அரசு மருத்து வர்களைப் பொறுக்கி எடுத்த வசைகளால் முழுக்காட்டினார்கள். இனி எந்தப் பிரசவத்திற்கும் அந்தப் பக்கம் தலைவைத்துப் படுக்கக்கூடாது என்று சத்தியம் செய்தார்கள். ஆக, நாயகி தேறி வந்தாள்.

ஒற்றைப் பையன்தானே? அவன் பள்ளிக்கூடம் போகிறான். இப்போது மீண்டும் கர்ப்பம். இருபத்தி மூன்று வயது. இந்தப் புதிய அரசு அல்லாத மருத்துவமனையில் பழைய வரலாறு அறிந்து மாத்திரைகள், தடுப்பூசி என்றெல்லாம் கர்ப்பிணியின் சுகப்பிரவசத்துக்கு அறிவுரைகள் நல்கினார்கள். ஒருவகையில் நம்பிக்கை என்றாலும், வயிறைக் கிழித்துத்தான் குழந்தையை வெளியாக்க வேண்டியிருக்கும். ஐயாயிரம் உடனே தேவையாகும் என்று அச்சுறுத்தினார்கள். வேண்டாத தெய்வங்களில்லை. ஐயாயிரம் செலவில்லாமல் பிள்ளை (ஆண்) பிறந்துவிட்டது. சுவர்க்கமே இறங்கி வந்துவிட்டது. இந்த நிலையில் கருக்குழாயைத் துண்டிக்கும் சிகிச்சையைச் செய்ய இயலாது என்றே மருத்தவர், ஆணை அறுவைச்சிகிச்சை செய்துகொள்ளப் பரிந்துரைத்தார்.

இடமில்லாத இடத்தில் மனைவியைக் கருவுறச் செய்யும் ஆள், நிரோத், ஆணுறை என்றாலே, *'சீ!'* என்று முகம் சிவந்து நாணு வானாம்! 'குடும்பத்துல இதெல்லாம் எப்படி?' என்று வெட்கப் படுவானாம்! அவன் அப்பனைப் போல் குடிக்காதவன். பள்ளிப் பரிட்சை தேறவில்லை. ஒழுக்கமானவன்; நாணயமானவன். வேலை கிடைத்தால் உழைப்பான். இத்தகைய நற்சான்றுகளைத் தாய்மார், அத்தைமார் கொடுக்கிறார்கள். பிறந்த குழந்தை, தாய்ப் பால் குடிக்கிறது. ஆனாலும், வாழ்வாதாரங்கள் வற்றும் நிலையில் டெமாக்ளிஸ் வாள்போல் எதிர்காலம் நூலிழையில் தொங்குகிறது. எங்கும் கடன். இருத்தலுக்குப் போராட்டம். அரசு தர்மங்கள் கூட கட்சி ஆட்சியின் விளைவாகவே மக்களைக் கூறுபோடு கின்றன. இவளுடனே பிரசவித்த இன்னொருத்தி. முதலில் மூன்று குழந்தைகள் பிறந்தன. அப்பன் குடிகாரன். முதலில் பையன். இரண்டாவது மகன். அது காது கேளாத பேசாத ஊனமுற்ற

குழந்தை. மூன்றாவது பிறந்து இறந்து போயிற்று. உடனே நான்காவது பேறு; பிரசவம். இப்போதெல்லாம் புருசனோ யாரோ கருத்தடைச் சிகிச்சைக்கு ஒப்புதல் அளிக்க வேண்டிய கட்டாய மில்லை. இவளே சொல்லிவிட்டாள். "டாக்டரம்மா, எனக்கு இனி புள்ள வேணாம். ஆபரேஷன் பண்ணிடுங்க!" குழந்தை தர்ம ஆசுபத்திரியில் பிறந்தது. சிகிச்சையும் செய்துவிட்டார்கள். வீட்டுக்குக் குழந்தையுடன் வந்துவிட்டாள். உறவுகள் எல்லாம் ஏழ்மையில் கனிந்தும் பொறாமையில் பொங்கியும் மனித உணர்வு களைக் காப்பாற்றிக்கொண்டும் புழுங்கும் உயிர்த்துவங்கள்தாம்.

குழந்தைகள் குழந்தைகளோடு இருள் பொந்துகளில் சல்லாபித்து சண்டை போட்டு அயர்ந்து உறங்கும் ஒரு உறவு ரசம் சோறு கரைத்து இவளுக்குக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறாள். குழந்தை பால் குடிக்க, கண்ணுறங்கும் நேரம், புருஷன் என்ற மிருகம் குடித்துவிட்டு, உறவுகொள்ள வருகிறது. இவளுக்கு முடிய வில்லை. மிருகம் அருகில் இருந்த அரிவாள்மணையைத் தூக்க அவள் ஒரு தள்ளுத் தள்ளி அதே அரிவாள்மணையால் அவனை அச்சுறுத்தி விரட்டிக் கதவைத் தாளிடுகிறாள்.

இந்த இரண்டு எடுத்துக்காட்டுகளும் கதைகளல்ல. இலட்சோப லட்சம் பெருகும் வறுமைகளில் பூக்கும் மக்கள் பெருக்கத் துன்பங்கள். கல்வியறிவும், பொருளாதார சுதந்திரமும் பெற்ற பெண்கள்கூட, தாங்களே பாதுகாப்பான உடலுறவுக்கான, கருத்தடைக்கான, கருப்பைச் சாதனங்களைத் தேர்ந்து பயன் படுத்திக் கொள்கிறார்கள். மிகக்குறைவான பெண்களே ஆண்களின் கருத்தடைச் சிகிச்சையை ஏற்கிறார்கள் என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கெல்லாம் காரணம், ஒன்றே ஒன்றுதான். அரசின் செயல்பாடுகள் மக்களை, பெண்களை அந்நியமாக்கித் தீர்த்து விட்டிருப்பதுதான். மக்கள் தொகைக் கட்டுப்பாடு சார்ந்த திட்டக் குழுக்களில் எத்தனை பெண்கள் இடம் பெற்றிருந்தார்கள்? இருக்கிறார்கள்?

எல்லாம் (ஆண்டவனுக்கே) வெளிச்சம்!

நகர்ப்புறங்களிலும், பேரூர்களிலும் தமிழ்நாட்டைப் பொறுத்த

வரை மக்கள் பெருக வேண்டாம் என்ற விழிப்புணர்வு பெண்களுக்கு இருக்கிறது. ஏனெனில் விலைவாசி அன்றாடம் விஷம் போல் உயர்வதாலும், தேவைகளின் பெருக்கத்தாலும், பொருளாதாரச் சுமையின் நெருக்கடியை அவர்களே உணர்ந்திருக்கிறார்கள். பெண் குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை செய்துகொள்வதுதான் பரவலான தீர்வு என்பதை நன்குணர்ந்து முடிவெடுக்கிறார்கள். இவர்கள் மருத்துவர்களிடம் ஆலோசனை பெறுகிறார்கள். சிகிச்சைக்குப் பிறகு நாலைந்து மாதங்கள் உடலுறவு கூடாது என்பதை எப்படியோ கடைப்பிடிக்கிறார்கள். கணவனை விட்டுப் பிரிந்து தாய்வீடோ, வேற்றூரோ செல்பவர்களும் இருக்கிறார்கள். புருசன் கருத்தடைச் சிகிச்சை செய்துகொண்டாலும், சில வாரங்களேனும் கட்டுப்பாடாக இருக்க வேண்டும்.

மருத்துவர் அறிவுரைகளைக் கடைப்பிடிக்கவும், பிள்ளைகள் போதும் என்று தீர்மானிக்கவும், மூட நம்பிக்கைகளிலும் அறியாமையிலும், அழுந்தியிருக்கும் மக்கள் ஒத்துழைப்பதில்லை. இதனால் ஒரு தேசிய நலனுக்காகப் போடப்படும் திட்டம், மருத்துவர் பேரிலோ, ஏனைய இன்றியமையாத தேவைகள் மீதிலோ வசதிகள் மீதிலோ குறைபாடுகள் நேரிடுகின்றன. மருத்துவ ரீதியாக 5 விழுக்காடு மட்டுமே தவறுதலுக்குச் சாத்தியம் என்று அறிவிக்கப்பட்டாலும், கணக்குக் காட்ட முடியாத நிலையில் தவறுதல்கள், எடுத்துக்காட்டாக மக்களிடையே பரவிவிடுகின்றன. இத்தகையை முரண்பாடுகள் மருத்துவர்களுக்கும் முழுமையான ஈடுபாடுகளுடன் செயல்பட ஊக்கமளிப்பதாக இல்லை.

இந்த நிலையிலேயே தலைமுறைகள் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. 2050 ஆம் ஆண்டில் இந்தியா சீனத்தை விஞ்சிவிடும் என்ற அபாயச் சங்கு ஊதப்பட்டிருக்கிறது. இது இரண்டாயிரத்து நாற்பதிலேயே நிகழ்ந்துவிடும்; மக்கள் தொகை 159 கோடியாக வளரும். சீனத்தில் 139 கோடியிலேயே நிற்கும் என்கிறார்கள்.

இப்போதே, ஜப்பானில் முதிய சமுதாயம், நூறு வயதும் வாழ்ந்து தனிமையை அனுபவிக்கும் கொடுமையும் பிறப்புக் கட்டுப்படுத்தப்பட்ட நிலையும், ஆரோக்கியமான சமுதாயம், வளர்ச்சியடையும் இளமைத்துள்ளலையும் பிரதிபலிக்கும் சமுதாயம் என்று வாழ்க்கை நீரோட்டத்தை நம்பிக்கையோடு கொண்டு செல்லும் போக்கு தடைபட்டதை அறிவிக்கிறது.

இயற்கை நியதிகளில் பிறப்பு, வளர்ச்சி, இனப்பெருக்கம், இயற்கையோடிணைந்த உயிர்களை அரவணைத்துச் செல்லும் அமைதி, ஆனந்தம் என்ற இலக்குகள் குலைந்துவிட்டன.

நோய்த் தடுப்பு மருந்துகள், குறிப்பாக, 'ஆன்டிபயோடிக்' என்ற நச்சுத்தொற்றுக்கு மாற்றான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்ட பின், உலக முழுவதும் மனிதர் வாழ்நாள் நீட்சி பெற்றிருக்கிறது. 1950 - 55க்கு முன் வாழ்நாள் 46 வயதாக இருந்தது; பின்னர் அது 65 ஆக உயர்ந்தது. இது 2045 - 2050 இல் 75 ஆக உயரும் என்று கணிக்கப்படுகிறது. ஆனால், முன்பிருந்த சிசுமரணங்கள், பிரசவகால மரணங்கள், டைபாய்ட், காலரா போன்ற கொள்ளை நோய்கள் ஆகியவை கட்டுப்படுத்தப் பட்டதாலும், இறப்புகள் தடுக்கப்பட்டு பிறப்புகளும் காப்பாற்றப் பட்டிருக்கின்றன. இயற்கை நியதிகளின் ஒழுக்க விதிகளை மீறுவதை மனிதர் அறிவியல் சாதனைகளாக ஒருபுறம் மார்தட்டிக் கொண்டாலும், அமைதியான சுக வாழ்வு என்ற இலக்கு வெறும் வாய்ப்பந்தலாகவே இருக்கிறது. எனவே முன்பு தெரிந்திராத ஆட்கொல்லி, தேய்வு நோய் - எய்ட்ஸ் எதிர்காலத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

காசநோய், அறைகூவலாக இருந்தது. கான்சர் என்ற புற்றுநோய், உயிர் குடிக்கும் மஞ்சட் காமாலை எல்லாவற்றுக்கும் மருந்து கண்டுபிடிக்கும் ஆய்வுகள் உலகெங்கும் அறிவியல் சார்ந்த முனைப்பைத் தீவிரமாக்கி இருக்கின்றன.

கருத்தடை என்று வரும்போது, ஆண்களுக்கான எளிய முறைகளை அறிவார்ந்த விழிப்புணர்வுடன் கூடிய சமுதாயங்கள் பரிந்துரை செய்கின்றன, பயன்படுத்துகின்றன. காண்டோம் என்ற ஆணுறையை, 'நிரோத்' என்ற பெயரில், மக்கள் தொடர்பு சாதனங் களாகிய சினிமா, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் பரவலாகப் பிரசாரம் செய்கின்றன.

இந்தச் சாதனத்தைப் பயன்படுத்த மருத்துவர் தேவையில்லை. எங்கும் கிடைக்கக்கூடியது. ஆணுறையில் 'சறுக்கல்கள்' இல்லாமல், நிச்சயமாகப் பயன்படக்கூடிய பல்வேறு மாற்றங் களுடன் திருந்திய மாதிரிகள் வந்திருக்கின்றன. உலகெங்கும் ஐம்பது கோடி ஆண்களுக்கு மேல் இந்தத் தடைச் சாதனத்தைப் பயன்படுத்துவதாக அறிக்கை தெரிவிக்கிறது.

வளர்ச்சி பெற்ற நாடுகளில் பன்னிரண்டு விழுக்காடு மணம் புரிந்த பெண்கள், இத்தகைய ஆண்களின் பாதுகாப்பு சாதனங்களின் பலனாலேயே கருத்தரிப்பைத் தடை செய்து கொள்கின்றனர்.

ஆனால் நாடு முழுவதும் இச்சாதனம் எல்லா எளியவர்களும் பயன்படுத்த இலவசமாக வழங்கப்பட்டாலும், 4 சதவிகிதம் ஆண்களால் மட்டுமே பயன்படுத்தப்படுவதாகத் தகவல் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சாதனங்கள் பால்வினை நோய்களைப் பரவ விடாமல் தடுக்கும். இதுவே இப்போது 'எய்ட்ஸ்' என்ற தேய்வு நோய் பரவாமலிருக்கும் தடுப்புச் சாதனமுமாகும்.

சரியோ, தப்போ சேறும் சகதியுமான குட்டைக்குள் சமுதாயம் விழுந்துவிட்டது. அடித்தளமோ, மேல்தளமோ, மீட்சி பெற துரும்பு கிடைத்தாலும் பற்றிக்கொள்ள வேண்டும். சேற்றுக் குட்டையிலேயே முக்குளித்துக்கொண்டு அரசியலையும் அதற்குள் இழுத்துக்கொண்டிருப்பதில் மேலிப்பவருக்கும் மீட்சி இல்லை; உள்ளே இருப்பவருக்கும் மீட்சி இல்லை. இந்த நிலையில் தான் இன்று, தனிநபர் என்ற அடிப்படையைச் சுத்தமாகத் துடைத்தெறிந்துவிட்டு, அரசு முழுமூச்சுடன் செயல்படத் தொடங்கி இருக்கிறது. இந்தச் செயல்பாடுகளில் ஒன்றுதான், பரம்பரை பரம்பரையாகக் கிராமங்களில் பிரசவம் பார்த்த மருத்துவச்சிகள், சுகாதாரமற்ற கருக்கலைப்பு முறைகளை அறிந்திருக்கின்றனர். மேலும் இப்போதெல்லாம் காய்ச்சல், தலைவலி, கண்வலி என்ற பல உடல் உபாதைகளுக்கும் அடித்தள வறுமையில் இருக்கும் மக்கள் ஒரு தடவைக்கு முப்பது, நாற்பது என்று கணக்கிட்டு 'ஆண்டிபயோடிக்' வகை மருந்துகளை எழுதிக் கொடுக்கும் மருத்துவர்களிடம் செல்வதில்லை. அநேகமாக மருந்துக்கடைக் காரரே மருந்து தந்துவிடுகிறார். தலைவலியோ, பல்வலியோ, கண் உறுத்தலோ, உடனடி நிவாரணம் தரும் 'அலோபதி' மாத்திரை மருந்துகளைத் தொலைக்காட்சி, வானொலி விளம்பரங்கள் அன்றாடம் இவர்களுக்கு அறிவுறுத்துகின்றன. இவற்றுக்குப் பின்விளைவு இருக்குமா, இந்த மருந்துகள் காலாவதியான மருந்துகளா என்றெல்லாம் எந்த விழிப்புணர்வும் இவர்களுக்கு இல்லை. மருத்துவர் அறைக்குச் சென்று வரிசையில் நின்று,

ஒருநாள் வேலையையும் கூலியையும் முடக்கிக் கொள்வதற்கும் இயலாது. ஒரு பெட்டி தேய்க்கிற தொழிலாளி, காலையில் இருந்து மாலை - ஏன் இரவு வரையிலும் தெருவிளக்கு வெளிச்சத்தில் நின்று வேலை செய்கிறான். அன்றாடம் கிடைக்கும் கூலியில் வட்டிக் கடனடைத்து, பெண்டு பிள்ளை காப்பாற்றி, சேமிக்கவோ, வீடு வாசல் வாங்கவோ திருமணம் செய்யவோ கனவுகூடக் காண முடியாது. காலையில் இருந்து நிற்பதற்காகவே நூறு, இருநூறு மில்லி ஊற்றிக்கொண்டு வருகிறான். குடல் புண், வயிற்றுப் புண் என்று நோயாளியாகிறான். பெண்டாட்டி இவனைக் கூட்டிச் சென்று, யாரேனும் டாக்டரிடம் இப்போதெல்லாம் சித்த மருத்துவம், ஓமியோபதி என்று மாற்று மருத்துவர்களும் மருத்துவம் செய்கிறார்கள். இவர்கள் அவர்களைப் போல் தொட்டுப் பார்க்கவே பணம் பிடுங்குவதில்லை. ஆனால், மருந்துகள் விலை உயர்ந்திருக்கும். சில நாட்கள் செல்லும். பத்திய உணவு வேண்டும். வறுமை, அவன் உடலுக்குத் தேவையான சமச்சீர் உணவு இல்லாத நிலையில் குடி சமுதாய வளங்களை உறிஞ்சுகிறது. இதையெல்லாம் மனதில் எண்ணியே, 1937 லேயே அன்றைய ராஜாஜி, ஏழை உழவர்களைக் கட்குடியிலிருந்து மாற்ற சேலத்தில் மதுவிலக்கு என்ற ஒன்றை நெறிப்படுத்தினார். காங்கிரஸ் ஆட்சியின் முதல் கொள்கையே மதுவிலக்காக இருந்தது. ஆனால், அன்றே காந்திய நெறிகள் தூக்கி எறியப்பட்டன. அரசு விருந்துகள் என்ற ஒன்றுக்கே இடம் இருக்கலாகாது என்ற கோட்பாடு எங்கே? தலைநகரில் அன்றாடம் வெளிநாட்டு விருந்தினர் வரும்போது விருந்துபசாரம் செய்ய வேண்டாமா? அந்நாட்களில் ‘டோஸ்ட்’ டுக்குத் துளசி நீர் வைத்துக் கொள்ளலாம் என்று ஒரு காந்தியத் தலைவர் கூறியதைக் கேலிக் குரலில் பத்திரிகைகள் கிண்டலடித்தன.

மதுவினால் வரும் இழப்பைச் சரிகட்ட, ராஜாஜி அந்நாள் விற்பனைவரியைக் கொண்டு வந்தார். தலைவர்கள் எவர்களும் ஒழுக்க நெறிக்கான காவலர்களாக இல்லை. மதுவும் 25 ஆண்டுக் காலத்தில் திரும்பி வந்தது. விற்பனைவரியும் குட்டிகள் போட்டுப் பெருகியிருக்கிறது. இந்நாட்களில் இளம் பெண்கள் அந்நிய நாட்டுக்கான சேவைக்கூலிகளாக இரவுகளில் வேலை செய்கிறார்கள். மதுவருந்துவதும் புகைப்பிடிப்பதும் எங்களுக்கும் அழுத்தங்கள் குறையத் தேவையாக இருக்கின்றன என்று அவர்களில் ஒரு சாரார் நியாயம் செய்துகொள்கிறார்கள்.

இவர்களுக்குப் பாலியல் சார்ந்த ஆக்கிரமிப்பு, வன்முறைகள் எப்போது வேண்டுமானாலும் எந்த வடிவத்திலும் நேரலாம் என்ற நிலையில், கருக்கலைப்பு நிலையங்கள் கடவுளளித்த பிரசாதம் போல் தோன்றுகின்றன. ஆனால் போதுமான மருத்துவப் பயிற்சியாளர் இல்லாத நிலையில் முன்கூறப்பட்ட பரம்பரைத் தொழிலாளருக்கு நவீனமான முறைகளைப் பயிலச் செய்யும் முயற்சியும் நிகழ்கிறது. ஒரு குடும்பப் பெண் ஆசாரமான குடும்பம். கோயில் கொடைவிழா, திருமணம் போன்ற மங்கல நிகழ்ச்சிகள், இந்த நாட்களில் வீட்டுவிலக்கு வந்துவிட்டால், மிகவும் கடினம். நாட்கள் தள்ளிப்போக, கை மருந்துகள் உண்டு. வெறும் வயிற்றில் கேழ்வரகுக் களி, மோரில் அரிசிமாவு போட்டு ஒரு வாரம் முன்பிருந்தே அருந்துதல் என்பன போன்ற நச்சுப் பொருள் இல்லாத வகையில் மருத்துவம் செய்துகொள்வார்கள். அந்த முறைகள் பயனளித்தனவோ இல்லையோ? பயனளித்தால் நன்று; இல்லையேல் விதியின் பேரில் பழிபோட்டுக் கொள்வார்கள். ஆனால் இதற்கெல்லாம் அறிவியல் கண்டுபிடிப்புகளாக மாத்திரைகள் வந்தபின், கூசாமல், கடைகளில் வாங்கிப் போட்டுக் கொண்ட குடும்பப் பெண்கள், பதினைந்து, இருபது ஆண்டுகளுக்குப் பின்னரும் மாதவிலக்கு ஒழுங்காக இல்லாதது மட்டுமின்றி, தலைநோவு, எரிச்சல், மனஉளைச்சல் என்ற பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். விளையாட்டுப் போல் 'ப்ரோமாலிட் - என்' மாத்திரைகளை உட்கொண்டு குடும்பம் பேணிய பெண்கள், லட்சக்கணக்கில் இருக்கிறார்கள். கண் கெட்ட பிறகு சூரிய வழிபாடு என்பதுபோல, இதுபோன்ற ஹார்மோன்களுடன் விளையாடும் மாத்திரைகளை இளைய தலைமுறையின் சறுக்கல்களைத் தடுக்க சஞ்சீவினி மருந்துகளாகப் பயன்படுத்தும் நவீனம் வந்திருக்கிறது.

ஒருவகையில் இந்த மாத்திரைகளும், கருச்சிதைவு செய்யக் கூடியவையே. நிணநீர்ச் சுரப்பிகளின் இயல்பான செயல்பாட்டை மாற்றியமைக்கும் வகையில் சினை முட்டை கருத்தரிக்க இயலாமல், தடுக்கின்றன. வாந்தி, ஒவ்வாமை போன்ற பின் விளைவுகள் இருக்கலாம். மருத்துவரிடம் தொடர்ந்து அறிவுரை பெறவேண்டும். பரிசீலனைக்கு உட்பட வேண்டும். இதெல்லாம் பாடப்புத்தகங்களில் கூறியிருப்பது போன்று நடைமுறைக்கு நூற்றுக்கு நூறு சாத்தியமில்லாததாகும்.

அரசின் அணுகுமுறை எப்படியேனும் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நியாயத்தில் இருப்பதால்தான், எப்படியேனும் கிராமத்திலிருந்து அறியாமையில் ஊறிய பெண்களைத் தரகர்கள் மூலமாகப் பொருள் கொடுத்து, சிகிச்சை முகாம்களுக்குக் கொண்டு வருகிறார்கள். அறுவைச் சிகிச்சைதான். ஒரு பெரிய மகப்பேற்றுப் பொதுமருத்துவமனையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றிருக்கும் பெண் மருத்துவர், 75-80 கால கட்டங்களில் தாம் பொறுப்பாற்றச் சென்ற முகாமைப் பற்றி இப்படிக் குறிப்பிட்டார். தரகர்கள் மூலம் பணம் இருநூறு போய்ச் சேர்ந்துவிடுகிறது. இளம் மருத்துவர்கள் உற்சாகமாக அறுவைச் சிகிச்சைக்குத் தயாராக இருந்தார்கள். ஆனாலும் அறுவைச் சிகிச்சைக்கு முன் அவர்கள் நிச்சயமாக முன்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்க வேண்டும். வழக்கமான நீர் பரிசோதனை, சர்க்கரை அல்புமின் போன்றவற்றுக்கான பரிசோதனைகள் மிக அவசியம். முகாமுக்குக் கொண்டு வருவதற்கு முன், பெண்களிடம் இதன் பயன்கள், மற்றும் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் எல்லாமும் தெரிவிக்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால், இளம் மருத்துவர்கள், அந்த அறியாப் பெண்கள் எந்த வகையிலும் மாறுபட்ட கவனக்குறை வால் பாதிக்கப்படக்கூடாது என்ற கருத்தோடு சிகிச்சையில் ஈடுபட் டிருக்கவில்லை என்ற நிலையை அறிந்து கண்டித்ததாகக் கூறினார். ஒவ்வொரு பெண்ணும் தனித்த இயல்புடையவள். அந்த வகை யில் கூர்ந்த கவனத்துக்குரியவளே. ஆனால், இத்தகைய முகாம் களில், சிகிச்சைக்குப் பிறகு சில மணி நேரம் தங்கினாலே போதும். மயக்கமருந்து அதிகம் தேவையில்லாததால், மருத்துவமனையில் அதிக நேரம் தங்க வேண்டாம். அநேகமாக இதற்கென்று அமைக்கப்பெற்ற முகாம்களில் மாவட்ட சிகிச்சை மையங்களில் இந்தச் சிகிச்சை செய்யப்படுகிறது. 4-6 மணி நேரத்துக்குப் பிறகு தேவையான எளிய கஞ்சி போன்ற உணவு கொடுக்கப்படும். பின்னர் கிராமங்களில் கொண்டு விட்டுவிடுவார்கள்.

''இது கூடாது, அது கூடாது'' என்று அச்சுறுத்துவதில்லை. ஆனால், பின்னர் தொடர்பு - தொடர்ந்த கண்காணிப்பு கேள்விக் குறிதான். அடுத்த மாதவிலக்கு வரும்வரையிலும், காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லாமல், இத்தகைய சறுக்கல்களின் விளைவைத் தடுக்கும் எளிய சிகிச்சைகள் இந்நாட்களில் தோன்றி யிருக்கின்றன. ஒரு வகையில் இவையும் கருச்சிதைவு போல்

என்றாலும், மாத்திரைகள், நிணநீர்ச் சுரப்பிகளின் இயல்பான செயல்பாட்டை மாற்றியமைக்கும் வகையில் சினைமுட்டை கருத்தரிக்க இயலாமல் தடுக்கிறது. வாந்தி, ஒவ்வாமை போன்ற பின்விளைவுகள் இருக்கலாம். மருத்துவரிடம் தொடர்ந்து அறிவுரை பெற வேண்டும். பரிசீலனைக்கும் உட்பட வேண்டும். இதெல்லாம் பாடப் புத்தகங்களில் கூறியிருப்பது போன்று நடைமுறைக்கு நூற்றுக்கு நூறு சாத்தியமில்லாததாகும்.

அன்றிலிருந்து இன்றுவரை தெரிந்ததும், நடைபெறுவதும் கருவைச் சிதைக்கும் முறைதான். பணம் படைத்தவர் மாத்திரைகளை வாங்கிப் போட்டுக் கொள்ள முடியும். தொலைக்காட்சித் தொடர் நாயகிபோல் டாக்டர் அறியாமலே மாத்திரை வாங்கிப் போட்டுக்கொள்ள முடியும். இந்த வசதிகள், ஒரு வகையில் பெண்களுக்கு மிகவும் இன்றியமையாத மன உறுதி - தீவிரமான நெறிசார்ந்த உணர்வுகள், ஓர் இலக்கை நோக்கிச் சமுதாய மேம்பாடு தொடர்பாகச் செயல்படக் கூடிய துணிவு முதல், எவ்வகையிலும் முன்னேறவிடாமல் தடுக்கும் ஆணாதிக்கத்தை எதிர்நோக்கும் மனஒருமை ஆகியவற்றைச் சிதைக்கின்றன.

பொருளாதார சுயச்சார்பு, கல்வியறிவு உரிமைகள் தேடிப் பெற்ற இந்தத் தலைமுறை இளம்பெண், இன்று முழுவதுமாக விடுதலை பெற்றுவிடவில்லை என்ற சமுதாய நிலை - அன்றாடம் நிகழும் பாலியல் சார்ந்த வன்முறைகள், கொலைகள், தற்கொலைகள் போன்ற அழுக்குக் குமிழிகளில் வெளிப்படுகிறது. இவள் பூரண விடுதலைபெற, ஒருங்கிணைந்த சமுதாயபூர்வமான தன்னலமற்ற இலக்கில் செயல்பட வேண்டும். மருந்துக் கடைகளில் மருத்துவர் பரிந்துரை செய்யாத வகையில் வாணிபம் செய்யும் மாத்திரைகளை விற்பதை இவர்களைப் போன்றவர்கள் எதிர்க்க வேண்டும். அது நிகழ்வதே இல்லை.

## 18. இருத்தலுக்கான போராட்டம்

இந்திய நாட்டின் மக்கள் தொகைப் பெருக்கத்தை முன்னிட்டு, ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இனப்பெருக்கத்தை ஊக்குவிக்கும் பருவத்தில் இருக்கும் நிலையில் கட்டுப்பாட்டு அவசியம்

பற்றி நன்கு உணர்ந்திருக்க வேண்டும். உலக முழுவதும் இன்று உணவுப் பற்றாக்குறை, நீர்ப்பற்றாக்குறை, வேலையின்மை போன்ற பிரச்சனைகளை விவாதித்துக்கொண்டிருக்கிறார்கள். அத்துடன் தங்கள் வளங்களைக் காப்பாற்றிக்கொண்டு பிற நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்த அழிவு ஆயுதங்களையும், பிற படைத் தளவாடங்களையும் உற்பத்தி செய்து, அதன் வாயிலாக ஏழை நாடுகளிடையே போரை மூட்டி, அதன் பயனாக அவர்களை உறிஞ்சும் வல்லரசையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். பல மொழிகள், பல இனங்கள், பல மதங்கள், தட்ப வெப்பம் கொண்ட பிரதேசங்களை உள்ளடக்கிய இந்திய அரசியல் இந்நாள் மிகத் தீவிரமாகவும் மனித நேயத்துடனும் செயல்படுத்த வேண்டிய திட்டத்தைப் பெண்களுக்கு எதிரான கட்டாயங்களால் சின்னபின்னப்படுத்தி இருக்கும் நிலையைப் பார்க்கிறோம்.

இதுபோன்ற முக்கியமான நுட்பமாகக் கூர்ந்து செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் வெற்றி பெறுவதிலும், சமுதாயம் சார்ந்த ஒத்துழைப்பு கூடுவதற்கும், ஊடகங்களின் பங்கு இன்றியமை யாததாகும். அரசுக் கட்டுப்பாட்டில் இருக்கும் வானொலி, தொலைக்காட்சிச் சானல்கள் அவற்றின் முக்கியத்துவம் அறிந்து விளம்பரங்களையோ பயன்படக்கூடிய அறிவுரைகளையோ மக்களிடம் சென்று சேர்க்கிறார்களா என்று பார்க்கலாம்.

தொலைக்காட்சி மூலமான பிரசாரங்களில் இப்போதெல்லாம் பெண் குழந்தைக்கு ஆதரவான பெருமைகளையும், சலுகைகளை யும் ஒளிபரப்புகிறார்கள். ஆனாலும், மக்கள்தொகைக் கட்டுப் பாட்டுக்கான ஒருங்கிணைந்த தேசியக் கொள்கை என்பது புலப்பட வில்லை. ஏனெனில் தொலைக் காட்சி, வானொலியைக் காட்டிலும் கவர்ச்சியுடன் எளிய மக்களைக் கொண்டு செல்லும் சாதனம். மகளிருக்காக என்று தாய்ப்பால் வாரம், பிறப்பு, இறப்புப் பதிவு செய்தல் போன்ற விழிப்புணர்வு பெற வேண்டிய செய்திகளை ஒளிபரப்புகிறார்கள்.

ஆனால், இதுபோன்ற நிகழ்ச்சிகளை விட, குப்பம் குடிசையில் இருந்து, கோமான் மாளிகை வரையிலும் பெண்கள் விரும்பிப் பார்க்கும் நிகழ்ச்சிகள் பாம்புக் கயிறாய் எல்லோரையும் கட்டிப் போடும் மெகா சீரியல்களே. ‘சீரியல்’ குத்தகை எடுத்து, மக்களின் பயன்படு நேரங்களை, அழுகை மயமாக்கிப் பொருளீட்டும் பெரு

வாணிபத்தை நடத்துபவர்களுக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை. நம் உள்நாட்டுப் பெண்களின் சிறு தொழில்களைக் கபளீகரம் பண்ணிக்கொண்டு, உருளைக்கிழங்கு வறுவல் முதல் குடிக்கும் தண்ணீர் வரை வாணிபம் செய்ய, நம் பெண்களின் உடல்களையும் மையமாக்கி விளம்பரம் வாங்கி, ''நன்றாக அழுங்கள்! இதுதான் உங்கள் நிலை. நீங்கள் பட்டம் பெற்றாலும் சட்டம் செய்தாலும், இப்படி அழுந்துவதுதான் விதி! உங்களை நீங்களே முட்களாகக் குத்திக்கொள்வீர்கள்! உங்கள் உடல் மீது நாங்கள் மிதித்தாடுவோம்!'' என்று அறிவுறுத்தும் கருத்துக்கள் கதைத் தொடராக வருகின்றன. எதற்கும் ஆகாத முதுமையை நீட்டிக் கொண்டிருக்கையில் இந்தப் பகாசுர சீரியல் மன்னர்களிடம் யாரும் நியாயம் கேட்பதில்லை. வியாபாரிகள், அந்த சீரியல் களில் வரும் வன்முறைகளுக்குச் சொந்தக்காரர்கள். இன்று, எந்தப் பெண்ணும், ஆணைக் கருத்தடைக்கான எளிய சிகிச்சைக்கு உட்படச் சம்மதிப்பதில்லை என்பதற்கு இந்த சீரியல்கள் அன்றாடம் அவள் உள்ளுணர்வில் புகுத்தும் ஓர் அச்சம். வழக்கொழிந்து போன, கைம்பெண் முண்டிதங்கள் இந்த உலகில் நடமாடும் அதே சமயத்தில், 'வாடகைத் தாய்' சமாசாரமும் வரும். இல்லையேல், முதல் மனைவியை விட்டுவிட்டு வாரிசுக்காக, மாமியாரும், அவர் மகனும், வேறு ஒரு பெண்ணைக் கொண்டு வருவார்கள். அவளால் கருவைச் சுமக்க முடியாது என்று மருத்துவர் சொல்லிவிடுவார். தத்துப்பிள்ளை எப்படி வாரிசாகும்?

வாடகைத் தாய் யார்? உருப்படியில்லாத ஒரு பத்து பேர் உள்ள 'குடும்பத்தில்' ஒரு கையாலாகாத கணவன் தன் மனைவியை 'வாடகைத் தாய்' வாணிபம் செய்கிறான். (மாமியாரோ பிடிவாதமானவள்) வேறு ஒரு திருமணம் செய்து வைப்பேன் என்று தீவிரத்தில் இறங்குகையில் அவள் சகோதரி, உயர்ந்த சாதியில் காதலித்துக் கல்யாணம் செய்துகொண்டவள். தங்கையின் மணவாழ்வைக் காப்பாற்ற மேற்படி ஒரு வாணிபப் பெண்ணை வாடகைத்தாய் நிச்சயம் செய்ய, ஐந்து லட்சம் பேசி, முன்பணமாக ஐம்பதாயிரம் கொடுக்கிறாள். இங்கு ஒரு வில்லி தோன்றுகிறாள். மேற்படி குடும்பத்தில் சகோதரியின் சகோதரிக்கு நாத்தி. இவள் ஒரு வில்லனோடு சேர்ந்து வாடகைத் தாய் பெண்ணைச் சந்தித்து மிகப் பணக்கார, வெளிநாட்டு ஒப்பந்தம் முப்பத்தைந்து லட்சம் என்று பேசி முதல் ஒப்பந்தத்தை

முறியடிக்கச் செய்கிறாள். வேதாளம் முருங்கை மரத்தில் ஏறும் கதை. தன் இளைய சகோதரிக்காக 'வாடகைத்தாய்' ஏற்பாடு செய்ததில் அடங்கியிருந்த மாமியார், தன் மகனுடன், வாடகைத் தாய் ஏற்பாடு என்பதெல்லாம் வெறும் நடிப்பு. எங்கள் குடும்ப வாரிசுக்காக இப்போதே மறுமணம் ஏற்பாடு செய்வோம் என்று அச்சுறுத்த, இந்தச் சகோதரியும், அவருடைய உயர் சாதிக் கணவனும், 'நடிப்பல்ல' என்று எத்துணை மன்றாடியும் அவர்கள் கேட்கவில்லை. இந்த மூத்த சகோதரிதான் குடும்பங்களுக்காகத் தியாகம் செய்யும் உத்தமநாயகி. எல்லோரையும் அரவணைத்துச் செல்லும், அலுவலகத்தில் அதிகார பதவியில் (கணவன் வேலை செய்யும் அலுவலகத்தில்) இருந்தாலும், குடும்பப் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கும் எடுத்துக்காட்டான நாயகி. இவளும் இவள் கணவனும் திருமணமான பின்னரும் குடும்பப் பிரச்னைகளுக்காக ஒரு சந்ததியைப் பெறுவதைத் தள்ளிப் போடுவதாகச் சொல்லப் படுகிறது. ஆனால், இவர்கள் புலனடக்கம் கடைப்பிடிப்பவர்கள் என்று சூசகமாக அறிவுறுத்தப்படுகிறது. இந்த நிலையில் ஆத்திரம் அடைந்த அந்த உத்தம கணவன் - நாயகியின் காதலனாக இருந்து எதிர்த்து, மாமியாரையே இளகவைத்த நாயகியை, ஒப்பித் திருமணம் செய்தவன், "என் மனைவியே உங்கள் குடும்பத்துக்கு வாரிசு தர, வாடகைத் தாயாக இருப்பாள்!" என்று அறிவிக்கிறான். உத்தம நாயகியாயிற்றே! மறு பேச்சின்றி வெளியே வருகிறாள். இங்குதான் முரண்பாடு. உயர்சாதியில்லை என்றாலும் பரவா யில்லை. பெண் நல்ல குணமுள்ளவள், அலுவலக வேலை என்று தலை முண்டிதம் செய்யப்பட்ட பாட்டி முதல் கொண்டாடும் நாயகியிடம் ஒரு சந்ததியை எதிர்பார்த்து மகிழ்ச்சியுடன் காத்துக் கொண்டிருப்பவளுக்கு - மாமியாருக்குக் குண்டு வெடித்தாற்போல் இருக்கிறது. யார் வாரிசை யார் சுமப்பது? வாடகைத்தாய் இவள் என்றால், என் பிள்ளை வாடகை அப்பனா? என்று பொங்கிக் கரைகிறாள். ஆனால், நாயகி அதே பிடியில் நிற்கிறாள். இத்தகைய அபத்தங்கள் ஒவ்வொரு தொடரிலும் அன்றாடம் அறிவார்ந்த பெண்களையும் கட்டிப்போடுகின்றன.

குடும்பக் கட்டுப்பாடு தொடர்பான அனைத்துச் செய்திகளும் பெண்கள் என்றென்றும் விழிப்புணர்வு பெறாமல் வைத்திருக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

இன்னுமொரு மெகா தொடர். நாயகியர் ஐவரும், சாதனை

செய்ய வேண்டும் என்று பல துறைகளில் ஆர்வம் காட்டுபவர்கள். அதில் ஒருத்தி ஆட்சியர் ஆக வேண்டும் என்று 'நிர்வாக'த் தேர்வுக்குப் படிக்கிறாள். இவர்கள் ஒரு வகையில் கவர்ச்சிக் கன்னியராகவே அவதாரம் எடுப்பார்கள். முதலில் இவள் காட்சி ஊடகச் செய்தியாளராக ஓர் இளம் ஆட்சியாளர் அலுவலகத்தில் தோன்றுவாள். அந்த ஆட்சியர் லஞ்சம் பெறுவதாகவும் அதை அவள் அவரறியாமல் படம் பிடித்ததாகவும், காண்பவர்கள் சுவாரசியத்தைக் கூட்டும். ஆனால், அவன் மிகவும் நல்லவன் என்றும், நாயகி, ஐ.ஏ.எஸ். படிப்பவள் தன் கனவை அவளிடம் சொல்ல நெருக்கம் ஏற்பட்டுவிடும். நாயகியின் பின்னணி, அவள் ஒரு சமையற்காரக் குடும்பத்தில் இருந்து வந்தவள். தந்தை திருமணம் மற்றும் பொது விருந்துகளுக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யும் நாணயமான குத்தகைக்காரர். அவருக்கு உதவியாக உத்தமமான சகோதரியின் மகன். சகோதரிக்குக் கணவனில்லை. நாயகியின் தாய், அத்தை, மகன், தந்தை யாருமே அதிகம் படித்தவர்களல்ல. மிகுந்த அன்புடன் அவளை வளர்க்கிறார்கள். விருப்பம்போல் செயல்பட சுதந்திரம் அளித்திருக்கிறார்கள். நம்பிக்கை. ஐ.ஏ.எஸ். தேர்வுக்குப் படிக்கும் சாக்கில் மனைவி, குழந்தை என்று குடும்பம் உள்ள ஆட்சியருடன் நெருக்கம் ஏற்பட்டுவிடுகிறது. அந்தக் கயவன், ஊரில் மனைவி குழந்தை இருப்பதை மறைத்து, இவளை அனுபவிக்கிறான். இங்குதான் அந்தப் பெண் வீட்டில் ஏதோ மாத்திரை சாப்பிடுவதை அத்தை பார்க்கிறாள். 'என்னம்மா தலை வலியா?' என்று கேட்க, நாயகி மழுப்புகிறாள். அத்தைக்குத் தன் மகனை அவளுக்குக் கட்ட வேண்டும் என்று ஆசை. ஏன்? குடும்பத்தில் அனைவருக்கும் அந்த ஆசை உண்டு. சமையற்காரனான அத்தை மகனோ, இவள் மிதித்த இடத்தைப் பூசை செய்யும் மரியாதை வைத்திருக்கிறான். அந்த ஆட்சியருக்குப் பிடிக்கும் அப்பத்துடன் சாப்பாடு கொண்டு வந்தும் பரிமாறுகிறாள். ஒருநாள் அந்த மாத்திரைத்தாள் அத்தை கையில் கிடைத்துவிடுகிறது பெருக்கும்போது. அதைக் கொண்டுபோய் அடுத்த வீட்டுப் பெண்மணியிடம் காட்டுகிறாள். ''இது கருத்தடை மாத்திரையாயிற்றே? இங்கே யார் சாப்பிடுகிறார்கள்?'' என்று கேட்டு வைக்கிறார்.

தன் மகன் அண்ணன் மகளுடன் நெருக்கமாகப் பழகுவதால், இத்தனைக்கும் வந்துவிட்டதா என்று உள்ளூரப் பூரித்தாலும்,

திருமணத்தை உடனே முடிக்க வேண்டும் என்ற கவலை மேலிடுகிறது. ஆட்சியரின் மனைவி, குழந்தை வருவதும், அப்போதும் இவர்கள் உறவு தடைபடாமல் நீள்வதும் கதையின் சுவாரசியங்கள்!

இன்னும் ஒரு தொடரில், கதாநாயகி குழந்தை வேண்டுமென்று விரும்பினாலும் நாயகன் விரும்பாமல் கருத்தடை மாத்திரைகளைச் சாப்பிடச் செய்கிறான். அதே சமயத்தில் அதே அலுவலகத்தில் வேலை செய்யும் 'வில்லி' நாயகி அவள் தந்தை மரணமடைந்து கிடக்கையில், (இரண்டாந்தாரமும் அவள் காதலனும் சேர்ந்து செய்த கொலை) நாயகனை, அவசரமாகத் தன் வீட்டுக்கு அழைக்கிறாள். மேலதிகாரியாயிற்றே? இவன் வருகிறான். படுக்கையில் மலர்தூவி அலங்கரித்துக்கொண்டு அவனை வீழ்த்தி உறவு கொள்கிறாள்! இவள் மாத்திரை சாப்பிடாமல் கருவுறுகிறாள்! இப்படி அபத் தங்களுக்கு, கருத்தடை மாத்திரைகள் கருவிகளாகின்றன. தாலி படும்பாட்டைச் சொல்லி முடியாது!

இன்னொரு குடும்பக்கட்டுப்பாடு அபத்தம் கருக்கலைப்பு.

இப்போது நடந்துகொண்டிருக்கும் ஒரு சில தொடர்களில் இருந்துதான் இந்தச் செய்திகளை எழுதுகிறேன்.

ஒரு நாயகி, கூட்டுக் குடும்பம். பெரிய தொழிலதிபரின் படித்த மருமகள். தன் கணவரின் வேலைத்திறனுக்கு உரிய மரியாதை தரப் படவில்லை என்று பொருமி, ஒருவழியாகத் தொழிலில் உயர் பதவிக்குரியவராக்குகிறாள். பிறகு தன் திறமையும், வெளிப்பட வேண்டும் என்று எதிர்ப்புகளை வென்று புதிய தனித் தொழிலில் ஈடுபடுகிறாள். அப்போது கருவுற்று விடுகிறாள். மயக்கம், வாந்தி காட்டிக் கொடுத்து விடுகிறது. ஆனால், அது பித்த மயக்கம் என்று கணவனுக்கும் வீட்டாருக்கும் தெரிவித்துவிடுகிறாள். பிறகு தாய்வீடு செல்கிறாள். தாய்க்குத் தெரிந்துவிடுகிறது. மகிழ்ச்சியுடன் தொலைபேசியில் மருமகனைக் கூப்பிட்டுச் செய்தி சொல்லுமுன் மகள், அவள் வாயை அடைக்கிறாள். "நான் கருக்கலைப்பு செய்து கொள்ளப் போகிறேன்" என்று மருத்துவமனைக்குச் செல்ல ஆயத்தமாகிறாள். தாயும் அவளுடன் செல்கிறாள். மருத்துவர் இவளைப் பரிசோதனை செய்வதாகக் காட்டப்படுகிறது. "கரு நன்கு பொருந்தி இருக்கிறது. சில மாத்திரை மருந்துகள் தருகிறேன். வாழ்த்துக்கள்" என்று மருத்துவர் சொல்கையில் நாயகி

இடைமறிக்கிறாள்.

''எனக்கு இப்போது குழந்தைப்பேறு வேண்டாம். கருக்கலைப்புக்கே நான் வந்தேன்.''

மருத்துவர், அதிர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமலே, ''திருமணமான பெண்தானே?'' என்று வினவ, எல்லா விவரங்களையும் அறிகிறாள். ''முதல் குழந்தை தொழிலதிபர் வீட்டு முதல் வாரிசு. உன் புருசனைக் கூட்டி வா, அழிப்பதற்கு நான் உடன்பட மாட்டேன்'' என்று மறுத்து விடுகிறார்.

இவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருக்கும் செவிலி, இவர்கள் வெளியேறும்போது, அந்தப் பெண்ணைத் தனியே அழைக்கிறாள். ''யம்மா.. டாக்டர் இணங்கி இருந்தாலும், நான்தான் அதைச் செய்வேன். இப்போதும் என்னால் செய்ய முடியும்...''

நாயகியின் தாய் அவசரமாக வெளியேறி முன்னறையின் தொலைபேசியில், மருமகனிடம் மருத்துவமனையில் இருப்பதாகவும், உடனே வரவேண்டும் என்றும் கூறி வைத்து விடுகிறாள். திரும்புகிறாள்.

அதற்குள் அந்தச் செவிலி, பேரம் பேசி, பணம் பெற்று விடுகிறாள். தனியறைக்குக் கூட்டிச் செல்லவில்லை. அங்கே உட்கார வைத்து ஒரு ஊசி கையில் போடுகிறாள். இது முடிந்த நிலையில், கணவன் வந்து விடுகிறான். பிரசவ வலி வந்து துடிப்பதையும், பிரசவம், வயிற்றைக் கீறிக் குழந்தையை எடுக்கும் சிகிச்சை என்றெல்லாம் தத்ரூபமாகக் காட்டும் தொலைக்காட்சித் தொடரில் வெளியில் வைத்து ஒரு ஊசி போடுவதுடன் முடித்துவிட்டதாகக் காட்டும்போதே, கணவனும் வந்து விடுகிறான். உடனே நாயகி முந்திக்கொண்டு, ''அம்மாவுக்கு வயிற்று நோவு என்று அவசரமாகக் கூட்டி வந்தேன்'' என்று நடித்து இந்தக் கருக்கலைப்பு தெரியாமல் மறைக்கும்போது, மருத்துவர் அங்கே வந்துவிடுகிறார். ''ஓ.. நீங்களா? நீங்களா இவள் கணவர்?'' என்று அறிமுகம் செய்து கொண்டதும், ''உங்களிடம் நான் பேசவேண்டும்!'' என்பார்.

அப்போது செவிலி திடீரென்று, ''அம்மா, நாலாம் நம்பர் நோயாளிக்கு அவசரமாகச் சிகிச்சை செய்ய வேண்டும்'' என்று அவரை அழைத்துச் செல்வதாகக் கருக்கலைப்புப் பகுதி முடிகிறது.

கருக்கலைப்பு என்பது அவ்வளவு எளிதானதா? இதுபோன்ற, பெண்களின் வாழ்க்கையோடு தொடர்பான உண்மைகள், தொலைக்காட்சிப் பொழுதுபோக்குத் தொடர்கள் என்ற பெயரில் கொச்சைப்படுத்தப்படுவது எந்த விதத்தில் சரியானது?

குழந்தைப் பேறு என்பது, ஆணும், பெண்ணும் இணைந்து கருத்தொருமித்துத் தீர்மானிக்கப்பட வேண்டியதாகும். புருஷனுடன் வாழும் ஒரு குடும்பப் பெண் அவனுக்குத் தெரியாமல் கருக் கலைப்புச் செய்துகொள்கிறாள் என்றால், அவள் வாழ்க்கையே அந்தரத்தில் ஊசலாடுவதுபோல் சமூகம் அவளை விபசாரி என்று ஒதுக்காதா? பணம் பறிப்பதற்காக மருத்துவமனைச் செவிலி ஒரு ஊசிக்கு ஆயிரமாயிரம் விலைபேசுவதும் கருக்கலைப்பு என்று சொல்வதும் எந்த வகையில் நம்பகமானது என்று தொழில் முனைவோராகத் தன் திறமையை வெளிக்காட்டும் பெண் சிந்திக்க மாட்டாளா?

இப்படியெல்லாம் கொக்கிகளை வைக்கவே, இது கதைக் கூறாகப் புகுத்தப்படுகிறது. ஏனெனில் இந்த முடிவுக்கு எந்த விதமாகத் திருப்பம் அமையப்போகிறதென்பதில், தொலைக் காட்சித் தொடரைப் பார்ப்பவர்கள் ஆவல் கொள்வார்கள். அது இப்படியும் இருக்கலாம். கணவனுக்குச் செய்தி தெரிய, அவள் நடத்தையில் சந்தேகம் கொள்ளலாம். தன் திறமையை வெளிக்குக் கொண்டுவரும் முயற்சியில் கருப்பம் ஒரு முட்டுக்கட்டை என்று பொருளாதார சுதந்திரம் பெற்ற பெண், நவீனமான ஊசிமருந்தைப் போட்டுக் கொண்டிருக்கலாம்...

நவீன நாயகியை, கணவனின் சந்தேக அச்சில் திணிப்பதற்கும் குடும்பம் அந்நியப்படுத்துவதற்கும் கதை களம் அமைக்கிறது. இந்தப் புதிய மருந்தைப் பற்றிய விவரங்களை இந்த நவீன நாயகி ஆய்வு செய்கிறாளா?

அதுவும் இல்லை. இவருக்கு ஊசியின் விளைவால், குருதிப் பெருக்கு ஏற்படலாம். இவளால் வெளியிட முடியாத துன்பம் நேரிடலாம். அடுத்தடுத்து அந்த மருத்துவரிடம் சென்று பரிசீலனை செய்துகொள்ள இயலாத சிக்கலில் அகப்பட்டுக்கொள்ளலாம். செவிலி அஞ்சி, காணாமல் போகலாம். அல்லது கரு கலையாமல், நின்று ஊனமான குழந்தை பிறந்து வாழ்நாள் முழுவதும் குற்ற உணர்வின் தண்டனையாக வருத்தலாம். ஆக, பார்ப்பவர்கள்,

பெண்கள். ஐயோ, பாவம் என்று மூக்கைச் சிந்தி அழுகையில் ஒன்றி மேலும் மேலும் ஊக்குவிக்கப்படலாம்! இதுவே பயன்!

## 19 . 'அரசியல்' பிடிகளில் குடும்ப நலங்கள்

கிராம சுகாதாரச் செவிலியர் முந்நூறு பேர் போய் மாவட்ட மையத்தில் கூடியிருந்தனர். கிராமங்களில் தாய் - சேய் நலம், பொதுச் சுகாதாரம், தடுப்பூசி - சத்துணவு - பால்வாடி என்ற காப்பகங்கள், பிரசவங்கள், தாய்மையுடனும், பெண்களுக்கான அறிவுரைகள் போன்ற பல செய்திகளையும் இந்த மாதாந்திரக் கூட்டங்களில் இவர்கள் தங்கள் துறை நிர்வாக அலுவலருடன் விவாதிப்பதாகக் கொள்ளலாம். இது பெரும்பாலும் ஒரு வழக்கமான கூட்டமாக முடிவடையும். கிராம மையங்களுக்கான மருந்துகள், மாத்திரைகள், சத்துமாவு, பால் பவுடர் போன்ற பொருட்களைப் பெறுதல் ஆகிய கணக்குகளும் இங்கே ஒப்புதல் பெறப்படும். பஞ்சாயத்து அமைப்பின் தலைவர்களும் இங்கே இடம் பெற்றிருந்தனர். இந்தப் பிரதேசங்களில் பெண் சிசுக் கொலை நடைபெறுவதைப் பஞ்சாயத்தார் நிர்வாகத்தினர் ஒப்புக்கொண்டே இருந்ததாகச் சொல்லலாம். இதைக் கிளறி விடுவதுபோல், ஆட்சி அலுவலர் அனுமதியுடன் ஓர் ஆய்வாளர் போய்ச்சேர்ந்தார்.

''ஏனம்மா, இந்தப் பக்கங்களில் பெண் குழந்தைப் பிறப்பு விகிதம் மிகவும் குறைவாக இருக்கிறதே? காரணம் என்ன? சொல்ல முடியுமா?''

ஆய்வாளர் நாகரிகமாகச் சுற்றி வளைத்தார். எந்த மறுமொழியும் யாரிடமிருந்தும் வரவில்லை. மூன்று முறைகள் இதை வெவ்வேறு விதங்களாகக் கோரினார். கூட்டத்துக்குத் தலைமை வகித்த ஆண் அலுவலருக்குப் பொறுக்கவில்லை. இப்படி எல்லாம் கேட்டால் பதில் வராது. ''ஏம்மா? பொட்டபுள்ளங்களக் கொல பண்ணாத கிராமம் எதுனாலும் இருந்திச்சின்னா சொல்லுங்க!''

ஒரே ஒரு பெண் மட்டும் கை தூக்கினாள். அவள் ஒரு சுகாதாரச் செவிலி.

''இந்தக் கிராமத்தில் முன்ன நடந்திச்சாம். இப்ப இல்ல. ஏன்னா, பொம்புளங்களும் மூணு புள்ளன்னா 'ட்யூபெக்டமி' அறுவைச் சிகிச்சை பண்ணிக்கிடுறாங்க. ஆம்புளங்களும் சில பேருங்க அறுவைச் சிகிச்சை பண்ணிருக்காங்க!''

''பரவாயில்லையே!'' ஆய்வாளர் வியந்தார்.

''குழப்பம் இல்ல?''

செவிலிப் பெண் சிறிது தயங்கினாள். ''ஒருக்க ஆபரேஷன் பண்ணிட்டபிறகு ஒரு ஆம்புளப் பிள்ள பிறந்திடுச்சு!''

ஒரு சில நிமிடங்கள் அமைதி.

''பெண் பண்ணிக்கொண்ட பிறகா?''

''இல்லீங்க. அந்தம்மா பண்ணிக்கல. அவருதான் பண்ணிட்டாரு. அந்தம்மா கர்ப்பமாயிட்டாங்க. ஆம்புளப்புள்ள பெறந்திடிச்சி. முதல்ல ரெண்டு பொண்ணு, ஓராணு. இப்ப ஒண்ணு.''

''அப்புறம் என்ன ஆச்சி?''

ஏனெனில் அந்த ஆண் பெண்ணின் நடத்தையில் சந்தேகம் கொண்டு ஒதுக்கிவிடுவான். ஆனால் அது நடக்கவில்லை. அந்தக் குடும்பத்தலைவன், அன்றைய முதலமைச்சருக்கு அந்தப் பிள்ளையை வளர்ப்பதற்கு அவர் தாம் பொறுப்பேற்க வேண்டும் என்று எழுதினான்!

காலத்தோடு இசைந்த விழிப்புணர்வு என்றுதான் கொள்ள வேண்டும். பெண்ணை ஒதுக்கவில்லை. மருத்துவர் மீது வழக்கு போட வேண்டும் என்பது தெரியாது. மூன்று பிள்ளைகளுக்கு மேல் வருமானம் சரிக்கட்டுவது இயலாததாகும் என்று அவனே சிகிச்சைக்கு உட்பட்டான். நியாயமான வழியில் தன் கோரிக்கையை விடுத்தான்! பிறந்தது ஆண்பிள்ளையாயிற்றே? 'உங்களால் வளர்க்க முடியாத பெண் குழந்தைகளை அரசு தொட்டிலில் விடுங்கள்' என்று அரசு சொன்னாலும், சிலர் உரிமை உணர்வுகளை முன்வைத்துக் கொல்வது நடக்காமலில்லை.

உரிமை உணர்வுகள்:

ஒரு குடும்பம் என்றால், பிள்ளைகள், அவர்களுக்குச் சொந்தமாக இருக்க வேண்டும். இப்போது, 2004, டிசம்பர் 26ல் சுனாமி, ஆழிப் பேரலையில் சின்ன பின்னமான குடும்பங்களில் தாய் தகப்பனற்ற அநாதைகள், இளம்பிள்ளைகளற்ற முதியோர் என்று தனித்துவிடப்பட்ட மனித உயிர்கள் எங்கெங்கோ இறைந்து போயிருக்கின்றன. சில பெற்றோர், குடும்பக் கட்டுப்பாட்டு சிகிச்சை செய்துகொண்டுள்ளனர். இருக்கும் இரு குழந்தைகளே போதும் என்றிருந்தார்கள். இதுபோல் விபத்துகளாலும் கொள்ளை நோய்களாலும், சந்ததியே இல்லை என்ற நிலை வரலாம். அத்தகைய நிலையில், நவீன அறிவியல் உத்திகள், மாற்று அறுவைச் சிகிச்சைகள் செய்ய வழிகாட்டி இருக்கின்றன. ஆனால், இந்த நாட்டுச் சூழலில் அது அவசியமா? அநாதைப்பிள்ளைகள் ஒருபுறம் இருக்க, மறுபுறம் பிள்ளைகளை இழந்த பெற்றோர். இந்தப் பெற்றோர் அநாதைகளைத் தங்கள் பிள்ளைகளாக எடுத்து உரிமை கொண்டு, வளர்க்கலாமே என்று தோன்றலாம். ஆனால் விதியின் விளையாட்டையும், அரசு தன் பொறுப்பு போல நினைத்து, இந்த ஏழை நாட்டில் மக்கள் பெருக்கத்தால் திணறும் நாட்டில் மாற்று அறுவைச் சிகிச்சை இலவசமாகச் செய்ய உதவும். பிள்ளைகளை இழந்து பெற்றுக்கொள்ள வழியின்றி குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் வருந்த வேண்டாம் என்று அறிவிக்கிறது. இந்தச் சிகிச்சை சிக்கலானது; முழுதும் பலனளிக்கக் கூடியதென்பதற்கு உத்தரவாதமும் இல்லை. ஏதோ மக்களின் உரிமைகளை அரசு வலிந்து பறித்தது போலும், இப்படி ஒரு சந்தர்ப்பம் நேரிட்டதும் அதற்குத் தீர்வு காண்பது போலவும் நீங்கள் எப்படியேனும் சொந்தமாகவே பெற்றுக் கொள்ளலாம் என்பதற்கு என்ன இலக்கு? கருக்குழாய், விந்துக் குழாய் துண்டிப்புகள் விருப்பம்போல் துண்டிப்பதும், இணைப் பதுமான சிகிச்சைகள். இத்தகைய பொருளாதார நெருக்கடிகளில் சுற்றுச்சூழல் வாழ்வாதார நெருக்கடிகளில் அவசியமா? அவசிய மான நேரங்களில் கூட, தன்னுடையது என்பதை மாற்றிக்கொள்ள விட்டுக்கொடுக்காமல் பதவிமோக அதிகாரங்களில் இருப்பதற்காக மக்கள் நலன்களைக் கொள்ளையடிக்கும் ஓர் அரசில் பெண் அதிகார உரிமையில் இருத்தலுக்கான ஒரு செயல்படுத்த இயலாத சலுகையாகவே கருதத் தோன்றுகிறது.

மேலும், பல்வேறு இன, மொழி, பிராந்திய கட்சி வேற்றுமை களைக் கெண்ட இந்திய அரசியலில், மைய அரசுதான் நிதி ஒதுக்கீடு செய்கிறது. கேரளமும், தமிழகமும், பாண்டிச்சேரியும் வளர்ச்சி முன்னேற்றத்தில் கல்வியறிவில், பெண்கள் விழிப்புணர்வில் இருத்தலுக்கான ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் (குழந்தை மரணம், பிறப்புத் தடுப்பு, தாய் சேய் நலம், முன்னேற்றங்கள்) முதன்மை பெறும்போது, மைய அரசின் நிதி ஒதுக்கீடு குறைவது எந்த விதத்தில் நியாயம்? மாறாக, எல்லாவற்றிலும், பிடிவாதமாகப் பின்தங்கியுள்ள பீகார், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு என்பது அந்தப் பிற் போக்குச் சக்திகளைத் தட்டிக் கொடுப்பதாக, உற்சாகப்படுத்து வதாகப் பரிணமிக்கிறது.

இந்த முரண்பாடுகளுடன் திட்டங்கள் செயல்படுத்தப்படுவது, மக்களை ஏமாற்றும் ஒரு முயற்சியே. இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தால், அவர்கள் கல்விக்கும், வளர்ப்புக்கும் திருமணத்துக்கும் ஒரு தொகை முன்னேற்பாடாக அரசு ஒதுக்கித் தரும். பெற்றோரில் ஒருவர் குடும்பக்கட்டுப்பாட்டுச் சிகிச்சை செய்துகொள்ள வேண்டும். பெண் குழந்தை எட்டாவது வரை படித்திருந்தாலே அவள் திருமணத்துக்குப் பத்தாயிரம் ஒதுக்கப்படும். பெண் குழந்தைகள் தங்கிப் படிக்க, விடுதி வசதி, இலவச சைக்கிள், தொலைக்காட்சி விளம்பரம் ஆசை காட்டுகிறது. ஆனாலும், கட்சி அரசியல் எல்லாவற்றிலும் புகுந்து விளையாடுகிறது.

மகள் கல்யாணத்துக்குப் பணம் வாங்க மூந்நூறு ரூபாய் கொடுத்து விண்ணப்பப் படிவம் வாங்கிப் பூர்த்தி செய்து கொடுத்து விட்டு அந்தப் பணத்தைப் பெற ஏழைத் தகப்பன் நடையாக நடக்கிறான். எழுதப்படிக்கத் தெரியவில்லை என்றாலும் கட்சிச் செல்வாக்கில் சில ஆயிரங்களேனும் தேறுமா, திருமணம் செய்து கொண்டு கணவனுடன் வசதியாக வாழும் பெண்ணையோ, மருமகனையோ சேருமா என்பது தெரியாது.

விவசாயத்துறையில் உழவும், அறுவடையில் பகுதியும் மட்டுமே ஆண் பங்கேற்கிறான். ஆனால், பெண் எண்பது, தொண்ணூறு விழுக்காடு வேலைகளையும் செய்கிறாள். ஆனால், இரண்டு பெண்களே உடைய தந்தை நிலத்தை மருமகன் பேருக்குத்தான் எழுதுகிறான். பெண் கைம் பெண்ணாகி வந்தாலும்,

யாரோ ஓர் ஆண் உறவினர் பேரில்தான் நிலம் இருக்கிறது. ஆண் பிள்ளை மட்டுமே வேண்டும் என்ற மனப்பாங்கு வேரோடு கிள்ளி எறியப்படவில்லை.

ஆண் அறுவைச் சிகிச்சைக்கான முகாம் என்று அறிவிப்புச் செய்து இலக்கு வைத்திருப்பதாக அறிக்கை வருகிறது. மிக நவீனமான எளிய சிகிச்சை என மருத்துவர் கூறுகிறார். இது நடக்காத காரியம், ஒன்றிரண்டு பேர் வந்தாலே பெரிது. ஆனால் பெண்கள் கருக்கலைப்புச் செய்துகொள்ள வசதியாக காலை எட்டு மணியில் இருந்து மாலை ஐந்து மணி வரையில் குறிப்பிட்ட மருத்துவமனைகள் திறந்திருக்கும். எந்த வினாவும் கேட்காமல் வருபவர்கள் வசதிக்கேற்ப கருக்கலைப்பு செய்யப்படும். கட்டண மின்றி, லூப் சாதனங்கள் பொருத்தப்படும். இது மிக அண்மையில் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் குடும்பக் கட்டுப் பாட்டுக்கான தீவிர நடவடிக்கை. இந்த வசதிகளை உண்மையில் நாணயமான குடும்பப் பெண்கள் பயன்படுத்திக் கொள்கின்றனரா? ஒரு பெண்ணுக்குப் பதினான்கு வயதிலிருந்து சுமார் முப்பது ஆண்டுகள் கருத்தரிக்கக்கூடிய காலம் எனலாம். ஆணுக்கோ, ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகள், பிள்ளையைக் கொடுக்கக் கூடிய ஆற்றல் இருக்கிறது எனலாம்.

தாமதமான திருமணம் என்றால் இருபத்தைந்து என்று கொள்ளலாம், பெண்ணுக்கு. இனக்கவர்ச்சி தோன்றும் பருவத்தில் மனக்கட்டுப்பாட்டுக்கு வேண்டிய சூழல் இன்று அறவே இல்லை. ஒருவகையில் பார்க்கப்போனால், பெண்ணின் தாய்மைப் பகுதி வெறும் கருக்குழாய்த் துண்டிப்போ கருப்பைச் செயல்பாடுகளோ, அவளுடைய அந்த ஓர் உடற்கூறியலுடன் மட்டும் முடிந்து விடுவதில்லை. கருப்பையைக் கவ்விப் பற்றியிருக்கும் கருவைப் பெயர்த்துச் சுத்தம் செய்வதுடன் கருப்பைச் செயல்பாடு ஓய்ந்து விடுவதில்லை. அவளுடைய முழு இயக்கத்தில் கருப்பைச் செயல்பாடு ஒரு பகுதி மட்டுமே. தாய்மைப் பண்புகள் கருப்பைச் செயல்பாடு இருந்து, ஒரு பிள்ளையைப் பெற்றால் இயல்பாக மலருகிறது. குடும்பம் என்ற அமைப்பில் சுற்றமும், கொண்டவனின் அன்பும் இயல்பாக அதை மலரச் செய்கிறது. கணவன் மனைவியரில் கருத்து வேற்றுமையில் பிணங்கி இருந்தாலும், மணமுறிவுவரை போகாது. 'ஒரு குழந்தை பிறந்தால் இருவரையும் அது இணைத்துவிடும்' என்றுதான் பெரியோர்

அறிவுரை சொல்வது வழக்கம். மக்கள் பெருக்கத்தைச் செயற்கை முறையில் கட்டுப்படுத்துவதும், இழப்பு ஏற்பட்டால் மீண்டும் பெண்ணைச் சிகிச்சைக்கு உட்படுத்துவதும் சமூதாயச் சிக்கல் களையே அதிகமாக்கிக் கொண்டிருக்கின்றன. காலையில் இருந்து மாலைவரை கருக்கலைப்பு மையங்களைத் திறந்து வைப்பதாலும், இதற்கென்று மட்டுமே பயிற்சி பெற்றவர்கள், நவீன உத்தி கொண்டு கருக்கலைப்பு செய்வதால் பெண்மை நலிந்து போகிறது. 'பெண்ணைச் சக்தி மிகுந்தவர்களாக்குவோம்' என்ற கோசம் வெறும் பொருளாதாரச் சுயசார்பு மட்டும்தானா? இதற்கு ஆதாரமாக இருக்கும் ஆற்றலே, ஆண் ஆதிக்கங்களை எதிர்த்து வெல்லும் பேராண்மை வேண்டும்.

கருக்கலைப்பு நிலையங்களில் 'திருமணம்' என்ற உரிமை பெறாதவர்களும், கல்லூரிக் கன்னியரும், ஏமாற்றத்துக்கு உள்ளானவர்களுமே வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. தவறு என்ற செயலுக்கு ஒரு பெண் உட்படுத்தப்படும்போது அந்த விளைவை அவள் ஏற்க ஆண் ஆதிக்க சமூதாயக் குடும்பங்கள் துணிவு கொடுப்பதில்லை. அவள் உயிருக்கு உலை வைக்கிறது இது.

மார்ச் 6ம் தேதி புத்தாயிரத்தில் ஐந்தாம் வருடம். இப்படி ஒரு செய்தி. ஒரு பெண் (முப்பது வயது) கணவரை இழந்தவள். ஒரு மகள் பனிரெண்டு வயதில் பள்ளியில் படிக்கிறாள். இந்தப் பெண்மணிக்கு நாற்பத்தைந்து வயதுடைய ஒருவரின் தொடர்பு ஏற்பட்டது. (அவர் திருமணமானவரா, குடும்பத்தில் உள்ளவரா என்ற விவரம் செய்தித்தாளில் குறிப்பிடப்படவில்லை. ஏனெனில் அவர் யாராக இருந்தாலும் பாதிப்பு அவருக்கு இல்லை!) விளைவு, அவள் கர்ப்பம் அடைந்தால் வெளிக்குத் தெரியக்கூடாதே! ஒரு ஹோமியோபதி மருத்துவரை அணுகினாள். ஹோமியோபதி மருத்துவத்தில் நிபுணராக இருந்த ஒருவரிடம், கருக்கலைப்பு மருந்து பற்றிக் கேட்டபோது, கர்ப்பம், மங்களம். கருக் கலைப்புக்கென்று விதிக்கப்பட்ட மருந்து இல்லை என்று கருத்து ரைத்தார். எனவே இந்த ஹோமியோபதி மருத்துவர் சில 'கோல' மாத்திரைகள் தந்தார். கரு கலையவில்லை. சிக்கல் நேரிட்டது. அவளை அப்படியே விட்டால், அவள் குடும்பத்துக்கும், அவளுக்கும் கெட்ட பெயரா? அல்லது அவன் குடும்பத்துக்கோ அவனுக்கோ கெட்ட பெயராகுமோ? விளைவு அவளைத்

தனிமையில் எரியூட்டிக் கொன்று, புதரில் இழுத்துப் போட்டு விட்டார்கள். காவல்துறைக்குத் தெரியவந்து அந்த ஆண் மருத்துவர், மேலும் இரண்டு பெண்களையும் கைது செய்திருக்கின்றனர்.

*மார்ச் 8, வாழ்க!*

அனைத்துலக மகளிர் தினம், கால் நூற்றாண்டுக்கு முன் பொதுவுடமைக் கட்சி ஆட்சி நடந்த இடங்களில்தான் கொண்டாடப்பட்டது. உலக சமுதாயத்தில் சரிபாதியுள்ள மகளிர் ஆணாதிக்க கோட்பாடுகளில் இருந்து மீண்டு உரிமை கோரும் நாள் என்று கொண்டாடப்பட்டது. அந்நாள் விடுமுறையாகவும் இருந்தது. ஆனால் இந்நாள் மார்ச் 8, போராடப் பெற்று வரும் உரிமைகளை வஞ்சகமாகக் காலில் போட்டு மிதிக்கும் தந்திரங் களில் மகளிரைச் சிக்க வைப்பதாக இருக்கிறது. மார்ச் 8, பெண்கள் உரிமை வாரம்! உங்கள் ஆடை, ஆபரணக் கண்காட்சி! வாருங்கள்! தள்ளுபடி உண்டு! அழகு சாதனப் பொருட்கள்; வெளிநாட்டின் உன்னத நிறுவனத் தயாரிப்புகள், தள்ளுபடி விலையில்!

உங்கள் உடலைக் கவர்ச்சிகரமாக வைத்துக்கொள்ளுங்கள்! அழகு ராணிகள், பெயர் பெற்ற நடிகையர், உங்களிடம் தங்கள் கவர்ச்சி ரகசியங்களைச் சொல்வார்கள். இந்த விளம்பர நிறுவனத் தின் வினாக்களுக்கு விடை எழுதி அஞ்சலட்டையில் அனுப்புங் கள். இலவசமாக உங்களுக்கு ஒப்பனை - முகம், கை கால் நகங்கள், பற்கள், கண்கள் வசீகரமாகத் திகழ புதிய வடிவம் பெறுவீர்கள்! ‘மாடலிங்’ பயிற்சி தமிழை ஆங்கிலமாகப் பேசவும், கொஞ்சிக் கவர்ச்சியை அள்ளி வீசவும், உடல் மறையாத புதிய வடிவமைப்பு ஆடைகளை அணியவும், பூனை நடை நடக்கவும், கட்டிப் பிடித்தும் பிடிக்காமலும், உதடுகள் குவிய (முத்தம் கொடுக்கவும்) கவர்ச்சி காட்டவும், மொத்தக் கட்டணத்தில் முப்பது சதவிகிதத் தள்ளுபடியுடன் பயிற்சி அளிக்கப்படும். திரையுலகக் கனவு மெய்ப்படும் நாள் விரைவில் கூடும்.

இந்த வாரம், மகளிர் வாரம்!

இன்னொரு விளம்பரம். வீட்டுக்குப் பயன்படும் அனைத்துப் பொருட்களும் சலுகை விலையில். அடுப்புகள், குக்கர்கள், காபி மேக்கர்கள், பழம் பிழிபவை, ஈர அறவைப் பொறிகள், வீட்டலங்

காரப் பொருட்கள், இன்னபிற ஆயிரமாயிரம் பொருட்களின் வண்ண வண்ணப் படங்கள் கவர்ச்சி வலை வீசுகின்றன.

ஆனால், குடும்பத்துப் பெண் கொலை செய்யப்படுகிறாள். கோமானின் மகள் கருக்கலைப்பு, போதைமருந்து என்று விடிகிறாள். மருத்துவர் குடும்ப நல ஆலோசகர் கூறுகிறார். கருக் கலைப்பு நிரந்தரமான தீர்வாகாது. இரு மக்களிடையே இடைவெளி இருப்பதற்குத்தான் அந்த முறை பயன்படும். இரண்டு குழந்தை களுக்குப் பிறகு வேண்டாம் என்றால் அறுவைச் சிகிச்சையே உகந்தது. இருபதுக்குள் இரண்டு பெற்று விடுகிறாள். அறுவைச் சிகிச்சை உகந்ததா? அல்லது ஆண் உட்படுவானா? மருத்துவராலும் எதுவும் சொல்ல முடியாது. கருக்கலைப்பு - தாராளமயப்படுத்து வதற்கு முதன்மையான காரணம் இதுவே.

தெரிந்த கருக்கலைப்புகளைக் காட்டிலும் தெரியாமல் செய்யப் படும் முயற்சிகளில் ஓர் ஆண்டில் 78 ஆயிரம் சாவுகள் நிகழ்வதாக ஓர் அறிக்கை தெரிவிக்கிறது. இது மட்டும் எப்படி சரியான அறிக்கையாகும்? கருக்கலைப்பை அரசே மேற்கொள்வதனால், 'பாதுகாப்பற்ற' என்ற நிலைமை களையப்படுகிறது. அவ்வளவே! நோபல் பரிசு பெற்ற இந்தியப் பொருளாதார மேதை அமார்த்தியா சென், உலகெங்கும் 10 கோடி பெண்மக்கள் மாயமாகிப் போவதாகக் கூறியிருக்கிறார். கைப்பூண் அல்ல, கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டாம்!

## 20. மனிதம் விழுங்கும் அறிவுசார் இலக்குகள்

பழைய குடும்ப வாழ்க்கைமுறை இந்நாள் இல்லை. அறிவு பூர்வமாகப் பெண் இந்நாட்களில் பல தளங்களிலும் மேம்பாட டைந்து வந்திருக்கிறாள். உணவு முறை, உடை, உறையுள், உடல் இயக்கங்கள், கல்வி என்று எல்லா கூறுகளும் மக்களின் வாழ்வை அடியோடு புரட்டிப் போட்டிருக்கின்றன. இந்த நிலையில் மாற்றம் தேவையில்லை; பழமையே பொன் என்று பரம்பரைப் பல்லவி

களைப் பாடுவதில் பயனில்லை. ஆனால், புதிய மாற்றங்களுக்கும் ஓர் ஆதாரம் வேண்டும். அடிநிலை, உறுதியாக வேண்டும். மக்கட் பெருக்கத்தை இனி தாங்க இயலாத நிலை வந்துவிட்டது. ஆனாலும், பொலிவும், வலிமையும் கூடிய இளைய சமுதாயத்தை நாம் உருவாக்கியாக வேண்டும். மருத்துவ அறிவியல் சாதனைக்கு மேல் சாதனைகள் என்று புதிய கண்டுபிடிப்புகளை உலகுக்கு அளித்துக் கொண்டிருக்கிறது. அம்மை, தொண்டையடைப்பான், இளம்பிள்ளைவாதம் போன்ற நோய்களுக்குத் தடுப்பூசி கண்டிருக்கிறோம். மலேரியா என்ற குளிர் காய்ச்சல் ஐம்பதாண்டு களுக்கு முன் மிகுந்த வாதனையையும் உடல் நலிவையும் தந்து கொண்டிருந்தன. ஆனால், இந்த நோய்கள் இன்னார் இனியர் என்று பாராமல் பீடித்தன. ஆற்றில் புது வெள்ளம் வந்தால், அதைக் குடிநீராகக் குடங்களில் முகர்ந்து செல்லும்போது, வழியில் சுகாதாரப் பணியாளர் நின்று ஒவ்வொரு குடமாக மருத்துப் பொடியைத் தூவுவார். காய்ச்சி வடிகட்டிக் குடிக்கும் வழக்கமெல்லாம் தெரியாது. ஆனால் 'மருந்து' நாற்றத்துக்குத் தப்பிக் குடத்தைப் பத்திரமாக வீடு கொண்டுவரும் சாகசம் பெண் களுக்குத் (ஆண்களுக்கும் கூடத்தான்!) தெரியும். காலரா, வயிற்றுக் கடுப்பு வந்து இறப்புகள் நேரும். காலரா ஊசி போடப் பள்ளியில் இன்ஸ்பெக்டர் வருகிறார் என்றால், அந்த ஊசிக் குத்துக்குத் தப்பி, காலரா தொற்றாமல் பிழைத்த பிள்ளைகள் ஏராளம். கொக்கிப் புழுநோய், நரம்புச் சிலந்தி நோய் என்றெல்லாம் கூட மருந்துகள் கண்ணாடிக் குப்பிகளில் கொண்டு வைத்துக்கொண்டு பிள்ளை களைக் காப்பாற்றக் கசப்பு மருந்தைக் குடிக்கச் செய்வர்.

அத்தகைய பிள்ளைகள், பாட்டன் முப்பாட்டன் பாட்டிகளாகி என்றும் இயற்கை விதிக்கும் வாழ்முறையில் வாழ்ந்துவிட்டார்கள். இந் நாட்களிலும் மஞ்சட்காமாலை போன்ற தடுப்புஊசிகள் போட வேண்டும் என்று பணம் பிடுங்குகிறார்கள். பத்தாயிரம், இருபதாயிரம் என்று கொள்ளையடிக்கும் பாலர் பள்ளிகளில் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பான குடிநீர் கூட வழங்குவதில்லை. புத்தக மூட்டைகளுடன் குடிநீர் இடைவேளை உணவு என்று ஏழு மணிக்கே 'வேன்'களில் அடைபட கையில் பிடித்து நிற்கின்றனர் தாய்மார்கள். இவளுக்கு ஒருநாள் விடுப்பு வேண்டுமென்றால், மருத்துவச்சான்று கூடக் கோரப்படுகிறது. ஆனால், புத்தக மூட்டையுடன் குடிநீரும் சுமந்து செல்லவேண்டிய கட்டாயத்தைத்

தாய்மார் ஏன் எதிர்க்கவில்லை? பிள்ளைகள், சிறுவர், சிறுமியர் கல்வி என்பதுடன் குறிக்கோள் என்ன? இன்றைய கல்விக்குக் குறிக்கோள் பணம், பணம் பணம்தான். பணம் இருந்தால் வசதிகள் பெறலாம்; சுகமான வாழ்க்கை வாழலாம். 'சுகம்' என்பதன் பொருள் என்ன? 'சுகம்' சந்தோஷம்; மகிழ்ச்சி... சிறுபிள்ளைகளுக்கு அதிகாலையில் எழுந்து பள்ளிச் சுமையை உடலிலும், மனதிலும் சுமப்பது சுகமா? மூன்று வயதில் தாய்மொழியின் மலர்ச்சியைக் கொடுங்கோல் கொண்டு அடக்கி, வேற்றுமொழி பயிற்றுவிப்பது சுகமா? கல்வி வாணிபத்தில் சிறார் ஒழுங்கான மன வளர்ச்சியும் உடல் வளர்ச்சியும் பெறவில்லை. ஆண் குழந்தையானாலும், பெண் குழந்தையானாலும் இந்நாட்களில் தாயின் அடக்குமுறைக் கட்டாயங்களையே சந்திக்கிறார்கள். பழைய நாட்களில் தந்தையே பொருளாதார உற்பத்திப் பொறுப் பேற்றிருந்தான். அவனே தலைவன். தாய், பாசம், கருணை காட்டுவாள். அவன் தப்பு செய்தால் "அப்பாவிடம் சொல்வேன்!" என்று அச்சுறுத்துவாள். தாய்மடி இல்லை என்றாலும் பாட்டி, அத்தை உறவுகள் அரவணைக்கும். இன்றைய பிள்ளைகளுக்கு அத்தகைய புகலிடங்கள் இல்லை. தாயும் பொருளீட்டும் பணியில் இருப்பதால், பிள்ளைகளின் பொறுப்பைப் பெரும்பாலும் தந்தைகள் ஏற்பதில்லை. அடித்தள உழைப்பாளர் குடும்பங்களில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அரசு தர்மங்களில் பிள்ளைகள் காப்பகங்கள், மழலைப் பள்ளி, தொடர்ந்த கல்வி என்று இயங்குகின்றன. ஆனாலும், மிகக் குறைந்த விழுக்காட்டுப் பிள்ளைகளே, தொடக்கப்பள்ளி முடிந்து, பத்து எட்டுகின்றனர். வாலிபப் பருவம் கிளர்ந்து வரும்போதும் இடைநிலைக் குடும்பப் பையன்கள் அதிகமான மன அழுத்தங்களுக்கு ஆளாகிறார்கள். கல்வி, வாணிபப் போட்டி, வேலை உத்தரவாதம் எல்லாமே இளைஞர்களின் அழுத்தங்களுக்குக் காரணமாகின்றன. பணம் பிடுங்கும் ஒவ்வொரு தனியார் பள்ளியும் தங்கள் இலக்குகளை நிர்ணயித்து, மாணவர்களை நெருக்குகிறது. குமரப் பருவக் கிளர்ச்சியில் ஊடகங்கள் (இவையும் வாணிபங்கள்) இவர் களையே இலக்காக்குவதால், எல்லை கள் மீறப்படுகின்றன. திரைக் கதைகளே எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கின்றன. நம் பிள்ளைகள் ஒழுக்கமாக வளர வேண்டுமானால் சமயச் சார்பு அவசியம் என்று கருதுகிறார்கள். இந்தப் பிள்ளைகளின் தந்தை காலத்தில் சமய அடிப்படைக் குடும்பங்களில் இவ்வளவுக்கு

வற்புறுத்தப்பட்டதில்லை. நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முன் எல்லாக் குடும்பங்களிலும் பாட்டனாரோ, தாயோ, தனித்த வகையில், அவரவர் சமய உணர்வை ஆழமாகப் பதித்து இருக்க வில்லை. சமயச் சார்புள்ள குடும்பங்கள் இருந்தன. ஆனால் பள்ளிப் பாடங்களில் அவை குறிப்பாக வலியுறுத்தப்பட்ட தாகவோ தாய்மொழி கற்பித்தலில் சிக்கல்கள் மிகுந்திருந்ததாகவோ தெரியவில்லை. இப்போதோ, தொலைக்காட்சிக் குழந்தை நிகழ்ச்சி களிலும் வானொலிச் சிறார் நிகழ்ச்சிகளிலும் ஒவ்வோர் ஆண்டின் பள்ளி விழா நிகழ்ச்சிகளிலும் பிள்ளைகள் இன்ன சமயத்தவர் என்று குறிப்பாக உணர்த்தும் வண்ணம் வாய்ப்புகள் நல்கப்படு கின்றன. அவன், அவள் பெற்றோருக்கே புரியாத பகவத் கீதை சுலோகங்கள், துதிப்பாடல்கள், ஆங்கிலப் பாடல்கள் 'மேலாண் மை'க் கூறை அறிவிக்கின்றன. மழலைப் பாடல் ஆங்கிலமாகவே கவ்விப் பிடித்துக்கொண்டிருக்கிறது.

இவ்வாறு தொடர்ந்து சூழலுடன் அல்லது தன்னை ஒத்த சிறுவர், சிறுமியருடன் ஒன்றிணைய முடியாத போட்டி மனப்பான்மையுடன் சமூதாயத்துக்கும் குடும்பத்துக்கும் அந்நியமாகும் உணர்வுகளுடன் குழந்தைகள் வளர்கின்றன. சமயம் சார்ந்த உயர்கல்வி நிலையங்கள் மிகப் பிரசித்தி பெற்ற கல்வி நிலையங்கள், நூற்றாண்டாகச் சான்றோரை வழங்கிய நிலையங்கள், இன்றையச் சூழலில், சமய அடிப்படையிலேயே முதல் பரிசுக் குரிய மாணவரோ, மாணவியோ அந்தச் சமயத்தைச் சார்ந்த வரில்லை என்றால் வெளிப்படையாகவே சமய அடிப்படையில் அப்பரிசை வழங்குகிறது. இந்தச் சூழல்கள், இன்றைய வாணிபம் பிள்ளைகளுக்குப் பலவேறு மனச் சிக்கல்களைத் தோற்று விக்கின்றன. பெண்கள் ஆண்களுக்கு மேலாக ஒருமைப்படுத்தப் பட்ட மனஉறுதியுடன் இயங்குகிறார்கள். அதனாலேயே வேலை வாய்ப்புகள், கல்வி மூதன்மை அவர் களை நாடிவருகின்றன. நூற்றாண்டுகளாக 'ஆண்' என்று கோட்டைபோல் வளர்ந்திருக்கும் மேலாதிக்க உணர்வு, பெண் சீண்டலாக வெளிப்படுகிறது. வன்முறையாக வெளிப்படுகிறது. பெண் தனக்குக் கிடைக்கும் எளிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு சிக்கல்களைக் களைந்து கொள்கிறாள்.

இந்திரா காந்தி அம்மை ஆண்ட காலத்தில் அன்றைய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, சுதந்திரம் அடைந்தபின் தோற்றுவித்த

ஓர் அனாதை விடுதியை, அதன் வெள்ளிவிழாக் கொண்டாட்ட நிகழ்ச்சியில் பங்குபெற வந்தார். அப்போது இந்திரா அம்மை நிகழ்த்திய உரை குறிப்பிடத்தக்கது. வெள்ளிவிழா கொண்டாடும் இத்தகைய அமைப்புகள் வளர்ச்சி பெறலாகாது. அது ஒரு நல்ல சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அறிகுறி அல்ல. இத்தகைய ஆதரவற்றோர் இல்லங்கள் அருகிப்போக வேண்டும். பெண்கள் உரிமை பெற்றிருப்பதற்கு அதுவே அறிகுறி என்றார். இப்போது அந்த இல்லம் மேலும் மேலும் வளர்ச்சி பெற்று பொன்விழா கண்டிருக்கலாம்.

இன்னும் தாய்மாரால் குழந்தைகள் மருத்துவமனைகளில் விடப்படுகிறார்கள். தெருவோரங்களில் குப்பைத் தொட்டிகளில் விடப்படுகிறார்கள். உதவும் கரங்கள், காக்கும் கரங்கள், இத்தகைய குழந்தைகளுக்கான கிராமம் போன்ற விடுதிகள் என்றெல்லாம் பல்கிப் பெருகியிருக்கின்றன. பிறப்புத் தடுப்புகளுக்கான இத்தனை நவீன சாதனங்களும் விளைவுகளைக் கட்டுப்படுத்தியதாகத் தெரியவில்லை.

உலகின் மிகப் பழைய தொழிலான 'பொதுமகளிர் துறை' 'கணிகையர், தேவதாசியர்' என்ற மரபுகளை அழித்து வென்று வந்துகொண்டிருக்கிறது. அந்நாள், பிம்பிசார மாமன்னனின் காதலியாவதற்காக, ஸாலவதி என்ற கணிகையின் அன்னை, அவள் பெற்ற சிசுவைக் குப்பைத்தொட்டியில் விட்டாள். ஆனால், அந்தச் சிசுவே, புத்தபிட்சுவால் வளர்க்கப்பட்டு ஆயுர்வேதம் கரைகண்ட மிகப்புகழ் பெற்ற சீவகன் மருத்துவனானான் என்று வரலாறு கூறுகிறது.

இந்நாட்களிலும், அப்படி நடக்கக்கூடும். ஆனால், சிவப்பு விளக்குச் சந்தைகளுக்கு விற்கப்பட்ட இளந்தளிர்கள், கசக்கி எறியப்படுகின்றன. ஒருபக்கம், அழிக்க உதவும் நவீன மருத்துவ அறிவியல், ஏதேனும் காரணங்களால் மகப்பேறு வாய்க்கவில்லை என்றால் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்வதாகவும், நூற்றுக்கு நூறு வெற்றி உண்டு என்று முழக்குகிறது. அண்மையில் அறுபத்தேழு வயது பெண்ணுக்கும் எழுபத்திரண்டு வயது ஆணுக்கும் மருத்துவம் செய்து மகப்பேற்றை அளித்த மருத்துவருடன் பெற்றோர் செய்திப் படங்களில் காட்சி அளித்தனர். அறுபத்தேழும் எழுபத்திரண்டும், இரண்டு கிலோ

வராத இக்குழந்தையை எப்படி வளர்த்துச் சந்ததி பெருக்க வாய்ப்பளிப்பார்கள் என்பது புரியவில்லை. 'தங்களுக்கே ஒரு குழந்தை' என்பது சுகம்; மகிழ்ச்சி!

எனவே, இன்றைய சுகங்கள் இயற்கையை ஏற்பதில் இல்லை. மறுத்து செயற்கையை உருவாக்குவதில் இருப்பதாக நம்புகிறது. செயற்கை விபரீதங்களையே விளைவிக்கின்றன. 'சந்ததி' என்று பழைய மரபுகளைப் பற்றிக் கொண்டு கனவு காண்பவள் பெண். காந்தியடிகளின் மனைவி கஸ்தூரிபா, படிப்பறிவில்லாத சாதாரணப் பெண். என்றாலும், ஓர் அரிசனனின் மலசல பாண்டத்தைத் துப்புரவு செய்யும் பணியில் முகம் சுளித்தார் என்ற காரணத்துக் காகக் கணவர் அவரை வீட்டை விட்டு வெளியே தள்ளியதும், போகவில்லை, அழுது மூக்கைச் சிந்தவில்லை. "உமக்கு அறிவு இருக்கிறதா? உம்மை நம்பி வந்த மனைவியை இப்படி வெளியே தள்ளுகிறீரே?" என்று சுரீரென்ற சொற்களால் சவுக்கடி கொடுத்தார்.

ஆனால், இதே 'பா' இவர்கள் தென்னாப்பிரிக்காவை விட்டு இந்தியா திரும்புமுன் இவர்களுடைய பொதுசேவையைப் பாராட்டி, இந்திய அன்பர்கள் அளித்த பரிசுப் பொருட்களில் ஓர் அழகிய வயிரமாலை இருந்ததைக் கண்டதும், ஆசைப்பட்டார்.

எல்லாப் பொருட்களையும் தொண்டு நிதிக்காக ஏலம் விட எடுத்து வைத்தார் அடிகள். "இந்த வயிரமாலை இருக்கட்டும். எனக்கு வேண்டாம்! நாளைக்கு என் மகனுக்குத் திருமணமாகி, மருமகள் வரும்போது போடலாமே!" என்றார் கஸ்தூரிபா!

கணவனின் தன்மையறிந்தும், வாழ்ந்து அனுபவம் பெற்றும், சந்ததி - மருமகள் என்று வேரோடிய பெண்ணியல்பு மின்னலாகப் பளிச்சிடுகிறது. பெண்ணின் இந்த இயல்பையே, கருக்குழாய் துண்டிப்பாகவோ, நீர்ச் சுரப்பிகளின் 'பால்' மாற்றி, சினை முட்டைக் கோளாறுகளாகவோ உடலில் அரங்கேற்றம் செய்வத னால் விளையும் சுகங்கள், சுகங்களாக மலருகின்றனவா?

மனித வாழ்வில் சுகம் தேடுவது என்பது கானல் நீர்; கிடைத்த வாழ்வை மனப்பக்குவத்துடன் ஏற்பதே ஆனந்தத்தின் அறிகுறி என்பதுதான் இந்திய தத்துவம்.

இந்தத் தத்துவத்தைப் பொருள் புரியா வடமொழிச் சுலோகங்கள் வாயிலாகவோ, அல்லது தமிழ்த்திருமறை

வாசகங்களின் மூலமாகவோ பின்னாள் மலர இருக்கும் பொருளும் போட்டியும் குறியான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கக் கூடியதாகக் கொள்ள முடியுமா?

ஒழுக்கக் கல்வி, சூழல் இரண்டுமே முரண்பாடுகளாக இருக்கின்றனவே! எனவே தீய விளைவுகள் ஒவ்வாமை ஏற்படாதவாறு கல்வியும் ஒழுக்கமும், விடுதலை மகிழ்ச்சியும் அளிப்பதுதான் இன்றைய சமுதாயத்துக்கான அறைகூவல்!

# 21. சோதனைக் களங்கள்

ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த நிகழ்ச்சி. அப்போதெல்லாம் அரசுக் கட்டுப்பாட்டில் இருந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியில் நேயர் கடிதங்கள் முக்கியமாக இடம் பெற்றன. மகளிருக்கான நிகழ்ச்சிகளில், பார்ப்பவர்களை ஊக்குவித்துப் பங்கு பெறச் செய்யும் முயற்சியாக, மாதம் ஒருமுறை சிறந்த கடிதம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. அதற்கு ஓர் ஆயிரம் ரூபாய் பரிசும் வழங்கப் பெற்றது. அப்பரிசை, பிரபலமான ஒரு துறைப் பெண் மணியைச் சிறப்பு அழைப்பாளராக அழைத்து வழங்கச் செய்தனர். அப்படி வந்த ஒரு கடிதம், அந்த மாதத்தில் நிகழ்ந்த குடும்பக் கட்டுப்பாடு அவசியம் தொடர்பான கலந்துரையாடலைப் பற்றிய தாக இருந்தது. அதை எழுதியிருந்த பெண்மணி, தம் சுய அனுபவத்தை வைத்தே எழுதியிருந்தார் எனலாம். ஏனெனில் கருக் கலைப்புச் செய்து கொள்ளத் தீர்மானிக்கும்போது, வயிற்றி லிருக்கும் கரு, சுற்றிச் சுற்றி வந்து ‘அம்மா, என்னைக் குலைக் காதே, வளர விடு’ என்று குரல் கொடுப்பது போன்று வேதனை உண்டாவதாக எழுதியிருந்தது கடிதத்தின் சாராம்சமாக இருந்தது. இக்கடிதமே சிறந்தது என்று பரிசு அறிவிக்கப்பட்டது. அந்தப் பெண்மணிக்கு மிகுந்த மகிழ்ச்சி. குறிப்பிட்ட நாளில் மகளிர் பகுதியில் அவர் தோன்றி, கடிதத்தைப் படித்துக் காட்டிவிட்டு, சிறப்பு விருந்தினரிடம் பரிசைப்பெற்றுக் கொள்ளவேண்டும். மகிழ்ச்சியுடன் நிலையம் சென்றார். விருந்தினராக வந்திருந்த பெண் மணி, மிகவும் பிரபலமான அரசு மகப்பேறு மருத்துவராக இருந்தவர். அனுபவம் மிகுந்த பெண்மணி. மகளிருக்கான கருத்

தடை சிகிச்சைகளைப் பற்றி மட்டுமின்றி, மகப்பேறு மருத்துவம் குறித்த நூல்களும் எழுதியவர். லூப் சாதனங்கள், ட்யூபெக்டமி என்ற கருக்குழாய் அறுவைச் சிகிச்சை, நவீன லேபரோஸ்கோபி சிகிச்சை என்ற பல முறைகளிலும் அனுபவம் வாய்ந்தவர். இத்தகைய மகளிர் நல மருத்துவர் கையில் தாம் பரிசு பெறும் வாய்ப்புக்காக, நிலையத்தவரிடம் நன்றி கூறிவிட்டுக் காத்திருந்தார். ஆனால், வழக்கம்போல அவரை நிலையத்தார் கடிதத்தைப் படிக்கச் சொல்லவில்லை. ஊமையாகப் பரிசு மட்டும் பெற்றுக் கொள்ளும்படி பணித்தார்கள். காரணம் இதுதான். சிறந்த அழைப்பாளர், அரசின் குரலாக இயங்கியவர்; இயங்குபவர். பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும், அவர் அரசின் குரல்தான். மக்கள் பெருக்கத்தைக் கருக்கலைப்பால் தடை செய்யலாம் என்ற வழிமுறைக்கு எதிரான குரல், அந்தப் பெண்மணியின் கடிதம். பரிசை வழங்கலாம். எதிர்க் குரல் மீண்டும் ஒளிபரப்பலாகாது! அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள ஊடகம், குடியாட்சி உரிமைகளில் ஒன்றான எழுத்துரிமை, அல்லது பேச்சுரிமைகளை ஒப்புக் கொண்டாலும், அரசுப்பணியாளராக விசுவாசமுள்ள ஊழியராகச் செயல்பட்டவர், எதிர்க் குரலை 'மகளிர்' என்ற நோக்கில் கூட ஒப்புக் கொள்ளத் துணிவ தில்லை என்பதற்கு இது ஒரு சான்று.

வறுமையும், அறியாமையும் அழுத்தும் பெரும்பாலான இந்திய மகளிர் 'மாஸ் கேம்ப்' எனப்படும் சிகிச்சைக் கூடங்களில் கருக்குழாய்த் துண்டிப்புச் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்; பெண்கள் ஒவ்வொருவரும், தனித்தனி உயிரியல்பு உடையவர்கள் என்று மருத்துவர் பலர் ஒப்புக் கொண்டாலும், அரசுக்கு விசுவாசமாகச் செயல்பட வேண்டியவர்களாகவே இயங்கு கிறார்கள். கருத்தடைச் சாதனங்கள் எல்லாமே பயனற்றவை அல்ல. நூற்றுக்கு நூறு என்று உத்தரவாதம் உடையவையும் அல்ல. நம் பெண்களும், ஆண்களும் இந்த மிக முக்கியமான சமூகப் பொறுப்பில் பங்கேற்று அவரவர்க்கு உரிய சாதனத்தை ஏற்றுத் தானாக வேண்டும் என்ற நிலைக்கு இன்று வந்திருக்கிறோம்.

கருத்தடைச் சாதனங்களைப் பற்றி நன்கு அறிந்திருக்கும் மருத்துவர்கள், அறியாமையும் வறுமையும் குலவும் பெண்கள், புரிந்துகொள்ளமாட்டார்கள் என்று ஒரு முடிவை முன்பே நிச்சயித்து அவர்கள் மேல் திணிப்பது என்பது சரியன்று. இந்தக் காரணத்தாலேயே மக்கள் பெருக்கத்தடை இயக்கமாக மக்களால்

ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனலாம்.

அதன் அவசியத்தைப் பற்றி அறிந்துகொள்ளாமலே பெண்கள் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவதனால் கடந்த கால் நூற்றாண்டு காலங்களில் பல்வேறு நவீன முறைகள் வந்தபின்னரும், ஒரு குறிப் பிட்ட இடைநிலை வர்க்கப் பெண்களே, தமக்குரிய சாதனங்களைத் தேர்ந்து, சிறு குடும்ப விதியை நெறிப்படுத்துகின்றனர்.

ஆணுக்குரிய விந்துக்குழாய் அறுவைச்சிகிச்சை, தழும்பு கூடத் தெரியாத வண்ணம் பத்தே நிமிடங்களில் செயல்படுத்தப்படும் நவீன மருத்துவம் வந்திருக்கிறது. அண்மையில் இதற்கான சிகிச்சை மூகாம்களும் அமைந்திருந்தன. ஆனால், குடும்பங்களில் ஆண் - பெண் மனநலங்கள், நம்பிக்கைகள், ஒழுக்கக்கேடுகளின் விளைவு கள் தடுக்கப்படலாம் என்ற கருத்தில் தகர்ந்து போகின்றன. ஆண்... மேலானவன். இது ஒருபுறமிருக்க நவீனமான பெண்ணை மையப்படுத்திய, கருத்தடைச் சாதனங்களைப் பற்றிய முழு விவரங்கள், அதை ஏற்கும் பெண்களுக்குத் தெரிவிக்கப்படு வதில்லை. இவை அனைத்தும், பெண்ணின் கருப்பை நலனை, ஒழுங்கான நிணநீர்ச்சுரப்பிகளின் இயக்கங்களால் பராமரிக்கப் படும் இயல்பில் புகுந்து விளையாடுபவை. டெபோ - ப்ரோவரா (Depo - Provera) இது ஊசி மூலம் கொடுக்கப்படுவதாகும். ஒரு ஊசி போட்டுக் கொண்டால், மூன்று மாதங்கள் வரை கருத்தரியாமை நீடிக்கும். இந்த ஊசி மருந்தை ஐக்கிய அமெரிக்க நிறுவனம் தயாரிக்கிறது. இதேபோல் 'நெட் என்' என்ற ஊசி மருந்தை ஜர்மானிய நிறுவனம் தயாரிக்கிறது. இதை இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை போட்டுக்கொள்ள வேண்டும்.

இது போன்ற கருத்தடை ஊசிகளை 130 நாடுகளைச் சேர்ந்த 1.3 கோடிப் பேர் பயன்படுத்துவதாகவும் ஏறக்குறைய 20 ஆண்டு காலமாகப் புழக்கத்தில் இருப்பதாகவும், உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது. டெப்போ ப்ரோவரா ஊசி, உலகிலேயே அதிகமான பெண்கள் ஏற்றிருக்கும் கருத்தடைச் சாதனமாக இந்தோனே சியாவில் முதன்மை பெற்றிருக்கிறது. இந்த மருந்து, தாய்லாந்து, ஜமைக்கா, நியூசிலாந்து, தென்னாப்ரிக்கா, சீனம் ஆகிய நாடு களிலும் பரவலாகப் புழக்கத்தில் இருந்து வருகிறது. அனைத்துலக திட்டமிட்ட பெற்றோர் சம்மேளனமும், ஸ்வீடன், பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளின் மிகக் கருத்துடன் பெண்களின்

உடல்நலங்களைக் கண்காணிக்கும் நிறுவனங்களும் 1992ம் ஆண்டிலிருந்து இம்மருந்தை அனுமதித்துப் பரிந்துரைத்திருக்கிறது.

என்றாலும், பெண்கள் கூட்டமைப்புகள், டெபோ - ப்ரோவரா, நெட் இன் மருந்துகளைக் கருத்தடைச் சாதனங்களாகப் பயன்படுத்துவது, மகளிர் உடல் நலத்துக்கு உகந்ததல்ல என்று எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். பிரிட்டனில் இது மிகவும் கட்டுப்பாடு களுக்குட்பட்டே பயன் படுத்தப்படுகிறது. ஆனால், இந்தியாவில் இன்னமும் தேசிய குடும்ப நலத்திட்டத்தில் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கவில்லை என்றாலும், இந்த இரு ஊசிமருந்துகளும் கடைகளில் கிடைக்கின்றன. இந்த மருந்துகள் உலக முழுவதும் கருப்பைச் சுவர் - சவ்வுகளில் ஏற்படும் பல்வேறு கோளாறு களுக்கு - புற்றுநோய் உட்பட - மருந்தாக மட்டுமே உலகம் முழுவதும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

இந்த மருந்துகள் கருத்தடைச் சாதனங்களாகப் பயன்படுத்தப் படும்போது சாதாரணமாக ஏற்படக்கூடிய பின் விளைவுகளை மருத்துவர் அல்லது (மருந்துக் கடைக்காரர்) வெளிப்படையாகத் தெரிவிப்பதில்லை. ஆனால், உடல் பருமனாவதும், ரத்தப் போக்கு, அல்லது மாதவிலக்கு ஒழுங்கீனமாதல் மிகக் குறைந்த சதவிகிதத்தினருக்கு மட்டுமே ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது.

இதைப்போல், தோலுக்கடியில் வைத்துக்கொள்ளும் 'நார்ப்ளான்ட்' என்ற கருத்தடைச் சாதனம், அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதுவும் முழங்கைக்கு மேலோ, கீழோ, தோலுக்கடியில் செலுத்தப்படும் மருந்துக் குச்சியே. இது இரண்டு குச்சிகளாகவும் விசிறி போல் வைக்கப்படும் ஆறுகுச்சி களாகவும் தோலுக்கடியில் இருந்து குறிப்பிட்ட காலத்துக்குக் கருத் தரிப்பைத் தடுக்குமாம்.

இது கருப்பைச் சளிச் சவ்வைத் தடிக்கச் செய்து விந்தணு உட்புகாமல் தடுக்கும்; சினைமுட்டை முதிர்ந்து வராமல் தடுக்கும்; கருப்பைச் சுவரில் சினைமுட்டை கருவாகிக் கவ்விப்பிடிக்க விடாமல் தடுக்கும். ஆனால் இத்தகைய சாதனங்கள் பெண்களின் உடல் நலத்துக்குத் தீங்கு விளைவிப்பவை என்று மருத்துவர்களி டையே சர்ச்சைகளும் நீதிமன்ற வழக்குகளும் தொடர்பான ஊடகச் செய்திகளும் எழுப்ப பிரிட்டனில் 1999ல் தடை செய்யப்பட்டன.

அமெரிக்க ஐக்கிய நாட்டிலும், 1997 லேயே இவற்றுக்கு ஆதரவு குறைந்துவிட்டது.

இவை நம் நாட்டுக்கு ஏற்றவை அல்ல என்பதற்கான காரணங்களில் முதன்மையானது இது விலை அதிகமானது. இதைப் புகுத்துவதற்கு சிறந்த பயிற்சியாளர் தேவை. இவை தவிர முன் கூறப்பட்ட இரத்தப்போக்கு, ஒழுங்கற்ற மாதவிலக்கு, தலைநோய் ஆகியவற்றுடன் கருத்தரித்துவிட்டால் கருக்குழாயில் கருமுதிர்ச்சி, சினைப்பைக் கட்டிகள் போன்ற விளைவுகள் சொல்லப் படுகின்றன. மேலும் 5-7 ஆண்டுகளுக்கு இந்தச் சாதனம் பயன் தரக்கூடும் என்றாலும், அதை வெளியில் எடுக்கும் மருத்துவம், மிகவும் சிக்கலாகிப் போகலாம்.

எந்தக் கருத்தடைச் சாதனமும் அதை ஏற்கும் பெண்ணின் புரிந்து கொள்ளலும் இசைவும் இருக்கும்போது தான் பயனும் சிக்கலில்லாமல் எதிர்பார்க்கக்கூடியதுமாகலாம்.

ஒவ்வொரு பெண்ணுக்கும், மாதவிலக்குகளுக்கு இடைப்பட்ட நாட்களில் அதிகபட்சம் நான்கே நாட்களில்தான் கருத்தரிப்பு நிகழக்கூடும். அந்த நான்கு நாட்களில் நிகழக்கூடிய கருத்தரிப்புக் காக, அவள் உடலைப் பல்வேறு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் கொண்டு தாக்குவது எந்த வகையில் நியாயமாகும்?

முதலில் இவ்வகையிலான ஆய்வுகளும் அறிவியல் மேன்மை களும், கண்டுபிடிப்புகளும் பெண்ணின் உடலை அவளுக்கே அந்நியமாக்கித் தீர்ப்பதையே வலியுறுத்துகின்றன. இவற்றுக்கான நிதியும்கூட எப்படியேனும் மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தித் தீர வேண்டும் என்ற அவசியம் கருதி வழி முறைகளைப் பற்றிக் கவலைப்படாத நாடுகளுக்கு அளிக்கப் படுகிறது. அறிவியலில் மேம்பாடு பெற, நிபந்தனையும் கட்டுப் பாடுகளும் இருக்கக் கூடாது என்ற பொதுவிதிகள், பெண்ணின் கருப்பைச் செயல் பாட்டை மையமாக வைத்த ஆய்வுகளுக்குப் பொருந்தாதவை.

இந்தியாவைப் பொறுத்தவரை, ஒரு புதிய கருத்தடைச் சாதனத்தைப் பரிசீலனை நோக்கில் ஒரு பெண்ணை ஏற்கச் செய்யு முன், அதைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் உண்மையாகக் கண்டறிந்தவைகளையும் விளக்கிய பின்னரே ஏற்றுக் கொள்வதான இசைவு பெறப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், உண்மை அதுவல்ல.

வெளிநாட்டுத் தொடர்புடன் இங்கு கொண்டுவரப்படும் சாதனங்களின் ஆய்வாளர், 'வாணிபம்' ஒன்றையே குறிக் கோளாக்கிச் சாதக விளைவுகளை மட்டுமே விரித்துரைப்பர். சில தருணங்களில் இது சோதனை செய்யப்படுகிறது என்பதையே அறிந்திராத மருத்துவர்கள் அதன் சாதக பாதக விளைவுகளை, மருத்துவமனைக்கு இசைவு தெரிவித்து வரும் பெண்ணுக்கு விளக்க இடமேயில்லை.

'இந்தக் குச்சிகளுக்கு 'நார்ப்ளான்ட்' என்று பெயர். இது புதிய இலகுவான கருத்தடைச் சாதனம். ஒரு சிறு அறுவைச் சிகிச்சை செய்து உடன் கைத்தண்டில் இது பதிக்கப்பெறும். ஐந்து ஆண்டு கள் நீ கருவுறமாட்டாய். உன் இல்லறச் சுகத்துக்குக் குந்தகம் இல்லை. நீ ஐந்து ஆண்டுகள் சென்றபின் வந்தால், இதேபோல் சிறு அறுவைச் சிகிச்சை செய்து எடுத்துவிடுவோம்'.

அரசுத் தொடர்பில்லாத சமூக சேவை ஊழியர்கள், உடன் இருக்கும் போது இந்த விவரங்களே தெரிவிக்கப்படுகின்றன. இந்த 'நார்ப்ளான்ட்' 1,2,3 என்ற வகைகள் பரிசோதனை செய்யப் படும்போது, 1,2 ல் கண்ட ஒவ்வாத பின்விளைவுகள் சொல்லப் படுவதில்லை. ஏனெனில் இந்தப் பெண்கள் அறிவிலிகள்! சோத னைக்கு உள்ளாக்கப்படும் பெண்ணுக்கு நிச்சயமாகத் தெரிவிக்கப் படவேண்டும்; பின்னரே இசைவு பெற்றதாகக் கருதலாம் என்பது விதி.

அன்றைய 'லூப்' சாதனத்தில் இருந்து இன்றைய நவீன நிண நீர்ச்சுரப்பிகளின் இயல்புகளை அறிவியல் சாதனைகளால் மாற்றி யமைக்கப்படும் மாத்திரைகள், ஊசிமருந்துகள், குச்சிகள், வளையங்கள் போன்ற பல்வேறு சாதனங்கள் வரையிலும் இந்திய அரசு பெண்களை அந்நியப்படுத்திவிட்டு, போலியான பெண் சக்தி பெறும் கோசங்களை முன்நிறுத்தி, தம்மையும் ஏமாற்றிக் கொண்டு மகளிரை, மக்களை, ஏமாற்றிக்கொண்டிருக்கிறது.

இந்தப் பத்து வளர்ச்சித் திட்டங்களும், பதவி வெறிபிடித்த அரசியல்வாதிகள் அடங்கிய அரசியல் கட்சிகள் மக்களின் நலன் களையும், இயற்கைவளங்களையும் கொஞ்சம் கொஞ்சமாகப் பொன்னைக் கரடுமுரடுக்கல்லில் தேய்ப்பதுபோல் தேய்த்து, நிராசைக் குழியில் மட்டுமே தள்ளி இருக்கின்றன.

இதிலிருந்து நாம் மீள வேண்டும். எப்படி? நம் தேசத்து இளமைகள், நம்பிக்கை நலன்கள், பல்வேறு வாணிபங்களில் சிதையாமல் பாதுகாக்கப்படவேண்டும். நோஞ்சான் குழந்தைகளும் நீராதாரம் இல்லாப் பிணிகளும், நம் எதிர்காலம் அல்ல. இன்றைய அரசியலின் வெற்று வார்த்தைகளைப்போல் பல திட்டங்கள் கேட்டுவிட்டோம். ஐந்தாண்டுத் திட்டங்கள், தேசிய விரிவாக்க நலத்திட்டம், ஜவஹர் ரோஜ்கர் யோஜனா, இந்திரா ஆவாஸ் யோஜனா இன்னும் வேலைக்கு உணவு, நூறு நாட்களுக்கு என்ற திட்டம்! அந்தத் திட்டங்கள் செயல்படவில்லையா? ஏழைகள் வரி செலுத்தவில்லையா? ஏழைமை ஏன் அழியவில்லை? கோடிகள் புழங்கும் வாணிபங்கள் எப்படிச் செழிக்கின்றன? கிராமங்களில் இருந்து குடும்பம் குடும்பமாகப் பழையதை இடித்துப் புதிய அடுக்குமாளிகைகள் எழுப்ப ஏன் வருகிறார்கள்? வந்த இடத்தில் பாதுகாப்பான நிழல் உண்டா? 'பெண்'கள் அந்நாட்களில் பாண்டு எனப்படும் அகலச் சட்டிகளில் கல் மண் சுமந்தார்கள். இந்நாட்களில் சிமிட்டிச் சாக்குகளில் மணலையும், கற்களையும் சுமந்து சாரப்படி ஏறுகிறார்கள். அவள் உடம்புக்குக் கருத்தடைச்சாதனம் பாதுகாப்பா?

சமூதாய உற்பத்திக்கான நாயகியாகத் திகழும் பெண், பொருளாதாரச் சுமையையும் சுமக்கும்போது, கடினமான மன அழுத்தத்துக்கு ஆளாகிறாள். 'அந்த மூன்று' நாட்களுக்கான பஞ்சுக்கவசங்களை விற்கும் நிறுவனங்கள் இவள் உடலோடு இவள் நாணங்களையும் விளம்பரங்களில் வாரி இறைக்கின்றன. இந்த அழுத்தங்களோடு கட்டிட வேலை செய்யும் கூலிப் பெண்களிலிருந்து, மிகப் பொறுப்பான நிர்வாகப் பணி செய்பவர் வரை பல்வேறு சிக்கல்களில் நுழைந்து மீளுகிறார்கள். உங்கள் இரட்டைப் பொறுப்புக்குச் சாதகமாக இவை அழுத்தக்கலன், அழுக்குப்படியாமல் பாதுகாக்க ஆயிரமாயிரம் பொடிகள், பளபளப்பைப் பராமரிக்கப் புதிய கண்டுபிடிப்புகள் என்பதெல்லாம் அவளை மீண்டும் மீண்டும் எழுந்திருக்க முடியாமல் செய்யும் கண்டுபிடிப்புகளே. புதிய கட்டிடம் எழுப்பும் இடத்தில், ஏதேதோ குச்சிகள், மரக்கழிவுகளைப் போட்டு ஓர் அலுமினியம் குண்டானில் சோறு பொங்கவிடும் பெண்களின் அல்லல்களை யாரேனும் பகிர்ந்துகொண்டிருக்கிறார்களா? அவளுடைய ஊர் பெயர்ந்து வந்த கூலியில் பஞ்சுக்கவசம் வாங்கப் பணம்

இருக்குமா? பிளாஸ்டிக் குடத்தில் நீர் அடித்துச் சுமந்து வரும்போது மணல், கலவை சுமை சுமந்து படியேறும்போது அவள் படும் இன்னல்கள் தீர்க்கப்பட்டிருக்கின்றனவா? எல்லாப் பெண்களுமே ஏதேனும் ஒரு வகையில் அழுத்தம் அனுபவிப்பதால், இன்பப் பங்கீடோ, துன்பப்பங்கீடோ, பெண்ணுக்குப் பெண் ஏற்பட வழியில்லாமல் போகிறது. இந்தப் பிரித்தாளும் நுட்பங்களே ஆணின் ஆதிக்கங்களுக்கு வலிமை சேர்க்கின்றன. அழுத்தக் கலனிலும் நவீன அடுப்புகளிலும் ஆண் சமைப்பதில்லை. எந்த வசதிக்கும், பின்புலம் உண்டு. விறகு சுள்ளியை வைத்து எரியவிட்டு, ஒரு சோற்றை வடித்து, ஏதோ ஒரு கறி - குழம்பு வைத்த எளிமையில், எத்தனை சிக்கல்கள்? அழுத்தக் கலன் பராமரிப்பு, அடுப்புப் பராமரிப்பு, எல்லாமே சமயத்தில் அவளைக் கவிழ்க்கும். சந்தையில் நேற்று வாங்கின பொருளுக்கு இன்று உதிரிகள் இருக்காது. பழையதைக் கொடுத்து புதிய பளபளப்பைப் பெறுங்கள் என்று தந்திர வாணிபங்கள் இவள் தலையில் விடியும்!

வசதிகள் எதுவுமே வசதிகள் இல்லை என்பதைக் கருத்தடைச் சாதனங்களில் இருந்து காய்கறி நறுக்கும் சாதனம் வரையில் பெண்ணைப் பொறிகளில் சிக்க வைக்கும் தந்திரங்களே என்பதை மெய்யாக்குகின்றன. எந்த வசதியும் சிக்கலுக்கான எந்தத் தீர்வு முயற்சியும் ஆண் - பெண் இருபாலரையும் கடமைப்பட்டவர் களாகச் சமமாகப் பங்கேற்கச் செய்யும்வரை, தீர்வு முழுப் பயனையும் காட்டாது.

## 22. தொலைக்காட்சி அசுரர்கள்

தொலைக்காட்சியின் உபயங்களைச் சொல்லாமல் பெண் தொடர்பான எந்த ஒரு நியாய, அநியாயத்தையும் கூற முடிய வில்லை. தேவதாசி முறை ஒழிந்துவிட்டது. ஆனாலும், பெண் வாணிபத்தைத் தொலைக்காட்சி 'ஜாம் ஜாம்' என்று நடத்திப் பணம் குவிக்கும் கோடி புரளும் வாணிபங்கள் நடக்கின்றன. இதில் முக்கியமான சாதனம் சினிமாவில் இடம் பெறும் பெண் - உடலை மையமாகக் காட்டும் ஆட்டம் பாட்டங்கள். இந்த நிகழ்ச்சிகளுக்கு வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி வெல்லப்பிள்ளையாருக்கே

நிவேதனம் செய்வது போன்று விளம்பரங்கள் உதவுகின்றன. விளம்பரங்களிலும் 'பெண்'தான் சாதனம் என்பதைச் சொல்ல வேண்டுமா? ஆனால், வழக்கமான பற்பசை, ஆண் முகம் மழிக்கும் சாதனங்கள், கிரீம்கள், இன்ன பிற பொருட்களின் விளம்பர மில்லாமல், ஆட்கொல்லித் தேய்வு நோய்க்கட்டுப் பாட்டுக்கான விளம்பரம் இது. இந்த விளம்பரத்துக்காகத் தேர்வு செய்யப்படும் நிகழ்ச்சி, 'டாப்டென்' எனப்படும் சினிமாக்களி லிருந்து பொறுக்கப்பட்ட ஆட்டபாட்ட கவர்ச்சி நடன நிகழ்ச்சிகள். இடையில் விளம்பர வாசகங்களில் 'ஆணுறை' விளம்பரம் வரலாம். 'புள்ளி ராஜா' என்ற ஆண், கவசம் அணியாமல் மது குடித்த மப்புடன் 'பலான' பெண்ணிடம் செல்லலாகாது என்ற அறிவுரை வரலாம். மேலும் 'பலான' பெண் பார்ப்பதற்கு நன்றாகவே இருப்பாள். ஆனால் அவள் நோய்க் கிருமிகளைச் சேமித்துக்கொண்டு கவசமில்லாமல் வருபவர்களைக் குழியில் தள்ளும் நோயைக் கொடுப்பாள் என்பன போன்ற ஆணுக்குத் தேவையான அறிவுரைகளே விளம்பரம்.

இந்த 'டாப் டென் - டாப்லெஸ்' ஆடல்களைப் பார்க்கும், ரசிக்கும் கும்பல் நிச்சயமாக வெறிபிடித்துப் போகும். வெறிபிடித்த நிலையில் ஐந்து வயசு நிரம்பாத பெண் குழந்தையும் இவன் கண்களில் வெறி தீர்க்கும் சாதனமாகத் தோன்றும். கூட்டங்களில் பெண்களைச் சீண்ட வைக்கும். தோளில் உரசுவதும் தொடக்கூடாத இடங்களில் தன் வெறியை இறக்கவும் முயலலாம் என்பதையும் சினிமாக்களே சொல்லிக் கொடுக்கின்றன. இது தவிர இதைத் தடை செய்ய வேண்டும் என்று ஊடகங்களில் யாரேனும் குரல் கொடுத்தாலும், வழக்குப்பதிவு செய்தாலும், இலாபம் அவர்களுக்கே! ஏனெனில் அதுவும் ஒரு விளம்பரமே!

இந்த ஆட்கொல்லித் தேய்வு நோய் பற்றிய சிக்கலும், அபாயமும், ஒரு கால் நூற்றாண்டுகாலமாகவே, உலகெங்கும் அச்சுறுத்தலோடு, தீர்வுக்கான அறிவார்ந்த ஆய்வுகள், தடுப்பு அவசியங்கள் என்று வலியுறுத்தப்பட்டு வருகின்றன. இந்த நோய் பற்றினால் மருந்தில்லை; மரணமே விடிவு என்ற அச்சுறுத்தல் மனித சமூதாயத்தைப் பாதித்தது. தொழுநோய், காசநோய் போன்ற பிணிகளுக்கு ஆட்பட்டவர்களைச் சமூதாயம் அந்நாள் ஒதுக்கி வைத்தது. தொழுநோய், பாவிக்கு அளிக்கப்பட்ட தண்டனை என்று பார்க்கப்பட்டது. தொடக்கக் காலத்தில் வெளிப்படையாகத்

தெரியாது என்றாலும், வெண்புள்ளிச் சரும நோய்கள் கூட சமூதாயத்தாரால் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. திருமணம் என்றால், குடும்பப் பரம்பரை, சாதகம், சோதிடம், குலம், கோத்திரம் என்றெல்லாம் பார்ப்பவர்கள். அதுவும் ஆணுக்குப் பெண் பார்ப்பதென்றால் தோண்டித் துருவுவார்கள். திருமணம் நிச்சயமானதும் எதிர்பாராவிதமாக யாரேனும் உறவினர் இறந்தாலே போதும். திருமணத்தை நிறுத்துவதற்கு அதுவே காரணமாகும். 'சகுனமில்லை; சாமி சன்னதியில் பூக்கட்டிப் போட்டதில் ஒப்புதல் வரவில்லை' என்று நிறுத்திவிடுவார்கள். ஒருமுறை நிச்சயமான திருமணம் நின்றுபோனால், பெண்ணுக்கு அதுவே குறையாகி விடும். இல்லாத கற்பிதங்கள் அவளைச் சுற்றிப் பரவும். ஆனால், ஆண் நடத்தை சரியில்லாமல் இருந்து அலைந்து திரிந்தபின் அவனுக்கு ஒரு கால்கட்டு என்று பெற்றோர் துருவித்துருவித் திருமணம் நிச்சயம் செய்யலாம். யாரேனும் பையனின் நடத்தைப் பற்றி ஐயம் தெரிவித்தாலும், 'எங்கள் பெண் கெட்டிக்காரி; திருத்திவிடுவாள்!' என்று அதை மிக இலேசாக ஒதுக்கிவிடுவார்கள். 'ஆண்கள் இயல்பு' அது! குளவி கொட்டும், ஆனால் அதன் பக்கம் போனால் மட்டுமே பாதுகாப்புக்காகக் கொட்டும். குளவி, தேள், பாம்பு எல்லாவற்றுக்கும் மேலானவன் மனிதன். ஆண் - இவன் பக்கம் போய் எந்தப் பெண்ணும் வம்பிழுக்க முடியாது. அவள் பாதுகாப்புக்காகப் பர்தாவுக்குள் மூச்சுத் திணறவைக்கும் மரபுடைய சமுதாயம் இது.

எனவே 'எய்ட்ஸ் நோய்' பால்வினை நோயின் மறு அவதாரம் எனக் கொள்ளலாம். பால்வினை நோயும், அந்தக் காலத்தில் 'பெண் பிள்ளை சீக்கு' என்றுதான் குறிக்கப்பட்டது. அவளை வாணிபப் பொருளாக்கிக் குலைத்த ஆண்தான் நோய்க்குக் காரணமானவன். அவன் திருமணம் செய்துகொண்டு அவளுக்கும், சந்ததிக்கும் நோயை வழங்குவான். ''ஆம்புள சரியில்லை. குழந்தை பிறந்ததும் கழுதைப்பாலோ, கரடிப் பாலோ ஒரு சங்கு புகட்டு'' என்று பாது காப்பாக முற்காலங்களில் கிழவிகள் சொல்வார்கள்! தோல் நோய் கள் ஏற்படாமல் தடுக்குமாம்.

பழைய பால்வினை நோய்களுக்கு மருந்துகள் வந்துவிட்டன. இந்தப் புதிய நோய் மனித உடலின் எதிர்ப்பு - தடுப்புசக்தி அணு மூல வளையங்களையே அழித்துவிடும் தேய்மானத்தைச் செய்கிறது. இன்றயை சூழலில் நச்சுக் கிருமிகள் அங்கிங்கெனாத

படி எங்கும் இருக்கின்றன. ஒவ்வொரு நோயும் எதிர்ப்புச் சக்தி, தேய்ந்துபோன உடலைத் தேடி வருகின்றன. இந்த நோய்க்கான கூறுகளைத் தோற்றுவிக்கும் வைரஸ் என்ற கிருமிகள் (H.I.V.) வளரக்கூடிய, வரவேற்கக்கூடிய தீங்கு இரத்தத்தில் இருக்கிறதா என்று கண்டறியும் வாய்ப்பு, தொடக்கக் காலத்தில் நம்நாட்டில் இல்லை. குருதியை அந்த வகையில் சிறப்புப் பரிசோதனை செய்யும் வசதிகளும் பரவலாக இல்லை. சாதாரணமாகவே, விபத்து, அறுவைச் சிகிச்சைகளுக்குத் தேவையான வகை இரத்தம், இரத்த சேமிப்பு நிலையங்களில் கிடைக்கும் என்று கூறமுடியாது. 'இரத்த தானம் செய்வீர்' என்று விளம்பரங்கள் வாயிலாக வேண்டப்படுகிறது. பணத்துக்காகக் குடிகாரன், நோய்க்காரன் எல்லோருமே இரத்ததானம் செய்கின்றனர். (இப்போதெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு இரத்தம் எடுக்கப்படுகிறது)

முதன் முதலில் இந்தத் தேய்மான - எய்ட்ஸ் நோய், 'இரத்தம்' பெற்றதனால் வந்தது என்று ஒரு காரணம் சொல்லப்பட்டது. நோய்க்கு ஆளானவர் மீது அந்த இரத்தத்தைப் பெற்றதுதான் குற்றம். பரிசீலனை என்ற கட்டாயங்கள் வந்தபிறகு நோய் அவ்வகையில் வருவது சாத்தியமில்லை. போதைஊசிகளைக் கழுவாமல், ஒருவர் உடலில் இருந்து மற்றவர் உடலில் ஏற்றிக் கொள்ளும் போதை இளைஞருக்கு வர வாய்ப்புண்டு. மேலும், பாலியல் சார்ந்து வக்கிரப்புணர்வுகளில் ஈடுபடுவோருக்கும் இந்த நோய்க் கிருமிகள் உடலில் ஏறி வளரலாம்! ஆனால், முதல் முதலில் இதற்குத் தோற்றுவாய் எப்படி வருகிறது? இந்த நோய்க் கிருமிகள் உள்ளவரைப் பார்த்தால் கண்டுபிடிக்கமுடியாது. இவர்களைத் தொடுவதாலோ, மூச்சுக் காற்று படும்படி உட்கார்ந்தாலோ வராது.

சில ஆண்டுகளுக்கு முன், ஒரு மேனிலைப்பள்ளியில் ஏதோ ஒரு காரணத்துக்காகப் பிள்ளைகள் வகுப்பறைகளுக்கு, பள்ளிக்குச் செல்லாமல் 'ஸ்டிரைக்' என்று ஆசிரியர்களை, நிர்வாகிகளை எதிர்த்துக் கோஷமிட்டார்கள். பெண்கள் எப்படி யேனும் இந்தத் தடைகளைக் கடந்து வகுப்பறைகளுக்குச் செல்ல முயன்றார்கள். அப்போது சில மாணவர்கள், 'இஞ்செக்ஷன்' ஊசிகளில் தண்ணீரை நிரப்பிக் கொண்டு வந்து ''எய்ட்ஸ் கிருமிகள் வைத்திருக்கிறோம். போட்டு விடவா?'' என்று கொக்கரித் தார்கள். பெண்கள் தலைதெறிக்கத் திரும்ப ஓடி வந்தார்கள்! 'எய்ட்ஸ்' கிருமிகளை அப்படியெல்லாம் ஏற்ற முடியாது; அவை மிக

நொய்ம்மையானவை, என்றெல்லாம் இப்போது அச்சுறுத்தல்களுக்கு மாற்றான கருத்துக்கள் விளக்கப்படுகின்றன.

"இது, பாதுகாப்பற்ற உடலுறவின் காரணமாகவே பரவக் கூடும். இல்லற ஒழுக்கம்; ஒருவனுக்கு ஒருத்தி என்ற குடும்ப உறவைப் புனிதமாகக் கருதுங்கள்!'' என்று வலியுறுத்தப் பட்டாலும், ஒழுக்கப் பராமரிப்பான பயிற்சிகளோ, கல்வியோ, வளரும் இளம்பிள்ளைகளுக்கும் இல்லை; நடுத்தர வர்க்கக் காரருக்கும் இல்லை; ஏன், முதியோருக்கும் இல்லை; இன்றைய உயிர் வாழ்தலின் இலக்கே போகம், போகம்; போகம்! வளரும் இளம்பிள்ளைகளுக்கு எதிர்கால வாழ்வை - பொருள் ஈட்டக்கூடிய வளமான வாழ்வை நிர்ணயிக்கும் கல்விச் சுமைகள் ஒருபுறமிருக்க, மற்றொருபுறம் பாலியல்இன்பங்களின் ஈர்ப்பைக் கிளரும் வகையில் படங்கள் எடுக்கப்படுகின்றன. அந்தப் படங்களின் நாயகர்கள், வளரிளம்பருவத்தை இன்னும் கடக்காதவர்கள். அல்லது கூடுதலாக உருவங்களில் புதிய புதிய நாயகிகள் - காதல் என்ற பெயரில் எந்த வகைகளிலெல்லாம் பருவகால ஈர்ப்புக்கும், அதைச் சுற்றிய சோகங்கள், சூழ்ச்சிகள் வெற்றிகள் என்றெல்லாம் காட்சிகளும் ஆட்டபாட்ட வியூகங்களும் விரிக்கப்படுகின்றன. புதியபடம் வந்து திரையரங்குகளில் விரியுமுன் பல்வேறு ஊடகங்களில் செய்திகள், வளரிளம் பிள்ளைகளையும் இந்த நாட்டின் வாக்குரிமைகளாகப் பரிணமிக்கக் கூடிய ஒரு முதிர்ச்சி யில்லாத சமூதாயத்தையும் அந்த நாயகனைத் தெய்வமதிப்புக்குக் கொண்டு போகக்கூடிய உத்திகள் கையாளப்படுகிறது. பல்வேறு அரசியல் கட்சிகள் இந்த நாயகர்களின் பிம்பங்களைப் போட்டி யாகும் ஒரு முறையில் சார்புபடுத்தவும் ஊடகங்கள் செய்திகளை வீசுகின்றன. இந்தப் பத்தொன்பது வயது நாயகனின் பிம்பம் பெண்களைக் கவருவதாகவும் அவனுக்குத் திரைச் சந்தையில் கோடி மதிப்புகள் என்றும் தொலைக்காட்சிகளே திரும்பத் திரும்ப இளம்தலைமுறையினரைக் கிளர்த்திவிடுகின்றன.

எனவே, முறையில்லாத பெண்போகம் தேடி அலையும் உந்துதல் சமுதாய ஒழுக்கத்தையே நச்சு ஊசிகளாகக் குதறுகிறது. ஓர் அடுக்கு மாடி வீட்டில், பள்ளியிலிருந்து வந்தபின் சிறுமிகள், சிறுவர்கள் தாயோ தந்தையோ அலுவலகத்திலிருந்து மாலை திரும்புமுன் அச்சமின்றி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதிவிட முடியாது. ஐம்பது வயதைக் கடந்த, அறுபதை

நெருங்கும் முதியவர்கூட எட்டு வயசுச் சிறுமியிடம் தம் வக்கிர உணர்வுகளை வெளியிடும் அவலம் நிகழ்கிறது. குடும்பக் கட்டுப்பாட்டில் இருந்து, பால்வினைத் தேய்வு நோய் வரையிலும், ஒழுக்கக்கட்டுப்பாடுதான் முதல்படியாக இருக்கமுடியும். ஒழுக்கம் தவறலாம். விளைவை அறிவியல் ரீதியாகத் தடுக்கலாம் என்ற இரண்டாம் படி முதல் தவறு.

மீட்சி இல்லாத விளைவு என்ற நிலையில் விழுந்த பின், அவர்கள் வாழ வழிகாண வேண்டும் என்பது மூன்றாம் படி. ஆனால், சுருதி இல்லாத பண்ணிசை எத்துணை நியாயப்படுத்தினாலும் இனிமையாக முடியாது. மருந்திருக்கிறதே என்று, காச நோய்க்கிருமிகளை ஏற்றுக் கொள்வது சரியாகாது. இனியும் காசநோய் வராமலிருக்க என்னென்ன பாதுகாப்புகள் உண்டோ, அவற்றையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். எச்.ஐ.வி. என்ற தேய்வு நோய் பற்றிப்படரும் கிருமிகள் இரத்தத்தில் இருக்கிறது என்று அறிந்தால் சமூதாயத்திலிருந்து அவரை விலக்கும் கொடுமையும் மேற்கொள்ள வேண்டாம்; மறைத்து ஒரு நோயற்ற பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்து, வாரிசு பெருக்கும் அநியாயத்தையும் அனுமதிக்க வேண்டாம். ஒழுக்கம் எல்லாப் படிகளிலும் வலியுறுத்தப்பட வேண்டும். கருத்தடைக்கான உகந்த முறைகளை ஆணும் பெண்ணும் பொறுப்பேற்க அரசு ஆணையும் பொறுப்பாக்கும், ஒரு தேசிய மக்கள் பெருக்கக் கட்டுப்பாட்டுக் கொள்கையை நாடு முழுவதுக்குமான வகையில் செயல்படுத்த வேண்டும். அதேபோல், மக்களின் ஒத்துழைப்பைக் கோருவதில் அரசு கட்சி, சாதி, மத பிராந்திய அரசியல் ஆதாயம் கருதாமல், தனி மனித உரிமைகளை மனதில் கொண்டு செயல்படும் கூட்டமைப்பை (மகளிர் அதிகமாகப் பங்கு பெறும்) உருவாக்க வேண்டும்.

எய்ட்ஸ் நோய்க்கான சிகிச்சைகள், அவர்கள் வாழ்வதற்கான சாதகமான சேவைகள் என்று தம் வாழ்வையே கால் நூற்றாண்டுக்கும் மேலாக அர்ப்பணித்திருக்கும் டாக்டர் சுநிதி சாலமன், ‘திருமணத்துக்கு முன்னும் பின்னும் பாலியல் சார்ந்த நடத்தையில் வேறு தொடர்புகள் இல்லாத இல்லத்தரசிகள், எப்படி இந்த நோய்க்கான கிருமிகளைப் பெற்றிருப்பார்கள்? கணவர்கள் தாம் குற்றவாளிகள்’ என்கிறார். இவர்கள் வாழ்நாளில் புரிந்து கொள்ளலுடன் வாழ்ந்து மேலும் சந்ததியைப் பெருக்காம

விருக்கலாம். ஆனாலும், குடும்பமும் வெளி உலகமும் அவளைப் பிள்ளை பெறாதவள் என்று தூற்றலாம். ஆய்வுகள் கணவனின் விந்தணுவில் இருந்து நச்சுக்கிருமி தொற்றிய கூறைப் பிரித்துத் தூய்மைப்படுத்தும் சாதனையைக்கூட எட்டி இருக்கின்றன எனலாம்.

கருவுற்றாலும், சிசுவை நச்சுத் தொற்றாமல் பிரித்து வைப்பதற்கான அறுவைச் சிகிச்சையுடன் குழந்தையைத் தாயின் தொடர்பில் இருந்து பிரித்தெடுக்கும் முறைகளைக் கண்டறிந்திருக் கிறார்கள். ஆனால், பெண் வாணிபம் ஒழிக்கப்படத் தீவிர நடவடிக்கைகளே சாத்தியமில்லை என்பதுதான் இடிக்கிறது. ஏனெனில் இந்தப் பாலியல் தொழிலில் ஈடுபட்டவர்கள், ஆணுறைகளை வழங்கி, பயன்படுத்தக் கட்டாயப்படுத்தும் நடவடிக்கைகள் ஒழுக்கப் பாதைக்குத் திருப்புமா?

இதேபோல், நகரங்களில் இந்த வாணிப மையங்களில் இருந்து குழந்தைகளைப் பிரித்து, அந்நியப்படுத்துவதாலும் பிரச்னை தீர்வடையுமா? புலனடக்கப் பயிற்சிகள், ஆடம்பரப் பொருள் உற்பத்திகளைத் தடை செய்தாலே சாத்தியமாகும். உணவு, உடை, உடற்பயிற்சி, சீரான மனப்பயிற்சி ஆகியவற்றுக்குத் தடையான அனைத்து சினிமா, தொலைக்காட்சி வாணிபங்களும் முடக்கப்பட வேண்டும். கோடானு கோடி ரூபாய்கள், வறுமைக்குழியில் அறியாமை இருளில் வாழும் இளம் சமுதாயத்தினரை மேலே கொண்டுவரலாம். பள்ளிகளில் ஆசிரியர், மாணவர்களிடம் வருங்கால பாரத சமுதாயம் உருவாகிறது என்ற புரிந்து ணர்வுடனும், கடமையுணர்வுடனும் வகுக்கப்பட்ட பாடதிட்டங் களைக் கற்பிப்பதை மேன்மையாகக் கருத வேண்டும். ஆசிரியர் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகிறார். தங்கமும் பட்டும் பகட்டுமாக மாற்றுச் சீருடைக்கு வழியில்லாத சிறுமியர் முன் நின்று பாடம் சொல்லும் ஆசிரியைகள் இத்தொழிலுக்கு உகந்தவர்கள் அல்ல.

அதேபோல், முதல் நாளிரவு மது அருந்திய வாடை போகாமல் சிகரெட் ஊதிவிட்டு வகுப்புக்கு வரும் ஆசிரியரும் ஆசிரியத் தொழிலுக்கு ஏற்றவரல்ல. எனவே ஒழுக்கப் பயிற்சி சொல்லி வருவதில்லை. வாழ்ந்து காட்டி வருவதாகும். பள்ளி வளாகங்களில் சேலை - நகை வாணிபங்களில் இருந்து ஊறுகாய், ஊதுபத்தி வாணிபம் வரை நடக்கின்றன. இதெல்லாம் ஆசிரியர்களின்

ஒழுங்கீனங்களுக்கு வழி வகுப்பவை. ஆணும் பெண்ணும் பணிக்குச் செல்லும் சிறு குடும்பங்களில் குழந்தை தன் முதல் புரிந்து கொள்ளலை, எழுந்து, உட்கார்ந்து, நடந்து உலகைப் புரிந்து கொள்ளும். முக்கியமான வளர்ச்சிப் பருவங்களையே காப்பகங்களிலும் மழலைப் பள்ளிகளிலும் கழிக்கின்றன. குழந்தைக் காப்பகங்கள், சமுதாயப் பொறுப்புடன் கூடிய தனியார் நிறுவனங்களாலோ, அரசு நிறுவனங்களின் பயிற்சி பெற்ற தாய்மாராலோ பராமரிக்கப்படுவதில்லை. அதிலும், வீட்டு வேலை, கட்டிட வேலை, விவசாயம் சார்ந்த தொழில்கள், ஆலைகள் என்று வயிற்றுப்பாட்டுக்கு உடல் உழைப்பைக் கொடுக்கும் பெற்றோர், தர்மக் காப்பகங்களில் நிகழும் முறைகேடுகளைக் கேட்பதில்லை. அவர்களுக்கு அவர்கள் பணியிடப் பிரச்னைகளும், பற்றாக் குறையும் மிகுதியான தேவைகளும் பிரச்னைகள். அரசின் தர்மக் காப்பகங்களில் பிள்ளைகள் நன்கு வளருகிறார்களா, அரசு வழங்கும் தருமப்பாலோ சத்துணவோ நல்ல முறையில் பிள்ளைகளை வளரச் செய்கின்றனவா என்பதெல்லாம் கவனங்களில் வருவதில்லை. ஏன்? அரசுப் பள்ளிகளில் படிக்கும் சிறுவர், சிறுமியரின் பெற்றோர் அந்தப் பள்ளிகளின் ஆசிரியர்கள் 'பெற்றோர் நாள்' என்று அறிவித்து வரச் சொன்னாலும், நூற்றுக்குப் பத்துபேர் கூட ஆசிரியர்களிடம் வந்து பேசிக் குறை நிறை அறிவதில்லை. வளரும் தலைமுறைகள் தறிகெட்டுப்போக, அரசியல் கட்சிகள், ஆதரவுக்கரம் நீட்டி, விசுவாசத் தொண்டர்களை வளர்க்கிறார்கள். சினிமா அவர்களின் பேராயுதம்.

ஒழுக்கம் சாத்தியமாகுமா? புலனடக்கம்...? ஆன்மிக குருவர்க்கமே சிதைந்து கிடக்கும்போது எதைப் பேச? கனவு காண்போம்!

# 23. 'பிளாஸ்டிக்' ஆகிவிட்ட பொற்குடங்கள்

மக்கள் தொகைப் பெருக்கம் - கட்டுப்பாடு அதற்காகும் செலவுகள் எல்லாம் பொருளாதாரம் சார்ந்தவை. மக்கள் பெருக்கம்

உழைப்பாற்றலை மிகுதிப்படுத்துவதால் வளமை மேம்படும் என்ற நியதி காணாமற் போய் நெடுங்காலமாகிறது. உழைப்பைக் கொடுக்காத பெருங்கூட்டத்துக்கு, சோறு, துணி, கல்வி, நோய்த் தடுப்புடன் சுகாதாரம் எல்லாம் வழங்க வேண்டும். அதற்கு ஆதாரமான நிதி - வரவு - செலவு என்று ஒவ்வோர் ஆண்டும் திட்டம் போடப்படுகிறது. மக்களுடைய வரிப்பணம் வரவு - இது பல்வேறு வகை வரிகளால் அரசுக்குக் கிடைக்கிறது. நிலவரி, சொத்துவரி, மின்சாரக் கட்டணங்கள் என்றெல்லாம் அரசு தங்கள் முதலீடுகள் போல் வரவு ஈட்டும் துறைகள் உண்டு. ஆனால், மருத்துவ - பொதுசுகாதாரம், கல்வி ஆகிய துறைகள் செல விட்டாக வேண்டும். ஆனால், மின்கட்டண ஏமாற்று, சொத்துவரி ஏமாற்றுதல் என்று ஒவ்வொரு பிரிவிலும் அரசுக்குரிய வரவினங்கள் வரவில்லை என்றால், தகராறுதான். ஒரு இல்லத்தரசி எப்படி வருமானத்துக்கும் செலவுக்கும் ஈடுகட்டலாம்; எதிர்காலத்துக்குச் சேமிக்கலாம்; திடீர் செலவுகளைச் சமாளிக்க எதில் சிக்கனம் செய்யலாம் என்று திட்டமிடுவது போன்றது தான் நாட்டுக்கான திட்டங்களும் பொருளாதார நிர்வாகங்களும்.

நாம் குடியரசான முதல் நிதிநிலை அறிக்கையில் 1950 - 51 இல், 405 கோடி ரூபாயாக மைய வரி வசூல் இருந்தது. இந்நாட்களிலோ, ஏறத்தாழ மூன்று லட்சத்துப் பதினெட்டாயிரம் கோடி என்று கணக்கிடப்படுகிறது. எண்பதுகளின் பிற்பகுதியிலிருந்து வரிச்சுமை மிகவும் கடுமையாகவே உயர்ந்துவந்திருக்கிறது. மத்திய மாநிலங்களில் 80-81 இல் அரசுத் துறை நிறுவனங்களின் மூலம் மத்திய மாநில அரசுகளுக்குக் கிடைத்தது ரூபாய் 25 ஆயிரம் கோடி ரூபாய். மொத்தச் செலவு 37 ஆயிரம் கோடி ரூபாய். வரவைக் காட்டிலும் செலவு 12 ஆயிரம் கோடி ரூபாய் அதிகம். 2002 - 2003 ஆண்டில் இதே மத்திய மாநில அரசுகளின் வரி வசூல், பொதுத்துறை நிறுவனங்களின் மூலம் கிடைத்த தொகை 5 லட்சத்து 12 ஆயிரம் கோடி. ஆனால், செலவினங்கள் 8 லட்சம் கோடி ரூபாய்.

வரவைக் காட்டிலும் செலவு, 2 லட்சத்து 88 ஆயிரம் கோடி அதிகம். பற்றாக்குறையைச் சமாளிக்கக் கடனுக்கு மேல் கடன். நோட்டை அச்சடித்துப் பணப்புழக்கத்தை அதிகமாக்குகிறார்கள். வட்டிச் செலவுக்கு மட்டும் சென்ற ஆண்டின் வரவு-செலவு கணக்கில் ஏறத்தாழ 30 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டது.

2004-05 நிதிநிலைஅறிக்கையை இங்கே தெரிவிப்பது அவசியமில்லை. தலைசுற்றுகிறது. எல்லோருக்கும் உணவு - பள்ளி மதிய உணவு - (பல்வேறு பெயர்களில் யோஜனாக்கள்!) எல்லாம் எத்தனையோ ஆண்டுகளாகச் சொல்லப்படும் வறுமை ஒழிப்பு, ஆண்டில் நூறு நாட்களுக்கேனும் வேலைக்கு உணவளிக்கும் திட்டங்கள்! (மீதி நாட்களுக்கு ஈரத்துணிக்கேனும் வழி இருக்குமா) எல்லாம், எல்லாம்.

இன்னும் இளைஞருக்கு, படித்த பட்டதாரி இளைஞருக்கு வேலை இல்லை. நிறைவேற்ற உத்தரவாதமில்லாத, எல்லோராலும் ஏற்றுக்கொள்ள இயலாத திட்டங்களால் 20 லட்சம் இளைஞருக்கு வேலை கிடைக்கும் என்ற ஆசை வார்த்தைகளை அமைச்சர்கள் சொல்லிவருகிறார்கள்.

வேளாண்மையில் 'மரபணு' மந்திர வித்துக்களின் இரண்டாம் நிலைத்திட்டம் பற்றி பிரதமர் கூறுகிறார். முதல் புரட்சியில், வெளிநாடுகளிலிருந்து வித்துகள் பெற்று, பூமியை நஞ்சாக்கி, வியாபாரிகளைக் கடன் குழியில் தள்ளி தற்கொலை செய்து கொள்ள வைத்தது. நமது சாலைகளில் புதிய புதிய வண்டிகள், பளபளக்கும் பல வண்ண மாதிரிகள் இரண்டு சக்கர, மூன்று சக்கர ஊர்திகள், பாதசாரி என்பவரே தேவையில்லை என்று தீர்க்கிறது. ஒரு சிறுகுடும்பம் இந்நாள் புழங்கு நீருக்கும் குடிநீருக்கும் செலவழிக்க வேண்டிய பணத்தில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் மூன்று பிள்ளைகள், தாய், தகப்பன், கைம்பெண், அநாதைகள், மூன்று மருமகள் , பேரன், பேத்திகள் உண்டு உறங்கி இந்நாட்களைப் போன்ற நெருக்கடிகளும் டாக்டர் தேவைகளும் தெரியாமல் வாழ முடிந்தது. வெள்ளையன் ஆட்சி என்ற ஒன்றே எல்லோருக்கும் முள்ளாக இருந்தது.

மக்கள் பெருக்கத்துக்குக் காரணிகளாகக் கருதப்படும் பெண், அன்றாடம் செத்துப் பிழைக்கவில்லை. அந்நாள் எங்கோ ஒன்றிரண்டு குப்பைத் தொட்டி, குளக்கரை என்று குழந்தைகள் அநாதைகளாகவிடப்பட்டதைப் பேசினார்கள். இந்நாட்களில் அநாதைகள், தாயாரால் ஏற்று வளர்க்க முடியாத சிசுக்கள் நூற்றுக்கணக்கில் பல்வேறு அநாதாலயங்களுக்குச் செல்கின்றன. 'ஊனமுற்றவர்கள்' என்ற தனிப்பிரிவே கல்வி, வேலை வாய்ப்பு என்ற இலக்குகளைப் பற்றி சிறப்புக் கவனஈர்ப்புக் கோரிக்கை

வைக்கிறது. ஊனங்கள் அன்றாடம் ஏற்படும் சாலை விபத்துகளால் மட்டுமின்றி, கருவிலேயே ஏற்படக்கூடிய காரணங்களை விழுங்கிவிட்டு அம்பலத்துக்கு வருகின்றன. பெருந்தன்மையுடன் அவ்வப்போது 'தத்து' எடுத்துக் கொள்ளும் பெற்றோர் வந்தாலும், தர்ம, குழந்தை விடுதிகள் மேலும் மேலும் உயிர்த்துக் கொண்டிருக்கின்றன.

இத்துணை சிக்கல்களையும் எப்படித் தீர்க்க?

பங்கிம் சந்திரர், அன்று 'வந்தே மாதரம்' என்ற மந்திரச் சொல்லால் காளியை, துர்க்கையை தேச மாதாவாக உருவகித்துப் பாடிய போது, வங்கமாதாவாக அவள் பரிணமித்தாள். ஏழு கோடி மக்கள்

"ஸப்த கோடி கண்ட கலகல நிநாதகராலே,
த்விஸப்த கோடி புனஜர்த்ருத கரகரவாலே
கே போலே, மா தூமி அபலே!
பஹூ பல தாரிணீம், நமாமி தாரிணீம்
ரிபு தள வாரிணீம், மாதரம்"

இந்தப் பாடலை முப்பதாண்டுகளுக்குப் பின்னர் செவிமடுத்த பாரதியார், வங்கமாதாவை முழு இந்திய மாதாவாகப் பார்த்தார். சேதப்பட்டிராத பாரதத்தின் மக்கள் அன்று முப்பது கோடி.

இனிய நீர்ப் பெருக்கினை! இன்கனி வளத்தினை!
குளிர் பூந்தென்றலும் கொழும் பொழிற்பசுமையும்
வாய்ந்து நன்கிலகுவை, வாழிய அன்னை!
முப்பது கோடிவாய் நின்னிசை முழங்கவும்
அறுபது கோடி தோளுயர்ந்துனக்காற்றவும்
திறனிலாள் என்றுனை யாவனே செப்புவன்?
தாயே,
நீடுபல்படை தாங்கி முன்னிற்கவும்

கூடு திண்மை குறைந்தனை யென்பதென்?

ஆற்றலின் மிகுந்தனை அரும்பதம் கூட்டுவை!

என்றெல்லாம் மக்களே தாயின் வலிமை என்று பறைசாற்றப்படுகிறது.

அறிவு நீ! தரும நீ! உள்ள நீ! அதனிடை

மரும நீ, உடற்கண் வாழ்ந்திடு முயிர் நீ!

தோளிடை வன்பு நீ! நெஞ்சகத்தன்பு நீ!

திரு நிறைந்தனை, தன்னிகரொன்றிலை

தீது தீர்த்தனை நீர்வளஞ்சார்ந்தனை...

'முப்பது கோடி முகங்கள்; அறுபது கோடி புயங்களின் வலிய திறன்; உயிர்வளமூட்டும் நிலம், நீர், அன்பு, அறிவு, தருமம், அதனிடை விளங்கும் ஆன்ம ஒளி. ஆலயங்களில் இடம் பெற்ற தெய்வச் சிலைகளிலும் தாயே நீ இருக்கிறாய்!' இந்த எழுச்சிப் பாடல், அந்நாள் கோடானு கோடி ஆண்கள், பெண்கள் அனைவரையும் இந்த தேசத்துக்காக உயிரையும் கொடுக்கும் ஆற்றலைத் தோற்றுவித்தது. வளமிருக்கிறது, நீரிருக்கிறது; உழைக்கக் கைகள், உயிர் விளங்கும் ஆற்றல் இத்தனையும் போய்விட்டனவா? அந்நாள் அந்நிய அடிமைத்தளையை உடைத்தெறிந்த ஆன்மிக ஆற்றல், இன்னா செய்தவரையும் நாணச் செய்து, நன்னயம் செய்து நண்பர்களாகவே நீடிக்க வைத்திருக்கும் தாயின் ஆற்றல் இந்நாள் இல்லையா?

உணவளிக்கும் தாய், அவள் அமுதாய்ச் சுரந்து தரும் அருவிகள்; நதிகள் எல்லாம் இந்நாள், முப்பதிலிருந்து நூற்றிரண்டு கோடி மக்களாகப் பெருகியபோது காணாமல் போய்விட்டாளா? அந்நாட்களில் அந்நியன் எம் உழைப்பையும் செல்வத்தையும் கொள்ளை கொண்டு போனான் என்று வருந்தி எழுச்சி கொண்டீர். இந்நாட்களில் எந்த அந்நியன் கோடானு கோடி கைகளின் உழைப்பையும் திறனையும் கொள்ளை கொள்கிறான்? அடிமைகளை அந்நாள் உழைப்புக்காக மட்டும் உயிர்த் தண்ணீர் ஊற்றுவது போல், சிறிது ஈரமிருக்க உணவு வழங்கி வைத்திருந்தார்கள். அவர்கள் ஊட்டம் பெற்றால், அடிமைச்

சங்கலிகளை அறுத்துவிடுவார்கள். அதுமட்டுமில்லாமல், ஏற்கெனவே இந்தச் சமூதாயத்தில் இருந்த சாதி, மத ஓராயிரம் பிரிவுகளையும் இன்னும் பிளவுகளாக்குவதிலும் தீண்டாமைக் கொடுமைகளையும் அந்நியன் தொடவில்லை என்றாலும், 'சதி'க்கு எதிரான சட்டம் கொண்டு வந்தான்; பெண் குழந்தைகளைக் கொல்லும் வழக்கத்தையும் எதிர்த்தான். கிறிஸ்தவம் என்ற சமயப் போர்வையிலேனும், தீண்டப்படாதவர், பால் மணம் மாறாத கைம்பெண்களை, கல்விக்கண் திறக்கவும், சமூதாய மதிப்பைப் பெறவும் வாய்ப்புகள் அளித்தான்.

ஆனால், தாயே, உன்னையும் உன் மக்களையும் வளமைத் திட்டங்கள் என்றும் அறிவியல் சாதனைகள் என்றும் கொஞ்சம் கொஞ்சமாகவும், பின்னர், பகாசுர வேகத்துடனும் கசக்கிப் பிழியும் மோசடிகளில் 'குடியாட்சி' என்ற நாடகங்கள் அரங்கேறுகின்றன. முப்பது கோடிகளில் அபலையில்லா வண்மை பொழிந்தவளே, நூற்றுக்கு மேலான கோடிக் கைகளும், மதி நுட்பத் திறன்களும் வெறும் 'சைபர்' கூலிகளாக மாற்றிக் கொண்டிருக்கும் மோசடியில் இளைய சமூதாயம் புதைந்துபோகின்றதே. 'சப்சிடீஸ்' மானியங்கள் என்ற உயிர்த் தருமங்களில், பிச்சைகளில், கோடானு கோடிகளும் வாழ முடியாது என்றுதான் தாயே, உன் உயிர்த் துடிப்புகளைத் துண்டித்தும், கசக்கி எறிந்தும், சிமிட்டியாலும், தார் பிளாஸ்டிக் முதலிய சீரணிக்க இயலாத பொருட்களால் 'உன்னை' அழகுபடுத்துவதாகச் சொல்லி, அழித்துக்கொண்டிருப்பவர்கள் உன் பிள்ளைகள்தானே? கோடிகளில் வாணிபங்கள், சொகுசு மாளிகைகள், வாயுவேக, மனோ வேகப் பயணங்கள், விண்வெளிச் சாதனைகள், இவற்றால் உன் வளமை செழிக்க வில்லையே? பூரண கும்பங்கள் வெறும் பிளாஸ்டிக் கும்பங் களாக, படப்பிடிப்புக்கான பொய்யை மெய்யாக்கும் கலைகளில் வெறும் பிம்பங்களாகின்றன. ஒளியும் அழகும் நலங்களும் குதறப்படுகின்றன. அறிவு, ஆற்றல் வீரம் எழுச்சியின் வடிவமான தாய், ஆணவ ஆதிக்கங்களை, அசுரத்தனங்களை மிதித்துக் கொண்டு ஆனந்த நடனம் புரிய எழுவாளா? கோடிகளைத் தரைமட்டமாக்கிப் பூங்காக்களைச் சமைத்து பசுபட்சி, நீர் நிலைகள் இனிய ஒலிகள், மணங்கள் என்று புதிய உலகைப் படைக்க மீட்டுருவாக்கம் செய்ய எழுவாளா? கரும்புகைகளும், சூழும் அச்சங்களும், நச்சுவளையங்களும் உன்னுள் அமிழ்ந்து போக

வேண்டும். உயிர் துளிர்க்கும் விளைநிலங்கள் ஒழுக்கம் காக்க வேண்டும். மண். மண் புனிதமானது. உயிர்ப்பின் ரகசியங்கள் காக்கப்பட வேண்டும். உழைப்புப் பங்கீடுகளில் மனிதம் புதுமை பெற வேண்டும். பாவங்களும், குரூரங்களும் கோரங்களும் ஆசை அவல அழிவுகளும் புதுப்பிக்கப்படும் மங்கலங்களாக அமைதி நல்க, தாயே நீ மீட்டுருவாக்கம் பெறுவாய்!

தாயே! நூற்றிரண்டு கோடிகளும் உன் மாண்பினால் புனிதமாகட்டும்! பழையவை மக்கி மண்ணோடு மண்ணாக, புத்தெழில் வசந்தங்கள் புலரட்டும்!

# 24. காந்தியின் கனவு ராஜ்ஜியம்

டிசம்பர் 1947ஆம் ஆண்டு. நாட்டு நடப்புகளையும், தலைவர்களின் செயல்பாடுகளையும் கண்டு வருந்தினார் காந்தியடிகள். அப்போது அவர் கூறியவை :

“என் சொற்களுக்கு இன்று எந்த மதிப்பும் இல்லை. பழைய நாட்கள் போல் இல்லை. இப்போதெல்லாம் சக்கரத்துக்குள் சக்கரங்கள்! இத்துணை இராணுவத்தாரையும் பார்க்கும்போது பயனுள்ள சேவை எதைச் செய்ய முடியும் என்று தோன்றுகிறது. தெரிந்த முகங்கள் தலை அசைத்து, ஒரு மரியாதை கொடுத்துவிட்டு நடக்கின்றன. எனக்குக் கொடுக்கப்படும் மரியாதை இதுவே! மக்களின் ஒருங்கிணைந்த நம்பிக்கை... அது அந்நாள் மலையை அசைத்தது; ஆனால் இந்நாள்? ”

காந்தியடிகளின் அணுக்கத் தொண்டர்களில் ஒருவர், மீராபென் அம்மை. ‘மார்கரெட் ஸ்லேட்’ என்ற அந்தப் பெயரை மாற்றி காந்தியடிகள் இப்படி ஒரு பெயரை வைத்தார். காந்தியடிகள் மறைந்தபின், அவர் கனவு கண்ட இந்தியாவை உருவாக்கும் இலக்கோடு அவர் ஏறக்குறைய பனிரெண்டாண்டுகள் இமாலயச் சூழலில் இயற்கையோடிணைந்த ஆசிரமத்தொண்டில் ஈடுபட்டார். அப்போது, அவர் ‘பாபுராஜ்’ என்ற ஒரு பத்திரிகையைத் தோற்றுவித்து நடத்தினார்.

'பாபுராஜ்' என்று அவர் குறித்த இந்தியா எப்படி இருக்கும்?

இன்றைய சூழலில், அதைப்பற்றி நினைத்துப் பார்ப்பது சரியாக இருக்கும்.

காந்தியடிகள், சுதந்திரம் பெற்றபின், அன்றைய காங்கிரஸ் (பேராயக்) கட்சியைக் கலைத்துவிட வேண்டும் என்று கருத்துரைத்தார். அன்றைய இலட்சியம், அந்நிய ஆதிக்கத்தை எதிர்ப்பதாக இருந்தது. அஹிம்சை முறையில் ஒத்துழையாமை இயக்கம் துவக்கினார். அரச பதவிகள், பட்டங்கள் துறந்து, போராட்டத்துக்காக ஒன்றிணைந்தனர். சட்டமறுப்பு, மறியல் என்ற பல்வகைகளிலும் சாத்துவீகமாக உப்பு சத்தியாகிரகப் போரின் பொன்விழா, இந்நாள் எழுபத்தைந்தாவது ஆண்டுவிழா என்று காங்கிரஸ் கட்சி நாடகம் அரங்கேற்றுகிறது. அன்றைய இலக்கு சத்தியமாக இருந்தது; அது மெய்ப்பட்டது. இன்றைய நாடகங்களின் நோக்கம் யாதாக இருக்கும்?

காந்தியடிகள், புதிய 'இந்தியா' என்று கனவு கண்ட இலக்கில், ஒத்துழையாமை எதிர்ப்புக்கூறுகளோ, 'தியாகம்' என்று அன்றைய கடமைகளுக்கு மறு பெயரிட்டுப் பதவிகளுக்கான அடிப்படை அமைக்கும் சூழல் அமையக் கூடாது என்று கருதினார். புதிய உருவாக்கத்தோடு புதிய தொண்டர்கள், புதிய தலைவர்கள், புதிய இலக்குகளில் செயல்படவேண்டும் என்று கருதினார். அது நடக்கவில்லை.

'தேசத்தியாகம்' பதவிகளுக்கான முன்னுரிமை பெற அதே காங்கிரஸ் அமைப்பு தேவையாக இருந்தது. நாடு துண்டாடப்பட்ட நிலையில் அடிகள் மனம் சோர்ந்துதான் முன் குறிப்பிட்ட வருத்தங்களை வெளியாக்கினார்.

மீராபென், பாபுராஜ் இதழில் இந்தியாவின் புதிய சத்தியப்பாதை அமைப்பை இப்படியெல்லாம் குறிப்பிடுகிறார்.

1. இந்த நாட்டின் குடிமக்கள் உணவு-உடை-உறையுள் எல்லாம் உடையவர்களாகத் தன்னிறைவு பெற்றிருப்பார்கள்.

2. இந்த அரசு, அறம் சார்ந்த மிக நேர்மையான அரசாக

அமையும். எவரும் இங்கே மாளிகைகளில் வசிப்பவர்களாக, ஆயிர மாயிரம் ரூபாய்களை, நிர்வாகத்துக்கும் பெட்ரோலுக்கும் செலவழிப்பவர்களாக இருக்க மாட்டார்கள்.

3. சட்டங்கள் மிக எளிமையாக இருக்கும். குருதி குடிக்கும் சுரண்டல் (பொய்) வக்கீல்களும் நீதிமன்றங்களும் இருக்காது; தேவையில்லை.

4. காவல்துறை என்பது மக்களுக்கு உண்மையான பாதுகாப்பை அளிக்கும். இராணுவம் என்ற ஒன்று, மக்களின் கோடிக்கணக்கான ரூபாய்களை விழுங்கிக் கொண்டு இயங்கும் தேவையும் இருக்காது. விமானங்கள் தேவையே இல்லை.

5. ஆனால், தொழிற்சாலை முதலாளிகள், பண்ணை ஆண்டைகள் இங்கு இருக்கமாட்டார்கள்.

6. இங்கு பள்ளிக்கூடங்கள் இருக்கும். எல்லோருக்கும் கல்வி அளிக்கப்படும். நேர்மை, நாணயம், உடல்-மன ஒழுக்கங்கள் மேம்படும் அறிவாற்றலுக்கான சிந்தனைத் திறனுடன் கூடிய கல்வியும் பயிற்சியும் அளிக்கப்படும்.

7. அனைவருக்கும் தேவையான ஆரோக்கிய உணவுக்கான உற்பத்தியில் ஒவ்வொருவரும் தம்தம் உழைப்பாற்றலைக் கட்டாயமாக மனித சமுதாயத்துக்கு நல்க வேண்டும்.

8. இந்திய நாடு தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளும் சுயச் சார்புடன் விளங்கும். இன்னொரு நாட்டின் உதவியைப் பெறும்போது அடிமைத்தனம் கூடவே வந்து சேரும்.

9. ஒவ்வொரு பிராந்தியமும், சார்ந்த ஊரும், அவரவருக்கேற்ற வகையில் பொருளாதார சுயச்சார்புடன் தன்னிறைவு பெற வேண்டும். நம் ஆற்றலே பயிர்த் தொழில்தான். கால்நடை வளம், வனவளம் ஆகியவை கிராமக் கைத்தொழில்களில் முழுமையாக ஒன்றுபட்டிருக்க வேண்டும். அந்நிய நாட்டுப் போட்டிகளில்

இருந்தும், நம்மிடையே புகும் தனிநபர் போட்டியில் இருந்தும் சுயச்சார்பு பாதுகாக்கப்பட வேண்டும்.

10. வனஸ்பதி போன்ற உணவுக்கான பொருட்கள், பெருந்தீனி உற்பத்திக்காக இயங்கும் ஆலைகள் மூடப்பட வேண்டும். இதே போல் துணி, சர்க்கரை, அரிசி மாவு, எண்ணெய் பிழியும் பெரிய ஆலைகள் படிப்படியாக மூடப்படவேண்டும். இந்தத் தொழில்கள், கிராம மக்களின் உழைப்பிலும், வன்மையிலும், உடல்நலங்களிலும் தொடர்பு கொள்ளும் தொழில்களாக மாறவேண்டும். ஆடம்பரப் பொருட்களின் உற்பத்தி கட்டாயமாக நிறுத்தப்பட வேண்டும்.

11. இயற்கையோடு இணைந்த வகையில் நிலமும், தொழிலும், உழைப்புப் பகிர்தலின் சமச்சீர்மையுடன் மனிதன் வாழ வேண்டும்.

12. மிக ஆடம்பர வசதிகளுடனான அரசு நிர்வாகக் கட்டிடங்கள், அலுவலக வளாகங்கள், அரசை இயக்கும் அலுவலகங் களுக்கான ஆடம்பரங்கள் அனைத்துக்கும் இங்கு இடமில்லை. இந்திய மக்கள் அனைவரும் ஏற்றத் தாழ்வின்றி எளிய கிராமவாசி களாகவே சுயச்சார்பும் நலமுமாக வாழவேண்டும். வாழ்விடங்களும் அப்படியே.

13. மிகப்பெரிய அளவிலான நீர்மின் திட்டம், பாசனத்திட்டம், செயற்கை உரத் தயாரிப்பு ஆகியவை தொடர்பான செயல்பாடுகள், அந்தந்தப் பிரதேச உழவர் பெருமக்களின் கூட்டமைப்புடன் நன்கு ஆராயப்படவேண்டும். அதுவரை, அவை நிறுத்தி வைக்கப்பட வேண்டும். அவர்களுக்குப் பாதிப்பென்று தெரிந்தால் உடனே அவை நிறுத்தப்படவேண்டும்; ஆலைகள் மூடப்பட வேண்டும்.

மாறாக, சிறு சிறு பிராந்திய அளவிலான வளர்ச்சித் திட்டங்கள் உழவர் பெருமக்களே ஈடுபட்டு நிறைவேற்றவும் உடனுக்குடன் அவை பயன் அளிக்கும் வகையிலும் அமைக்கப்படல் வேண்டும்.

14. வெளிநாட்டிலிருந்து பெற்றிருக்கும் கடன்கள், உதவிகள், பரிசுகள் எல்லாமே கூடிய விரைவில் திருப்பப்படவேண்டும்.

எதிர்காலத்தில் நாம் அந்நிய நாட்டைச் சார்ந்திருக்கவேண்டிய கட்டாயம் முற்றிலுமாகத் தவிர்க்கப்பட, தடுக்கப்பட வேண்டும்.

15. இப்போதைய கல்வித்திட்டம் அடியோடு அகற்றப்பட்டு, சேவா கிராமில் கொடுக்கப்பட்ட ஆதாரக்கல்வித் திட்டம் நாடு முழுதும் கொண்டுவரப்பட வேண்டும். உயர்கல்வி - காலக்கிரமத்தில் ஏற்ற வகையில் திட்டமிடப்படும். அதுவரையிலும் இளைஞர்கள் சமுதாய வளர்ச்சியில் தொண்டாற்றி இளமையின் ஆற்றல்களைச் சமுதாயத்துக்குப் பயன்படுத்த வேண்டும்.

16. இந்த நடைமுறைகளுக்கு அடித்தளம் அமைக்க வேண்டு மானால், முதலில் இந்த அரசியல் சாசனம் முழுதுமாக அகற்றப்பட வேண்டும்; பின்னரே துவக்கம் பற்றிச் சிந்திக்கலாம்!

17. நிர்வாக இயந்திரம் வெகுவாகக் குறைக்கப்பட்டு எளிமையாக இயங்கக்கூடிய முறையில் அமைய வேண்டும்!

18. தேர்தல் புதிய முறையில் திட்டமிடப்பட வேண்டும். மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட்ட சிறுசிறு அரசுகளாக இணைந்து மையத்தில் செயல்பட வேண்டும்.

19. தேர்தலுக்கான வேட்பாளர், கட்சி சாராத கடுமையான பயிற்சிகளிலும், சோதனைகளிலும் தேர்வு பெற்றிருக்க வேண்டும்.

20. உழவரும், தொழிலாளரும், அரசின் உயர்பதவிகளின் பங்கேற்புடன் இயங்கவேண்டும்.

21. சட்டங்கள் - மிக எளிமையாக, இந்தியாவின் அடிப்படை மனிதநேய ஆன்மீக ஆற்றலோடு இணங்கிய வகையில், அதிகாரக்குவிப்புகளில் இருந்து விடுபட்டிருக்க வேண்டும்.

22. தரைப்படை, கடற்படை தேவையில்லை. விமான சேவைகள் தேவையில்லை. டிராக்டர், மோட்டார்கார்கள், போக்குவரத்துச் சாதன இயந்திரங்கள் எல்லாம் மக்களுக்கு எதிரானவை. இயந்திர மயமான போக்குவரத்து சாதனங்கள் பெரிதும் குறைக்கப்பட வேண்டும்.

# 25. நெருக்கடியில் உதிக்கும் யோசனைகள்

குறுக்குச் சந்தியில் நெருங்கித் தவிக்கும் உன் மக்களில் இந்நாள் சோதனைகளிலிருந்து மீண்டு வெளிவர உன்னையே வணங்குகிறோம். இங்கிருந்து மீளவேண்டும். அறிவுக் கண படைத்தோர் இருக்கிறார்கள். அறிவியல் சாதனைகளில் நன்மை எது; தீமை எது என்றே அவர்கள் ஆராய வேண்டும். யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்பது வெற்றுச் சொல் அல்ல. அழிவு ஆற்றலில் அடுத்தவரை விஞ்ச வேண்டும் என்ற நோக்குகள் இலக்காக இருக்கலாகாது. பாற்கடல் கடைந்தபோது, நஞ்சு முதலில் வந்தது. இந்த நச்சுப் புகைகள் பெண்ணின் உயிராற்றலை அழிப் பதால், அமுது கிடைக்கும் என்று இலக்கு வைக்கும்போது அது பேரழிவையே கொண்டுவரும். நதிகளிலும் கடல்களிலும் சாயப் பட்டறை நச்சுகளும், தோல் பதனிடும் கழிவுகளும், சர்க்கரை ஆலைக் கழிவுகளும் மட்டுமின்றி, அணுஉலைக் கழிவுகளும் கலப்பதுபோல், புனிதமான பெண்ணுடலில் பல்வேறு ரசாயனங் களும் நச்சுத் தொற்றும் சாதனங்களும் கருப்பாதைகளை அடைத்து, போகத்துக்கேற்ற கருவிகளாக்கும் இலக்குகள் என்றும் நன்மை விளைவிக்கப்போவதில்லை. நூற்றாண்டுகளில் பெண்ணடிமையும், தாய்மைச் சிதைப்பும் இந்தப் பூமியின் உயிர்த்துவத்தையே அழித்திருக்கின்றன. நமது நாட்டுப் பண்பாட்டில் ஒவ்வோர் ஆணையும், ஸ்ரீ அல்லது திரு என்ற எழுத்துக்களால் இணைத்துக் குறிப்பிடுவது வழக்கமாக இருக்கிறது. சில சான்றோர் - துறவிகளை, ஸ்ரீ-ல-ஸ்ரீ என்று குறிப்பிடுவது வழக்கம். இந்த அடையாளம் ஒரு மனிதனின் படைப்பாற்றலை, இல்லறத்தில் ஒடுக்கி, மக்கள் பேறுக்கு மட்டும் வழி அமைத்துக்கொள்ளும் ஒழுக்கத்தைக் குறிக்கும் துறவியாக பிரும்மசரியம் காப்பவர், ஒரு லட்சம் ஸ்ரீ அல்லது திரு என்ற அடையாளத்தைப் பெறுகிறார். மக்கள் கட்டுப்பாடு என்றால் ஆண், இந்த வகையில் மனிதன் தனக்கு வசதியாக விலைமகளிர் போகத்துக்கு, சந்ததிக்குப் புனிதம் பெறுவதுதான் நேர்மை.

இல்லறம் என்ற பொய்யொழுக்கத்தில் நூற்றாண்டுகளாக மகளிரைக் கட்டிப்போட்டிருக்கிறான். ஒவ்வொரு தலைமுறையும் இந்தப் பிணிப்புகளில் இருந்து விடுவித்துக்கொள்ளும் மகளிர் போராட்டங்கள் உலகு தழுவிய வகையில் நடந்தேறி வந்திருக்கிறது.

அவ்வகையில் இந்த ஒழுக்கத்துக்கான போராட்டத்தையும் நாம் முன்னெடுத்துச் செல்வோம். 'அழகு' என்ற ஒரு மோசடி வலை பெண்களுக்கு உகந்த தொழில் அழகு சாதன உற்பத்திகள் என்று வலைவிரித்துச் சுருக்கி இழுக்கும் மோசடிகளில் சிக்காமல் நிமிர்ந்து இளைய சமுதாயம் நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள் என்று ஒன்று சேர்வோம். ஆண்களோடு பெண்களும் என்று விடுதலை மனிதர்களாக முழுமை பெற, அசுரக் கோடிகளை மிதித்துச் சமத்துவம் பெறும் அடிப்படையில் இந்த பாரத மாதாவின் பிள்ளைகள் எழும்பி வருவோம்.

இந்த லட்சியங்களை விட்டு அன்று இந்நாள் திரும்பிப் பார்க்க இயலாத தொலைவில் வந்துவிட்டோம். ஆனால் நமக்குத் தீர்வு வேண்டும். என்ன செய்வது? முதலில், அறியாமைகளும் வறுமையும் ஒழிய வேண்டும். உழைப்புக்கேற்ற உணவு இல்லை; மதுவருந்துகிறான். அவனுடைய இறுக்கங்களுக்குக் கட்டியவள், கட்டாதவள் பலியாகிறார்கள்.

இத்தகைய ஆண்களுக்கு இந்நாட்களில் மிக எளிய சிக்கலான கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் வந்திருக்கின்றன. அவர்களை அழைத்து மனதைப் பக்குவப்படுத்தி இணங்கச் செய்ய வேண்டும். பெண், இயற்கையின் பிரதிநிதி. ஆணின் தாக்குதல் இல்லாத வகையில் அவள் படிப்பு, சமூகத் தொண்டு என்று திருமணத்தைத் தள்ளிப் போடலாம். உடல் நலம், மன ஒழுக்கங் களுக்குக் குந்தகமான பொழுதுபோக்கு, சினிமா, தொலைக்காட்சிக் காமக்களியாட்டங்கள் விளம்பர ஆசையில் இருந்து பெண்கள் மீட்கப்பட வேண்டும். கோடி கோடியாகப் புரளும் அழகு சாதனத் தீமை செய்யாத வேறு பயனுள்ள குடிசைத் தொழில்களில் மகளிர் பங்கேற்று சுயசார்பு பெறலாம். தாமதமான திருமணம் என்பது, கணவனும், மனைவியும் இக்கால சமூக நிலை, பொருளாதார மேம்பாடு சுயச்சார்பு ஆகியவற்றில் புரிந்து கொள்ளலுடன்

தங்கள் வாழ்க்கையைத் திட்டமிடுவதற்கான முதல்படி. உடல் நலங்களுக்கும், சந்ததிகளுக்கும் குந்தகமில்லாத இயற்கை முறைகளை இவர்கள் விவாதிக்கலாம். பெண் 25லிருந்து 28 வரைக்குள் தாயாகும்படி கூடலை நிர்ணயித்துக்கொள்ளலாம். இரு மனம் ஒன்றுபட்டால், நிச்சயமாக முடியும். கூடலில் விந்தணு வெளியாகும்போது ஒருவர் பின்வாங்கலாம். இன்பம் என்பது மன உணர்வுதான். போகம் என்பதற்கு வலிமை கொடுக்காமல் லட்சியத்தை முன்னிறுத்தலாம். பெண் நிணநீர்ச்சுரப்பிகளை ஏறுமாறாகச் செய்யும் கருத்தடை மாத்திரைகளை உட்கொள்ள வேண்டாம். மன வலிமையே போதும்.

வறுமை குலவும் அடித்தளங்களில் சோர்வு போகக் குடிக்கிறார்கள். எனவே மதுவிலக்கும், தீமை இல்லாத விளையாட்டோ பொழுதுபோக்கு மனமகிழ்ச்சியோ இருவருக்கும் அவசியமாகின்றன. அவரவருக்கு ஏற்ற வகைகளில் குழந்தை களுடன் பொழுது போக்கலாம். மனம் இலேசாக இருக்கும். நடைப்பயிற்சி, நல்ல உறக்கம், கட்டுப்பாடான ஒழுக்கம் பெண்மையின் இயல்பில் குறுக்கிடாத கருத்தடையே சாலச் சிறந்தது. ஆசைகளையும், மோகங்களையும் அலைய விடும் சூழலில், அது சரிவராது என்று சொல்வதைவிட, தீங்கில்லா வழி முறைகளை செயல்படுத்தும் முயற்சிகளும் அவசியமானவையே. கருத்தடைக்கான பெண் ஊழியர்கள், உடல் சூடு கண்டறிந்து சினைமுட்டை முதிரும் நாட்களைத் தேர்வு செய்ய, வசதி இல்லாப் பெண்களுக்கு உதவலாம். ஒழுக்கங்களை அலையவிட்டு நோவுக்கு மருந்து என்பதோடு இந்த அடிப்படையிலும் தீவிரம் காட்டலாம்.

இதற்கு மேல், நமது வசதி வாய்ந்த பெண்கள், அவரவர் ஆண் துணைக்கேற்ப கருத்தடை பராமரிப்பை ஏற்கலாம். ஆண்கள் முனைப்பாக ஒத்துழைக்க வேண்டும்.

நோய்த்தடுப்புக்கு ஆணுறை ஏற்றது என்றாலும், பெண்கள் எழுச்சி பெற்று, தாங்கள் பலியாகும் மூத்த தொழிலை அறவே ஒழிக்க முனைந்து திரள வேண்டும். இயற்கையினால் இழப்பு ஏற்படும் போது, நான், எனது ரத்தம், எனது சந்ததி என்ற குறுகிய மனப்பாங்குகளில் இருந்து விடுபட வேண்டும். அனாதைக் குழந்தைகளைத் தமதாக்கிக் கொண்டு வளர்க்கலாம். தமிழ்நாட்டுப்

பெண்கள், திட்டமிடும் குடும்ப நலத்தில் ஒத்துழைத்திருக்கிறார்கள். ஏன்?

இவர்கள் பொருளாதார அழுத்தங்களையும், ஆணின் ஆதிக்கங்களையும் சுமந்து அனுபவித்திருக்கிறார்கள். இங்கே ஒரு தலைமுறைக்கு முன்பே திட்டமிட்ட குடும்ப விழிப்புணர்வு வந்துவிட்டது. என்றாலும், இன்னமும் ஆண்கள் தாமாக முன்வந்து பெண்களின் உடல் நலங்கள் கெடாமல் பொறுப்பை ஏற்பது மிக அவசியமானதாகக் கருதப்படவில்லை. கருச்சிதைவு, வெறும் இடைவெளி அதிகரிப்புக்காக ஒருமுறை செய்து கொள்ளலாம். அதுவே எப்போதும் என்பது மிக மிகத் தீமையான பெண்ணின் மன - உடல் ஆற்றலைக் கெடுக்கும், சிதைக்கும் தீர்வு. எனவே தங்கள் தங்கள் சொந்த அனுபவங்களை வைத்து, ஆணும் பெண்ணும் இந்த மிகப்பெரிய லட்சியத்துக்கு ஒத்துழைக்க வேண்டும். சீனத்தில் கட்டாயக் கருத்தடை பலனளித்தாலும் மனங்கள் குவிந்திருப்பதாகச் செய்தி வருகிறது.

நமது சமூதாயம் அறுபதுக்கு மேற்பட்ட முதிய சமூதாயமாக, இளைஞர் தங்கள் தாதுக்களை வீண் செய்து ஒளியிழந்த சமூதாயமாக உருவாக்கக் கூடாது. எதிர்கால இந்தியாவின் இளைஞர்கள் இந்த மண்ணுக்குப் புது வடிவம் கொடுப்பவர்கள். காதல் தோல்வி, பரீட்சை தோல்வி, வரதட்சணை மோசடி என்று வாழ்நாட்களை முடித்துக்கொள்வதற்காக இளைஞர்கள் இந்த மண்ணில் உதிக்கவில்லை. இளைஞர்கள் நம்பிக்கையின் ஒளித் தாரகைகள். சினிமாத்திரையோ தொலைக்காட்சித்திரையோ அவர்கள் இலக்குகளாக இருக்கலாகாது. விண்வெளி ஆய்வும், நிலத்தடி ஆய்வும் மனித நேயத்துக்கும், உலக அமைதிக்கு மாகத்தான் இருக்க வேண்டும். நமக்கு உயிரும், வாழ்வும் வளமும் அளிக்கும் மண் எம் தாய். இயற்கையன்னை நம்மை அரவணைக் கிறாள். ஒரு பெண்ணின் இயல்புகளைப் போக விளைவுக்காகக் குலைப்பது இயற்கையன்னைக்கே இழைக்கப்படும் தீமையாகும். எனவே, இயற்கையன்னையை நேசித்துப் போற்றி அவளோடு நாம் வாழ்வோம். உலகை வாழவைப்போம்!

இந்நாட்களில் 'முதியோர்' கடமை பற்றியும், நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பழைய நாட்களில், மகனுக்கு முடிசூட்டி விட்டு அரசர்கள், இராணிகள், 'வானப்பிரஸ்தம்' என்ற

வனவாழ்வுக்குப் போவார்கள். மனித வாழ்வில் நான்காவது நிலை, அனைத்தையும் துறந்து இறுதியை ஏற்கும் காலம்.

முதியோர் அதிகமாகும்போது, பற்றாக்குறை வாழ்வில் அவர்கள் சுமை ஆகிறார்கள். வீட்டுக்கு மட்டுமன்று, நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் மகள் திருமணமாகி வந்ததுமே, மாமியார் மருமகள் தகராறுகள், பெற்றோர் சுமை என்று கருதும் அபசுரங்கள் குடும்ப ஒற்றுமையில், பாசப்பிணைப்பில் புகுந்து விடுகின்றன. நுகர்பொருள் வாணிபம் தேவையில்லாத வசதி களை, போகங்களைக் கட்டாயமாக்கி இருக்கின்றன. மாமியாரோ மாமனாரோ இவற்றைப் புரிந்துகொண்டு குடும்பத்து அமைதிக்கு ஒத்துழைக்க வேண்டும். இவர்கள் ஒருவகையில் இந்தத் தலை முறைகளின் நெருக்கடிகளில் சிக்காமல் வாழ்ந்துவிட்டார்கள். பார்க்கப் போனால், அரசியலோ, சமூக உறவுகளோ, அதிகமாகச் சிக்கலாய்ப் போனதும் இன்றைய சமுதாயத்தினர் வாழ்வில் சுமையைச் சுமத்தியிருப்பதிலும், இன்றைய முதியோருக்கும் பங்கு உண்டு. தன் சுகம், தன் வசதி என்று வாழ்ந்தவர்களால் முதுமையிலும், மன நிம்மதியுடன் எதையும் யாருக்காகவும், விட்டுக் கொடுக்க முடியவில்லை. வாழ்வாதாரங்களைத் தேடுவதிலேயே வாழ்நாளைக் கழித்துக்கொண்டிருக்கும் அடித் தளத்தில் முதுமை நீட்சி பெறுவது மிகக் குறைவு. அடிதடி மோதல் குரூரங்கள், விபத்துக்கள், அங்கே மிக அதிகமாகி எல்லா வயது மக்களும், மடிவது அந்த மட்டங்களில்தான். ஆனால் தேவையில் லாமல் முதியோரைப் புறக்கணிக்கும் மனப்பாங்கும், அந்நிய நாடுகளில் இளைஞர் பெயர்ந்து சென்றபின் பொருளாதார வளர்ச்சி களுடன் முதுமைகளைச் சுகமாக இன்னமும் தன்னலங்களுடன் வாழவைக்க, வணிக நோக்கில் இல்லங்கள் பெருகுகின்றன. 'ஓய்வு காலத்தில் சுகமாக வாழலாம். ஐந்து நட்சத்திர விடுதி போன்ற இருப்பிடங்கள், மருத்துவர் வந்து பார்த்து முதுமைபேணும் வசதிகள், பொழுதுபோக்கு (களியாட்ட?) மகிழ்விடங்கள், 'ஆன்மிக'ப் பெரியார் வந்து உங்கள் முதுமைக் காலத்தை அமைதியில் லயிக்க அறிவுரை நல்கும் கூடங்கள் என்று பல்வேறு வசதிகளைக் கண்களையும் கருத்தையும் கவரும் வண்ணப்பட வழ வழத் தாள்களில் விரித்து வாணிப வலைகள் வீசப்படுகின்றன. 'பணத்தைக் கொடுத்தால் போதும், அவர்களே எல்லாம் செய்து விடுவார்கள்!' என்ற மனப்போக்கு படித்த நடுத்தர வர்க்கங்களில்

வழக்கமாகப் பரவி இருக்கிறது. முதியோரின் பங்கு இந்நாட்களில் இளைய தலைமுறைக் குடும்பங்களுக்கு அவசியமான தேவை. தொலைக்காட்சி வசதி, மருத்துவ வசதி, உணவு வசதி, எல்லாம் நானே செய்து கொள்ள முடியும்! ஓய்வூதியம் சலுகைகள் இருக்கின்றன! இவர்கள் தொடர்பு தேவை இல்லை என்று கருதுமளவுக்கு முதியோர் தன்னலம் பாராட்டு வதும் மருத்துவங்கள் பயனில்லா முதுமையை நீட்டிப்பதாகவும் மக்கள் தொகையின் இன்றியமையாத தேவைகளில் முன்னுரிமை கோரும் சுமைகளாகவும் தீர்ந்திருக்கின்றன. இவர்களால் பயனில்லை என்று இளையவர் கருதுமளவுக்கு முதிய சமுதாயம் இளைய சமுதாயத்தினரை வேறுபடுத்திக் குறை கூறுகின்றனர். ஆணோ, பெண்ணோ, இளைய சமுதாயத்தினரின் மனச் சிக்கல்களைப் புரிந்துகொண்டு ஆதரவாக வழிகாட்டிகளாக இருக்கலாம். இந்நாட்களில் இளம் பெண்கள் பலர் இடம் பெயர்ந்து நகர நெரிசல்களில் வாழ்வின் இனிய பருவங்களின் நெருக்கடி களில் மாய்கின்றனர். முதியவர்கள் அவ்வகையில் புறக்கணிக்கப் பட்டாலும், தங்கள் சொந்தக் கருத்துக்களை அவர்கள் மீது திணிக்காமல் அவர்களுக்கு அனுபவ வழிகாட்டிகளாக இயங்க வேண்டும். எத்தனையோ வகைகளில் சேவைகள் செய்யலாம். வசதிகளைப் பங்கிட்டுக் கொள்ளும் கட்டாயங்களில் முன்னுரிமை இளைஞர்களுக்கே இருக்க வேண்டும். மக்கள் பெருக்கப் பொருளாதாரத்தில் முதியோரின் தேவைகள் குறைக்கும் பங்கு இன்றியமையாததாகும்.

102 கோடிகளில் நவீன மருத்துவங்களின் பயன்கள் முதுமை நீண்டு செல்வதற்கே முதலிடம் கொடுக்கும் வாணிபமாக வளர்ந்திருக்கிறது. அண்மையில் தன் இரண்டு பிள்ளைகளும் பார்வையற்றோராக இருப்பதனால் மனம் வருந்திய ஒரு கட்டிடத் தொழிலாளியின் மனைவி, பள்ளிக் கல்வியில் இறுதித் தீர்வு எழுதியவனும், எழுதவிருப்பவனும் கண் பார்வை பெற வேண்டும் என்பதற்காகத் தூக்கிலேறி தற்கொலை செய்து கொண்ட செய்தி நெஞ்சை உலுக்குகிறது. 'கண்தானம் செய்வீர்' என்ற வகை தொகையில்லாப் பிரசாரம் அந்த ஏழைத் தாயைத் தவறான வழிக்குக் கொண்டு சென்றிருக்கிறது. பிள்ளைகளுக்குக் கண் பார்வைக்கான நரம்பே பிறவியில் பாதிக்கப்பட்ட நிலையில் வேறு விழிகள் பொருத்தினாலும் பார்வை வராது என்று மருத்துவர்கள்

ஏன் அந்தத் தாயிடம் சொல்லவில்லை?

தாய்மை தியாக வடிவமானது. பின்னர் புறக்கணிக்கப்படும் போது, தன்னிரக்கம் கொள்வது இயல்புதான். ஆனால், பிள்ளையோ, சகோதரனோ, கணவனோ, அதற்காக அவளை வருத்துவதோ இளைய சமுதாய மனைவியை அழுத்துவதோ நியாயமன்று. தலைமுறைகளின் புரிந்துணர்வுகள், சமூக நியாயங்கள் எல்லாமே முதியவர்களான ஆண்கள் பொறுப்பில் இருக்கிறது. நாற்பத்தெட்டு வயசில், கருப்பைக் கட்டிகளுக்காகக் கருப்பை நீக்கம் செய்த பெண்ணிடம், 'இல்லறச் சுகத்துக்குக் குந்தகம் இல்லை' என்று சொல்வது விபரீதமானது. காரணம், ஆணின் போகம் தேடும் இயல்புதான். 17 வயதிலிருந்து எழுபது வயதுவரை மக்கள் பெருக்கத்துக்குக் காரணமான போக உணர்வு, ஒழுக்கக் கட்டுக்குள் ஒடுங்காத அடித்தளத்தில் ஆரோக்கிய சமுதாயம் என்பது வெறும் பகற்கனவு.

102 கோடிகளின் இரு புஜங்களும், அறிவும், திறனும், மதி நுட்பமும் உதிரியாகப் போகாத ஆற்றலில் இணைய, பாரத மாதா, இயற்கையோடு கூடிய எழிலில் புதுப்பொலிவு பெறுவாள்.

புலனடக்கத்தை முதன்மைப்படுத்தும் கலைகள், வாழ்வியல் கூறுகளை ஒழுங்கமைக்கும் பொழுது போக்குகள், அடித்தள மக்களின் இறுக்கங்களைத் தளர்த்தி, அவர்களை மேம்படச் செய்ய முடியும்.

தொழில் நுட்பங்களை அழிவுகளுக்காக வாரி இறைக்காமல் ஊடகங்கள் மக்களின் உண்மையான மேம்பாடுகளுக்கு ஆக்கப்பூர்வமான திட்டங்களில் அவர்களை ஈடுபடுத்து பனையாக மாற வேண்டும். ஒளிபரப்பு நேரம், மாலை நேரங்களில் சில மணிகள் மட்டுமே என்று குறைய வேண்டும்! வாணிபம் வளமல்ல; மனித ஆற்றலே வண்மை!

***

# பிற்சேர்க்கை

## 1. கருத்தடை முறைகள் சில

**1.** யோனிப் பாதைத் தடைகள்

ஆரம்ப காலத்தில் இவை பல மாதிரிகளில் பயன் படுத்தப்பட்டன.

**1.** Vaginal Diaphragms 2. Cervical Cap - Check Pessary. 3. Vault Cap.

இவை கூடலுக்குப் பின் அகற்றக்கூடியவை. என்றாலும், வழுவழுத்துப் பொருத்திக் கொள்ள இலகுவான களிம்பு, பசைகள் வேண்டியிருக்கும். விந்தணுக்கள் உயிர்த்துச் செயல்படாத கொல்லி மருந்துகள் சாதனங்களில் பூசப்பட்டிருக்கும்.

இவை அனைத்துமே பெண்களுக்கு இலகுவானவையாக நம் நாடுகளில் ஏற்கக்கூடியவையாக இல்லை என்பதே உண்மை.

**4.** ஸ்பாஞ்ச் எனப்படும் உறிஞ்சி தட்டைகள். இதுவும் யோனிப் பாதையில் புகுத்தப்படுவதுதான். விந்துவை உறிஞ்சிக் கொள்ளும்.

இதுவும் எளிதான பயனுள்ள சாதனமாகவில்லை.

**5.** விந்தணுக் கொல்லிகள் இரசாயனக் கலவைகள். இவையும் பயன் விளைவிக்கும் சாதனங்களாக நீடிக்கவில்லை.

**6.** இந்த வகையில், நுரை மாத்திரைகள் பயன்பாட்டுக்கு வந்தன. இந்தியாவிலும், வந்தன. யோனிவாயில் வைப்பவை.

**7.** பெண்களுக்கான தடுப்புஉறைகள் (Condomes female)இவை இப்போது முற்றிலும் புதிய வசதியான வடிவில் சந்தைக்கு வந்திருப்பதாகத் தெரிகின்றன. என்றாலும், இந்தியாவின் பெரும்பாலான நடுத்தர மக்களிடையே கூடப் பயன்படுத்தும்படி வசதியாக, பயனுள்ளவையாக இல்லை என்பதே உண்மை.

**1.** அடுத்து வந்த சாதனங்களே, கருப்பையில் புகுத்தப்படும் லூப் போன்ற கருத்தடை வளையங்கள். T வடிவ சாதனங்கள். மிகப் பழமையானது. லிப்பே லூப். (1965) திருத்தப்பட்ட

மாதிரிகளில் CUT 200 என்ற மாதிரி 1975 லிருந்து குடும்ப நல மருத்துவமனைகளில் இலவசமாக வழங்கப்பட்டன.

லிப்பே லூப் - CUT 200 ஆகிய இரண்டு மாதிரிகளும் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகின்றன.

சந்தையில் வாங்க, ML.CU 250. MLCU 375 தவிர அண்மைக்காலங்களில், நோவா T, CUT 380A ஆகிய சாதனங்களும் கிடைக்கின்றன. இப்போதெல்லாம், லிப்பே லூப்புக்கு மாற்றாக, CUT 200 அதிகமாக வழங்கப்படுகின்றன. இவை தவிர மேலே குறிப்பிட்ட சாதனங்கள் விலைக்கு வாங்கி, சமுதாயத்தில் மேல்தட்டில் இருக்கும் பெண்களால் மட்டுமே பயன்படுத்தப் படுகின்றன. செம்புத் துகள் அணுக்கள் விந்தணுக்களை நசிக்கச் செய்வதாகக் கண்டறிந்த நிலையில் இந்தத் தடைச் சாதனங்களில், 'செம்பு' கூடியது.

இவையே காப்பர் T, காப்பர் T 200, காப்பர் T 380A, காப்பர் T 380 S, நோவா T முதலியவை.

இவை தவிர கருவுறுதலைத் தடுக்கும் தாதுக்கள் (நிணநீர்ச் சுரப்பிகளின் இயல்பை மாற்றும்) LNG 20 என்ற கருத்தடைச் சாதனமும் புழக்கத்தில் வந்துள்ளது.

2. உட்கொள்ளும் மாத்திரைகள் (Oral Contraceptives) இந்த மாத்திரைகளும் தாதுச் சுரப்பிகளின் இயற்கை அளவில் மாறுதல் செய்து சினைமுட்டை கருவுறுவதைத் தடுக்கும் பயன்களையே இலக்காக்குகின்றன. இவையே மாலா D, மாலா N மாத்திரைகள். மாலா N மாத்திரைகள் குடும்ப நல சிகிச்சை மையங்களில் இந்தியா முழுவதும் இலவசமாக வழங்கப்படுகின்றன. மாலா D குறைந்த விலையில் (அரசு மானியம் பெற்றிருப்பதால்) வழங்கப் படுகின்றன. (இந்த மாத்திரைகளுக்குப் பக்க விளைவுகள் உண்டு) இத்தகைய மாத்திரைகள் மேலும் மேலும் திருத்தியமைக்கப்பட்ட கருத்தடைச் சாதனங்களாகப் பரவலாகப் பயன்பாட்டிற்கு வந்திருக்கின்றன.

3. தாதுச் சுரப்பிகள் - ப்ரொஜஸ்ட்ரான் - சுரப்பிகளில் மாற்றம் செய்யும் கருப்பையில் புகுத்தும் சாதனம் முன்பே கூறப்பட்டது. இதே அடிப்படையில் கருத்தடைக்கான ஊசிமருந்துகள் வந்திருக்கின்றன.

இந்தியாவில் அறியாமை நிறைந்த பெண்களிடையே மாத்திரைகளை விட, ஊசியே சிறந்ததென்ற கருத்து இருக்கிறது. டெபோ ப்ரோவெரா (DMPA) இந்த ஊசி மருந்து அமெரிக்கத் தயாரிப்பு. ஒரு ஊசி போட்டுக் கொண்டால், மூன்று மாதங்களுக்குக் கருத்தரிக்காமல் தடுக்கலாம். இதேபோல், ஜெர்மானிய தயாரிப்பு ஊசி மருந்து 'நெட் இன்' என்ற பெயரில் சந்தைப்படுத்தப்பட்டிருக்கிறது. இதை இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை போட்டுக் கொள்ள வேண்டும். ஆனால், இந்தத் தடுப்பூசிகளை (அரசு சாராத) பெண்கள் நலக் குழுவினர் எதிர்த்து வருகிறார்கள். தீய பக்க விளைவுகள் தவிர்க்கப்படுவதாக உத்தர வாதமில்லை. உடல் பருமன், இதயக் கோளாறு போன்றவை சில.

இதே விளைவுகளைத் தரும் செருகுக் குச்சிகள், தோலுக்கடியில் வைத்துக் கொள்ளும் கருத்தடைச் சாதனங்களாக வந்துள்ளன.

1. நார்ப்ளேன்ட் - Norplant

2. எல்.என்.ஜி.ராட் L.N.G. Rod விசிறி வடிவிலான 6 குச்சிகள். ஐந்து முதல் ஏழு ஆண்டுகள் வரை இவை செயல்படுமாம்.

இந்த எல்லாத் தடைச் சாதனங்களும் அச்சமற்ற போகத்தையே இலக்காக்குகின்றன.

1. ஆணுக்குரிய உறைகள் - பால்வினை நோய்கள் - எய்ட்ஸ் - என்ற தேய்வு நோய் பரவாமல் பாதுகாப்பவை. கருத்தடைச் சாதனமாகவும் பயன்படுத்தலாம்.

2. ஆணுக்குரிய விந்துக்குழாய்த் துண்டிப்புச் சிகிச்சை எளிமையானது; நவீனமானது; பக்க விளைவே கிடையாது.

கரு வந்துவிட்டால் எப்படி முதிர் விளைவைத் தடுப்பது?

1. அதுதான் கருச்சிதைவு; கருக்கலைப்பு.

இது சமூக அச்சத்தின் பலனாக, ஆணின் ஆக்கிரமிப்பு, குரூரங்களை (ஒரு லட்சம் மகப்பேறு) ஏற்றுப் பழிசுமக்கும் பெண்கள் கையாளும் அவசர கால நடவடிக்கைகள் என்றே சொல்லலாம்.

பாதுகாப்பான முறைகளில் எந்த விவரமும் கேட்காமல் கருக் கலைப்பு செய்துகொள்ளும் வசதிகள் இந்நாட்களில் வந்திருக்

கின்றன. மாத்திரைகள் ஊசிகளே போதும் என்ற வசதிகள் இந்நாட்களில் மருத்துவர் பரிந்துரைகள் இல்லாமலே கிடைக்கிற தாகத் தெரிகிறது. ஆனால் முன்பெல்லாம் மருத்துவமனை சென்று, கருவை உறிஞ்சி, சுத்தம் செய்யும் கருவிகளால் எளிய சிகிச்சை செய்து கொண்டு கருக்குழாய் துண்டிப்பு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் பலர். சிறு குடும்ப இலக்கில் வெற்றி பெற்றிருக்கின்றனர் என்றாலும், ஒழுக்கக் கட்டுப்பாடு இல்லாத இளைஞர் சமுதாய உடல், மனநலங்கள் பாதிக்கப்படும் வசதிகள் இவை.

பெண் - கருக்குழாய்த் துண்டிப்புச் சிகிச்சை - நவீனமான லேபராஸ்கோபி முறை, இரண்டு குழந்தைகளே போதும் என்ற வகையில், உகந்ததாகும்.

## 2. மங்கல மகப்பேறு

பிரசவம் மகப்பேறு நிகழ்ச்சி மருத்துவமனைகளில் நடைபெறுவதே உகந்ததாகும். மகப்பேறியல் மருத்துவர்கள் இதற்கென்றே சிறப்புக் கல்வியும் பயிற்சியும் பெற்ற செவிலியர் இங்கே மட்டுமே இருக்கிறார்கள். பிரசவம் சிக்கலாகும் என்று தெரிந்தால் உடனே சிறப்பாகக் கவனித்து ஆவன செய்வதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் மருத்துவர்களும் இருப்பார்கள் என்ற நோக்குடன் பல ஊர்களில் தாய் - சேய் நல மருத்துவமனைகள் சுகாதாரத் துறை சார்ந்து இயங்குகின்றன. இந்த மருத்துவமனைகள் அனைத்துமே அலோபதி மருத்துவத்தை முதன்மையாகக் கொண்டே இயங்குகின்றன. மகளிரின் கருப்பகாலப் பராமரிப்பு, அவள் சுகப்பேறு பெறுவதற்கான ஆலோசனைகளுடன் கூடிய மருத்துவம் எல்லாமே அலோபதி முறையில்தான் அளிக்கப் படுகிறது. நமது நாட்டின் அனைத்து மருத்துவமனைகளும் அரசு சார்ந்ததும், தனியார் மருத்துவமனை களும் அலோபதி முறை மருத்துவர்கள், துறை சார்ந்த அறுவை சிகிச்சை வல்லுனர்கள், அதி நவீன அறிவியல் கண்டுபிடிப்புகளின் செயல்முறை மருத்துவங்கள் என்று மருத்துவத்துறையை மிகப்

பெரிய வாணிபத்துறையாக மாற்றியிருக்கிறதென்றால் மிகையில்லை. கரு உயிர் நன்கு வளர்ந்திருக்கிறதா, சிக்கலான நிலையில் பிரசவம் நிகழ முடியாத ஆபத்துகள் நேருமா, குழந்தை முறைபாடுடையதாக வளர்ச்சி பெற்றுவிடுமா என்பதெல்லாம் முன்கூட்டியே அறிய நவீன 'ஸ்கேனிங்' என்ற வசதி வந்திருக்கிறது. இதுபோன்ற அறிவியல் சார்ந்த நவீன வசதிகள் எதுவும் பெண் தன் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஏற்றவையாக இல்லை என்பது வருந்தத்தக்கதோர் உண்மை.

அரசு மருத்துவமனைகளில் பிரசவம் என்று வரும் பெண்கள் நவீனமான மருத்துவ முறைகளுக்கு உட்பட்டே தீரவேண்டி யிருக்கிறது. ஸ்கேன் முறை தவறாகப் பயன்படுத்தப்படுவதும், பெண் கருக்கள், கருவறையிலேயே உருவாகாமல் கரைக்கப் பெறுவதும், ஒரு தனியான வரலாறாகவே நிகழ்கிறது.

நமது இந்திய மருத்துவ முறைகள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளின் பாரம்பரியம் கொண்டவை. கர்ப்பம் என்பதே மங்கல நிகழ்வு. அநேகமாக எல்லா மருத்துவ முறைகளும் கருவைக் கரைப்பதை ஏற்றிருக்கவில்லை. அலோபதி மருத்துவத்திலும், பட்டம் பெறுமுன் ஆணை எடுக்கும் சடங்கொன்று முந்நாட்களில் இருந்தன. அதில் கருவைக் கலைக்கமாட்டேன் என்பது ஒரு முக்கியமான வாசகம்.

ஆனால், சத்திய மொழிகளுக்கு இந்நாட்களில் எந்தப் பொருளும் இல்லை. நமது பாரம்பரிய ஆயுர் வேத, சித்த மருத்துவ முறைகளில் கருவுற்றலும், பிரசவம் வரையிலுமான மருத்துவப் பாதுகாப்பு நெறிகளும், மிக நுட்பமாக உணர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இதை 'சஞ்சீவினி' என்ற ஆயுர்வேத- யோகா சிகிச்சை மைய அமைப்பினர், தங்கள் செய்தி - மடல் வாயிலாக மக்கள் பரவலாக அறிந்து கொள்ளும் வகையில் வெளியிட்டு வருகிறார்கள். இந்த அமைப்பு கடந்த பதினைந்து ஆண்டுகளாக முற்றிலும், ஆயுர்வேத முறைப்படியான சிகிச்சைகளை அளித்து பல்வேறு நோய்கள், தீராத நாட்பட்ட நோய்கள் குணமாக்கி வரும் அனுபவம் பெற்றிருக்கிறது. 'மகப்பேறு' என்ற தலைப்புடன் அவர்கள் வெளியிட்டிருக்கும் இதழில் (ஏப் - 2005) பெண்களின் உடல், பிரசவம் சார்ந்து, அவளறியாமலேயே ஒரு சிகிச்சை - அறுவை முறைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைச்

சுட்டிக்காட்டி இருக்கின்றனர்.

ஆயுர்வேத மருத்துவ இயலில், ஆரோக்கியமான கருத்தரிப்பு என்பதே உரிய பருவத்தில் ஊட்டச்சத்துடன் கூடிய விளை மண்ணில், நன்கு ஊன்றப்பட்ட நல்ல விதை முளை அரும்புவதற் கொப்பாகக் கூறப்படுகிறது. மனித இனத்துக்கே உரிய மகப்பேறு. கருத்தரிப்புக்குப் பின் தாயின் வற்றியில் வளர்ச்சி பெறும் கருவுக்கும் தாய்க்கும் உரிய சில தனிப்பட்ட உணவுடன் கூடிய மூலிகை மருந்துகள் இம்முறையில் பரிந்துரைக்கப்படுகின்றன. ஒரு பெண்ணின் வாழ்வில் கருவுறுதலும், பிரசவகாலப் பராமரிப்பும் மிக மிக முக்கியமான காலம். இது ஒரு மகிழ்ச்சியான பருவம் எனலாம். அவளை மகிழ்ச்சியாக வைத்திருப்பதே குடும்பத்தி னருக்கு முக்கிய இலக்காக இருக்க வேண்டும். அவளுடைய ஆசை களும் விருப்பங்களும் முட்டாள்தனமாகத் தோன்றினாலும் பிறர் அவற்றை அலட்சியம் செய்யலாகாது. நான்காம் மாதத்தில் கரு வளர்ச்சி பெற்று இதயம் தோன்றிவிடும். இப்போதும் இதற்கு முன்பும், சாதாரணமாக நேரக்கூடிய பொது உடல் நலக் குறைவுகளுக்கு மூலிகை மருந்துகள் இருக்கின்றன. இரு இதயங் களைப் பெற்ற தாயின் பிரக்ஞையுடன் இன்னொரு பிரக்ஞையும் தோன்றி வளருகிறது. இதனாலேயே அவளுடைய விருப்பங்கள் நிறைவேற்றப்பட்டு மகிழ்ச்சியுடன் வைத்திருக்க வேண்டும் என்று ஆன்றோர் கருதினர். இந்தப் பாதுகாப்பான அணுகுமுறை தாயின் மன உடல் சார்ந்த எந்தப் பாதிப்பும் நேராமல் தவிர்க்கிறது. அவளுடைய உணர்வுகள் பாதிக்கப்பட்டால், வயிற்றில் வளரும் கரு பாதிப்படையலாம்; ஊனமும் நேரலாம் என்று கருதப்பட்டது. வன்முறை அதிர்வுகள், அதிர்ச்சியூட்டக் கூடிய அனுபவங்கள், கடும் உடலுழைப்பு, தீவிர உடற்பயிற்சி, பட்டினி, விரதங்கள், தவிர்க்கப்பட வேண்டும். நீர் - மலம் போன்ற இயற்கை உந்துதல் களை அடக்கலாகாது. ஏடாகூடமாக உட்காருவதோ கரடு முரடான நிலத்தில் படுப்பதோ நல்லதல்ல. காரசாரமான உணவோ, அமித உணவோ உகந்ததல்ல. எளிதில் சீரணமாகக் கூடிய சுவையுடன் கூடிய உணவை, உரிய நேரங்களில் உண்ண வேண்டும். உடல்நலத்திற்கு ஊறு செய்யக்கூடிய குலுங்கு ஊர்திகளில் பயணம் செய்வதை நிச்சயமாகத் தவிர்க்க வேண்டும். நெடுநேரம் உறங்குதலும், பகல் உறக்கமும், மதுவருந்துதலும், புலன்களுக்குத் தீமை விளைவிக்கும் நடவடிக்கைகளில் பங்கேற்பதும் நிச்சயமாகத்

தவிர்க்கப்படவேண்டும். கருவுற்ற ஆறாம் மாதத்தில், கோஷூரம்ச என்ற நெரிஞ்சி முள் கசாயம் உடல்பிடிப்புகளைத் தவிர்க்கிறது. கர்ப்ப காலத்தில் வயிற்று வலி, வயிற்றுப் போக்கு, கால் வீக்கம், முதுகு வலி, சளி, இருமல் போன்ற நலக் குறைவுகளுக்குத் தாயையும் சிசுவையும் பாதிக்காத மருந்துகள் கொடுத்து நலம் பெறச் செய்யவேண்டும்.

ஒன்பதாம் மாதத்தில் மூலிகை எண்ணெய் கொண்டு, வயிற்றுப் பகுதிகளில் பூசி, மெல்லத் தடவ வேண்டும். மூலிகை எண்ணெயில் ஊறிய தக்கைத் திரிகிளை யோனிப் பாதையில் வைக்கலாம். இந்த எண்ணெய் மருத்துவம், கருப்பாதை, நெஞ்சு, இடுப்பெலும்பு, இடுப்பு, முதுகு, மார்பின் மைய இரு பகுதிகள் எல்லாவற்றையும் மென்மையாக வைக்கிறது. வயிற்றுப் பகுதிகளை, உட்புறங் களைப் பிரசவம் நிகழும்போது கிழிவடையாமல், விரிந்து கொடுக்கவும் கரு உயிர் கீழ் நோக்கி அசைந்து வருவதற்கான பாதையையும் எளிதாக அமைக்கிறது. சாதாரணமாகக் கர்ப்ப காலம் ஒன்பது மாதங்களிலிருந்து பனிரெண்டு வரை நீடிக்கலாம் என்று சுச்ருத சம்ஹிதை கூறுகிறது. பனிரெண்டு மாத கர்ப்பம் மிக மிக அபூர்வம். ஆனால், ஐம்பது ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றில் பதினோரு மாத கர்ப்பம் இருந்திருக்கிறது.

இந்தக் கர்ப்ப காலப் பராமரிப்பைக் கருத்துடன் பேணிவந்தால் தாயாகப் போகும் பெண் சிரமப்படாமல் மகவை ஈன்றெடுப்பாள். அந்நாட்களில், கிராமத்து மருத்துவப் பெண்டிர் - இத்தகைய மகப்பேறுகளை மிகத் திறமையுடன் கையாண்டு அனுபவம் பதித்திருக்கின்றனர், இந்த மருத்துவச்சிகள். அதிகமான ஆடம்பரங்களில்லாமலே கிராமங்களில், வீடுகளில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டே, பேறுகால மருத்துவம் செய்தார்கள். பாலூட்டும் தாய்மாருக்கும், சேய்களுக்கும் நலம் பேணினார்கள். இதுமட்டுமின்றி, பிரசவம் சிக்கலாகும் போதும் இந்த அனுபவம் மிக்க மருத்துவப் பெண்டிர், வயிற்றுச் சேயை, திறம்பட இயற்கையான முறைக்குத் திரும்பத் தங்கள் நுணுக்கமான அனுபவங்களைப் பயன்படுத்தி, சிக்கலில்லாமல், சேயை வெளியேற்றக் கூடியவர்கள்.

இத்தகைய கர்ப்ப காலப் பராமரிப்பும், திறமை வாய்ந்த மருத்துவப் பெண்டிரும், அலோபதி மருத்துவ முதன்மையில்

செல்வாக்கிழந்து வழக்கொழிந்து போயினர். இந்த மருத்துவப் பெண்டிரே அக்காலத்தில், மூச்சு வராமல் பிறக்கும் சேய்களுக்கு மூச்சு வரச் செய்யும் அனுபவமும் அறிந்திருந்தனர். பிரசவம் என்பதே இயற்கையாக நிகழக்கூடியது. எண்ணெய் தேய்ப்பும், நீரில் போடும் மூலிகைக் குளியலும், உடல் நோவை மகப்பேற்று நலிவுகளைப் போக்கி சுகமளிக்கின்றன. தளர்ந்துபோன வயிற்றை இறுக்கிக் கட்டுவார்கள். இந்த வழக்கம் பின்னால் ஏற்படக்கூடிய தளர்ச்சியை, சதைத் தொய்வை, முதுகுவலி போன்ற விரும்பத்தகாத விளைவுகளைத் தடுக்கின்றன. மருத்துவச்சிகள் தாய்க்கும் சேய்க்கும் நலம் விளைவிக்கும் முறைகளைத் தாய்க்கும் நெறிப்படுத்துவார்கள். மருத்துவமனைப் பிரசவங்களே சிறந்தன என்ற இடைவிடாத பிரசாரங்களின் பயனாக, இன்றைய தாய்மார், வசதியற்ற நிலையிலும், பழைய பாரம்பரிய முறைகளைத் தவிர்ப்பதே நலம் என்ற, பழைய விலை மதிப்பற்ற முறைகளை அடியோடு ஒதுக்குகின்றனர். கடன்கிடன் வாங்கியேனும், அரசு மருத்துவமனையை விடத் தனியார் மருத்துவமனை சிறந்தென்று தேவையற்ற பின்விளைவுகளையும் ஏற்கின்றனர்.

மருத்துவமனைகளில் மகப்பேற்றுக்கு வரும் பெண்ணுக்கு எந்தவிதமான சிகிச்சை செய்யப்படுகிறது என்ற விவரத்தைக் கல்வியறிவும் பட்டப்படிப்பும் கூடிய பெண்ணுக்கும் அறிவிப்பதில்லை. வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்வாதாரங் களுக்குத் தத்தளிக்கும் குடும்பங்களில் இருந்து வரும் பெண் களுக்கோ அவளுடன் வரும் பெண் உறவினர்களுக்கோ வெறும் பணச்செலவு பற்றிய முன் விவரம் மட்டுமே அச்சுறுத்தலாக நெருப்புக்கோடாக விதிக்கப்படுகிறது. இது சிசேரியனாக இருக்கும். எனவே பதினைந்தாயிரம் ஆகும்! என்பார்கள். சிசேரியன் அவசியமா, இல்லையா என்ற பேச்சுக்கே இடமில்லை. தகவல் பெறும் உரிமைகள் அழிக்கப்படுகின்றன.

சஞ்சீவ்னி ஆயுர்வேத யோகா சிகிச்சை மையம் வெளியிட்டிருக்கும் செய்திமடல் மகப்பேறு மருத்துவமனைகளில் வாலாயமாகச் செய்யப்படும் எபிஸியோடமி என்பதோர் அறுவைச் சிகிச்சை முறை பற்றித் தெரிவிக்கிறது. இந்த முறை, மகப்பேறு நிகழும்போது, வயிற்புறையின் கீழ்ப்பகுதிகள் தாறுமாறாகக் கிழிவதைத் தடுத்து, பிரசவம் நிகழ்வதைச் சிக்கலில்லாமல் செய்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால்,

இதற்கு ஆதரவான சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை என்றும், பின்விளைவுகள் சிக்கலாகுவதாகவும் விளக்கப் பட்டிருக்கிறது. 1920ம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள மருத்துவக் கட்டுரைகள் தவிர, இது பற்றிய தேவையை, மகப்பேறு மருத்துவத்தில் உலகளவில் புகழ் பெற்ற பாடநூல் எழுதியுள்ள டாக்டர் ஏ.எல்.முதலியாரும் வற்புறுத்த வில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இயற்கையின் நிகழ்வுமுறையைக் கூர்ந்து கவனித்து, தேவையானால் மட்டுமே நாம் குறுக்கிட வேண்டும் என்று அவர் பரிந்துரைத்திருப்பதாகவும் குறிப்பாக்குகிறது. இந்தச் செய்தி மடலில் பத்து ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட இம்முறை தேவையில்லை என்று கடந்த ஓராண்டாக முடிவெடுத்து மகப்பேறுகளைப் பின்விளைவுகள் இல்லாமல் நிகழ்த்தி வருவதாக தாய் - சேய் நல மருத்துவ மைய இயக்குநரான மருத்துவரின் நேர்முகமும் வெளியாகி இருக்கிறது. அத்துடன் முதல் முகப்பேறு சிசேரியனாக இருந்து, இரண்டாவது பிரவசத்தை இயற்கை முறையில் நிகழ்வதற்கான உத்தியாக 'எபிஸியோடமி' என்ற (யோனிப்பாதையில் இருந்து குதவாயில் வரையிலான கீறல்) சிகிச்சை செய்யப்பட்டதாகவும் அது பற்றித் தனக்குத் தெரிவிக்கவில்லை என்றும் ஒரு தாயின் அனுபவ நேர்முகம் வெளியிடப்பட்டிருக்கிறது.

குழந்தை நான்கு கிலோ இருந்தது. மூன்று வாரங்கள் பேறு பெற்றவள் அசைய முடியாதபடி சிரமப்பட்டாள். ஆய்வுகள் நச்சுத் தொற்றும் யோனிக் கசிவும், ரத்தக்கட்டி ஏற்பட்டு சிக்கலாக்குவதையும் தெரிவிக்கின்றன. புண் ஆறினாலும் மலம், வாயு வெளியாவதைக் கட்டுப்படுத்த இயலாத சிக்கல்களும் விளைகின்றன. பின்னாட்களில் கலவியும் கூடத் துன்பமாவதாகத் தெரிவிக்கிறது.

அலோபதி மருத்துவர்கள் வேறு மருத்துவ முறைகளை ஏற்பதில்லை என்பது வெளிப்படை. ஏனைய மருத்துவ முறைகளைப் பயின்ற மருத்துவர்களும் தேவையில்லை என்றாலும், இப்போதெல்லாம் அலோபதி மருத்துவர்கள் கையாளும் கருவிகளைப் பயன்படுத்துவதால் மட்டுமே மக்கள் நம்புகின்றனர். பழைய பாரம்பரிய முறைகளில் அறியாமை இருந்தது. ஒரு கிராமத்தில், பிரசவ வலி எடுத்ததும் ஊர்க் கோயிலின் முன் விட்டுவிட்டு, எல்லாம் அம்மன் பார்த்துக் கொள்வாள் என்று

வந்துவிடுவார்களாம். அன்றைய அனுபவம் பெற்ற மருத்து வச்சிகளை இன்று தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. கர்ப்பம் என்பது ஒரு பெண்ணின் வாழ்வில் மங்கல நிகழ்வு. அது இன்றையச் சூழலில் மன அழுத்தம் கொடுக்கும் நிகழ்வாக மாறியிருக்கிறது. புதியவைகளை ஏற்கலாமா, வேண்டாமா என்ற கருத்துக்கே இடமில்லாமல், மகளிரின் உடல்கள் மீது அவர்களுக்குரிய உரிமைகளை மறுப்பதாகவே சமூக மாற்றங்கள் உணர்த்துகின்றன. இந்தச் சூழலில் தமிழக அரசு, பாரம்பரிய மருத்துவ முறையையும், கிராமங்களிலும் நகர்ப்புறங்களிலும் மகப்பேறு, குழந்தை நலம் பேறு பெற்ற தாய்ப் பராமரிப்பு ஆகிய நிலைகளில் பரிந்துரைகளை ஏற்க முன்வந்திருப்பது மிக ஆறுதலான செய்திகள். மாறும் சமுதாயத்தில், மகளிர் உரிமைகள், மகப்பேறு குடும்ப நலம் சமூகப் பாதுகாப்பு ஆகிய நிலைகளில் தகவல்கள் பெற்று, தீர்மானிக்கும் வகையில் மேம்பட வேண்டும்.

# 3. ஹிந்து 17.4.2005 ஞாயிறு-
## கல்பனா சர்மாவின் கட்டுரையின் தமிழாக்கம்

### இதுதான் முன்னேற்றமா?

உத்தரப்பிரதேசத்தில் பெண்களுக்கு நேரும் கொடூரங்கள் பற்றிய ஓர் உண்மை அறிக்கை:

ஒவ்வோர் ஆண்டிலும், இந்தியாவில் கருவுறும் பெண்களில் ஐந்து லட்சம் பேர் மரிக்கின்றனர். 110 லட்சம் குழந்தைகள் ஐந்து வயது நிரம்பு முன் இறக்கின்றன. நாம் முன்னேறுகிறோம் என்ற கருத்திலிருந்து நம்மைக் கொக்கி போட்டுப் பின்னிழுக்கும் தகவல்கள் இவை. தகவல் தொழில்நுட்பங்களிலும், அவை சார்ந்த வேறு துறைகளிலும், இந்தியா முன்னேறுகிறதென்றும் நம் தொடர்புச் சாதனங்கள் மார்தட்டிக் கொள்கையில் நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்வதாகத் தோன்றுகிறது. அமெரிக்கப் பத்திரிகை களில் நம் பிரதமர் சிறப்பிக்கப்படும்போதும், நம்மிடையே உலகிலேயே பெரிய செல்வமுடையோர் இருப்பது குறித்தும் நாம்

பெருமை கொள்கிறோமே? ஆனால், இந்த முன்னேற்றங்கள் எந்த அடிப்படையில் நிகழ்ந்துள்ளன? எம் பெண்களும், குழந்தைகளும் இருத்தலுக்குப் போராடிப் பிழைக்கிறார்கள் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இல்லையென்றால் முன்னேற்றம் கேள்விக் குரியதே!

## உத்தரப்பிரதேசத்தின் உண்மை நிலை :

தற்செயலாக உத்தரப்பிரதேசத்திலிருந்து வந்த ஒரு சுகாதார ஆர்வச் செயலரைச் சந்தித்து இந்த வாரம் விவரம் அறிந்தபோது, பகீரென்றது. அங்கு பெண்களுக்கு மாநிலத்தில் சுகாதாரம் சார்ந்தும் மருத்துவம் சார்ந்தும் இழைக்கப்படும் கொடுமைகளைக் கேட்க முடியவில்லை. ஏதேனும் பிராந்திய மொழி இதழில் இதுபோன்ற செய்தி விவரம் வெளியாகும். ஆனால், அதற்கு எந்த உயிரும் இருக்காது. தேசிய அரங்குக்குப் பத்திரிகை வட்டத்துக்கு எட்ட வழியில்லை. ஆனால், இந்த விவரங்கள் விரிவாக நாடு முழுவதும் கவன ஈர்ப்புப் பெற முக்கியத்துவம் பெற வேண்டும். அப்படிப் பார்த்தால் மிகத்திறமையாக நிர்வாகம் செய்யப்படும் மாநிலங்களில் கூட பல உத்தரப்பிரதேசங்கள் இருக்கலாம்!

உத்தரப்பிரதேசத்தில் கருத்தரித்த மகளிருக்கு ஏற்படும் சிக்கல்களால், ஆண்டுதோறும் 40 ஆயிரம் பெண்கள் மரிப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. வயதும், எடையும், மிகக் குறைவாக இருக்கும் நிலையில் கருத்தரிக்கும் பெண்கள், ஆபத்தான விளைவு களை வரவேற்கக்கூடியவர்களே. இத்துடன் பாதுகாப்பற்ற கருச்சிதைவுகளுக்கும், அவர்கள் இரையாகின்றனர்.

ஒரு புள்ளிவிவரம், இந்திய நாட்டிலேயே மிக அதிகமாக ஆண்டுக்கு இருபது லட்சம் கருச்சிதைவு நிகழுவதாக உத்தரப் பிரதேசத்தை உச்சியில் வைக்கிறது. இதேபோல் பாது காப்பற்ற கருச்சிதைவுகளின் விளைவாக 15 லிருந்து 30 சதவிகிதம் பெண்கள் உத்தரபிரதேசத்துத் தாய் மரணக்கணக்கில் ஏற்றம் பெறுகின்றனர். குருதிப் பெருக்காலும், நச்சுத் தொற்று விளைவுகளாலும் காயங் களாலும் பெண்கள் மடிகின்றனர். ஆனால், இந்த மரணங்களுக்குக் காரணமானவர்கள் என்று எவரும் கணக்கில் வருவதில்லை!

இந்த மரண நிகழ்வுகளைப் பற்றிய ஆய்வறிக்கைகள், பல பெண்கள் தன்னார்வக் குழுக்களினால் சேகரிக்கப்பட்ட தகவல் களின் அடிப்படையில் வெளிப்பட்டிருக்கின்றன. 'ஸஹயோக்'

என்ற தன்னார்வக் குழுவும் ஒன்று. மகளிர் மகப்பேறு நலம், உரிமைகளுக்காகத் தம்மை முழுதும் ஈடுபடுத்திக் கொண்டு செயல் படுவதாக அனைத்துலகம் சார்ந்த வகையில் அரசு பெருமைப் படுவதெல்லாம் வெறும் பீற்றல்களைத் தவிர வேறொன்றுமில்லை.

உண்மையாகவே அவர்கள் உரிமைகளும் நலங்களும் பேணப் படுவதாக இருந்திருந்தால், கருக்கலைப்புச் செய்து கொள்ளக் கட்டாயப்படுத்தி இருக்கமாட்டார்கள். ஏனெனில் அந்த மகளிரின் விருப்பம் யாதாக இருக்கும், இசைவு தெரிவிப்பார்களா என்ற எண்ணங்களுக்கு இடமே இல்லை. எப்படியானாலும், கர்ப்பம் நீடிக்காமல் தடை செய்ய வேண்டும். உண்மையாகவே அவர்கள் நலம் பேணுபவர்கள், எப்படியோ கருக்கலைப்பு என்று குதறிப் போடுவதோ, கருத்தடைக்கான அறுவைச் சிகிச்சை என்று பட்டியில் அடைக்கப்பட்ட நிலையில் சிகிச்சையை வலியுறுத்திச் செய்து அப்படியே விட்டுவிட்டுப் போகவோ துணிய மாட்டார்கள்.

நெறிமுறைப்படி செயலாற்றும் அரசு பெண்களிடம் அவர்களுக்கு உகந்த கருத்தடை முறைகளை விவரித்து ஏற்கும்படி இசைவு பெறவேண்டும். அதற்கெல்லாம் வழியில்லை, அடித்தள மில்லை. கருக்குழாய்த் துண்டிப்பு, அறுவைச் சிகிச்சையே, விதி என்றாகிறது. கருத்தடை அறுவைச் சிகிச்சையில் 97 சதவிகிதம் பெண்களுக்கே செய்யப்படுகிறது. பாதிப்பேருக்கு மேல் இவர்களில் பலருக்கு சிகிச்சைக்குப் பின் ஏற்படும் நச்சுத் தொற்று போன்ற பல சிக்கல்கள் விளைகின்றன. அதற்குப் பின் மருத்துவம் என்பது மிக அபூர்வம். இந்தக் கருத்தடைச் சிகிச்சைகளில் எஞ்சியவர்களில் 4.7 சதவிகிதம் சிகிச்சை பலிப்பதில்லை. சுருங்கச் சொன்னால், மீண்டும் கருத்தரிக்கிறார்கள்! அப்படிக் கருத்தரித்தால் கருக்கலைப்பு மட்டுமே பரிகாரம். இந்தப் பரிகாரம் மரணமாகிய தீர்ப்பை எழுதினாலும் கேட்பார் இல்லை!

## கருத்தடை அறுவைச் சிகிச்சை:

பீகார் மாநிலத்திலும், உத்தரபிரதேசத்திலும் 2002-2003 இல் ஓராய்வை மேற்கொண்ட மக்கள் நலக்குழு, இந்திய அரசு, ஆண் - பெண் இருபாலரின் கருத்தடை அறுவைச் சிகிச்சைகளில் மேற்கொள்ளும் முறைகளுக்கிடையே உள்ள வித்தியாசங்களை அம்பலத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றன.

ஒன்றிரண்டு விவரங்கள் கூர்ந்து நோக்கலாம். அறுவைச் சிகிச்சைக்கான சாதனங்கள் நச்சுத்தொற்று ஏற்படாத வண்ணம் தூய்மை பேணப்பட வேண்டும். பெண்களின் கருப்பைப் பரிசோதனைகளுக்குப் பின் பயன்படுத்தப்பெறும் கையுறைகள் தூய்மையற்றவையாக, ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டவையாக இருக்கின்றன. நடமாடும் சேவைகளில், ஒரு நாளில் 20க்கும் மேற்பட்ட அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படக்கூடாது. ஆனால், ஆய்வுக் குழுவினர் கண்டறிந்த தகவலின் படி, ஒரு மருத்துவர், ஒரே இடத்தில் இரண்டரை மணி நேரத்தில் 75 அறுவைச் சிகிச்சைகள் மேற்கொண்டிருக்கிறார். சராசரியாக இரண்டு நிமிடங்களுக்கு ஓர் அறுவைச் சிகிச்சை.

## முழு அலட்சியம்:

பெரும்பாலான இந்த சிகிச்சை பற்றிய ஆய்வுகள் ஒரே கதையைத்தான் சொல்கின்றன. பெண்களுக்கான மருத்துவம் என்பதில் மிகவும் மெத்தனமான அலட்சியப் போக்குதான். கருத்தடை அறுவை - அல்லது சாவு இரண்டுக்குமிடையே வேறு தேர்ந்தெடுக்க எந்த வழியுமில்லை. வாரணாசி மாவட்டத்தில் தாக்தாக்பூரில் ஒரு பெண், ஆறு ஆண்டுகளில் நான்கு முறை பிரசவித்திருக்கிறாள். நான்காவது மகப்பேறுக்குப் பிறகு அவள் கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கு இசைந்தாள். அறுவைச் சிகிச்சையின் போது, மருத்துவர் தவறுதலாக அவள் குடலைப் பற்றி இழுத்ததால் அவள் மேசையிலேயே மயங்கி ஒடுங்கிவிட்டாள். அவள் குடும்பத்தாருக்குச் சொல்லி அனுப்பி, அவர்கள் அவளை மாவட்ட மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லுமுன் யமலோகம் சென்றுவிட்டாள். அவள் எப்படி மரணமடைந்தாள் என்றெல்லாம் குடும்பத்தாருக்குத் தெரிவிக்கவில்லை. அரசு சாரா தன்னார்வக் குழு ஒன்று தலையிட்டு வழக்குப் பதிவு செய்தபின், இறுதியில் அவள் கணவனுக்கு 10 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது!

இதுபோன்ற நிகழ்வுகள் உத்தரப்பிரதேசம் மட்டுமின்றி, இந்திய நாட்டின் ஏனைய பகுதிகளிலும், மிகுதியாக இருக்கலாம். இவர்கள் ஏழைப் பெண்கள். இவர்களால் பெருகிவருவதாகச் சொல்லப்படும் மக்கள் தொகைக்கு எதிரான போராட்டத்துக்குரிய விலையாக இவர்கள் உயிர்கள் பறிக்கப்படுகின்றன. இத்தகைய மேலிட மனோபாவங்கள் நீடிக்கும்வரை உண்மையான மக்கள்

பெருக்கத்துக்கான காரணங்களை வெளிக்குக் கொண்டுவர மாட்டார்கள். பொருளாதாரம் சார்ந்த முழு முன்னேற்றம், கல்வி, நலம் பேணும் தீவிர முயற்சிகள், மகளிர் உரிமைகள் குறித்த அக்கறை, இவை அனைத்தும் கவனங்களுக்குள் வராத நிலையிலும், உத்தரப்பிரதேசம் மட்டுமின்றி பல பிரதேசங்களிலும் நிகழும் அவலங்கள், மக்கள் தொடர்பு சாதனங்களுக்கோ, அல்லது அரசு தேசியக் கொள்கைகளை உருவாக்கி நெறிப்படுத்துவதற்கோ தெரியாமலே போகலாம்.

## 4. உலக சுகாதார அறிக்கை - 2005 (சஞ்சிதா சர்மா), புதுடெல்லி - ஏப்ரல் 7

கருக் கொலை தவிர அலட்சியமும் கவனிப்பின்மையுமே, ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகளை அழித்து விடுகிறதெனலாம். இது இந்தியா, சீனம் இரண்டு நாடுகளுக்குமே பொது நடப்பியலாக இருக்கிறது. ஏனைய நாடுகளை விட, அதிக மக்கள் பெருக்க நாடுகள் இவை. உலக சுகாதார நிறுவனம் (WHO) வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையின் விவரப்பட்டியலில் இத்தகையதொரு அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகிறது. மக்கள் நலம் சார்ந்த புள்ளியியல் கணக்கின் படி, பெண்குழந்தைகள் பிறந்தபின், எந்தளவுக்கு ஆண் மேலாதிக்க உணர்வுகள் அக்குழந்தைகளின் இருத்தலையே கேள்விக்குறியாக்கி இருக்கின்றன என்ற உண்மை சுடுகிறது.

சாதாரணமாக இயல்பாகவே ஆண் குழந்தைகளைக் காட்டிலும், பெண் குழந்தைகள் வாழ்வதற்கான வலிமை பெற்றவர்கள். இயற்கையே இப்படிப் பெண்ணுக்கு வாழ்வை உறுதிப்படுத்தி இருக்கிறது. ஆனால் ஐந்து வயது நிரம்புவதற்குள் அதிகமான பெண் குழந்தைகளே மரிக்கின்றன. இதற்குப் பெண் குழந்தைகளுக்கு உரிய பராமரிப்பும் கவனமும் கொடுக்கப்படுவதில்லை; ஆண் குழந்தைகளே மிகுதியாக விரும்பப்பட்டு உரிய கவனம் செலுத்தப்படுகின்றன என்று ஜெனிவாவிலுள்ள உலக சுகாதார நிறுவனத்தின் உதவி டைரக்டர் ஜெனரல் ஜாய் ஃபுமா ஃபி காரணம் கூறியிருக்கிறார்.

பெண்குழந்தைகளைக் காட்டிலும் ஆண் குழந்தைகளுக்கு முறையாகத் தடுப்பூசிகள் போடப்படுகின்றன. ஊட்டச்சத்துடைய உணவு அளிக்கப்படுகிறது. உடல் நலக்குறைவென்றால் மருத்துவரிடம் கொண்டு சென்று பராமரிக்கிறார்கள் என்கிறார் அவர். "சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு நோயெதிர்ப்புச் சக்தி இல்லை. இறந்துபோகும் குழந்தைகளில் பாதிக்குமேல் எடை குறைவான குழந்தைகள்தாம். இந்தியாவில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தை மரணங்களின் ஆண் - பெண் விகிதாசாரம் 1000த்துக்கு 85-90 என்றால், சீனத்தில் 1000க்கு இந்த விகிதாசாரம், 32க்கு 43 பெண் குழந்தைகள் என்பதே உண்மையாக இருக்கிறது!"

"சாதாரண நலப் பராமரிப்பளித்தாலே அறுபது லட்சங்களுக்கு மேலான குழந்தைகள் காப்பாற்றப்படுவார்கள். ஆயிரக்கணக்கான பெண்களுக்கும் இந்த நலப் பராமரிப்பு, உயிர்காக்கும் பெரு வாய்ப்புகளாகப் பரிணமிக்கும்" என்று இந்தியாவில் உலக சுகாதார அறிக்கையை வெளியிடும்போது, இந்த நிறுவனத்தின் டைரக்டர் ஜெனரல், டாக்டர் லீஜங் வூக் கூறினார். இந்த ஆண்டறிக்கையில் தாய் சேய் நலப் பராமரிப்புக்கு முக்கியத்துவம் குறிக்கப்படுகிறது.

கருவுறுதலும், மகப்பேறும், இந்தியாவில் அதிகமான பெண் மரணங்களுக்குக் காரணமாயிருக்கின்றன. மூன்று கோடி பெண்கள் ஒவ்வோர் ஆண்டும் கருவுறுகிறார்கள். இரண்டு கோடியே எழுபது லட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. பதிமூன்று லட்சத்து ஆறாயிரம் பெண்கள் உயிர் பிழைப்பதில்லை. பிறக்கும் சிசுக்களில் பத்து லட்சம், ஒவ்வோர் ஆண்டும் மரிக்கின்றன. இந்த நிலையில் இந்தியாவிலேயே மிகச் சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. இங்கே தாய் - மரணம், ஒரு லட்சம் மகப்பேற்றுக்கு 115 மட்டுமே!

***

# 5. பயன்படுத்தப்பட்ட நூல்கள் - கட்டுரைகள் - செய்தி அறிக்கைகள்

1. Practice of Fertility Control - A comprehensive TextBook
   - S.K. Chaudhuri and International Contributors
2. The Position of Women in Hindu Civilization
   - By Dr. A.S. Alteker
3. Population and Family planning policy
   (India Table. Source - U.S Library of Congress)
4. Quantitative effects of family planning progress and India (1965 - 76) Mohammed As. Jha. SS - Indian Journal of Public Health. 1981, Jul. - Sep. 25(3)111 - 6 Related Articles - Links.
5. Is informed choice in family planning practiced in India?
   - G. Prakasam - State Demographer. Directorate of Health and family welfare services, Bangalore.
6. Analytical Study - Regarding
   Inter spouse communication, contraceptive use and family size - in Bihar & Tamilnadu.
7. Contraceptive our choice., Their choices. Forum for women's Health .
   Our lives - Our health - edited by Dr. Malini Karkal
   Co-ordination unit, World conference of women, Beijing, Aug.1995. P.191

8. Fertility control induced polities of India. V.A. Pai Parandikar, P.K. Uma Shankar, Papers Presented on Social Change. Sept. - Oct. 1994. SNPT Church Gate.

9. Neglect Killing more Girls than Boys by Sanchita Sharma. April - 7, 2005. World Health Report.

10. In this what is called progress ? by Kalpana Sharma - Hindu Article 17.4.2005.

11. பெண் சிசுக் கொலை, அன்னையரின் சோக சித்திரங்கள் - SIRD, மதுரை வெளியீடு.

12. பட்ஜெட் பலவிதம் - கட்டுரை - எஸ்.வி. நாராயணன், தினமணி, 24-2-2005

13. சுரா இயர் புக் - 2005

14. Performance Budget - Health and Family Welfare Department, Govt. of Tamilnadu - March, 2005.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் - கொள்கை விளக்கக் குறிப்பு. மார்ச் 2005 தமிழ்நாடு அரசு வெளியீடுகள்.

15. மக்கள்தொகைத் தத்துவத்தின் அடிப்படைகள், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ.

16. தமிழ்க் கலைக் களஞ்சியம் - பகுதி 1

17. பாரதீய விவாஹ ஸ்ம்ஸ்தா கா இதிஹாஸ் (இந்தி) விசுவநாத காசிநாத ராஜ்வாடே

18. சஞ்சீவினி ஆயுர்வேத- யோக சிகிச்சை மையம், செய்தி மடல், காலாண்டிதழ், ஏப்ரல், 2005.

நிறுவனர் : டாக்டர் P.L.T. கிரிஜா, T.M. முகுந்தன்.

19. Economic and Political Weekly, Jan. - Feb. - 2005.

***

மக்கள் தொகைப் பெருக்கக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனை களைத் தெளிவாக அலசுகிறது இக்கட்டுரை நூல்.

சமூக அக்கறை கொண்ட திருமதி. ராஜம் கிருஷ்ணன் இந்நூலில் குடும்பக் கட்டுப்பாட்டு நடைமுறை களைப் பெண்நோக்கு விமர்சனமாகத் துல்லியமாகத் தருகிறார். 25 கட்டுரைகளும் தெளிவான தடம் காட்டு கின்றன.

கணவன்–மனைவி, குடும்பம், அரசு, அரசியல், சமூகம், ஊடகம் என்று அனைத்து அமைப்புகளிலும் பெண் எப்படி உரிமைப் பறித்தலுக்கு உட்பட வேண்டி யுள்ளது என்பதும் அதிலிருந்து மீள்வதற்கு உரிய வழியும் காட்டப்பெறுகிறது இந்நூலில்.

தமது கருத்துக்களோடு, மருத்துவர் ஆலோசனை, அறிவுசார் அமைப்புகள், இதழாளர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி ஆதாரபூர்வத் தகவல், தரவு, தீர்வுகளைச் சுவைபடத் தருகிறார் ஆசிரியர்.


**தமிழ்ப் புத்தகாலயம் – தாகம்**

பு. எண்: 34 ப. எண்: 35, சாரங்கபாணித் தெரு

காமராஜர் இல்லம் அருகே,

திருமலைப்பிள்ளை சாலை குறுக்கே

தி. நகர், சென்னை–600017

✆ 044 – 28340495 Fax 044–28344528

மின் அஞ்சல் : tamilputhakalayam@yahoo.com

வெப் தளம் : http://expa

ISBN: 81–89629–00–X

விலை : ரூ. 66.00



UYIR VILAYUM N

INR 66.00

TAM 30790

08MADRAS09D